| **டி. மாரிமுத்து** | **அஇஅதிமுக** | 62,891 |
| ஏ. குள்ளய்யா | காங்(ஜெ) | 551 |
| ஏ. கீரை தமிழ்ச்செல்வன் | திமுக | 34,544 |
| என். மருதன் | சுயே | 1,986 |

## 191 புதுக்கோட்டை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,37,340 |
| பதிவான வாக்குகள் | ... | 1,07,384 |
| செல்லாதவை | ... | 4,966 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஜெ. முகமது கனி** | **காங்(இ)** | 63,877 |
| ஆர். சாமிய்யா காடவராயர் | சுயே | 1,023 |
| ஏ. சுந்தரவேல் உடையார் | சுயே | 3,018 |
| கே.ஆர். சுப்பையா | இ.கம். | 26,214 |
| எஸ். செல்லதுரை | காங்(ஜெ) | 7,354 |
| ஜி. ராஜ்மோகன் | சுயே | 242 |
| எம். லட்சுமணன் | சுயே | 690 |

## 192 ஆலங்குடி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 1,39,144 |
| பதிவான வாக்குகள் | ... | 1,17,018 |
| செல்லாதவை | ... | 4,351 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஏ. வெங்கடாசலம்** | **அஇஅதிமுக** | 74,202 |
| சி. செல்வராஜ் ஆச்சாரி | சுயே | 298 |
| ஏ. பெரியண்ணன் | திமுக | 37,173 |
| எம். மதிநிறை செல்வன் | சுயே | 994 |

## 193 அறந்தாங்கி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 1,45,705 |
| பதிவான வாக்குகள் | ... | 1,17,687 |
| செல்லாதவை | ... | 5,892 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எஸ். திருநாவுக்கரசு** | **அஇஅதிமுக** | 70,085 |
| எஸ். ராமநாதன் | திமுக | 40,164 |
| எஸ். கருப்பையா சேர்வை | சுயே | 622 |
| ஆர். வியாசர் | சுயே | 924 |

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் வாக்களிக்கிறார்.



# திருநெல்வேலி மாவட்டம்

## 210 விளாத்திகுளம்

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,21,435 |
| பதிவான வாக்குகள் | ... | 83,961 |
| செல்லாதவை | ... | 3.808 |
| எஸ்.குமாரகுருபர ராமநாதன் | திமுக ... | 32,481 |
| கே.எஸ்.கந்தசாமி | சுயே ... | 117 |
| ஏ.கே.கோண்டு ரெட்டியார் | சுயே ... | 247 |
| பி.செல்லசாமி | சுயே ... | 331 |
| டி.தாமஸ் | சுயே ... | 318 |
| எம்.தேவேந்திரன் | சுயே ... | 20,326 |
| ஆர்.கே.பெருமாள் | அஇஅதிமுக ... | 26,143 |
| ஆர்.முத்து | சுயே ... | 190 |

## 211 ஓட்டப்பிடாரம் (தனி)

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,10,962 |
| பதிவான வாக்குகள் | ... | 74.147 |
| செல்லாதவை | ... | 6.111 |
| ஆர்.எஸ் ஆறுமுகம் | காங்(இ) ... | 46,190 |
| எம்.அப்பாதுரை | இ.கம்யூ. ... | 20.868 |
| எம்.பி.ஐ.கிருஷ்ணன் | சுயே ... | 5,334 |
| ஐ.செல்லதுரை | சுயே ... | 441 |

## 212 கோவில்பட்டி

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,20,666 |
| பதிவான வாக்குகள் | ... | 86,609 |
| செல்லாதவை | ... | 4,769 |
| ஆர். ரங்கசாமி | காங்(இ) ... | 45,623 |
| எஸ்.அழகர்சாமி | இ.கம்யூ. ... | 28,327 |
| பி.சீனிராஜு | சுயே ... | 4,655 |
| எஸ்.சோலையப்பன் | சுயே ... | 283 |
| ஆர்.பரமசிவம் | சுயே ... | 715 |
| வி.பால்ராஜ் | சுயே ... | 977 |
| எஸ்.பெருமாள்சாமி | சுயே ... | 633 |
| டி.என்.பி.ராஜு | சுயே ... | 627 |

## 213 சங்கரநயினார் கோவில் (தனி)

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,30.144 |
| பதிவான வாக்குகள் | ... | 95,355 |
| செல்லாதவை | ... | 6,448 |
| எஸ். சங்கரலிங்கம் | அஇஅதிமுக ... | 48.411 |
| செல்வி ஐ.உலகமணியம்மாள் | சுயே ... | 317 |
| எஸ்.சண்முகவேலு | சுயே ... | .582 |
| எஸ்.தங்கவேலு | திமுக ... | 36,028 |
| கே.மாடசாமி | சுயே ... | 3,569 |

## 214 வாசுதேவநல்லூர் (தனி)

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,20,134 |
| பதிவான வாக்குகள் | ... | 84,590 |
| செல்லாதவை | ... | 3,904 |
| ஆர் ஈஸ்வரன் | காங்(இ) ... | 50,303 |
| வி.சங்கரபாண்டியன் | சுயே ... | 490 |
| எம்.எஸ்.பெரியசாமி | இ.கம்யூ. (மார்க்சிஸ்ட்) ... | 27,875 |
| கே.மருதன் | சுயே ... | 588 |
| எஸ்.முத்தையா | சுயே ... | 865 |
| வி.விஜயன் | சுயே ... | 595 |

## 215 கடையநல்லூர்

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,21,405 |
| பதிவான வாக்குகள் | ... | 96,930 |
| செல்லாதவை | ... | 4,886 |
| டி. பெருமாள் | அஇஅதிமுக .... | 49,186 |
| எம்.எஸ்.இசக்கியாபிள்ளை | சுயே ... | 255 |
| சம்சுதீன் என்கிற கதிரவன் | திமுக ... | 41,584 |
| ஏ.நடராஜன் | சுயே ... | 1,019 |

## 216 தென்காசி

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,25,902 |
| பதிவான வாக்குகள் | ... | 99,409 |
| செல்லாதவை | ... | 5,097 |
| டி. ஆர். வெங்கடரமணன் | காங்(இ) ... | 57,011 |
| எம்.கூத்தலிங்கம் | திமுக ... | 35,383 |
| ஏ.எம்.சுப்பையா | சுயே ... | 849 |
| ஏ.எஸ்.திருமலை | சுயே ... | 726 |
| எம்.மொயிதீன்பிச்சை | சுயே ... | 343 |

## 217 ஆலங்குளம்

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,24,914 |
| பதிவான வாக்குகள் | ... | 94,631 |
| செல்லாதவை | ... | 6,337 |
| எம். சண்முகய்யா பாண்டியன் | அஇஅதிமுக ... | 48,109 |
| எம்.ராயப்பன் | சுயே ... | 548 |
| எஸ்.பி.யமராஜன் | சுயே .... | 3,866 |
| எம்.கன்னய்யா | சுயே ... | 325 |
| டி.சேகர் | சுயே ... | 5,922 |
| என்.தங்கராஜ் பாண்டியன் | சுயே ... | 2,448 |
| பி.தம்பிதுரை | திமுக ... | 27,076 |

## 218 திருநெல்வேலி

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,29,277 |
| பதிவான வாக்குகள் | ... | 97,301 |
| செல்லாதவை | ... | 2,614 |
| எஸ். நாராயணன் | அஇஅதிமுக ... | 56,409 |
| பி.ஆறுமுகதாஸ் | சுயே ... | 359 |
| ஏ.எம்.சுப்பிரமணியன் | திமுக ... | 37,547 |
| எம்.ராமகிருஷ்ணன் | சுயே ... | 372 |



## 219 பாளையங்கோட்டை

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,27,306 |
| பதிவான வாக்குகள் | ... | 89.952 |
| செல்லாதவை | ... | 2,884 |
| வி.எஸ்.டி. சம்சுல் ஆலம் | திமுக ... | 45,209 |
| வி.கருப்பசாமி பாண்டியன் | அஇஅதிமுக ... | 41,004 |
| ஜி.கஸ்பார் ராஜா | சுயே ... | 855 |

## 220 சேரன்மாதேவி

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,12,131 |
| பதிவான வாக்குகள் | ... | 87,106 |
| செல்லாதவை | ... | 4,232 |
| பி.எச். பாண்டியன் | அஇஅதிமுக... | 45,898 |
| பி.ஆறுமுகம் | சுயே ... | 397 |
| பி.எஸ்.பாண்டியன் | திமுக ... | 26,225 |
| பி.பூசபாண்டியன் | சுயே ... | 354 |

## 221 அம்பாசமுத்திரம்

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,13,413 |
| பதிவான வாக்குகள் | ... | 85,922 |
| செல்லாதவை | ... | 4,264 |
| எஸ். பாலசுப்பிரமணியன் | அஇஅதிமுக ... | 44,707 |
| எம்.இராமசாமி | சுயே ... | 910 |
| ஏ.நல்லசிவம் | இ.கம்யூ.(மா) ... | 36.041 |

## 222 நாங்குநேரி

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,22,639 |
| பதிவான வாக்குகள் | ... | 83,894 |
| செல்லாதவை | ... | 4,880 |
| எம். ஜான்வின்செண்ட் | அஇஅதிமுக ... | 45,825 |
| எஸ்.தங்கபாண்டியன் | சுயே ... | 182 |
| தனகோட்டி | | |
| ராமலிங்கபாண்டியன் | சுயே ... | 313 |
| ஜே.தேவசகாயம் | சுயே ... | 469 |
| இ.நம்பி | திமுக ... | 31,807 |
| ஏ.பிச்சை | சுயே ... | 418 |

## 223 ராதாபுரம்

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,24,210 |
| பதிவான வாக்குகள் | ... | 80,714 |
| செல்லாதவை | ... | 6,230 |
| குமரி அனந்தன் | காகாதேகா ... | 40,213 |
| சி.சரவணபெருமாள் | சுயே ... | 700 |
| நெல்லை செழியன் என்கிற சித்திராஜ் செழியன் | சுயே ... | 349 |
| சுப்பிரமணியநாடார் | சுயே ... | 25,075 |
| டி.ராமசாமி | சுயே ... | 660 |
| எஸ்.லாசர் | சுயே ... | 735 |
| எஸ்.லட்சுமண தேவர் | சுயே ... | 561 |
| எஸ்.கே.ஜான்தேவ இரக்கம் | சுயே ... | 5,987 |
| எம்.ஜகந்நாதன் | சுயே ... | 204 |

## 224 சாத்தான்குளம்

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,25,821 |
| பதிவான வாக்குகள் | ... | 74,689 |
| செல்லாதவை | ... | 4,116 |
| எஸ்.என். ராமசாமி | காகாதேகா ... | 37,892 |
| வி.கணபதி ஆண்டி | சுயே ... | 516 |
| எம்.ஏ.கணேச பாண்டியன் | ஜனதா ... | 29,275 |
| எஸ்.சூரியமுத்துதேவன் | சுயே ... | 597 |
| ஆர்.தங்கராசு | சுயே ... | 1,431 |
| துரைமுருகன் என்கிற முருகேசன் | சுயே ... | 511 |
| எஸ்.டி.ஜெயபால் | சுயே ... | 351 |

## 225 திருச்செந்தூர்

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,42,623 |
| பதிவான வாக்குகள் | ... | 94,617 |
| செல்லாதவை | ... | 3,987 |
| எஸ்.ஆர்.சுப்பிரமணியன் என்கிற சுப்பிரமணிய ஆதித்தன் | அஇஅதிமுக ... | 45,953 |
| கே.பி.கந்தசாமி | திமுக ... | 43,565 |
| பி.குமரேசன் | சுயே ... | 169 |
| கே.கேசவன் | சுயே ... | 265 |
| ஏ.கோட்டாலமுத்து | சுயே ... | 215 |
| எஸ்.எம்.சுயம்பு | சுயே ... | 198 |
| பி.தனசிங் | சுயே ... | 64 |
| சே பழனிஆதித்தன் | சுயே ... | 105 |
| ஏ.ஜெயபாலன் | சுயே ... | 96 |

## 226 ஸ்ரீவைகுண்டம்

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,16,124 |
| பதிவான வாக்குகள் | ... | 80,773 |
| செல்லாதவை | ... | 3,547 |
| எஸ். டேனியல் ராஜ் | காங் (இ) ... | 41,513 |
| எஸ்.அய்யம்பிள்ளை | சுயே ... | 188 |
| வி.மனோகரன் | சுயே ... | 233 |
| எஸ்.பி.முத்து | திமுக | 34,140 |
| டி.முல்லைவழுதி | சுயே ... | 501 |
| நெல்லைகுணசிங்என்கிற விவேகராஜ் பால்குணசிங் | சுயே ... | 156 |
| டி.ஜோன்ஸ் | சுயே ... | 495 |

## 227 தூத்துக்குடி

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,52,824 |
| பதிவான வாக்குகள் | ... | 1,08,473 |
| செல்லாதவை | ... | 3,031 |
| எஸ்.என். ராஜேந்திரன் | அஇஅதிமுக ... | 59,622 |
| ஜி.அந்தோணி பெர்னான்டோ | சுயே ... | 6,564 |
| ஏ.ஐயாசாமி | திமுக ... | 37,549 |
| வி.அருணாசலம் | சுயே ... | 936 |
| வி.எஸ்.உதயசூரியன் | சுயே ... | 310 |
| எஸ்.முனுசாமிதேவர் | சுயே ... | 138 |
| பி.எஸ்.பி.கே.ரத்தினதுரை பாண்டியன் | சுயே ... | 95 |
| என்.எஸ்.எஸ்.ராமகிருஷ்ணன் | சுயே ... | 124 |
| ஏ.ராஜா | சுயே ... | 104 |

# கன்னியாகுமரி மாவட்டம்

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **228 கன்னியாகுமரி** | | |
| மொத்த வாக்காளர் | | ... 1,21,584 |
| பதிவான வாக்குகள் | | ... 87,597 |
| செல்லாதவை | | ... 3,586 |
| கே. [illegible] பிள்ளை | அஇஅதிமுக ... | 45,353 |
| எம்.சங்கரலிங்கம் | திமுக ... | 37,696 |
| எம்.சுந்தரம் | சுயே ... | 316 |
| கே.பொன்சாமி | சுயே ... | 349 |
| எஸ்.விசுவநாதன் | சுயே ... | 197 |
| **229 நாகர்கோயில்** | | |
| மொத்த வாக்காளர் | | ... 1,35,489 |
| பதிவான வாக்குகள் | | ... 90,581 |
| செல்லாதவை | | ... 3,728 |
| எஸ். இரத்தினராஜ் | திமுக ... | 41,572 |
| என்.அம்புஜாக்சன் | சுயே ... | 132 |
| எஸ்.லட்சுமணன்பிள்ளை | சுயே ... | 1,081 |
| கனகசபாபதி | சுயே ... | 159 |
| ஏ.சண்முகம் | சுயே ... | 126 |
| எஸ்.எம்.ஜபஸ்டீன் | சுயே ... | 54 |
| எஸ்.தேவதாசன் | சுயே ... | 892 |
| ஏ.நாவிஸ் | சுயே ... | 2,427 |
| ஆர்.ராமச்சந்திரன் | சுயே ... | 124 |
| எஸ்.ஜகதீசன் | அஇஅதிமுக ... | 40,301 |
| **230 குளச்சல்** | | |
| மொத்த வாக்காளர் | | ... 1,23,569 |
| பதிவான வாக்குகள் | | ... 89,138 |
| செல்லாதவை | | ... 3,741 |
| எப்.எம்.ராஜரத்தினம் | அஇஅதிமுக ... | 33,585 |
| எம்.ஆர்.காந்தி | பா.ஜனதா ... | 32,996 |
| என்.பாரமணிதாஸ் | திமுக ... | 18,678 |
| வி.ராஜேந்திரன் | சுயே ... | 138 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **231 பத்மநாபபுரம்** | | |
| மொத்த வாக்காளர் | | ... 1,10,265 |
| பதிவான வாக்குகள் | | ... 79,437 |
| செல்லாதவை | | ... 4,081 |
| வி. [illegible] | சுயே ... | 28,465 |
| பி.டி.எஸ்.மணி | ஜனதா ... | 22,743 |
| எம்.வின்சென்ட் | அஇஅதிமுக ... | 24,148 |
| **232 திருவெட்டாறு** | | |
| மொத்த வாக்காளர் | | ... 1,10,731 |
| பதிவான வாக்குகள் | | ... 77,482 |
| செல்லாதவை | | ... 4,805 |
| ஜே. ஹேமச்சந்திரன் | இ.கம்.(மா) ... | 26,851 |
| என்.துலக் குமார் | சுயே ... | 19,897 |
| சி.நடராஜன் | காகாதேகா ... | 3,167 |
| எம்.மோகன்தாஸ் | சுயே ... | 22,762 |
| **233 விளவங்கோடு** | | |
| மொத்த வாக்காளர் | | ... 1,35,185 |
| பதிவான வாக்குகள் | | ... 85,389 |
| செல்லாதவை | | ... 3,344 |
| எம். சுந்தரதாஸ் | காங்(இ) ... | 47,169 |
| டி.மணி | இ.கம்யூ.(மா) ... | 34,876 |
| **234 கிள்ளியூர்** | | |
| மொத்த வாக்காளர் | | ... 1,05,740 |
| பதிவான வாக்குகள் | | ... 65,586 |
| செல்லாதவை | | ... 2,156 |
| டி. குமாரதாஸ் | ஜனதா ... | 36,944 |
| டி.ராஜரத்தினம் | சுயே ... | 448 |
| ஏ.தங்கையன் | சுயே ... | 419 |
| பி.என்.ஸ்டானிஸ்லாஸ் | சுயே ... | 161 |
| ஏ.பவுலய்யா | காங்(இ) ... | 25,548 |

## வாக்குப்பதிவு நடைபெறாத தொகுதி

தமிழ்நாட்டில் 38 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் 232 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் 24.12.84 அன்று தேர்தல் நடந்தது.

வடசென்னை நாடாளுமன்றத் தொகுதியிலும், எழும்பூர்(தனி), பெரம்பூர்(தனி) சட்டமன்றத் தொகுதிகளிலும் சுயேசசை வேட்பாளராகப் போட்டியிட்ட டாக்டர் சி. வி. சேமன் தளபதி படுகொலை செய்யப்பட்டதன் காரணமாக-மேற்படி தொகுதிகளில் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. (1985 ஜனவரி 28ல் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது:)

மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள எழும்பூர்த் தொகுதி வாக்காளர்கள 24.12.84 அன்று நாடாளுமன்றத திற்கு மட்டும் வாக்களித்தனர்.

வடசென்னை நாடாளுமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள ராதாகிருஷ்ணன் நகர், ராயபுரம், துறைமுகம், திருவொற்றியூா, வில்லிவாக்கம் ஆகிய 5 தொகுதிகளைச் சேர்ந்த வாக்காளர்கள் சட்டமன்றத்துக்கு மட்டும் வாக்களித்தனர்.

வடசென்னை நாடாளுமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள பெரம்பூர்த் தொகுதி வாக்காளர்கள் மட்டும் சட்டமன்றம், நாடாளுமன்றம் ஆகிய இரண்டுக்குமே வாக்களிக்கவில்லை. தமிழ்நாட்டிலேயே வாக்குப் பதிவாகாத தொகுதி பெரம்பூர் ஒன்றுதான்.

# நாடாளுமன்றத் தொகுதிகள்

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயா | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **2. மத்திய சென்னை** | | |
| மொத்த வாக்காளர்கள்... | | 8,62,989 |
| பதிவான வாக்குகள் ... | | 5,53,558 |
| செல்லாதவை ... | | 14,439 |
| டாக்டர் அ. கலாநிதி | திமுக ... | 3,13,848 |
| இ. எர்னெஸ்ட்பால் | கா.கா.தே.கா ... | 2,17,104 |
| எம். ஜே. துரைராஜ் | சுயே ... | 2,358 |
| பாஸ்திமல் சுரானா | சுயே ... | 2,595 |
| கே. ஆர். கே. பாலகிருஷ்ணன் | சுயே ... | 1,598 |
| மேனன் | சுயே ... | 1,616 |
| **3. தென் சென்னை** | | |
| மொத்த வாக்காளர்கள் ... | | 10,18,795 |
| பதிவான வாக்குகள் ... | | 6,70,757 |
| செல்லாதவை ... | | 22,906 |
| திருமதி வைஜயந்திமாலா | காங்(இ)... | 3,36,853 |
| கண்ணுதல் | சுயே ... | 2,074 |
| பி.எஸ்.ஆர். கிருஷ்ணா | சுயே ... | 2,781 |
| இரா. குலசேகரன் | சுயே ... | 2,908 |
| வி. குலோத்துங்கசோழன் | சுயே ... | 3,173 |
| திருமதி சரோஜா | சுயே ... | 1,231 |
| இரா. செழியன் | ஜனதா ... | 2,88,336 |
| ஜி. சேதுராமன் | சுயே ... | 805 |
| ஏ.பி. தமிழரசு | சுயே ... | 2,220 |
| நாகை காதர் | சுயே ... | 851 |
| வி.வி.எஸ். மணியன் | சுயே ... | 1,718 |
| மனக்சந்த் நகார் | சுயே ... | 728 |
| எம். மாதவன் | சுயே ... | 2,999 |
| பி. ரமேஷ் | சுயே ... | 1,674 |
| **4. ஸ்ரீபெரும்புதூர் (தனி)** | | |
| மொத்த வாக்காளர்கள்... | | 7,87,638 |
| பதிவான வாக்குகள் ... | | 5,87,495 |
| செல்லாதவை ... | | 29,058 |
| திருமதி மரகதம் சந்திரசேகர் | காங்(இ)... | 3,32,468 |
| ஜி. ஏ. அப்பன் | சுயே ... | 2,975 |
| டி. நாகரத்தினம் | திமுக ... | 2,22,994 |
| **5. செங்கல்பட்டு** | | |
| மொத்த வாக்காளர்கள் ... | | 7,37,328 |
| பதிவான வாக்குகள் ... | | 5,68,599 |
| செல்லாதவை ... | | 18,703 |
| எஸ்.ஜெகத்ரட்சகன் | அஇஅதிமுக .. | 2,97,415 |
| வி. அருணகிரி | சுயே ... | 1,894 |
| எம்.பி. ஆனந்தன் | சுயே ... | 1,981 |
| வி. கே. ராமன் | சுயே ... | 1,129 |
| எம்.வி. ராமு | திமுக ... | 2,39,206 |
| வி. செல்வராஜ் | சுயே ... | 3,397 |
| ஈ.வி. பெருமாள்சாமி | சுயே ... | 2,390 |
| டி.வி. இராதா கிருஷ்ண ஷா | சுயே ... | 2,484 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **6 அரக்கோணம்** | | |
| மொத்த வாக்காளர்கள்... | | 7,57,665 |
| பதிவான வாக்குகள் ... | | 5,92,913 |
| செல்லாதவை ... | | 32,354 |
| ஆர். ஜீவரத்தினம் | காங் (இ) ... | 2,92,606 |
| ஏ. கந்தப்பன் | சுயே... | 8,967 |
| எம்.டி. கல்யாணசுந்தரம் | பா.ஜனதா... | 15,462 |
| புலவர் கா. கோவிந்தன் | திமுக... | 2,31,664 |
| கே. செல்வராஜ் | சுயே... | 10,158 |
| புலவர் மணிஎழிலன் | சுயே... | 1,702 |
| **7. வேலூர்** | | |
| மொத்த வாக்காளர்கள்... | | 7,48,776 |
| பதிவான வாக்குகள் ... | | 5,61,356 |
| செல்லாதவை ... | | 23,979 |
| ஏ.சி. சண்முகம் | அஇஅதிமுக ... | 2,84.416 |
| ஏ. கே. ரவீந்திரன் | சுயே... | 1,929 |
| ஏ. எம். இராமலிங்கம் | திமுக... | 2,09,693 |
| டி. கங்கப்பா | சுயே... | 37,312 |
| ஜி. எம். சாமி | சுயே... | 2,081 |
| ஸ்ரீபதி | காங் (ஜெ)... | 1,946 |
| **8. திருப்பத்தூர்** | | |
| மொத்த வாக்காளர்கள்... | | 7,51,122 |
| பதிவான வாக்குகள் ... | | 5,69,260 |
| செல்லாதவை ... | | 32,888 |
| ஏ. ஜெயமோகன் | காங் (இ) ... | 2,98,159 |
| எம். அப்துல் லத்தீப் | திமுக... | 1,76,372 |
| டி.சி. தங்கராஜ் | சுயே... | 10,684 |
| பொன். வெங்கடேசன் | சுயே... | 51,157 |
| **9. வந்தவாசி** | | |
| மொத்த வாக்காளர்கள்... | | 7,63,132 |
| பதிவான வாக்குகள் ... | | 5,74,975 |
| செல்லாதவை ... | | 27,333 |
| எல். பலராமன் | காங் (இ) ... | 3,41,267 |
| ஆர். கே. பாண்டியன் | திமுக... | 2,06,375 |
| **10. திண்டிவனம்** | | |
| மொத்த வாக்காளர்கள்... | | 7,37,686 |
| பதிவான வாக்குகள் ... | | 5,51,174 |
| செல்லாதவை ... | | 31,019 |
| எஸ் எஸ். இராமசாமி படையாட்சி | காங்(இ) ... | 3,56,127 |
| எம்.ஆர். லக்ஷ்மிநாராயணன் | ஜனதா... | 1,54,269 |
| எஸ். சேகர் | சுயே... | 9,759 |




| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|

## 11. கடலூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,32,579 |
| பதிவான வாக்குகள் | ... | 5,65,944 |
| செல்லாதவை | ... | 30,839 |
| **பி.ஆர்.எஸ்.வெங்கடேசன்** | **காங் (இ)** ... | **3,27,393** |
| டி. அப்துல் வகாப் | சுயே... | 2,728 |
| ஆர். வி. சீதாராமன் | சுயே... | 9,545 |
| ராமு என்கிற கிள்ளிவளவன் | திமுக... | 1,95,439 |

## 12. சிதம்பரம் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,34,375 |
| பதிவான வாக்குகள் | ... | 5,65,913 |
| செல்லாதவை | ... | 27,020 |
| **வள்ளல் பெருமான்** | **காங் (இ)** ... | **3,29.892** |
| எஸ். கண்ணபிரான் | திமுக... | 2,09,001 |

## 13. தருமபுரி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,80,371 |
| பதிவான வாக்குகள் | ... | 5,52,006 |
| செல்லாதவை | ... | 25,550 |
| **எம். தம்பிதுரை** | **அஇஅதிமுக** ... | **3,33,427** |
| திருமதி பார்வதி கிருஷ்ணன் | இ.கம்.(மா) ... | 1,82,175 |
| டாக்டர் டி.வி. தேவகுமார் வர்மா | சுயே ... | 10,854 |

## 14. கிருஷ்ணகிரி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,24,417 |
| பதிவான வாக்குகள் | ... | 5,03,872 |
| செல்லாதவை | ... | 32,950 |
| **கே. இராமமூர்த்தி** | **காங்(இ)** ... | **3,04,854** |
| ஆர். இராமகிருஷ்ண ரெட்டி | சுயே ... | 8,362 |
| டி. சந்திரசேகர் | திமுக ... | 1,38,488 |
| டி. தியாகராஜ ரெட்டி | சுயே ... | 4,850 |
| கே.சி. கண்மணி | சுயே ... | 6,247 |
| எஸ். சுந்தரராஜ் ராவ் | சுயே ... | 8,121 |

## 15. ராசிபுரம் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,89,509 |
| பதிவான வாக்குகள் | ... | 5,66,702 |
| செல்லாதவை | ... | 33,556 |
| **பி. தேவராஜன்** | **காங்(இ)** ... | **3,67,276** |
| பி. துரைசாமி | திமுக ... | 1,65,870 |

## 16. சேலம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,66,792 |
| பதிவான வாக்குகள் | ... | 5,48,043 |
| செல்லாதவை | ... | 28,180 |
| **ரங்கராஜன் குமாரமங்கலம்** | **காங்(இ)** ... | **3,59,819** |
| ஆரிய புத்திரன் | சுயே ... | 1,677 |
| ஓ.கே. ஏகாம்பரம் | சுயே ... | 6,218 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம்.ஏ. கந்தசாமி | ஜனதா ... | 1,23,644 |
| டி. சாம்பலிங்கம் | சுயே ... | 6,808 |
| எம். செங்கோட்டு வேலன் | சுயே ... | 3,430 |
| ஜி. செல்வராஜ் | சுயே ... | 2,752 |
| ஆர். தங்கராஜ் | சுயே ... | 2,660 |
| துளசிராமாச்சாரி | சுயே ... | 1,349 |
| ஜி. மணி | சுயே ... | 2,276 |
| பி. ராஜூ | சுயே ... | 5,785 |
| ஏ.எம். வஜ்ரவேலு | சுயே ... | 3,445 |

## 17. திருச்செங்கோடு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 9,98,164 |
| பதிவான வாக்குகள் | ... | 7,13,563 |
| செல்லாதவை | ... | 26,196 |
| **பி. கண்ணன்** | **அஇஅதிமுக** ... | **4,18.535** |
| எம். கந்தசாமி | திமுக ... | 2,63,858 |
| வி.கே. ஈஸ்வரமூர்த்தி | சுயே ... | 4,974 |

## 18. நீலகிரி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 8,27,733 |
| பதிவான வாக்குகள் | ... | 5,94,471 |
| செல்லாதவை | ... | 27,729 |
| **ஆர். பிரபு** | **காங்(இ)** ... | **3,41,824** |
| பி. கேசவன் | சுயே ... | 1,782 |
| கோவை கணேசன் | சுயே ... | 3,203 |
| வி. சுப்பிரமணியம் | சுயே ... | 2,356 |
| ஏ.எஸ்.ஜே. செல்வராஜ் | சுயே ... | 2,274 |
| சி.டி. தண்டபாணி | திமுக ... | 2,09,885 |
| கே. தேவப்பன் | சுயே ... | 2,988 |
| ஜே. சி. ராஜூ | சுயே ... | 2,430 |

## 19. கோபிச்செட்டிபாளையம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,33,501 |
| பதிவான வாக்குகள் | ... | 5,48,908 |
| செல்லாதவை | ... | 24,385 |
| **பி. குழந்தைவேலு** | **அஇஅதிமுக** ... | **3,38,243** |
| பி.ஏ. சுவாமிநாதன் | திமுக ... | 1,77.616 |
| பி. முகுந்தசாமி | சுயே ... | 6,331 |
| கே. முத்துசாமி | சுயே ... | 2,333 |

## 20. கோயம்புத்தூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 9,02,773 |
| பதிவான வாக்குகள் | ... | 6,43,831 |
| செல்லாதவை | ... | 28,466 |
| **சி.கே. குப்புசாமி** | **காங்(இ)** ... | **3,55,525** |
| ஆர். உமாநாத் | இ.கம்.(மா) ... | 2,53,006 |
| ஜே. ஸ்டீபன் | சுயே ... | 6,834 |

## 21. பொள்ளாச்சி (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,68,435 |
| பதிவான வாக்குகள் | ... | 5,71,463 |
| செல்லாதவை | ... | 24,493 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆர். அண்ணா நம்பி | அஇஅதிமுக | 3,24,200 |
| டாக்டர் கே. கிருஷ்ணசாமி | திமுக | 2,22,770 |

## 22. பழனி

மொத்த வாக்காளர்கள் ... 8,10,013
பதிவான வாக்குகள் ... 6,02,796
செல்லாதவை ... 30,103

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஏ. சேனாபதி கவுண்டர் | காங்(இ) | 4,08,104 |
| எம். ஆறுமுகம் | சுயே | 10,649 |
| வி.எஸ். மாரியப்ப கவுண்டர் | சுயே | 9,864 |
| எஸ்.ஆர். வேலுசாமி | த.காங்(கே) | 1,44,076 |

## 23. திண்டுக்கல்

மொத்த வாக்காளர்கள் ... 8,13,821
பதிவான வாக்குகள் ... 5,79,576
செல்லாதவை ... 23,579

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. ஆர். நடராஜன் | அஇஅதிமுக | 3,43,571 |
| டி.கே. கருத்தபாண்டியன் | சுயே | 2,151 |
| எஸ்.என். காந்தி | சுயே | 1,595 |
| பி. பிச்சைமணி | சுயே | 5,474 |
| கே. மாயத்தேவர் | திமுக | 2,02,253 |
| எஸ். முத்துகிருஷ்ணன் | சுயே | 953 |

## 24. மதுரை

மொத்த வாக்காளர்கள் ... 8,56,315
பதிவான வாக்குகள் ... 6,07,638
செல்லாதவை ... 24,194

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஏ. ஜி. சுப்புராமன் | காங்(இ) | 3,65,948 |
| எஸ்.கே.எம். அந்தோணிசாமி | சுயே | 1,678 |
| பி.வி. கந்தசாமி | காங் (ஜெ) | 11,157 |
| ஜே.சி. கிருஷ்ணன் (ஜானகி) | சுயே | 4,907 |
| என். சங்கரய்யா | இ.கம். (மா) | 1,92,937 |
| எம்.ஆர்.எஸ். மணி | சுயே | 1,082 |
| வி.எஸ். மணி | சுயே | 1,418 |
| ஏ.கே. ராஜாகாதர் அலி | சுயே | 1,782 |
| எஸ்.ஜி. வாமன மூர்த்தி | சுயே | 1,224 |
| எம்.ஜே. ஜெயகுமார் | சுயே | 1,311 |

## 25. பெரியகுளம்

மொத்த வாக்காளர்கள் ... 8,01,476
பதிவான வாக்குகள ... 5,72,802
செல்லாதவை ... 18,098

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. செல்வேந்திரன் | அஇஅதிமுக | 3,48,903 |
| எஸ். அக்னிராஜு | திமுக | [illegible] |
| கே. அய்யாதுரை | சுயே | 2,418 |
| கே. சுருளிவேலு | சுயே | 5,122 |
| கே. ஜெயமணி | சுயே | 837 |
| எஸ். எஸ். சைலானி | சுயே | 1,125 |
| கே. பழனிசாமி | சுயே | 5,376 |
| ஏ. இராசேந்திரன் | சுயே | 633 |

## 26. கரூர்

மொத்த வாக்காளர்கள் ... 8,17,331
பதிவான் வாக்குகள ... 6,31,922
செல்லாதவை ... 26,993

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஏ. ஆர். முருகையா | காங்(இ) | 4,13,533 |
| எம். கந்தசாமி | திமுக | 1,77,970 |
| ஆர். கிருஷ்ணன் | சுயே | 13,426 |

## 27. திருச்சிராப்பள்ளி

மொத்த வாக்காளர்கள் ... 7,95,398
பதிவான வாக்குகள் ... 6,05,053
செல்லாதவை ... 23,171

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எல். அடைக்கலராஜ் | காங்(இ) | 3,37,786 |
| டி. ஆர். கோவிந்தராஜ் | சுயே | 3,115 |
| ஏ. கே. வேலாயுதம் ஆச்சாரி | சுயே | 2,318 |
| என். செல்வராஜ் | திமுக | 2,34,881 |
| எஸ். கந்தசாமி | சுயே | 2,169 |
| டி. மானுவல் ராஜ்குமார் | சுயே | 1,613 |

## 28. பெரம்பலூர் (தனி)

மொத்த வாக்காளர்கள் ... 7,42,190
பதிவான வாக்குகள் ... 5,71,779
செல்லாதவை ... 20,347

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். தங்கராசு | அஇஅதிமுக | 3,50,549 |
| சி. எச். சத்திய தேவராஜ் | சுயே | 3,103 |
| சி. தியாகராஜன் | திமுக | 1,97,780 |

## 29. மயிலாடுதுறை

மொத்த வாக்காளர்கள் ... 7,21,157
பதிவான வாக்குகள் ... 5,78,288
செல்லாதவை ... 21,429

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஈ.எஸ்.எம். பக்கீர் முகமது | காங்(இ) | 3,35,033 |
| பி. கல்யாணம் | திமுக | 2,15,390 |
| எஸ். கீர்த்திவாசன் | சுயே | 4,697 |
| கே. எஸ். இராஜசேகரன் | சுயே | 1,739 |

## 30. நாகப்பட்டினம் (தனி)

மொத்த வாக்காளர்கள் ... 7,55,903
பதிவான வாக்குகள் ... 6,21,914
செல்லாதவை ... 19,003

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். மகாலிங்கம் | அஇஅதிமுக | 3,009,12 |
| [illegible] ஆறுமுகம் | சுயே | 3,376 |
| கே. முருகையன் | [illegible] | 2,98,623 |



| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|

## 31. தஞ்சாவூர்

மொத்த வாக்காளர்கள் ... 7,25,310
பதிவான வாக்குகள் ... 5,76,468
செல்லாதவை ... 22,998

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். சிங்காரவடிவேல் | காங்(இ) | 3,06,351 |
| எஸ். பழனிமாணிக்கம் | திமுக | 2,17,030 |
| எம். சுப்பிரமணியம் | சுயே.காங்(ஜெ) | 30,089 |

## 32 புதுக்கோட்டை

மொத்த வாக்காளர்கள் ... 8,06,752
பதிவான வாக்குகள் ... 6,53,865
செல்லாதவை ... 30,306

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| என். சுந்தரராஜ் | காங்(இ) | 4,26,717 |
| பி. கலியபெருமாள் | சுயே | 3,862 |
| ஆர்.எம்.எம். சிங்காரவேலு செட்டியார் | சுயே | 6,676 |
| டாக்டர் எம். செல்வம் | சுயே | 5,168 |
| பி. மீரா மொய்தீன் | சுயே | 2,421 |
| கே. முஸ்தபா கமால் | காங்(ஜெ) | 16,902 |
| கே வீரய்யா | திமுக | 1,61,813 |

## 33. சிவகங்கை

மொத்த வாக்காளர்கள் ... 7,84,017
பதிவான வாக்குகள் ... 5,79,544
செல்லாதவை ... 25,752

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. சிதம்பரம் | காங்(இ) | 3,77,160 |
| தா. கிருட்டிணன் | திமுக | 1,64,627 |
| எம். கே. குமார் | சுயே | 12,005 |

## 34. இராமநாதபுரம்

மொத்த வாக்காளர்கள் ... 8,10,454
பதிவான வாக்குகள் ... 5,68,575
செல்லாதவை ... 30,493

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டாக்டர் வி. ராஜேஸ்வரன் | காங்(இ) | 2,74,922 |
| ஐ. இராமன் | சுயே | 3,856 |
| சி.என். அசோகன் | லோக்தளம் | 2,951 |
| எம்.எஸ்.கே. சத்தியேந்திரன் | திமுக | 1,74,778 |
| டாக்டர் ஏ.கே. ஜெயினுதீன் | காங்(ஜெ) | 2,592 |
| ஆர். வி. தங்கவேலன் | சுயே | 16,617 |
| எஸ். கருப்பையா | சுயே | 57,078 |
| டி. ஏ. முத்துராம் | சுயே | 5,288 |

## 35. சிவகாசி

மொத்த வாக்காளர்கள் ... 8,38,018
பதிவான வாக்குகள் ... 6,27,315
செல்லாதவை ... 24,281

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| என். சௌந்தரராஜன் | அஇஅதிமுக | 3,23,786 |
| கே. இராமன் | சுயே | 4,921 |
| பி. சுப்பாரெட்டியார் | சுயே | 4,521 |
| கே. காளியப்பன் | சுயே | 12,498 |
| ஏ. சீனிவாசன் | இ.கம். | 2,57,308 |

## 36. திருநெல்வேலி

மொத்த வாக்காளர்கள் ... 7,57,928
பதிவான வாக்குகள் ... 5,34,487
செல்லாதவை ... 19,396

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம் ஆர். ஜனார்த்தனம் | அஇஅதிமுக | 2,96,897 |
| ஜே. குழந்தை | சுயே | 2,541 |
| டி.எஸ்.ஏ. சிவப்பிரகாசம் | திமுக | 2,10,951 |
| பி. தேவபிரான் | சுயே | 4,702 |

## 37. தென்காசி

மொத்த வாக்காளர்கள் ... 7,35,912
பதிவான வாக்குகள் ... 5,56,900
செல்லாதவை ... 27,433

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். அருணாசலம் | காங்(இ) | 3,60,517 |
| ஆர். கிருஷ்ணன் | இ.கம்.(மா) | 1,68,950 |

## 38. திருச்செந்தூர்

மொத்த வாக்காளர்கள் ... 7,49,008
பதிவான வாக்குகள் ... 5,08,487
செல்லாதவை ... 23,908

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. டி. கோசல்ராம் | காங்(இ) | 3,45,381 |
| கே. கேசவன் | சுயே | 5,671 |
| ஜவகர்லால் | ஜனதா | 1,21,954 |
| ஏ. தனுஷ்கோடி ராமலிங்க பாண்டியன் | சுயே | 11,573 |

## 39 நாகர்கோயில்

மொத்த வாக்காளர்கள் ... 7,20,979
பதிவான வாக்குகள் ... 4,87,496
செல்லாதவை ... 16,907

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| என். டென்னிஸ் | காங்(இ) | 2,35,965 |
| எஸ். முருகன் | சுயே | 3,539 |
| லட்சுமணன் பிள்ளை | சுயே | 7,957 |
| பி. விஜயராகவன் | ஜனதா | 2,23,128 |

# சுவையான தேர்தல் செய்திகள்!



### வாக்குப் பெட்டிக்குப் பூசை

ஒசூர் தொகுதி வேட்பாளர் ஒருவர், வாக்குச் சாவடியில் தனது முதல் வாக்குப் பதிவு செய்வதற்கு முன்பாக, வாக்குப் பெட்டிக்கு மலர்கள் தூவி பூசை நடத்தினார்.




### யானை மீது வந்தவர்!

உத்தரப்பிரதேசத்தில் யானைச் சின்னம் கொண்ட சுயேச்சை வேட்பாளர் ஒருவர், யானை மிது அமர்ந்தே வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களித்தார். கலிலாபாத் நாடாளு மன்றத் தொகுதியில் இந்த நிகழ்ச்சி நடந்தது.

### 128 வயது மூதாட்டி

பூனா புறநகர்ப்பகுதியில் 128 வயதான மூதாட்டி ஒருவர் தனது உறவினரின் உதவியுடன் வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களித்தார்.

காஞ்சிபுரத்தில் விளக்கடித் தெருக்கோயில் வாக்குச் சாவடியில் நூறு வயது மூதாட்டி ஒருவர் வாக்களித்தார். தியாகிப் பள்ளித் தெரு வாக்குச் சாவடியில் 90 வயது மூதாட்டி வாக்களித்தார்.

வடார்க்காடு மாவட்டம் ஆம்பூரில் கஸ்பா-ஏ பகுதியைச் சேர்ந்த குருவம்மாள் என்ற 105 வயது மூதாட்டி யாருடைய உதவியும் இல்லாமல் வந்து வாக்களித்தார்.

### "மை" என்றால் அலர்ஜி

பம்பாய் வடமேற்குத் தொகுதியில் வாக்களிக்க வந்த வழக்கறிஞர் ஒருவர் தமது விரலில் அழியாத மையை வைக்கக்கூடாது என்றும், அந்த மை தனக்கு ஒத்துக் கொள்ளாது என்றும் கூறினார். மை வைக்காமலே வாக்களிக்க அவர் அனுமதி கோரினார். ஆனால், தேர்தல் அலுவலர் அதற்கு அனுமதி தரவில்லை.



### வாளியில் வாக்குச் சீட்டுக்கள்

பூனாவில் இரண்டு வாக்குச்சாவடிகளில், காலி வாக்குப் பெட்டிகள் பற்றாக் குறையினால், சிறிது நேரம் வாளிகளிலும், காலித் தீன் பைகளிலும் வாக்குச் சீட்டுகள் போட்டு வைக்கப்பட்டன. பின்னர் புதிதாக வாக்குப் பெட்டிகள் அந்தச் சாவடிக்குக் கொண்டுவரப்பட்டு அதில் அந்தச் சீட்டுகள் மாற்றப்பட்டன.

### மிகச்சிறிய வாக்குச் சாவடி

மகாராஷ்டிரம் கராடா நாடாளுமன்றத் தொகுதியிலுள்ள கிடாகுண்டா கிராமம் தான், நாட்டிலேயே மிகச் சிறிய வாக்குச் சாவடியாகும். இந்த வாக்குச் சாவடியில் மொத்தம் பதிவான வாக்காளர்களின் எண்ணிக்கை 13 தான்!

### ஆண்டிப்பட்டியில் அதிகாலையிலேயே 'கியூ'

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் போட்டியிடும் ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி வாக்குச் சாவடிகளில், அதிகாலைக்கும் முன்பாகவே வாக்காளர்கள் மிக்க ஆர்வத்துடன் வரிசையில் நின்றுகொண்டிருந்தார்கள்.




### தோள் கொடுத்த இளைஞர்

சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியில் கோபாலபுரம் வாக்குச் சாவடிக்கு எழுபது வயதுள்ள பார்வையற்ற நடக்க முடியாத நொண்டிக் கிழவர் ஒருவர், வாலிபா ஒருவரின் தோள்களில் சவாரி செய்து கொண்டே வாக்குச் சாவடிக்குச் சென்றார். வாக்களித்த பின்னர் அதேபோல சவாரி செய்து கொண்டே வீடு திரும்பினார்.



### படகில் வாக்குச் சாவடி

தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதியில் படகிலேயே ஒரு வாக்குச் சாவடி அமைக்கப்பட்டது.

பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ளது எமனூர் கிராமம். இங்கு 682 வாக்காளர்கள் இருக்கிறார்கள். இந்த வாக்காளர்கள் வாக்களிக்க 130 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சுற்று வழியாக வரவேண்டும. அதைத் தவிர்க்கவே இந்த ஏற்பாடு.



### தமிழக சட்டமன்றத்தேர்தலில் எட்டுப் பெண்கள் வெற்றி!

தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் எட்டு பெண்கள் வெற்றி பெற்றுள்ளனர். இவர்களில் ஐந்து பேர் அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள். மூவர் காங்கிரஸ்(இ) கட்சியைச் சேர்ந்தவர்கள்.

பெண் அமைச்சர்களான திருமதி கோமதி சீனிவாசன், திருமதி விஜயலட்சுமி பழனிசாமி ஆகியோர் முறையே வலங்கைமான், வீரபாண்டி ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றனர். இவர்களைத் தவிர திருமதி வளர்மதி (மயிலாப்பூர்), திருமதி சரோஜா (உப்பிலியாபுரம்), திருமதி லட்சுமி (அவிநாசி) ஆகிய மூன்று அ.இ.அ.தி.மு.க. பெண் வேட்பாளர்களும் வெற்றி பெற்றுள்ளனர்.

திருமதி யாசோதா (ஸ்ரீபெரும்புதூர்), திருமதி ஏ.எஸ்.பொன்னம்மாள் (பழனி), திருமதி டி.ராஜாம்பாள் (தலைவாசல்) ஆகிய மூன்று காங்கிரஸ்(இ) ஆகிய வேட்பாளர்களும் வெற்றி பெற்றுள்ளனர்.

அ.இ.அ.தி.மு.க., காங்கிரஸ்(இ) ஆகிய கட்சிகளைத் தவிர, வேறெந்தக் கட்சிகளின் பெண் வேட்பாளர்களும் வெற்றி பெறவில்லை.

### தமிழகத்தில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வென்றவர்

புதுக்கோட்டை நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள காங்கிரஸ்(இ) வேட்பாளர் திரு என்.சுந்தரராஜ், தமிழகத்திலேயே அதிக வாக்குக்ள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

அவர் 2.64 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. வேட்பாளர் திரு கே. வீரையாவைத் தோற்கடித்தார்.

திரு என்.சுந்தரராஜ் 1977 மற்றும் 1980ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல்களில் திருமயம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1977ல் 57 வாக்குகள் வித்தியாசத்திலும், 1980ல் 223 வாக்குகள் வித்தியாசத்திலும் அவர் வென்றார்.

புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 5 சட்டமன்ற உறுப்பினர்களும் இதேபோல் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளனர். இதில் அறந்தாங்கித் தொகுதியிலிருந்து மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு எஸ்.திருநாவுக்கரசு அவர்கள் 30 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

### ரத்தத்தில் எழுதியிருந்த வாக்குச்சீட்டு

'நாட்டின் ஒற்றுமை காக்க ஒவ்வொரு துளி இரத்தமும் பயன்படுத்தப்படும்' என்று மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களுக்கு இரத்தத்தில் எழுதிய வாக்குச் சீட்டு ஒன்று மீரட் நகர் வாக்குப்பெட்டியில் கிடந்தது.

'உங்கள் தாயார் இந்திரா காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு நீங்கள் தனிமையில் வாடுவதாகக் கருத வேண்டாம். ஒவ்வொரு இளைஞரும் உங்களின் சகோதரர்கள்; திருமதி இந்திரா காந்தியின் மகன்' என்றும் இந்த வாக்குச் சீட்டில் எழுதியிருந்தது.

### 20 மணி நேரம் இடைவிடாமல் முடிவுகள்

தமிழகச் சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளைத் தமிழகத் தேர்தல் அலுவலர் திரு.டி.கே.ஓசா தலைமையில், தேர்தல் அலுவலர்கள் 20 மணி நேரம் இடைவிடாமல் அறிவித்தனர்.

28.12.84 அன்று மாலை 5.40 மணிக்கு, முதல் முடிவு அறிவிக்கப்பட்டது. மறுநாள் (29.12.84) பகல் 11.45 மணி வரை இடைவிடாமல் தொடர்ந்து ஏறத்தாழ 20 மணி நேரம் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

— செய்தித் தாள்களிலிருந்து சேகரித்தவை






பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23-
தமிழரசு




# தமிழரசு


16-1-1985 75 காசு

ஒவ்வொரு
இறப்பும்/பிறப்பும்
பதிவு செய்யப்பட
வேண்டும்

**ஏனெனில்**

அது உங்களுக்கு உதவுகிறது
பிறப்பு சான்றிதழ் வயதுக்கு அத்தாட்சி.
பள்ளியில் சேரவும்
ஓட்டுனர் லைசென்ஸ் பெறவும்
பாஸ்போர்ட் பெறவும்
வேலைவாய்ப்பு பெறவும்
ஓட்டுரிமைக்கும்
இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி எடுக்கவும்
அது பயன்படும்.

இறப்பு சான்றிதழ்,
சொத்துக்கு வாரிசாகவும்
இன்ஷ்யூரன்ஸ் பணத்தைப் பெறவும்
தேவைப்படுகிறது.

பிறப்பு/இறப்பு பதிவு நாட்டிற்கும் நல்லது
வளமான ஆரோக்யம் மிக்க வாழ்க்கைக்குத்
தேவையான எதிர்காலத் திட்டங்களை
தீட்டவும், கணிக்கவும் அடிப்படைத் தகவல்களைத்
தருகிறது பிறப்பு/இறப்பு பதிவு.
1969-ம் ஆண்டு பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு
சட்டத்தின் கீழ் கட்டாயமாக பதிவு செய்தல் வேண்டும்.

**பிறப்பு மற்றும் இறப்புப் பதிவை
குறித்த நேரத்தில் செய்வதில்
கவனம் கொள்ளுங்கள்.
கட்டணம் இன்றி கிடைக்கும்
பதிவுச் சான்றிதழைப் பெறுங்கள்.
காலதாமதமாக பதிவு செய்தலும்
அனுமதிக்கப்படுகிறது.**

davp 84/5 Tam

**ரெஜிஸ்ட்ரார் ஜெனரல், இந்தியா.**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.





மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் அழைப்பினை ஏற்று அவரிடம் கலந்து பேச, 4.1.85 அன்று அமெரிக்காவுக்குப் பயணம் ஆன, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை, மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வழியனுப்பி வைத்தார். தலைமைச் செயலாளர் திரு [illegible] சொக்கலிங்கம் [illegible] அவர்களும் மாண்புமிகு நிதியமைச்சருடன் [illegible]றார்.

# தமிழுக்காகப் பணி ஆற்றும் அரசு



## மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்

பாட்டு எழுதப் படித்தவர்கள், தரித்திரர்களாக இருப்பார்கள் என்ற நிலை 30, அல்லது 40 ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது. தமிழ் படித்தவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள் என்ற நிலை இங்கே எத்தனையோ ஆண்டுகளாக இருந்து வருகிறது. இப்போதும் அப்படித்தான் இருக்கிறது என்று யாராவது சொன்னால், நாம் தலைகுனிந்துபோகும் நிலைதான் இருக்கிறது.

ஆனால் தமிழைக் கற்றவர்கள் மதிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே, ஓரளவுக்கு நிம்மதியை அளிக்கும் வகையில் சில ஏற்பாடுகளை நாம் செய்து வருகிறோம்.

நமது நாடு, நமது மக்கள், நமது மொழி என்ற உணர்வு நமக்கு வேண்டும். அயர்லாந்தில் அவர்கள் தங்கள் மொழியை மிகவும் போற்றுகிறார்கள் என்று அறிகிறேன். பிரிவினை வேண்டாம்; அந்தக் கொள்கையை முன்பே விட்டு விட்டோம்.

பள்ளிகளில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடவேண்டும் என்று உத்தரவுபோட வேண்டும். இசைத் தட்டுகளில் ஒலித்தால மட்டும் போதாது. மாணவர்களுக்கும் அந்தப் பாடல் பாடம் ஆகவேண்டும். எவ்வளவோ நாட்டில் எழுதப்படுகின்றன. ஒரு பத்து, பன்னிரண்டு வரிகளையாவது நாம் மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டால் அது நமக்குக் கட்டாயம் பயன்படும்.

திருக்குறள் 2 வரிகளில்தான் எழுதப் பட்டிருக்கிறது. திருவள்ளுவர் யாருக்காக எழுதினார்? தமிழர்க்குப் பயன்படுவதற்காக எழுதினார். தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படுவதற்காக - தன் குடும்பத்திற்காக அல்ல. தனக்காக அல்ல! 2000 ஆண்டுக்குப் பிறகு தமிழகத்தில் நமக்குப் பாராட்டுக் கிடைக்கும் என்பதற்காக அவர் எழுதவில்லை. அவர் தனது கடமையைச் செய்தார். அதன் பலன், இன்று தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கிறது.

பேரறிஞர்களை அவர்கள் இருக்கும் போது பாராட்டுவது இல்லை. மறைந்த பின் பாராட்டி வருகிறோம். புலவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்கிறேன். தமிழுக்காக இந்த அரசு எதையும் செய்யும்; எதையும் தாங்கும்! அதை நம்புங்கள்! உதவுங்கள்! நல்ல வாழ்க்கை பெறுங்கள்! எதிர்காலச் சந்ததியினருக்கு நல்ல வாழ்வு கொடுங்கள்.

[1984 திருவள்ளுவர் திருநாளில் ஆற்றிய உரையிலிருந்து]





தமிழரசு
மலர் : 15 இதழ் : 14
16-1-1985
திருவள்ளுவர் ஆண்டு 2016
ரக்தாக்ஷி - தை 3

கான்சாஸ் என்ற ராஜ்யத்திலே 900 ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு விவசாயப் பண்ணையைப் பார்த்தேன். 900 ஏக்கர் பரப்புள்ள விவசாய பண்ணையைத் தகப்பன், மகன் ஆகிய இருவர் மட்டுமே பார்த்துக் கொள்ளுகிறார்கள். வேறு அவர்களுக்கு உதவிக்கு எந்தவிதமான கூலியாட்களையும் வைத்துக் கொள்ளவில்லை. எந்திரத்தைப் பெருமளவிற்குப் பயன்படுத்தி 900 ஏக்கர் நிலத்தையும் அவர்கள் பண்படுத்தி நல்ல முறையிலே பலனும் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். ஆனால் நம் நாட்டில் மக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே நாம் அந்த விதமான பண்ணைகளை அமைக்க முடியாது. நமக்கு வழிகாட்டத் தக்க நிலையில் ஜப்பான் நாட்டு உழவு முறை இருப்பதைப்பார்த்து நான் பெரிதும் பாடம் பெற்றேன் என்று சொல்லிக் கொள்ள வேண்டும். அங்கே இருப்பவை பெரிய பெரிய பண்ணைகள் அல்ல. நம்முடைய நாட்டைப் போலவே சிறிய அளவுள்ள நிலங்களை வைத்துக் கொண்டு மிக அக்கறையோடு பாடுபடுவதாலே நிறைந்த பலனைப் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். முக்கியமாக ஜப்பான் நாட்டில் ஒருவன் தானே இயக்கிக் கொண்டு செலத் தக்க எந்திரக் கலப்பையை (பவர் டில்லர்) பெரிய அளவிற்கு அவர்கள் உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள். நம்முடைய நாட்டில் அது வேகமாகப் பரவ வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன்.

அந்தப் 'பவர் டில்லர்' ஜப்பான் நாட்டில் பயன்படுத்துவதினாலே விவசாயத்தை மிக தரம் குறைந்த ஒரு தொழில் என்று கருதாமல், எந்திரத்தோடு தொடர்பு கொண்ட ஒரு தொழில் என்று கருதி, படித்த இளைஞர்கள் எல்லாம் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே பல இடத்திலே இருப்பதைப்போல நிலத்தையே கண்ணால் பார்க்காத நிலச் சொந்தக்காரர்கள் ஜப்பான் நாட்டிலே இல்லை. நிலத்திலேயே அவர்கள் குடியிருக்கிறார்கள், நிலத்திற்குப் பக்கத்திலேயே வீடு அமைத்துக்கொண்டு, கண்ணும் கருத்துமாக கவனித்து, பவர் டில்லர் போன்ற எந்திர வசதிகளைப் பெற்று நல்ல முறையில் உரத்தையும் பயன்படுத்துவோமானால் ஜப்பான் நாடு முன்னேறியிருப்பதைப் போல நம்முடைய நாடும் முன்னேற முடியும்.

நம்முடைய நாட்டில் மிகப் பெரிய ஒரு குறை நமக்குக் கிடைக்கக்கூடிய தண்ணீர் வளம் மிகக் குறைவு. இந்தக் குறைவான தண்ணீர் வளத்தையும் நாம் பாழ்படுத்திவிடுவது மிக அதிகமாயிருக்கிறது. அதை நீக்குவதற்கு அப்பொழுது நாங்கள் சென்று பார்த்த சில மேல்நாடுகளில் சுழல் நீர்ப்பாசன முறையை அமைத்திருக்கிறார்கள். அதன் மூலமாகப் பயிர்களுக்கு நல்ல முறையில் பாசனம் கிடைப்பது மட்டுமல்லாமல் பாசனத்திலே ஏற்பட்டுவிடுகின்ற பாழ்படுகின்ற தன்மை குறைக்கப்பட்டு, புதிய முறையில் அந்தப் பாசனம் பலன் அளிக்கிறது. மற்றபடி நம்முடைய நாட்டில் விவசாயத்திலே ஏற்பட்டிருக்கின்ற புதிய விழிப்பு, அதன் மூலமாகக் கிடைத்துக் கொண்டு வருகின்ற பெரிய வெற்றிகள், இவைகளையெல்லாம் உறுதிப்படுத்துகின்ற வகையில் இன்று தரிசாகக் கிடக்கின்ற - வளம் நிறைந்திருந்தும் பயன்படுத்தாமல் இருக்கின்ற - பண்ணைகள் ஏராளமான முறையில் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்குப் பொதுமக்களுடைய பேராதரவும், விவசாயத்திலே அக்கறை கொண்டுள்ளவர்களுடைய ஒத்துழைப்பும் நிரம்பத் தேவை.





# உழவர் திருநாள்

## பாவேந்தர் பாரதிதாசன்





உழவே தலை என்றுணர்ந்த தமிழர்
விழாவே இப் பொங்கல் விழாவாகும்! காணீர்
முழவு முழங்கிற்றுப் புதுநெல் அறுத்து
வழங்கும் உழவர்தோள் வாழ்த்துகின் றாரே!

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்என்ற சொல்லிற்
பழுதுண்டோ? காணீர் பழந்தமிழர் ''நாங்கள்
உழவரே'' என்றுவிழா ஒப்பி மகிழ்ந்தாரே!

உய்யோமோ செங்கதிரே நீபனி ஓட்டிவந்த
தையே முதற்றிங்கள் தைம்முதலே ஆண்டுமுதல்
கையே துணையாகும் கைத்தொழிலே ஆக்கமென்று
செய்யே தரும்செந்நெல் சேயிழையார் குற்றினரே

தேரிழுப்பும், செம்பெடுப்பும் அல்லவிழா! அன்னவெல்லாம்
ஓரிழுப்புநோய்!—பொதுவின் உள்ளவிழைவே விழா!
ஏரெழுப்பும் புத்தம் புதுச்செல்வம் இட்ட பால்
பாரழைக்கப் பொங்கற் பயன்மணக்க வைத்தனரே!

அழகின் பரிதி உயிர்; அவ்வுயிரை
முழுதும் நிறுத்தும் அமிழ்துதான் முத்து
மழை! உலகு தாய்! வளர்ப்புப் பாலே பயன்! நெய்
ஒழுக உண்டார் பொங்கல் எல்லாரும் ஒன்றியே!



ஆடை எல்லாம் அந்நாள் மடிப்பு விரித்தவைகள்!
ஓடைஎனப் பாலும், உயர்குன் றரிசியும்
வாடைநெய்யும் பொங்கி வழியவே பொங்கலிட்ட
நாதோன் கொண்ட நனிமகிழ்ச்சி செப்பரிதே!

இகழ்ச்சி அணுகா நிலையில் அமிழ்தைப்
புகழ்ச்சி சொல்லிப் புத்துருக்கு நெய்யொழுக உண்ட
மகிழ்ச்சியே இந்நாள் போல் எந்நாளும் மல்க
மிகச்சீரிய தமிழும் மேன்மையுற்று வாழியவே!

('பொங்கல் வாழ்த்துக் குவியல்' நூலிலிருந்து)

# பொங்கல் நாளில் ஒரு சிந்தனை

பேரறிஞர் அண்ணா



உலகத்திலே விவசாயத்திலே தேறியிருக்கிற எல்லா நாடுகளையும்விட நம்முடைய நாடு உற்பத்தித் திறனில் கடைசிக் கட்டத்தில் இருக்கிறது. நீர்வளம் இருக்கலாம், நிலவளம் இருக்கலாம், உழைப்பு வளம் இருக்கலாம். அதைப் பற்றிப் புலவர்கள் பாடிய பாடல்கள் வண்டி வண்டியாக இருக்கலாம்! ஆனால், விவசாய உற்பத்தியின் அளவை எடுத்துக் கொள்ளும் நேரத்தில் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிற மற்ற நாடுகளைவிட நம்முடைய நாட்டு உற்பத்தியின் அளவு மிகக் குறைவு. நம்மை விடக் குறைவான நிலம் வைத்துக் கொண்டு, நம்மை விடக் குறைவாக ஆட்களை வேலைக்கு வைத்துக் கொண்டு, பிறநாடுகள் நம்மைவிட அதிக அளவுக்கு உற்பத்தி செய்து, நமக்கே உணவுப் பொருளைக் கடன் கொடுக்கக் கூடிய அளவுக்கு வளர்ந்திருக்கின்றன என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

அமெரிக்க நாட்டில் நூற்றுக்குப் பத்துப் பேருக்கு மேல் விவசாயத்தில் ஈடுபடவில்லை. நம்முடைய நாட்டில் நூற்றுக்கு எண்பது பேர் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்! ஆனால் நூற்றுக்குப் பத்துப்பேர்கூட ஈடுபடாத அமெரிக்க நாட்டிலே, தானும் உணவு உற்பத்தி செய்து, உண்டு, நமக்கும் மற்றவர்களுக்கும் தருகின்ற அளவிற்கு அங்கே அமோகமான விளைச்சல் கிடைக்கிறது. அமெரிக்க உழவன் ஒருவன் உழுது கொண்டிருக்கிறான் என்றால் அவனுக்கு மாத்திரம்அல்ல. அவனுக்கும் - உலகத்திலே ஒரு கோடியிலே உள்ளவர்களுக்கும் சேர்த்து அவன் உழைத்துக் கொண்டிருக்கிறான். ஆகையினாலே பொதுப்படையான ஓர் உண்மை - எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய உண்மை உற்பத்தி அதிகமாக வேண்டும் என்பது!

விதை செத்துத்தான் பயிர் முளைக்கும். விதை சாகாமல் பயிர் முளைப்பதில்லை. விதையை அப்படியே நாம் உண்டுவிட்டோமானால் பயிர் கிடையாது! அதைப்போல உற்பத்தியாகிற செல்வம் அவ்வளவும் இந்தத் தலைமுறையில் தின்று தீர்த்து விடுவதென்றால் அடுத்த தலைமுறைக்கு மிச்சம் ஏதும் இருக்காது. ஆகையால்தான் நாம் உழைக்கிற உழைப்பு நம்முடைய நல்வாழ்வுக்கு மட்டுமல்ல, வருங்காலத் தலைமுறைக்காகவும் நாம் உழைக்கிறோம் என்பதை - நாம் இந்தத் தலைமுறையில் சில சங்கடங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை, தேசியக் கடமையாக ஒவ்வொருவரும் கருத வேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

'பசி'யைப் பிணி என்று சொன்னவர்களே தமிழர்கள்தாம். மற்ற பிணிகளைப்போல பசி என்பது ஒரு பிணிஎன்று, சொல்லி சங்க இலக்கியத்திலே வள்ளல்களை 'பசிப்பிணி மருத்துவர்' என்றே அழைத்திருக்கிறார்கள். வள்ளல்களுக்கு 'வள்ளல்கள்' என்று பெயர் இடுவது மட்டும் அல்லாமல் பசிப் பணிமருத்துவர் பசி என்ற நோயைத் தீர்க்கின்ற மருந்து கொடுக்கின்றவர் என்று அழைத்திருக்கிறார்கள். பசிப் பணி தீர்க்கின்ற மருத்துவர்களாக உழவர்களைக் கருதிக் கொள்ள வேண்டும். மருத்துவர்களுக்குச்சலிப்பிருக்கலாம்; களைப்பிருக்கலாம், கட்டணம் போதுமானதாகவில்லை என்ற கவலை இருக்கலாம். ஆனால் இவைகள் எல்லாவற்றையும்விட பசிப் பிணியைத் தீர்த்தோம் என்ற தெம்பு இருக்கிறதே அதற்கு நிகர் எதுவும் ஆகாது.

இன்னும் ஒரு 10 வருடம் 15 வருடத்திற்குப் பிறகு நிலத்திற்குச் சொந்தக்காரர் இவர் என்றோ, இந்த நிலத்திலே உழுகின்றவன் இவன் என்றோ, பேதம் பிரித்துக் காட்ட முடியாத அளவுக்கு நிலஉடைமையாளர்கள் அவர்களுடைய வீட்டுப் பிள்ளைகள் எம்.ஏ. படித்தாலும் பி.ஏ., படித்தாலும் பி.எஸ்சி. படித்தாலும், பி.காம். படித்தாலும், டிராக்டர்களை ஓட்டிக் கொண்டு, தங்கள் நிலங்களைத் தாங்களே உழுகின்ற காலந்தான் நம்முடைய நாட்டினுடைய பொற்காலமாக இருக்கும். மிராசுதார் என்றால் நிலத்துக்கு உடைமையாளர். அந்த உடைமையாளர்களாக இருப்பதற்கு அந்தஸ்து என்ன என்றால் உழைக்காமலே இருப்பதுதான் என்ற பழைய மரபு, நிச்சயமாக இருந்து கொண்டு வருகிறது. அதை அழித்துவிட்டோம் என்று சொல்வதைவிட, அது தன்னாலேயே அழிந்து கொண்டு வருகிறது எனலாம்.

இனி எந்த அளவுக்குத் தங்களிடத்தில் நிலம் இருந்தால் நேரிடையாகப் பார்க்க முடியுமோ அந்த அள்வுக்கு நிலத்தை வைத்துக் கொண்டிருப்பதுதான் பாதுகாப்புக்கும் நல்லது. பயிர் வளர்ச்சிக்கும் நல்லது. குடும்பத்திற்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது. ஏராளமான நிலம் இருப்பது ஒரு காலத்தில் அந்தஸ்துக்கு அறிகுறி. இன்றோ, கட்டுக்கடங்கிய அளவிற்கு நிலத்தை வைத்துக்கொண்டு, இது நம்முடைய நிலம் என்று நாம் உழவேண்டும். நம்முடைய நிலம், இதை நாம் கவனித்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு நில உடைமையாளர்களுக்கும் நில உடைமையாளர்களாக இல்லாமல் இருக்கின்ற விவசாயக் கூலிகளுக்கெல்லாம் நிலம் கிடைக்கின்ற ஒரு திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகின்ற வரையில் நிறைவேற்றப்படுகின்றபொழுது அவர்களும் உடைமையாளர்களாக ஆகின்ற காலம் வந்து உடைமையாளர்கள் உழைப்பாளர்கள் என்று இரண்டு வர்க்கம்இல்லாமல் உடைமைக்கும் சொந்தக்காரர்கள், உழைப்புக்கும் சொந்தக்காரர்கள் என்ற நிலைமாற வேண்டும். அது இன்று பேசி நாளை தீர்ந்துவிடுகின்ற பிரச்னை அல்ல.

அமெரிக்காவிலே மக்கள் தொகை குறைவாக இருப்பதால், அங்கு அவர்கள் பெரிய பண்ணைகளை முழுவதும் எந்திரமயமாக்கி இருவர், மூவர் பெரிய பண்ணைகளைப் பார்த்துக் கொள்ளுகின்ற நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. நான் அமெரிக்காவில்



# பொங்குக புதுவளம்



பொங்குக பொங்கல் பொங்குகவே
பொங்குக புதுவளம் பொங்குகவே
திங்களில் மும்முறை மழைபொழிய
தினம்இது முதல்நம் குறைஒழிய
மங்குக போர்வெறி மாச்சரியம்
மதவெறி நிறவெறி தீச்செயல்கள்!
தங்குக சத்திய சன்மார்க்கம்
தரணியில் மாந்தர்கள் எல்லார்க்கும்
(பொங்குக)



மாநில உயிர்கள் நலமுறவும்
மக்கள் உடல்வளம் பலமுறவும்
ஞானமும் கல்வியும் சிறந்திடவும்
நல்லன உணர்ச்சிகள் நிறைந்திடவும்
தானியக் கதிர்வளம் உயர்ந்திடவே
தக்கன உழவுகள் முயன்றிடுவோம்
போனது உணவுப் பஞ்சமென
புதுவளம் எங்கணும் மிஞ்சிடவே
(பொங்குக)

உழவும் தொழிலும் மலிந்துவிடில்
ஊரில் செல்வம் பொலிந்துவிடும்
விழவும் தினந்தினம் விருந்துகளும்
வீட்டிலும் நாட்டிலும் இருந்துவரும்
பழகும் அன்னிய நாடுகளும்
பரிவுடன் எதையும் ஈடுதரும்
செழுமை பெற்றிடும் வாணிபங்கள்
சேமித் திடுவோம் நாணயங்கள்
(பொங்குக)

கொள்ளை கொள்ளை தானியமும்
கோரும் பலதொழில் மாணியமும்
வெள்ளிபொன் செல்வம் மிகுந்திடினும்
வேண்டிய கலைத்திறம் திகழ்ந்திடினும்
கள்ளமும் பொய்யும் அமிழ்ந்திடவும்
கருணை நறுமணம் கமழ்ந்திடவும்
உள்ளம் மலர்ந்திடல் இல்லாமல்
உண்மை வளமெதும் நில்லாது
(பொங்குக)

('கவிதாஞ்சலி' நூலிலிருந்து)

நாமக்கல் கவிஞர்
வெ. ராமலிங்கம் பிள்ளை



பொங்கல் திருநாளினைத்
"தமிழ்த் திருநாள்" என
மாற்றியமைத்த
பேராசிரியர் கா. நமச்சிவாயர்
இயற்றிய

## பொங்கற் புதுநாள் வாழ்த்து

பொங்கற் புதுநாள் போந்தது போந்தது
எங்கணும் எவர்க்கும் இன்பமே எய்துக
பொங்குக பொங்கல், பொங்குக பொங்கல்
பொங்குக பொங்குக பொங்குக பாலும்
ஒக்கலும் மக்களும் உகந்துடன் உண்க
மக்கள் அனைவரும் மகிழ்ந்தே உண்க
புத்துடை உடுமின் புத்தணி அணிமின்
பக்தி கொண்டே பரமனைப் பணிமின்
சந்தம் தமிழ்மொழி நலம்பெற் றோங்கிட
எந்தக் காலும் இன்புற வாழ்த்துக!
தண்கடல் பரப்பிற் சாரும் மணலினும்
பண்புற வானில் பரவும் மீனினும்
வாழ்க அனைவரும் வாழ்க பல்லாண்டு
வாழ்க பல்லாண்டு வளமெலாம் படைத்தே!

(பேராசிரியர் 1934-ல் இயற்றிய பாடல்)



# தமிழ்நாட்டில் 'தங்க மழை'

தமிழ்நாட்டில் வட கிழக்குப் பருவமழையின்போது பல இடங்களில் வழக்கத்திற்குக் குறைவான அளவிலேயே பெய்து இருந்தது. இதனால் தானியங்கள் பயிரிடும் பரப்பும் குறைவாகவே இருந்தது.

கடந்த ஒரு வாரமாகத் தமிழ்நாடு முழுவதும் பரவலாக மழை பெய்து இருக்கிறது. இதனால் தானியங்கள் பயிரிடப்பட்டபரப்பின் அளவும் அதிகரித்து இருக்கிறது. தானியங்களின் உற்பத்தியும் இந்த ஆண்டு அதிகரிக்கும். ஆகவே இப்போது பெய்து இருக்கும் மழையைத் தங்கமான மழை என்று கூறலாம்.

கிழக்கு இராமநாதபுரத்தில் மழை குறைவாக இருந்தது. இப்போது அங்கும் மழை பெய்து இருக்கிறது. எல்லா ஏரிகளும் நிரம்பி இருக்கின்றன. நெல் நடவும் அதிகரித்து இருக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் 57 லட்சம் டன் அரிசிக்குப் பதிலாக 60 லட்சம் டன் அரிசி அளவுக்கு நெல் உற்பத்தியாகி இருக்கிறது. மற்ற கம்பு, சோளம் போன்ற தானியங்கள் 40 லட்சம் டன் உற்பத்தியாகியிருக்கிறது. ஆக, தமிழ்நாட்டின் நவதானிய உற்பத்தி ஒரு கோடி டன்னை எட்டிவிட்டது.

இரசாயன உரமும் வழக்கமாக ஆண்டுக்கு 5.6 லட்சம் டன்தான் செலவாகும். இந்த ஆண்டு மார்ச்சுக்குள் அது 7 இலட்சம் டன்னாக உயர்ந்துவிடும். அரசாங்கத்திடம் அரிசி கையிருப்பு 6 லட்சம் டன் இருக்கிறது.

ஆகவே உணவு நிலைமை திருப்தியாகவே இருக்கிறது. நியாய விலைக்கடைகளில் மாதத்திற்கு 60 ஆயிரம் டன் அரிசி வீதம் முன்பு செலவாகியது. இப்போது நல்ல அரிசி வழங்கப்படுவதால் மாதம் ஒரு லட்சம் டன் அரிசி வீதம் நியாயவிலைக் கடைகளில் விற்கப்படுகிறது. இதன் மூலம் வெளிமார்க்கெட்டில் அரிசி விலை உயர்வின் வேகம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் விவசாயப் பம்புசெட்டுகள் 10 லட்சம் வரை இயங்குகின்றன. அதில் பழுது ஏற்பட்டால் அவற்றை உடனுக்குடன் சரிசெய்ய, கிராமங்களில் பயிற்சி பெற்ற ஆட்கள் இருப்பதில்லை. ஆகவே, இந்தப் பம்பு பழுது வேலையில் ஆயிரம் பேருக்குப் பயிற்சி கொடுத்து கிராமங்களிலேயே தொழில் பட்டறை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. எந்தெந்த இடங்களில் ஏற்படுத்தலாம் என்பது பற்றி மாவட்ட ஆட்சியாளர்களிடம் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 2, 3 தொழில் பட்டறை ஏற்படுத்தப்படும். ஐ.டி.ஐ. தொழில் கல்வி பயிற்சி பெற்றவர்களுக்கு வங்கிகள் மூலம் 6 ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்து இந்தத் தொழில் பட்டறையைத் தொடங்க அவர்களுக்கு உதவப்படும்.

இதில் 2 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை மீதி 4 ஆயிரம் ரூபாய் கடனை 5 ஆண்டுகளில் அவர்கள் திருப்பிச் செலுத்த வேண்டும். இதன் மூலம் ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும்.

வட ஆர்க்காட்டில் 2 இலட்சத்து 50 ஆயிரம் பம்பு செட்டுகளும், தென் ஆர்க்காட்டில் 1 இலட்சத்து 20 ஆயிரம் பம்புசெட்டுகளும் இருக்கின்றன.

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடப் பெண்கள் சுயமாகத் தொழில் தொடங்கி, தினம் 8 முதல் 10 ரூபாய் வரை வருமானம் அடையும் அளவுக்குத் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக ஓராண்டிற்குஅனுமதிக்கப்பட்டுள்ள தொகை 14 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் ஆகும்.

250 ஆதிதிராவிடப் பெண்கள், (அதில் 141 பேர் இந்துக்கள்) தேர்ந்தெடுக்கப்பட்டு 3 முதல் 6 மாதத்திற்குத் தொழில் பயிற்சி அவர்களுக்குக் கொடுக்கப்படும். பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு மாதம் 200 ரூபாய் உதவிப்பணம் கொடுக்கப்படும். அந்த வகையில் 5 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் உதவிப் பணமாகச் செலவிடப்படும்.

(4-1-85 அன்று தலைமைச் செயலகத்தில் நடந்த செய்தியாளர்கள் கூட்டத்தில் தலைமைச் செயலர் திரு கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப. தெரிவித்த தகவல்களிலிருந்து).

தலைமைச் செயலகத்தில் தானாக இயங்கும் தொலைபேசி நிலையத்தை தலைமைச் செயலர் திரு கு.சொக்கலிங்கம் இ.ஆ.ப.,27.12.84 அன்று திறந்து வைத்தார்.



# நில அளவை-பதிவுருக்கள் துறையின் பணிகள்

தமிழ்நாட்டிலுள்ள எல்லா நிலங்களையும் அளந்து அவற்றுக்கெல்லாம் அளவுகளுடன் கூடிய நிலப்படங்கள் தயாரித்து அவற்றைப் பராமரிக்கும் முக்கியமான பணியை நில அளவை-பதிவுருக்கள் துறை ஆற்றி வருகிறது. ஒரு கிராமத்தின் நில அளவை வேலைகள் முடிந்ததும் அக்கிராமத்தின் எல்லா நிலங்களுக்கும் அளவு விவரங்களுடன் புலப் படச் சுவடிகள், கிராமப்படம் மற்றும் ஒவ்வொரு நிலத்தின் நில அளவை எண், உட்பிரிவு எண், பரப்பு, நஞ்சையா, புஞ்சையா, புறம்போக்கு நிலமா, தரிசு நிலமா, தீர்வை, நிலத்தின் உரிமையாளர் பெயர் இவை அடங்கிய நிலவரித் திட்டப் பதிவேடு ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. வட்டாட்சியர் அலுவலகத்திலும் கிராம நிர்வாக அலுவலகத்திலும் இவை பராமரிக்கப்படுகின்றன. சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் கிராமப் படம் மற்றும் மூலப் புலப்படச் சுவடிகள் பராமரிக்கப்படுகின்றன்.

கிராமத்தில் நிலஅளவை தொடங்கும்போதே நில உடைமையாளர்களுக்கு விவரம் அறிவிக்கப்படுகிறது. நில அளவை நடக்கும்போதும் அளவு வேலைகள் முடிந்த விபரம் தெரிவிக்கும் அறிக்கைகிடைத்து 90 நாட்களுக்குள்ளும் தங்கள் நிலத்தின் அளவு வேலைகளில் ஏதும் குறைகண்டால் முறையீட்டுக் கொள்ளவும், நில அளவை வேலை இறுதியாக்கப்பட்டு இறுதி விளம்பரம் பிரசுரிக்கப்பட்டுவிட்டால், மூன்று ஆண்டுகளுக்குள் சிவில் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரவும் நில உடமையாளர்களுக்கு சட்டப்படி உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் பராமரிக்கப்படும் ஆவணங்களில் கீழ்க் குறித்த நிலைகளில் அவ்வப்போது நிகழும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. நிலங்கள் விற்பனை செய்யப்படும் போது.
2. நிலங்கள் பரிவர்த்தனை செய்யப்படும்போது
3. பாகப் பிரிவினை ஏற்படும்போது
4. வம்சாவளியாக உரிமை மாற்றம் நிகழும் போது
5. நிலத்தின் தரம் மாறுபடும்போது
6. அரசு நிலங்களை ஒப்படை செய்யும்போது
7. நில உரிமைகளை அரசுக்கு விட்டுக் கொடுக்கும்போது
8. ''எலியனேஷன்'' ஏற்படும்போது
9. நில ஆர்ஜிதத்தின்போது

இந்த மாற்றங்களை பராமரிப்பு ஆவணங்களில் மேற்கொள்வதன் மூலம் நில உடைமையாளரின் நிலங்களுக்கான சரியான எல்லைகளும் உரிமைகளும் பதிவு செய்யப்படுகின்றன. நில எல்லைகள் தொடர்பாக 'வழக்குகள் ஏற்படும் போது பராமரிக்கப்படும் இந்த நில அளவை ஆவணங்கள்தாம் நீதிமன்றங்களில் சரியான சான்றாகக் கருதப்படுகின்றன.







# நாமக்கல்லில் முப்பெரும் விழா

முப்பெரும் விழா சேலம் மாவட்டம் நாமக்கல்லில் 19-12-1984 அன்று நடைபெற்றது.

நாமக்கல் கவிஞர் பெயரில் அமைந்துள்ள கல்லூரியில் மாலை 4 மணிக்குக் கல்லூரி மாணவிகளின் பாடலுடன் விழாத் தொடங்கியது.

நாமக்கல் கவிஞர், மகாகவி பாரதியார், மூதறிஞர் இராஜாஜி ஆகியோரின் சிறப்புகள் பற்றிப் பல்வேறு அறிஞர்கள் கருத்துரை வழங்கினார்கள்.

விழாவுக்கு வந்திருந்தோரை சேலம் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு இரா நடேசன் வரவேற்றார்.

விழாவில் பங்கேற்ற நாமக்கல் கவிஞர் குடும்பத்தினருக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

நாமக்கல் கவிஞர் பற்றி நாமக்கல் கோட்டாட்சித் தலைவர் திரு டி.ஏ. மாரிமுத்து பேசுகையில்,

''நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பயன் படுகிறது. நாமக்கல் கவிஞர் பெயருடன் ஊர் சேர்ந்துள்ளது'' என்றார்.

நாமக்கல் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு பி. வெங்கடசாமி நாமக்கல் கவிஞர் அவர்களின் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், ''நான் பள்ளிப் பருவத்தில் படித்த நாமக்கல் கவிஞர் பாட்டு நினைவுக்கு வருகிறது. நான் சுதந்திரத்துக்கு முன்னர் கவிஞர் அவர்களின் கவிதைகளைப் படித்துள்ளேன். கவிஞரின் எழுச்சிமிகு கவிதைகள் உணர்ச்சியை ஏற்படுத்தக்கூடியவை. கவிஞர் தூய வாழ்க்கையை நடத்தியவர். கதர் உடுத்தவேண்டும் என்றும், காசு யாரிடமும் வாங்கக்கூடாது என்றும் கூறி வந்தார் கவிஞர். அவரது வாழ்க்கை நமக்கு எடுத்துக்காட்டாக அமையவேண்டும். நாமக்கல் ஊருக்குக் கவிஞர் புகழ் தேடித் தந்துள்ளார்'' என்றார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறைத் துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் பாரதியார் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறியதாவது:

''நான் கல்லூரியில் படிக்கும் நாட்களில் நாமக்கல் வருவேன். கவிஞர் பற்றி அறிவேன். நாற்பது ஆண்டுக்காலம் பாரதி நாட்டுக்காக வாழ்ந்தார். தமிழ் இருக்கும் வரை பாரதியார் இருப்பார் என்றார் தீரர் சத்திய மூர்த்தி.

''நமக்கு நாட்டின் பெருமையை எடுத்துக் கூறினார் பாரதி. கல்கத்தா, டெல்லி போன்ற இடங்களில் பாரதிக்குச் சிலை வைக்கப்பட்டுள்ளது. எட்டையாபுரத்தில் பாரதி நூற்றாண்டு விழாவையொட்டி நூற்பு ஆலை, கல்லூரி, மணி மண்டபம் கட்டப்பட்டுள்ளன.

''பாரதியின் வாழ்க்கையைப் பின்பற்றி நாமும் வாழவேண்டும்.''

நாமக்கல் கவிஞர் கலைக் கல்லூரி முதல்வர் திருமதி ஜீ.இராசமாணிக்கம் பேசுகையில், ''மூதறிஞர் இராஜாஜி சிறந்த அரசியல்வாதி, பக்தி நிலையுள்ளவர். பாரதியார் பெண் உரிமைக்காகப் போராடியது, பக்தி, கவிதை நயம் பற்றியும் நீங்கள் அறிவீர்கள். நாமக்கல் கவிஞர் பக்தியும் அகிம்சையும் உள்ளவர். தன்னுடைய தாயார் கூறியபடி பொய் சொல்லாமல் வாழ்க்கை நடத்தியவர். 1953இல் ஆஸ்தானக் கவிஞராகத் திகழ்ந்தார். எளிமையான வாழ்க்கையை நடத்தியவர். அழகாக ஓவியம் தீட்டுவார். சிறந்த நாவல்கள் எழுதுவார். மலைக்கள்ளன் நாவல் சிறப்புடையது. கவிஞர் பெயரில் உள்ள கல்லூரியில் பணியாற்றுவது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன்.''

தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் திரு.சிலம்பொலி செல்லப்பன் உரையாற்றுகையில், ''முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நான் நாமக்கல்லில் ஆசிரியனாக இருந்தேன். அப்பொழுது கவிஞர் மகன் ராஜா என்னிடம் கணிதம் படித்தார். கவிஞர், பாரதி, இராஜாஜி ஆகிய மூவரும் வேற்றுமை மறந்து அனைவரும் ஒன்றாக வாழவேண்டும் என்று பாடுபட்டார்கள். நான் சிறுவனாக இருந்தபோது வாதம் செய்வார். நான் மாற்றுக் கருத்து உள்ளவனாக இருந்தேன். பாரதி பெண் அடிமைக்காகப் பாடுபட்டார். நாமக்கல் கவிஞர் எளிமையாக இனிமையாகப் பாடல் இயற்றும் திறன் படைத்தவர். மூதறிஞர் இராஜாஜி கட்டுப்பாடு உடையவர். கவிஞர் உயர்ந்த பண்பு உடையவர், பாரதி விடுதலைக்காகப் பாடுபட்டவர். அவர்களைப் போல் உயர்வோம் என்று வாழ்த்துகிறேன்.''

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் படத்தைத் திறந்துவைத்து நாமக்கல் கவிஞர் மகன் திரு 'ராஜா' பேசுகையில், ''இருபத்திரண்டு ஆண்டுகளாக நான் அமெரிக்காவில் வாழ்ந்து வருகின்றேன். இங்கு நாகராச அய்யர், வரதராஜ முதலியார் என்ற தியாகிகள் வாழ்ந்தார்கள். மூதறிஞர் இராஜாஜி படத்தைத் திறந்து வைக்கும் வாய்ப்பைக் கொடுத்தமைக்கு நன்றி.

எனது தந்தையும் இராஜாஜியும் அறுபது ஆண்டுகளாகச் சேர்ந்து வாழ்ந்தார்கள். ராஜாஜி 'வா இராமலிங்கம்' என்று அழைத்துப் பேசுவார். பாரதி நாட்டுக்காகப் பாடுபட்ட உத்தமர். நமக்குத் தியாக உணர்ச்சி வரவேண்டும். புகழ்ச்சிக்கு மயங்காதவர் இராஜாஜி. காந்திக்கு முன்னரே இராஜாஜி சேலத்தில் சமபந்தி நடத்தினார்'' என்று கூறினார்.

விழா இறுதியில் கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி, பள்ளி மாணவ, மாணவியர்கட்கு ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நூல்களை நாமக்கல் கவிஞரின் மகன் திரு ராஜா தனது சொந்தச் செலவில் வழங்கினார். இனிவரும் ஆண்டுகளிலும் கவிஞர் பிறந்த நாள் அன்று தனது சொந்தச் செலவில் ரூபாய் ஆயிரத்திற்குப் புத்தகங்கள் வழங்குவதாகவும் தெரிவித்தார்.

விழா இறுதியில் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

தொகுப்பு அ. மருதவிநாயகம்

# தைத் திங்கள் வாழ்க!

கவிஞர் வாணிதாசன்

இளங்கதிர் தொடுவா னத்தே
எழுந்தது! வாழ்க! மக்கள்
உளமெலாம், உடல மெல்லாம்
உவகையின் ஆட்சி! மேட்டுக்
களமெலாம் செந்நெல்! பொய்கைக்
கரையெலாம் அலைமு ழக்கம்!
வளமெலாம் பெருக்கி இன்று
வந்த தைத் திங்கள் வாழ்க!

புத்தொளி விண்ணில் எங்கும்
புகுந்தது! புகுந்த தீன்பம்!
கொத்தெலாம் காய்கள்! வீட்டுக்
கூரையின் மேலும் காய்கள்!
எத்திசை எதிர்ப்பட் டாலும்
பழக்காடு! பூச்சி ரிப்பே!
புத்தாண்டின் முதல்நாள் இன்பப்
பொன்னாளை வாழ்த்தாய் தம்பி!

கார்தந்த அரிசி ஆப்பால்
கழைதந்த கட்டி ஏலம்
நீரொடு வழிந்து பானை
நெருகிலும் பொங்கல் பொங்க!
ஊரினில் இல்லம் தோறும்
'பொங்கலோ பொங்கல்' ஓசை
ஆர்ப்பினில், அடடா! உள்ளம்
அடைகின்ற மகிழ்ச்சி என்னே!

நாடெலாம் இன்பம்! வண்ண
நறுமலர் பூக்கப் பச்சைக்
காடெலாம் இன்பம்! ஆற்றங்
கரையெலாம் இன்பம்! கொல்லை
மேடெலாம் இன்பம்! வான
வெளியெலாம் இன்பம்! பெண்கள்
ஆடலும் பண்ணும் கேட்க
இன்பத்தை அடையும் வீடே!

(பொங்கற் பரிசு நூலிலிருந்து)




பராமரிப்புப் பணி சரிவர நடக்க வேண்டுமெனில், நில அளவையின்போது நடப்பட்ட கற்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நில அளவைக்கல் காணாமல் போய்விட்டாலோ, அல்லது பழுதுபட்டு விட்டாலோ, சம்பந்தப்பட்ட நில உடைமையாளர் அதைப் புதுப்பிக்க வேண்டும். எல்லைக் கற்கள் சரிவரப் பராமரிக்கப்பட்டால் நிலச் சீர்திருத்த மாற்றங்களுக்கான பதிவு வேலை சிரம மின்றி நடைபெறக் கூடும்.

நில அளவைத் துறை பொது மக்களுக்குச் செய்யும் பணிகளும், இத் துறை மூலம் பெற வேண்டிய பணி களைச் செய்து பெறுவதற்கான அணுகு முறைகளும் கீழே தரப்படுகின்றன.

### புல எல்லைகளை அளந்து காண்பித்தல்

நில உடைமையாளர் தன் நில எல்லைகளை உரிய அலுவலர் அளந்து காண்பிக்க வேண்டும் என விரும்பினால் ஒரு மனு தயாரித்து அதன்மீது ஒரு ரூபாய் மதிப்புள்ள நீதிமன்றக் கட்டண வில்லையை ஒட்டி, சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பவேண்டும். அந்தப் பணிக்கான கட்டணத் தொகையை ஒவ்வொரு புலக் கோட்டிற்கும் ரூபாய் இரண்டு வீதம் **"029. LR Miscellaneous Recoveries of Service Payment"** என்ற தலைப்பில் செலுத்துச் சீட்டு மூலம் அரசு வங்கியிலோ, கருவூலத்திலோ கட்டி மூலச் செலுத்துச் சீட்டையும் இணைத்து அனுப்பினால் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடவடிக்கை மேற்கொண்டு இப்பணி செய்து தரப்படும்.

நகரங்களில் முனிசிபல் ஆணையருக்கு மனுச் செய்தால் பணி மேற்கொள்ளப்படும்.

### பட்டா நிலங்களில் உட்பிரிவு செய்தல்

விற்பனை, பாகப்பிரிவினை முதலிய காரணங்களால் நிலத்தை உட்பிரிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் தன் நிலத்தின் பகுதி உட்பிரிவு செய்யப்படவேண்டும் என்று விரும்பும் நில உடைமையாளர் ரூ. 1/- மதிப்புள்ள நீதிமன்றக் கட்டண வில்லையை மனுவின்மீது ஒட்டி வட்டாட்சியருக்கு மனுச் செய்ய வேண்டும். ஒவ்வொரு உட்பிரிவுக்கும் ஆறு ரூபாய் வீதம் கட்டணத்தை **"229 LR. 01 (C) Survey settlement operation Misc, Recoveries on a/c of service** என்ற தலைப்பில் அரசு வங்கியிலோ கருவூலத்திலோ செலுத்தி மூலச் செலுத்துச் சீட்டையும் மனுவுடன் இணைத்து அனுப்ப வேண்டும். தொடர்பான நடவடிக்கையை மேற்கொண்டு வட்டாட்சியர் அலுவலகம் இப்பணியை நிறைவேற்றும்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் இக் கட்டணத் தொகை ஒரு உட்பிரிவுக்கு ரூ. 9 ஆகும்.

### புலப்படச் சுவடியிலிருந்து நகல் கோரல்.

புலப்பட நகலோ, நிலவரித் திட்டப் பதிவேட்டு நகலோ தேவைப்பட்டால் நில உரிமையாளர் 25 பைசா மதிப்புள்ள நீதி மன்றக் கட்டண வில்லை ஒட்டிய மனுவை சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும். அவர் செலுத்த வேண்டிய தொகை மனுமீது நடவடிக்கை எடுத்த பிறகு அவருக்குத் தெரிவிக்கப்படும். தேவையான கட்டணத்தைச் செலுத்திய பின் உரிய நகல் அவருக்கு வழங்கப்படும்.

## புதிய கலப்பு நூல்

இயற்கை இழை, செயற்கை இழை பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். இயற்கையில் விளையும் பருத்தி இழைகளையும், இயற்கையாக உருவாகும் முயல் ரோமங்களையும் இணைத்து புதிய கலப்பு நூல் தயாரிக்கும் முயற்சி ஒன்று வெற்றி பெற்றுள்ளது.

பருத்தியுடன் முயல் ரோமத்தினை சேர்த்து நெய்யப்படும் இழைகள் நீண்ட காலம் உழைக்கக் கூடியதாகவும், நயமானதாகவும் இருக்கின்றன என்று மத்திய செம்மறியாடு-கம்பள ஆராய்ச்சி மையம் நடத்திய ஆராய்ச்சியில் இருந்து தெரியவந்துள்ளது.

முயல் ரோம-பருத்தி கலப்பு இழை லேசில் அறுபடுவதில்லை என்பதும் சோதனைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இந்த இழைகள் வசீகரமானதாகவும், நீண்டதாகவும் உள்ளன.

முயல் ரோமம், பதப்படுத்தினாலும் உதிராத குறு மென் மயிர்த் தோல் (''ஃபர்'') ரகத்தைச் சார்ந்தது. பிரான்சு, செக்கோஸ்லோவாகியா, ஜப்பான் ஆகிய நாடுகள் முயல் ரோம உற்பத்தியில் முன்னணி இடம் வகிக்கின்றன. இவற்றின் உற்பத்தி 2500 டன்.

ஆப்பிரிக்காவைச் சேர்ந்த 'அங்கோரா' ரக முயல் ரோம உற்பத்தியை இமாசலப் பிரதேசத்திலுள்ள கார்சா கிளையில் நமது நாடும் மேற்கொள்ளத் தொடங்கியது.

**கோயம்புத்தூர் விரீய ரகப் பருத்தி இழையுடன் சேர்த்து செய்யப்பட்டால், 28 மில்லி மீட்டர் முயல் ரோம இழை கிடைக்கின்றது என்று பரிசோதனைகளில் தெரிய வந்துள்ளது.**

முயல் ரோமங்களைப் பருத்தி இழையுடன் கலந்து சில ரசாயனக் கலவைகளைப் பயன்படுத்தி நூல் தயாரிக்க முடியும் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நகர நில அளவை ஆவணத்திலிருந்து நகல் தேவையெனில் நகராட்சி ஆணையருக்கும் தெருப்புலப்படச் சுவடியிலிருந்து நகல் தேவையெனில் ஊராட்சி நிர்வாக அலுவலருக்கும் மனுச் செய்ய வேண்டும்.

நில அளவை நடந்தபோது இருந்தபடி புலப்பட நகல் தேவையென்றாலும், முந்திய நில அளவைப்படி புலப்பட நகல் தேவையென்றாலும் தேவை பற்றிய சரியான விபரங்களுடன் சென்னை, மத்திய நில அளவை அலுவலகத் துணை இயக்குநருக்கு மனுச் செய்தால் தேவையான நகலை நில உடமையாளருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கீழ்க்குறித்த படங்கள் சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.

1. கிராமப் படம்
2. வட்டப் படம்
3. மாவட்டப் படம்
4. மாநிலப் படம்.(பல்வேறு அளவுகளில்)
5. மாநில சாலைப் படம்
6. வட்ட வெளிக் கோட்டுப் படம்
7. மாவட்ட வெளிக் கோட்டுப் படம்
8. நகர செவின்யூ பிளாக் படம்
9. நகர பிளாக் அளவுப் படத்தில் அமோனியா நகல்
10. நகரப் படம்
11. தெருப்பட அட்லாஸ்
12. பஞ்சாயத்து ஒருங்கிணைப்பு படம்.

இவற்றில் சில கட்டு திட்டங்களுக்கு உட்பட்டு (Restricted) விற்பனைக்குரியன இந்த இனங்கள் பொது விற்பனைக்குக் கிடைக்க மாட்டா. மற்ற இனங்கள் பொது விற்பனைக்குக் கிடைக்கும்.

## வரலாறு காணாத விளைச்சல்



வடகிழக்குப் பருவமழை நவம்பர் மாதம் தொடங்கி விவசாயத்திற்குப் பொதுவாக நன்மையைத் தந்துள்ளது. சமீபத்தில் வீசிய கடும் மழையுடன் கூடிய புயல் காற்றால் தமிழ்நாட்டில் வடக்குக் கடற்கரை மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. ஆனால் புயல் காற்றால் செங்கல்பட்டு, தென்னார்க்காடு மாவட்டத்தில் சில பகுதிகளில் மரங்களும் பிற பயிர்களும் சுமார் 15,000 எக்டேர் நிலப் பரப்பில் பாதிக்கப்பட்டுள்ளன.

சென்ற குறுவை நெல் அறுவடையில் வரலாறு காணாத வகையில் எக்டேருக்கு 5 டன்னுக்கு மேலாக சராசரி மகசூல் கிடைத்துள்ளது. கோவை மாவட்டத்தில் அதிக மகசூலாக 7 டன்களும் திருச்சி மாவட்டத்தில் 5.5 டன்களும் எக்டேருக்கு கிடைத்துள்ளன. இந்த அதிக மகசூலுக்குக் காரணம் சுமார் 93 சதவிகிதம் உயர் விளைச்சல் ரகங்கள் பயிரிட்டதும், அதிக அளவில் உர உபயோகமும், காலத்தே பயிர்ப்பாதுகாப்பு செய்ததும் ஆகும். சென்ற மாத இறுதி வரை சுமார் 11 இலட்சம் எக்டேரில் சம்பா, தாளடி நெற்பயிர் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதிலிருந்து எக்டேருக்கு 3.5 டன் மகசூல் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தற்பொழுது 11 இலட்சம் எக்டேரில் சிறுதானியங்களும் 4.5 இலட்சம் எக்டேரில் பயறு வகைகளும் 1.9 இலட்சம் எக்டேரில் பருத்தியும் பயிரிடப்பட்டுள்ளன. சுமார் 5,750 எக்டேர் பரப்பளவில் விதைப் பண்ணைகள் அமைத்து சான்றிதழ் விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. வரும் கோடை சாகுபடியில் நெல் மற்றும் ராகி போன்ற சிறுதானியங்கள் சுமார் 6 இலட்சம் எக்டேரில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.



# அண்ணலே பாராட்டிய தேசாபிமானி

**- ஏகவி**

**(இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட தேசாபிமானியும், புகழ்பெற்ற பத்திரிகையாசிரியருமான திரு ஜி. சுப்பிரமணிய ஐயரின் 131வது பிறந்தநாள் ஜனவரி 19-ம் தேதி ஆகும். அதனையொட்டி இக்கட்டுரை வெளியிடப் பெறுகிறது.**

நம் இந்திய நாடு விடுதலை அடையப் பாடுபட்ட பெரும் தலைவர்களுள் பத்திராதிபர் திரு ஜி. சுப்பிரமணிய ஐயர் ஒருவராவார். 1855ஆம் வருஷம் ஜனவரி 19ல் தஞ்சை மாவட்டம் திருவையாறில் கணபதி ஐயர், தர்மாம்பாள் தம்பதிகளுக்கு நான்காவது புதல்வராகப் பிறந்தார். இவருடன் 6 சகோதரர்களும் ஒரு சகோதரியும் பிறந்தனர். இளமையிலேயே தகப்பனார் காலமாகிவிடவே, தாயாரின் பராமரிப்பில் இவர் வளர்ந்து வந்தார். வறுமையிலும் தனது 18 வயதிற்குள் எப்.ஏ. பரீட்சை தேறினார். அந்நாள் எப்.ஏ., வகுப்புத் தேறியிருந்தாலே சர்க்காரில் உயர்ந்த உத்தியோகங்களைப் பெறலாம். ஆனால் இவருக்கு அது பிடிக்கவில்லை. உலகில் பிறர் உயிருக்குத் தீங்கு விளைவிக்காத தொழில் எது? வாழ்க்கையில் மனிதன் முன்னேற எது சிறந்த தொழில்? என்றெல்லாம் யோசித்து, பிறருக்குத் தலைவணங்காமல் லோகோபகாரமான தொழில் உபாத்தியாயர் தொழிலே சிறந்ததென முடிவு செய்து தனது 19ஆம் வயதில் சென்னையில் போதனாமுறைப் பாடசாலையில் சேர்ந்தார். பின்னர் தமது ஆப்தநண்பர்ஒருவர் பி.ஏ., படித்தவரின் முயற்சியால் ஆசிரியர் வேலையையும் விடாமல் பிரைவேட்டாக பி.ஏ பரிட்சை எழுதிப் பட்டமும் பெற்றார்.

### இந்து-சுதேசமித்திரன்

1877-ல் சென்னை ஹைகோர்ட்டிற்கு டி. முத்துசாமி ஐயரை இந்திய நீதிபதியாக நியமித்ததைப் பற்றி அந்நாளில் சில ஆங்கிலேயப் பத்திரிகைகள் கேலி செய்து விமர்சித்தன. தவிர இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த சர். லிட்டன், பொதுஜன நலனைக் கவனியாமல் தன்னிச்சையாகப் பல காரியங்களைச் செய்தார். இந்தியாவில் சில இடங்களில் கடும்பஞ்சம் தாண்டவமாடியபோது அவர் மக்கள்ன்மீது அதிக வரிகளைச் சுமத்தி டெல்லியில் தர்பாரும் கொண்டாடினார். சுயபாஷையில் பத்திரிகைகள் வெளியிடக் கூடாதென உத்தரவுமிட்டார். சென்னை ராஜதானி மக்கள் தங்கள் குறைகளைப் பிறர் அறிய இங்கு பத்திரிகைகள் இல்லாத சமயத்தில் ஜி. சுப்பிரமணிய ஐயர் தமது ஐந்து நண்பர்களுடன் 1878 செப்டம்பர் 20-ல் 'இந்து' என்ற ஆங்கிலப் பத்திரிகையைத் தொடங்கி, அதில் இந்தியர்க்ளைப் பற்றி ஆங்கிலேயர்கள் கூறும் மாறுபட்ட கருத்துக்களுக்குப் பதிலடி கொடுத்ததோடு, ஹைகோர்ட்டிற்கு முத்துசாமி ஐயரை நீதிபதியாக நியமித்தது நேர்மையானதென்று தெரிவித்தார். ஆங்கிலம் தெரிந்தவர்கள் மட்டுமே 'இந்து'வைப் படித்து ராஜீய விஷயங்களை அறிந்தனர். ஆனால் ஆங்கிலம் தெரியாதவர்களுக்கும் விஷயங்கள் தெரியவும், கல்வி வளர்ச்சி அடையவும் ஐயரவர்கள் 1882 ஏப்ரல் 14ல் தமிழில் 'சுதேசமித்திரன்' பத்திரிகையைத் தொடங்கி அதற்கும் அவரே ஆசிரியராக இருந்து வந்தார்.



### ஹிந்து கெல்லட் ஹைஸ்கூல்

'இந்து' பத்திரிகையின் ஆசிரியராக இருந்த, ஐயர், திருவல்லிக்கேணி 'ஹிந்து ஹைஸ்கூலின் பிரதம ஆசிரியராகப் பதவியையும் ஏற்றுக் கொண்டார். பின்னர் திருவல்லிக்கேணியில், 'ஆர்யன் ஹைஸ்கூல் என்ற பள்ளிலய ஸ்தாபித்து அதில் முஸ்லீம் பிள்னளகள், தீண்டா வகுப்புப் பிள்ளைகள், மற்றும் ஏழைப் பிள்ளைகளை இலவசமாகச் சேர்த்துக் கொண்டார். பகலில் கூலி வேலைக்குச் செல்லும் பிள்ளைகளுக்குச் சென்னையில் முதன் முதலாக 'இராப் பள்ளிக்கூடம்' ஏற்படுத்தியவர் இவர்தான். பிறகு அப்பள்ளியை 'வெஸ்லியன் மிஷனரி சொசைடி' பாதிரியாரிடம் ஒப்படைத்தார். அப்பள்ளிதான் இன்றும் திருவல்லிக்கேணியிலுள்ள 'கெல்லட் ஹைஸ்கூல்' எனப்படுகிறது.

பத்திரிகைத் துறையிலும், சுதேசிய பிரசங்கங்களினாலும் நாடெங்கும் கவரப்பட்ட சுப்பிரமணிய ஐயரின் புகழ்எங்குர் பரவியது. இந்தியா கவர்ன்மெண்டின் செலவுகளைக் குறைக்கும் வகையில் யோசனைகள் கூற இங்கிலாந்தில் ஏற்பட்ட 'செல்பிகமிஷன்' மீட்டிங்கில் கலந்துகொள்ள அவர் இங்கிலாந்திற்கும் சென்றார். இவருடன் கோபாலகிருஷ்ண கோகலே, டின்ஷா இடல்ஜீவாச்சா, சுரேந்திரநாத் பானர்ஜி ஆகியோரும் சென்றனர்

### சமூக சீர்திருத்தம்.

சுப்பிரமணிய ஐயர் சமூக சீர்திருத்தங்களைத் துணிந்து செயலாற்றியவர். தமது மகள் சிவப்பிரியை தனது 12ஆம் வயதில் விதவையானாள். அவர் தம் மகள் ஆயுள் முடிய கைம்பெண்ணாகி அழகுகளைச் சீர்குலைக்க விரும்பாமல் மறுமணம் செய்யத் துணிந்தார். பிராமண குலத்தினரிடையே அவர் செய்யத்துணிந்த விஷயத்திற்கு மறுப்புத் தெரிவித்து அவரையும் பழித்தனர். சாதிப்பிரஷ்டமும் செய்யப்படுமெனப் பயமுறுத்தப்பட்டார். என்ன துன்பம் நேரிடினும் தான் எண்ணியபடியே பம்பாயில் கூடிய ஐந்தாவது நேஷனல் காங்கிரஸ் மகாசபை ஹாலில் பலபெரும் தலைவர்கள் முன்னிலையில் தமது மகள் சிவப்பிரியைக்கு மறுமணம் நடத்தினார். மகாசபைக்கு வந்திருந்தவர்கள் இவரது துணிச்சலைப் பாராட்டினர்.

### கவி பாரதியை அழைத்து வந்தார்

உலகம் புகழும் மகாகவி பாரதியாரை 1904-ல் சுதேமித்திரனில் முதன் முதலில்



அழைத்து வந்து, உதவி ஆசிரியராகச் சேர்த்த பெருமை இவரைத்தான் சேரும். சாதாரண பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய கவிபாரதியைப் பத்திரிகைத்தொழிலில் அநுபவப்படுத்தியதோடு, அவருடைய கவிதைகளையும் கட்டுரைகளையும் 'மித்திரனி'ல் வெளியிட்டார். ஐயரவர்கள் தான் கலந்து கொள்ளும் பல முக்கிய கூட்டங்களுக்கு கவி பாரதியையும் கூடவே அழைத்துச் சென்று அரசியல் ஞானமும் ஊட்டினார். கவிபாரதியின் எழுத்துத் திறமையைப் பாராட்டிய இவர், "பாரதி நீ 'காளிதாஸன்' என்ற புனை பெயர் வைத்துக் கொண்டு எழுதுகிறாய்; உண்மையிலேயே நீ காளிதாஸன்தான்! ஆனால் உனக்கு அட்சரலட்சம் தர நான் போஜ மகாராஜன் இல்லையே!'' என வருந்துவாராம்.

### மகாத்மா !

காந்தியடிகள் வாழ்க்கையைப் பற்றி பிரெஞ்சு மொழியில் எழுதிய மாமேதை ரோமன் ரோலண்ட், ''1921 டிசம்பரில் காந்திஜி ஆசிரமத்திற்கு ரவீந்திரநாத் தாகூர் சென்றபோது உபநிஷத்து வாக்கியத்தைச் சொல்லி அதில் வரும் 'மகாத்மா' என்ற பதத்தையே காந்திஜியைப் பார்த்து அழைத்தார்'' எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஜி. சுப்பிரமணிய ஐயர் காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் விஜயம் செய்யப்போகும் விஷயத்தை முன்கூட்டிய 1912 டிசம்பர் 24ஆம் தேதி 'மித்திர'னில் "தென்னாப்பிரிக்க இந்தியர்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று தீக்ஷை செய்து கொண்டிருக்கும் மிஸ்டர் காந்தி, ஒரு மகாத்மாவோ, ஈஸ்வர அவதாரமோவென்று உலகோர் நினைக்கும்படி தன் மறுப்பையும் உறுதியையும் சாவதானத்தையும் காட்டி வருகிறார்'' என

வெளியிட்டுள்ளார். காந்திஜியை ரவீந்திர நாத தாகூர் 'மகாத்மா' என்று கூறு வதற்கு முன்பே, பத்திராதிபர் ஜி.சுப்பிர மணிய ஐயர், ஞானத்தினால் 'மகாத்மா' என்று குறிப்பிட்டுள்ளது எவருமே இது வரையில் அறிந்திராத விஷயம்!

**உழைத்தது போதும்!**
**ஒய்வு எடுத்துக் கொள்ளுங்கள்!**

1908-ல் ஜி. சுப்பிரமணிய ஐயர் உடல் நலமின்றி குத்தாலத்தில் ஒய்வு எடுக்கையில் அவர் 'மித்திர'னில் எழுதிய கட்டுரை ராஜத்துவேஷமானதென்று கார ணம் காட்டி, அவரை ஆங்கிலேய அரசு கைது செய்ததோடு அவருடைய வீடும், 'மித்திரன்' அலுவலகமும் சோதனையிடப் பட்டன. ஐயரவர்கள் கைதான செய்தி நாடெங்கும் பரவ, சுதேசிமக்களும், பல முக்கியத் தலைவர்களும் கண்டனம் தெரி வித்து ஆர்ப்பாட்டங்களும் செய்தனர். கடைசியில் அரசு, அவர் மீதிருந்த வழக்கை வாபஸ் வாங்கியது.

1915 ஏப்ரலில் சுப்பிரமணிய ஐயர் கொடிய வியாதியினால் பாதிக்கப்பட்டு எங்கும் வெளியே செல்லமுடியாத நிலை யில் படுத்த படுக்கையானார். அப்போது சென்னைக்கு விஜயம் செய்திருந்த மகாத்மா காந்தியடிகள் ஐயரவர்களைக் காண அவருடைய இல்லத்திற்கு வி.எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரிகளுடன் சென்றபோது தீரா வியாதியால் பெரும் அவஸ்தைப் பட்டுக் கிடந்த சுப்பிரமணிய ஐயர் காந்திஜி யைக் கண்டதும் கண்களில் நீர்வழிய "நான் தேசத்திற்காக ஒன்றுமே செய்ய முடியாமல், லாயக்கற்றவனாகப் போய் விட்டேனே!" என்றதும், காந்திஜி, ஐயர வர்களின் கண்ணீரைத் தனது கரங்களால் துடைத்துக் கொண்டே, "நீங்கள் நாட்டுக் காகப் பெரிதும் உழைத்திருக்கிறீர்கள்! ஒய்வு எடுத்துக் கொள்ளுங்கள்!" என ஆறுதல் கூறினார்.

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக வும், மக்களின் சுதேசிய உணர்ச்சிக்காக வும் பெரிதும் பாடுபட்டவர் ஜி. சுப்பிர மணிய ஐயர். தனக்கு வந்துள்ள கடும் வியாதியுடன் போராடினார், பல னில்லை. 1916 ஏப்ரல் 18ல் தமது 61ஆம் வயதில் காலமானார். நாடும் ஏடுகளும் அவருக்கு அஞ்சலி செலுத்தின. ஸ்ரீ.ஜி. சுப்பிரமணிய ஐயரவர்களின் பூதவுடல் மறைந்தாலும் அவரது புகழுடம்பு இன்றும் நம்மிடையே வாழ்கிறது.



இளம்பிள்ளை வாத நோய்த் தடுப்பு முகாம் ஒன்றை சென்னை மாநகராட்சியும் 'இம்பாக்ட் இண்டியா' அமைப்பும் சென்னை சைதாப்பேட்டையில் நடத்தின. இதில் 450 குழந்தைகளுக்கு தடுப்பு ஊசி போடப்பட்டது.



# சிறுதொழில் செழித்து வளர்ந்திட...



**ப**ரவலான முறையில் வேலை வாய்ப்புகளை உருவாக்கி, கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத் திடும் பணியில், தமிழக அரசு சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்கள் இவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவம்அளித்து வருகிறது.

அரசின் வளர்ச்சித் திட்டங் களைச் செயலாக்குகின்ற முக்கிய அமைப்புகளில் தொழில் வணிக இயக்ககமும், முக்கிய பங்கு வகிக் கின்றது.

தொழில் வளர்ச்சி முயற்சி களை மேம்படுத்த நேரடி தொழில் ஊக்குவிப்பு நடவடிக்கை களையும், அவற்றின் விளைவாக அமைய முன்வரும் தொழில் வது கட்டாயமில்லை என்றாலும் பெருகிவரும் பதிவு பெற்றுள்ள சிறு தொழில்களின் எண்ணிக்கை வளர்ச்சிப் போக்கினைத் தெளி வாக எடுத்துக்காட்டுகிறது. நிரந்தரமாகப் பதிவு செய்யப் பட்ட சிறுதொழில்களின் எண் ணிக்கை 1978-ஆம் ஆண்டு மார்ச் இறுதியில் 18,789 ஆக இருந்தது 1980 மார்ச்சு இறுதியில் 28,642 ஆகவும் 1984 சனவரி இறுதியில் 49,020 ஆகவும் உயர்ந்துள்ளது. இவை கடந்த நான்காண்டுகளில் சுமார் 2 இலட்சம் பேருக்குமேல் வேலை வாய்ப்பினைத் தந் துள்ளன—

மாவட்டத்தொழில் மையங்கள் மூலம், 1984 மார்ச்சு இறுதிவரை களுக்கு வழங்கப்படுகின்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் உதவியுடன், இத்திட்டத்தினைச் செயலாக்கும் பொறுப்பு மாவட் டத் தொழில் மையங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

1984-ஆம் ஆண்டு மார்ச்சு இறுதிவரை, மாவட்டத் தொழில் மையங்களின் திறனாய்வுக் குழுக் கள் மொத்தம் ரூ. 50.91 கோடிக்குச் சுமார் 34,000 மனுக் களைப் பரிந்துரை செய்துள்ளன. இவற்றில் வங்கிகள் 21,247 நபர் களுக்கு ரூ. 33.15 கோடி ஒப்புதல் அளித்துள்ளன.

சிறுதொழில்களைத்தொடங்கி நடத்துவதற்குத் தேவையான களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மாவட்டத் தொழில் மையங்கள்மூலம் அளித் திடுதல்—

மின்னணு, இராசாயனம் போன்ற குறிப்பிட்ட துறைகளில் சிறப்பு உதவியளித்தல்—

குறிப்பிட்ட சில ஊரகத் தொழில்களை, முக்கியமாகப் பின்தங்கிய பகுதிகளில் வளர்த் திடும் பணியில் தொழிற் கூட்டு றவுச் சங்கங்கள் ஓர் முக்கியமான கருவியாகப் பயன்படுத்தப்படுதல் போன்ற முயற்சிகளில் தொழில் வணிக இயக்ககம் வெற்றி கண்டு வருகிறது.

**சிறு தொழில்களின் வளர்ச்சி**

தொழில் வணிக இயக்ககத்தில் சிறு தொழில்களைப் பதிவு செய் 15,043 சிறுதொழில் நிலையங் களுக்கு. மொத்தம் ரூ. 32.47 கோடி வங்கியுதவியாகப் பெறப் பட்டுள்ளது. இதே காலத்தில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தேசிய சிறு தொழில் நிறுவனம் போன்ற நிறுவனங் களிடமிருந்து சுமார் 44,000 சிறு தொழில்கள் பெற்றுள்ள ரூ.58. கோடி இதில் உட்படாது.

1983-84ல் மேற்கொள்ளப் பட்ட முக்கியமான வளர்ச்சி நட வடிக்கைகளில் ஒன்று, படித்து வேலையற்ற இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்பு அளிப்பதற் குரிய இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டமாகும்.

துவக்கத்தில் இத்திட்டத்தின் கீழ் நிதி உதவியாக ரூ. 16கோடி 17,500 வேலையற்ற இளைஞர் ஆலோசனை. உதவி இவற்றைத் தொழில் முனைவர்களுக்கு அளித் தல், பரிசோதனைப் பொருள் வளர்ச்சி வசதிகள் மற்றும் கிடைப்பதற்கரிதாயுள்ள மூலப் பொருள்களைப் பெற்றுத் தரு வது போன்ற உதவி அளிக்கப்படு கிறது. சிமெண்ட், 'காஸ்டிக் சோடா 'நைட்ரோஜின்ஸ்,'பாஸ் பாட்டி கலப்பு உரங்கள் போன்ற தொழில்கள்ல், ,தென்னிந்தியா வில் நிறுவப்பட்டுள்ள உற்பத்தித் திறனில் தமிழகமே முன்னணி யில் நிற்கிறது.

இந்த இயக்ககத்தின் இரசா யனப் பிரிவிலிருந்து தொழில் நுட்ப ஆலோசனை பெற்ற சுமார் 80க்கும் மேற்பட்ட இர சாயனம் மற்றும் சார்புத் தொழில்கள், அமைக்கப்பட்டு வருகின்றன.



**தொழில்களுக்கு மூலப் பொருள் உதவி**

புதிய தொழில்களை வளர்த்திட தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கின்ற அதே நேரத்தில், ஏற்கெனவே உள்ள தொழில்களுக்கு உதவி அளிப்பதும் விடுபட்டுப் போகவில்லை. கிடைப்பதற்கரிதாயுள்ள உள்நாட்டு மூலப் பொருள்களையும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருள்களையும் "முன்மாதிரிகள்" பரிசோதனை இயந்திரங்கள் போன்றவற்றையும் பெறுவதற்கு உதவியளிப்பதில் தொழில் துறையில் கட்டுப்பாட்டுப் பிரிவு முக்கிய இடத்தை வகிக்கிறது.

தொழில்களுக்குத்தேவையான மூலப் பொருள்களின் அளவைக் கணிக்கும் முறையில் சீரமைக்கப்பட்டுள்ளதோடு, நடைமுறையில் நிகழும் தாமதங்கள் மிகவும் குறைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் கடைப்பிடிக்கப்படும் மாற்றியமைக்கப்பட்ட விதிமுறைகள் காரணமாகவும், இந்திய அரசு அலுவலர்கள் உதவிகரமாக இணைந்துசெயல்பட்டது காரணமாகவும் தமிழகத்தில் தொழில் நிலையங்கள் பெற்ற இறக்குமதி உரிமங்களின் மதிப்பு குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளது.

சிங்கரேனி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து பழுப்பு நிலக்கரியைத் தமிழகத்தில் உள்ள சிறுதொழில்களுக்குக் கொண்டு வருவதற்கு ஆந்திர அரசுடன் தொடர்பு கொண்டு மாநில அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

தொழில் நிலையங்களுக்கு, முறையாக மூலப்பொருள்கள் கிடைப்பதற்கு உறுதியளிக்கும் பொருட்டு போலிதொழில் நிலையங்களைக் களைவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளன. மொத்தத்தில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள் கிடைப்பதற்கரிதாயுள்ள மூலப் பொருள்கள் நிலக்கரி மற்றும் கல்கரி ஆகியவற்றைப் பெறுவதற்கென 4,650 . சிறுதொழில் நிலையங்களின் தேவை இத்துறையினால் கணிக்கப்பட்டு உதவி பெற்று வருகின்றன. 1983-84ஆம் ஆண்டிலும், இதே நடவடிக்கைப் போக்கு கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. உற்பத்தியைப் பெருக்குவதற்கும், தொடர்ந்த வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கும் 1984-85ஆம் ஆண்டிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மின்னணுத் தொழில்**

தமிழ்நாட்டில் மின்னணுத் தொழில் சீராக வளர்ச்சிஅடைந்து வருகிறது. மாநிலத்தில், தற்பொழுது இத்துறையில் 300க்கும் மேற்பட்ட சிறுதொழில் நிலையங்கள் செயல்படுகின்றன. மேலும் 200க்கும் மேற்பட்ட சிறுதொழில்களை தொடங்குதற்குரிய தயாரிப்புத் திட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

மின்னணுத் தொழில்களுக்கென, சென்னை, கோயம்புத்தூர், ஓசூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட வளர்ச்சி மையங்களில் அடிப்படை வசதிகள் அடங்கிய தனித் தொழிற்பேட்டைகளை மாநில அரசு அமைத்துள்ளது. மேலும், சென்னையில் மின்னணு பரிசோதனை வளர்ச்சி மையம் ஒன்றும், இதுபோன்ற மின்னணுப் பரிசோதனை மையங்கள் சிறிய அளவில், மதுரை மற்றும் ஓசூரிலும் அமைக்கப்பட்டுள்ளன.

மாநிலத்தில், மின்னணு மற்றும் அதன் சார்புத் தொழில்கள் வளர்ச்சியினை மேலும் துரிதப்படுத்தும் பொருட்டு மைக்குரோ புராசசர் அடிப்படையிலமைந்த சாதனங்கள், Micro Processor based system கம்ப்யூட்டர் பாகங்கள் Generation and Computer Peripherals மற்றும் இவை போன்ற துறைகளுக்குத் தேவையான திறம் பெற்ற நபர்களை உருவாக்குவதற்கெனப் பயிற்சி மையங்களை அமைப்பதற்குத் தொழில் வணிகத்துறை தீர்மானித்துள்ளது.

உருவாக்கப்பட்டுள்ள புதிய வடிவமைப்புகளை வணிக அடிப்படையில் பயன்படுத்துவதற்கென மின்னணுத் தொழிலில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பயிற்சி பெற்ற மற்றும் ஓரளவு பயிற்சி பெற்றவர்களுக்குப் பரவலான முறையில் வேலை வாய்ப்புக் கிடைத்திட மகளிர்களுக்கெனவே வழி கிடைக்கும் மின்னணுத் தொழிற்பேட்டை அமைக்க இத்துறை உத்தேசித்துள்ளது.

**தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம்**

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழிலை மேம்படுத்தவும், கைவினைஞர்களின் வாழ்க்கை நிலையையுயர்த்தவும் தமிழ்நாடு அரசு 1973ஆம் ஆண்டில், தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனத்தைஏற்படுத்தியது. இந் நிறுவனம் தன் வளர்ச்சிப் பணிகளில் ஒரு பகுதியாக, 1980-81 முதல் 1983-84 வரையில் நான்காண்டுகளில் பல செயல் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

தென்னார்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் சந்தனமரத்தில் அழகு பொருட்கள் செய்தலில் பயிற்சி அளிக்கும் நிலையம், படங்களுக்கு வண்ணம் தீட்டும் பயிற்சி நிலையம், தஞ்சாவூர் மாவட்டம், நாச்சியார்கோயில், பித்தளை, வெண்கலக் கலைப் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிலையம் (பிரிவு2) தஞ்சாவூர் மாவட்டம், சுவாமிமலை, உலோக கலைப் பொருள் பயிற்சி நிலையம் (பிரிவு 2).

இவ்விடங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் மதிப்பு 1980-81ஆம் ஆண்டு தொடக்கத்தில் ரூ. 40 இலட்சம் இருந்தது. இதுவே 1983-84ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 65 இலட்சமாக உயர்ந்தது. இந்நிறுவனம் பொருள்களை உற்பத்தி செய்வதுடன் பல்வேறு திட்டங்களின் கீழ் பல்வேறு தொழில்களில்முறையான பயிற்சியையும், குறுகிய காலப் பயிற்சியையும் நடத்தி வருகிறது. அவை:

கிராமக் கைவினைஞர் திட்டம், கிராமத் தொழில் திட்டம், சுய வேலை வாய்ப்பிற்காகக் கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சியளித்தல், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்.

கடந்த நான்காண்டுகளில், இந் நிறுவனம், பித்தளை உலோகத்தில் கைவண்ணம், பனையோலைப் பிரம்புப் பொருட்கள், தஞ்சாவூர் படங்களுக்கு வண்ணம் தீட்டுதல் போன்ற பல்வேறு தொழில்களில் 797 பேர்களுக்குப் பயிற்சியளித்தது. பயிற்சி முடிவடைந்தவுடன், இயன்றவரை இதன் தொழில் பிரிவுகளிலேயே இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஏனையவர்கள் சுய வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். சொந்தமாகவே சிறிய தொழில் பிரிவுகளை அமைத்துக் கொண்டுள்ளவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை இந்த நிறுவனம் இதன் விற்பனைக் கூடங்கள் மூலம் விற்பனை செய்ய உதவுகிறது.

இந்த நிறுவனம் பின்வரும் முக்கியமான தேவைக்குறிப்பு ஆணைகளைப் பெற்றுள்ளது.

திருப்பதி தேவஸ்தானத்தைச் சேர்ந்த திருமலையிலுள்ள கல்யாண மண்டபத்திற்கும், திருக்கோயிலின் கொடிமர மண்டபத்திற்கும் பித்தளை உலோகத்தினால் ஆன அலங்காரக் கிராதிகளை ரூ. 4.28 இலட்சம் மதிப்பீட்டிலும், மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் கல்யாணத்தை ரூ. 2.21 இலட்சம் மதிப்பீட்டில் கல்லில் செதுக்குவதற்கும்ரூ.4.60 லட்சம் மதிப்பீட்டில் பித்தளை உலோகத் தகடுகளில் அலங்காரச் சிற்பப் பணிகளைச் செய்வதற்கும் இந்த நிறுவனம் ஆணைகள் பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் கைத்திறப் பொருட்களை நாடு முழுவதிலும் பிரபலப்படுத்துவதற்காகப் புது டில்லி, பம்பாய், பெங்களூர், சென்னை ஆகிய பெரு நகரங்களிலும், தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான அனைத்து நகரங்களிலும், இந்நிறுவனம், விற்பனைக் கூடங்களை ஏற்கெனவே திறந்துள்ளது.

கடந்த நான்காண்டுகளில், தமிழ்நாட்டிற்கு வெளியே முக்கியமான மாநகரங்களில் தமிழ்நாடு கைத்திறப் பொருட்காட்சிகள் 69 நடத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிற்கு வெளியே பொருட்காட்சிகள் நடத்தப்படுவதுடன், இந்த நிறுவனம் ஏனைய மாநிலங்கள் இங்குப் பொருட்காட்சிகளை நடத்தவும், ஏனைய மாநிலங்கள் கைத்திறப் பொருள் உற்பத்தி மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் இது உதவி செய்துள்ளது.

1980-81ஆம் ஆண்டு தொடக்கத்தில் ரூ. 138 இலட்சமாக இருந்த இதன் விற்பனை சம்பந்தப்பட்ட மொத்த வியாபாரத் தொகை 1983-84ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 226 இலட்சமாக உயர்ந்துள்ளது. இந்நிறுவனம் தன்னுடைய பொருட்களை விற்பனை செய்வதுடன், உள்ளூர்க் கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களையும் விற்பனைக் கூடங்கள் மூலம் விற்பனை செய்துள்ளது. இவ்வாறு, விற்பனை வசதிகளைப் பெற்றிராத கைவினைஞர்களுக்கு இந் நிறுவனம் விற்பனை உதவியும் அளித்து வருகிறது.

**தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

தமிழகத்தில் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டுதோறும் பெருகிவருகின்றன. 1980-81ல் 702 சங்கங்கள்தான் இருந்தன. **மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய முயற்சியால் 1983 இறுதியில் 913ஆகப் பெருகியுள்ளன.**

அமைப்பு ரீதியாகவும், அடிப்படை வசதிகளையும் அளித்து



கடலைமாவு, அல்லது பச்சைப் பயறு மாவு இவற்றை உபயோகித்து வருதல் நலமாகும். இந்த விதமாக இரண்டு வாரம் வரை செய்து வந்தால் அம்மைத் தழும்புகள் மாறி விடும்.

**வயிற்றுவலி நீங்க:**

தேவையான பச்சைக் கறிவேப்பிலையை எடுத்துச் சுத்தம் பார்த்து அம்மியில்வைத்து கொஞ்சம் தண்ணீர்விட்டு அரைத்துச் சுண்டைக்காய் அளவு சாப்பிட வலி நீங்கும். மற்றும் இரத்தம் சுத்தி அடைகிறது. மூலபேதியைக் கட்டுப்படுத்தும்.

**செரியாமை, பித்தம், மயக்கம் அகல:**

கறிவேப்பிலை, இஞ்சி, கொத்தமல்லி இம்மூன்றும் ஜீரண உறுப்புகளுக்கு மிகுந்த தேவையானவை. இம்மூன்றும் ஒன்று சேரும்போது ஜீரண உறுப்புகளுக்குத் துணையாக நின்று வேலை செய்கின்றன. ஜீரண உறுப்புகளில் உணவு செரியாமை, பித்தம், மயக்கம், கிறுகிறுப்பு அதாவது உணவுக் குற்றங்களை நீக்குவதில் இந்தக் கீரை முதன்மையானது.

**வாய்வு அகற்றும்:**

உணவுடன் சேர்க்கப்படும் கறிவேப்பிலையை, சிலர் சாப்பிடும் பொழுது நீக்கி விடுகிறார்கள். நீக்கத் தேவை இல்லை. உணவோடு அதனைச் சேர்த்துச் சாப்பிடுவதே நல்லது. இவ்வாறு உணவோடு செல்லும் இக்கறிவேப்பிலை வயிற்றிலுள்ள வாயுவை அகற்றி மலவாய்க்கட்டு ஏற்படாமல் காப்பதுடன் பசி, ஜீரண சக்தியைத் தரும். வாயுவைப் போக்கி மலத்தை வெளியாக்க முயற்சி மேற்கொள்ளும்.

**அஜீரண வாய்வுக்கு:**

கறிவேப்பிலை ஈர்க்கு 8 கிராம், சீரகம் 8 கிராம், ஓமம் 8 கிராம், சுக்கு 8 கிராம் எடுத்து 1.35 லிட்டர் நல்ல தண்ணீரில் போட்டு அடுப்பில் வைத்து 25 மி லிட்டர் ஆவதுபோல், நன்கு சுண்டக் காய்ச்சி பிறகு அருந்த அஜீரண வாய்வு நீங்கும்.

**குதக வாய்வு, நீர்க்கோவை நீங்க:**

தேவையான கறிவேப்பிலையை எடுத்துச் சுத்தம் பார்த்து உரவில் போட்டு இடித்து ஒரு இலேசான வெள்ளைத் துணியினால் வடிகட்டி அத்தூளைச் சேர்த்து வைத்துக் கொண்டு, தினமும் வெருகடி அளவு எடுத்து, சிறிது சர்க்கரை கலந்து வாயில்போட்டு கொஞ்சம் இளஞ்சூடான தண்ணீரை அருந்தவும்.



பஞ்சாங்கம் அல்ல புத்தக சாலையில் இருக்க வேண்டியது. அட்லஸ்-உலகப்படம் இருக்க வேண்டும்.

குறிப்பு:

வெருகடி அளவு என்றால், 5 விரல் கொண்டு எடுக்கும் அளவு என்று அர்த்தம்.

சித்தர் பாடல்:

வாயி னருசி வயிற்றுளைச்ச
நீடுசுரம்
பாயுகின்ற பித்தமுமென்
பண்ணுங்காண்-தூய
மருவேறு காந்தளங்கை மாதே
உலகிற்கு
கருவேப் பிலையருந்திக் காண்
(அ.கு.)

**துவையல்:**

கறிவேப்பிலையை எடுத்துச் சுத்தம் பார்த்துப் பிறகு அம்மியில் வைத்து இதற்குத் தேவையான உளுத்தம்பருப்பு, பெருங்காயம், கடுகு, மிளகாய் வற்றல் ஆகியவற்றைச் சிவக்க வறுத்து எல்லாவற்றையும் அம்மியில் வைத்து அரைத்து எடுத்து, சுடச்சுட சாதத்தில் கொஞ்சம் போட்டுப் பிசைந்து உண்டால் நல்ல குணம் காணும். சாப்பிட்டவுடன் மலம் கழிப்பவர்களுக்கும், குடல் நோய் உள்ளவர்களுக்கும் இத்துவையல் நன்கு பலன் கொடுக்கும். தவிர, இது குடலுக்கு வலு ஆட்டும்; குடலுக்குப் பலத்தையும் கொடுக்க வல்லது. பத்தியத்துக்கு ஏற்றது. ஆனபடியால், கறிவேப்பிலைத் துவையல் நல்ல மருந்தாகும்.

**கறிவேப்பிலைப் பொடி:**

கறிவேப்பிலை 35 கிராம், சுக்கு 35 கிராம், பெருங்காயம் 35 கிராம், திப்பிலி 17 கிராம், சீரகம் 17 கிராம், இந்துப்பு 17 கிராம் ஆக இந்த 6 சரக்குகளையும் ஒன்றாகச் சேர்த்து, வெயிலில் காய வைத்து, பிறகு எல்லாவற்றையும் சேர்த்து அம்மி அல்லது உரலில் வைத்து இடித்து, பிறகு சலித்து அள்ளி மெல்லிய துணியால் வடித்து, இத்தூளை ஒரு பாட்டிலில் சேமித்து வைத்துக் கொள்ளவும். உணவில் சாதத்துடன் ஒரு ஸ்பூன் அளவு இந்தப் பொடியைப் போட்டு நெய் அல்லது நல்லெண்ணையாவது சேர்த்துப் பிசைந்து உண்டால் நன்றாக ஜீரணமாகும். அஜீரணம் ஏற்படாது. மற்றும் உடல் வலிமை பெறும். நோய்கள் அணுகாது. நன்கு பசி எடுக்கும். பித்தம் அகலும், வெப்பத்தைத் தணிக்கும்.

குறிப்பு:

இந்தச் செய்முறைக்கு, ஜீரணப்பொடி என்று பெயர்.

கறிவேப்பிலை சிறிது கார்ப்புத் தன்மையுடையது என்றாலும், உடலுக்கு பலம் உண்டாக்கக் கூடியது. பசியைத் தூண்டும். பலம் வாய்ந்தது. பித்தத்தை அகற்றி உடல் உஷ்ணத்தை ஆற்றும் குணம் தரவல்லது. கறிவேப்பிலையால் வாந்தி, சீதபேதியால் வரும் வயிற்றுப் பொருமல், நாட்பட்ட சுரம் நீங்கும். இந்தக் கறிவேப்பிலையால் பித்த மிகுதியால் வந்த பைத்தியப் பிணிகளும் நீங்குவதாகச் சித்தர் வாகட ஏடுகளில் காணப்படுகின்றன.

சங்க காலத்தில் 'கஞ்சக நறுமுறி' என்ற பெயரால் இது அழைக்கப்பட்டது. மணந்தருகின்ற இலைகளில் கறிவேப்பிலையும் ஒன்று. உணவிற்குச் சுவையும், மணமும் சேர்க்கும் பொருளாக இதனைத் தாளிதம்செய்து பயன்படுத்துகின்றனர். இதன் அருமை கருதி கறிவேப்பிலைக் கொழுந்துபோல் என்று சிறப்புத் தன்மையைக் கூறும்போது குறிப்பிடுவர். கருவேம்பின் இலையும் கறிவேப்பிலையும் ஒன்று எனத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது. எடுத்துக்காட்டாக மாங்காய் ஊறுகாய் அடும்போது கறிவேப்பிலையைக் கலந்து ஆக்கினர் என்பதை

''கஞ்சக நறுமுறி அளைஇப்
பைந்துணர்
நெடுமரக் கொக்கின் நறுவடி
விதிர்த்த
தகைமாண் காடி''

எனப் பெரும்பாணாற்றுப்படை நவில்கிறது.

50 கிராம் கறிவேப்பிலையில்

415மில்லிகிராம் சுண்ணாம்புச் சத்தும்,
110 மி. கிராம் மக்னீசியம் சத்தும்,
66 மி.கிராம் இரும்புச்சத்தும்
0.11 மி.கிராம் தாமிரச்சத்தும்
40 மி.கிராம் கந்தகச்சத்தும்
100 மி.கிராம் குளோரின் சத்தும் உள்ளன.



கறிவேப்பிலை 108 கலோரி சக்தியை அளிக்கிறது. தாது உப்புக்களில் சுண்ணாம்பு, மக்னீசியம், இரும்புச்சத்து, தாமிரச் சத்து, கந்தகச்சத்து மற்றும் குளோரின் ஆக்ஸாலிக் ஆசிட் முதலியன இந்தக் கறிவேப்பிலையில் நிறைய உண்டு. பல சுவடிகள் மூலமாக இச்சான்றுகள் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றன.

இந்தச் சிறப்பும் பெருமையும் வாய்ந்த இக்கறிவேப்பிலையைப் பற்றித் 'தமிழக நாட்டுப் பாடலில் 'அழகாக வர்ணித்திருக்கிறார்கள். அதாவது

''கறிவேப்பிலையோ வேப்
பிலை
காய்கறிக் கெல்லாம் தாய்ப்
பிள்ளை''

தமிழக அரசின் பாவேந்தர் விருதுக் கவிஞரான திரு எஸ்.டி. சுந்தரம் அவர்கள்;

''எட்டடுக்கு மாளிகையில்
இட்டலி பல தின்றாலும்
கறிவேப்பிலைச் சட்னிக்கு
இணையோ பராபரமே''

என்று ஒரு பாடல் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**பொதுப் பலன்கள்:**

கறிவேப்பிலை இரண்டு வகை எனலாம். அதாவது நாட்டுக் கறிவேப்பிலை, காட்டுக் கறிவேப்பிலை என்பது. இவை இரண்டுக்கும் இலைகளில் வித்தியாசம் காணலாம்.

நாட்டுக் கறிவேப்பிலையின் இலை சிறியதாகவும், துவர்ப்பும், இனிப்புச் சேர்ந்த நறுமணம் உடையதாகவும் இருக்கும். காட்டுக் கறிவேப்பிலையின் இலை சற்றுப் பெரியதாகவும், கசப்புடையதாகவும் இருக்கும்.

பலவகைக் காய்கறிகளுடனும், பதார்த்தங்களுடனும் இக்கறிவேப்பிலையைச் சேர்த்துச் சமைத்து உணவுடன் உண்ணுதல், நம் மூதாதையர் காலத்திலிருந்தே நம் நாட்டில் பழக்கத்தில் உள்ளது. எனவே தான் இதற்கு கறிவேப்பிலை எனப் பெயர் வந்தது.

உணவுப் பதார்த்தங்களுக்குச் சிறந்த மணம் வீசுவது கறிவேப்பிலை. இதனைப் பச்சையாகவும் உண்ணலாம். இரத்த சுத்திக்கேற்றது. பித்தத்தை மாற்றும் வாந்தியைத் தடுக்கும். வயிற்று இரைச்சலை நீக்கிக் குடலுக்கு வலுவைக் கொடுக்கும். தீபனத்தை உண்டாக்கும். மூல பேதியைக் கட்டும். இதில் வைட்டமின் 'ஏ' சத்து அதிகம். ஓரளவு இரும்புச் சத்தும் இதில் வைட்டமின் ஏ.பி.சி ஆகியவையும் உண்டு.

எனவே ஆரோக்கியம் என்பது வெறும் வார்த்தைகளாலோ மருந்து மாத்திரைகளாலோ பெற்றுவிடக் கூடியது அல்ல! இயற்கை அன்னை தந்த மூலிகைச் செல்வங்களே நோய் அகற்றும் நன் மருந்துகள். அத்தகைய செல்வங்களில் கறிவேப்பிலையும் ஒன்றாகத் திகழ்கிறது.



## மரணத்துக்கு முன் இந்திரா பிறப்பித்த உத்தரவு!

மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி, தான் மரணம் அடைவதற்கு முந்தின நாள் தமிழக வெடி விபத்தில் இறந்தவர்களுக்கு உதவிப் பணம் வழங்க உத்தரவிட்டார்.

1984 செப்டம்பர் மாதம் சேலம் செவ்வாய்ப் பேட்டையில் பட்டாசுக்கடையில் நடந்த தீ விபத்தில் 6 பேர் பலியானார்கள். 16 பேர் படுகாயம் அடைந்தார்கள்.

பட்டாசு தீ விபத்தில் பலியாகி முதலில் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட 4 பேர் குடும்பத்துக்கும் தலா ரூ. 2 ஆயிரம் வீதமும், காயம் அடைந்த 16 பேர்களுக்கும் தலா ரூ. 500 வீதமும் (மொத்தம் 16 ஆயிரம்) ''பிரதமர் தேசிய நிவாரண நிதி''யில் இருந்து திருமதி இந்திரா காந்தி வழங்கினார்.

அதற்கான உத்தரவை திருமதி இந்திரா காந்தி மரணம் அடைவதற்கு முன்தினம் (அக்டோபர் 30ந் தேதி) பிறப்பித்தார்.

''ரூ. 16 ஆயிரத்துக்கான காசோலையைப் பிரதமரின் அலுவலக நிர்வாகி திரு என். என். ஸ்ரீராமன் தமிழக அரசு தலைமைச் செயலாளருக்கு அனுப்பினார்.



அதன் மூலம் வேலை வாய்ப்பையும், உற்பத்தியையும் அதிக அளவிற்குப் பெருக்கத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களை ஒரு கருவியாகப் பயன்படுத்துவது மாநில அரசின் நோக்கமாகும்.

தீப்பெட்டித் தொழில், மூலப்பொருள் வசதி உள்ள இடத்தில் அமைக்கப்படவேண்டுமென்ற ஒரு தொழில் அல்ல. அதிக மூலதனம் வேலைவாய்ப்பு ஆகிய காரணங்களினால், இது வழக்கமாக இருந்த இடத்திலிருந்து பின்தங்கிய பகுதிகள் அனைத்திற்கும் பரவியுள்ளது. ஏனைய சில தொழில்கள் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே ஏற்படுத்தப்படுவதாயுள்ளன.

தமிழ்நாடு, அதன் பாரம்பரியத் தொழிலான தோல் உற்பத்தி தொழிலில் சிறந்து விளங்கியுள்ளது. இது முதலில் ஓரளவிற்குப் பதப்படுத்தப்பட்ட தோல் உற்பத்தி செய்யும் பணியில் மட்டுமே கவனம் செலுத்தியது. இந்த உற்பத்தி முறையை, முழுவதும் பதப்படுத்தப்பட்ட தோல் உற்பத்தி செய்யும் முறைக்கு உயர்த்தவேண்டுமென்ற நோக்கத்துடன், பதப்படுத்தப்பட்ட தோல் உற்பத்தி செய்யும் முறையில் பொதுவான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க, நான்கு பணித் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இவற்றில் மூன்று சங்கங்கள் ஏற்கெனவே செயற்படத் தொடங்கியுள்ளன. நான்காவது சங்கம் இவ்வாண்டின் மத்தியில் செயற்படத் தொடங்கும்.

அண்மை ஆண்டுகளில், சவ்வரிசித் தொழிலும், கயிறுத் தொழிலும் தனிக் கவனத்தைப் பெற்றுள்ளன. சவ்வரிசித் தொழில் தமிழ்நாட்டில் 25,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சவ்வரிசி, புரத மாவுப் பொருட்களின் பெரும்பகுதி, வட இந்தியாவில் பயன்படுத்தப்படுகிறது. நிதிநிலை போதிய அளவிற்கு இல்லாத காரணத்தால், சவ்வரிசி புரத மாவுப் பொருள் உற்பத்தி செய்பவர்களைத் தரகர்கள் சரண்டி வந்தனர். இப்பொருட்கள் விற்பனையாகும் பகுதிகளில் நிலவும் அதிக விலையினால் கிடைக்கக்கூடிய பலன் உற்பத்தியாளர்களுக்குக் கிடைப்பதில்லை.

உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் 1981-82ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் பணித் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. சவ்வரிசி புரத மாவுப்பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 500 தொழிற்பிரிவுகளில் 455 தொழிற்பிரிவுகள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். அவை உற்பத்தி செய்யும் பொருட்களை இச்சங்கம் விற்பனை செய்கிறது. இச்சங்கம் அமைக்கப்பட்டதன் பயனாக, உற்பத்தியாளர்கள் தங்கள் பொருட்களைப் பேரம் பேசி அதிக விலைக்கு விற்பனை செய்யும் அளவிற்கு உயர்ந்துள்ளனர். இவர்கள், இதற்கு முன்னர், சவ்வரிசி புரத மாவுப் பொருட்கள் ஆகியவற்றிற்கு மூட்டை ஒன்றிற்கு ரூ. 225, ரூ. 160 என்ற வீதத்தில் பெற்றிருந்ததற்கு மாறாக இப்பொழுது முறையே ரூ. 450லிருந்து ரூ. 520 ஆகவும், ரூ. 350லிருந்து ரூ. 390 ஆகவும் பெற முடிந்தது. அதே போல மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகள் **மூட்டை ஒன்றிற்கு இதற்கு முன்னர் ரூ. 22 என்று பெற்றிருந்ததற்கு மாறாக இப்போது ரூ.72 பெறுகின்றனர்.**

1980 மார்ச் இறுதியில் 10 கயிறுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இவை 1,655 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வந்தன. கடந்த நான்காண்டுகளில் மட்டும் 47 புதிய சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதனால் சுமார் 5,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டியுள்ளது. பயிற்சி அளிப்பதற்கான வசதியை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் தஞ்சாவூர் வளர்ச்சி - பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில், கூட்டுறவுத் துறையில், தற்போது 13 தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. இதில் ஒன்று இப்போது அமைக்கப்பட்டு வருகிறது. இந்த அமைப்பின் விளைவாக, சிறிய அளவில் தேயிலை வளர்ப்பவர்கள் இப்பொழுது ஒரு கிலோ தேயிலைக்கு ரூ. 5 வரை பெறுகின்றனர். இதற்கு முன்னர், அதாவது ஐந்தாண்டுகளுக்கு முன் ரூ. 1 மட்டுமே பெற்று வந்தனர். இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்படத் தொடங்கியதன் பலனாகச் சிறிய அளவில் தேயிலை வளர்ப்பவர்களில் 80% மேற்பட்டவர்களின் வாழ்வு வறுமைக்கோட்டிற்கு மேல் உயர்ந்துள்ளது.

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் கடனை அளிக்கத் தமிழ்நாடு மாநில தொழில் கூட்டுறவு வங்கி அமைக்கப்பட்டது. இந்த வங்கியில் தனது உறுப்பினராக உள்ள தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனத்திற்கு ரொக்கக் கடனையும், ஒட்டுமொத்த மூலதனத்திற்குக் கடன்களையும் அளிக்கிறது. 30.6.83ஆம் நாள் நிலவரப்படி, நிலுவையாக இருந்த கடன்கள், முன்பணங்கள் ரூ. 578 இலட்சமாகும். இதுவே, 1974ஆம் ஆண்டில் 163 இலட்சமாக இருந்தது. இந்த வங்கியில் ஆதாயமும் கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளது. இவ்வங்கி, 12% அளவிற்கு ஆதாயம் பங்குத் தொகையை அறிவிக்க முடிந்தது. இதுதான் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் கருதியதில் அதிகபட்ச அளவாகும்.

20 அம்சத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோரின் நலனுக்காகத் தொடங்கப்பட்ட தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்க ஒரு திட்டத்தை இவ்வங்கி வகுத்துள்ளது. அதன்படி, சங்கத்தில் குறைந்தது 25 பேராவது பயனடைய வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, எட்டு சதவீதம் என்ற சலுகை வீதத்திலான வட்டி அடிப்படையில் ரூ.50,000 வரை கடன் வழங்கப்படும். இத்திட்டம் சங்கங்களில் உறுப்பினராக உள்ள நலிந்த பிரிவினருக்கு முறையான வேலையை அளிக்கப் பெரிதும் உதவும்.

—அ. மருதவிநாயகம்





# நோய் அகற்றும் கறிவேப்பிலை

—ஏ.ஆர்.என். துரைராஜ்

நம் இந்தியத் திருநாட்டில், இமய முதல் குமரி வரையிலும் காடு, மலை, வீட்டுத் தோட்டம் ஆகிய இடங்களிலும் பயிராக்கப்படுகிறது கறிவேப்பிலை. நறுமணத்தைக் கொடுக்க வல்ல இது உணவைச் சீரணிக்க உதவும். வெப்பத்தைத் தணிக்கும். இதைக் சமையலில் தாளிதமாய்ச் சேர்த்து உண்பர்.

வேறு பெயர்கள்: கறிவேப்பிலை, கருவேப்பிலை, கறியபிலை, என்று சொல்வதுண்டு. மிகப் பழங்காலத்திலிருந்தே இக் கறிவேப்பிலையினுடைய இலை, ஈர்க்கு, பட்டை, வேர் முதலியன உணவாகவும், மருந்தாகவும் பயன்பட்டு வருகின்றன.

**தீரும் வியாதி;**

சுவையின்மை, பழஞ்சுரம், மந்தம், மந்தபேதி, மலக்கட்டு, மலதோஷம், சீதபேதியால் வரும் வயிற்றுளைவு, பிரமேகம், வாந்தி, அம்மைத் தழும்பு, வயிற்றுவலி, அஜீரணபேதி, பித்தம், உடல் சூடு, கிரகணி, பசி ஜீரணம், மற்றும் பைத்தியம் ஆகியவை நீங்கக் கூடியது.

**உபயோகம்:**

தேவையான, கறிவேப்பிலையை நிழலில் உலர்த்தி அத்துடன் மிளகு, உப்பு, சீரகம், சுக்கு முதலியவற்றைப் பொடியாக்கி, சாப்பிடும் சாதத்தில் இப்பொடியைக் கூட்டி கொஞ்சம் நெய்விட்டுக் கலந்து சாப்பிட, மந்தம், மந்தபேதி, மலதோடம், மலக்கட்டு, கிரகணி, பிரமேகம் ஆகியவைகள் குணமாகும்.

சாப்பாட்டுடன் உண்ணும் பலதரப்பட்ட காய்கறிப் பதார்த்தங்களுடன் இந்தக் கறிவேப்பிலையைச் சேர்ப்பது, நல்ல மணமாகவும், நல்ல சுவையாகவும் இருக்கும். துவையல் செய்து சாப்பிட வாய் கசப்பு, பித்தம், வாய்நீர் ஊறல் இவை குணம் ஆகும்.

இலையுடன் சுட்டபுளி, வறுத்த உப்பு, வறுத்த மிளகாய் இவற்றைக் கூட்டித் துவையல் செய்து ஆகாரத்துடன் சாப்பிட அரோசகம், அதிசாரம், பித்தவாந்தி, பித்த செரியாமை, வயிற்றுளைச்சல், பொருமல் ஆகிய நோய்கள் குணமாகும்.

ஈர்க்கின் புறணியைத் தாய்ப்பால் விட்டு இடித்து இதனுடைய ரசம் பிழிந்து (கூட) லவங்கம், திப்பிலி ஆகியவற்றைச் சேர்த்து இரண்டு அல்லது மூன்று தரம் குழந்தைகளுக்குப் புகட்ட வாங்கி நிற்கும் பசி தீபனம் உண்டாகும்.

**செய்முறை:**

ஈர்க்கு (அதாவது கறிவேப்பிலை ஈர்க்கு) 12 கிராம், சுக்கு 12 கிராம், சீரகம் 12 கிராம், ஓமம் 12 கிராம் எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு இவற்றை எல்லாம் ஒருபடி குடிதண்ணீரில் போட்டு அரைக்கால் படியாக வற்றக் காய்ச்ச வேண்டும். பிறகு வடிகட்டி அதற்குத் தகுந்தபடி சர்க்கரை சேர்த்துக் கொடுக்க, அஜீர்ண வாயு நீங்கும்.

தேவையான கறிவேப்பிலையைச் எடுத்துச் சுத்தம் செய்ய வேண்டும். பிறகு, அம்மியில் வைத்து நெவ்வாக அரைத்து நெல்லிக்காய் அளவு எடுத்து இருவேளை வீதம் மூன்று நாட்கள் தொடர்ச்சியாகச் சாப்பிடும் பட்சத்தில் சீதபேதி குணமாகும்.

தேவையான அரிசியுடன் இலையைச் சேர்த்து, உரலில் இட்டுக் குத்தித் தேய்த்துப் புடைத்துவிட்டு, அவ்வரிசியுடன் உலர்ந்த மிளகாய் கூட்டிக் கருக்கி, சாந்து நிறம் வரும் பக்குவத்தில் வசம்புச் சாம்பல், சிறுநாகப்பூ, அதிவிடயம் இவற்றைச் சேர்த்து நீர் விட்டுச் சுண்டக் காய்ச்சிக் கொடுக்க, அஜீரண பேதி முதலியன நீங்கும்.

மேற்படி இலையிற் சிறிதும் வயதுக்குத் தகுந்தபடி மூன்று மிளகும் சேர்த்து நெய்யில் வறுத்து வெந்நீர்விட்டு அரைத்து கரைத்துப் பாலர்களுக்கு நீராட்டிய பிறகு, குடிப்பிக்க மந்தம் முதலியன நீங்கும் பசியை உண்டு பண்ணும்.

இதன் இலை, பட்டை, வேர் இவற்றைக் கஷாயம் செய்து கொடுக்க, பித்தம் நீங்கும்; வாந்தியும் நீங்கும்.

**அம்மைத் தழும்பு:**

தேவையான இரண்டு கைப்பிடி இலையை மாத்திரம் (ஈர்க்கு நீக்கி விட்டு) எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு கசகசா 9 கிராம், கஸ்தூரி மஞ்சள் 4 கிராம், இலையுடன் சேர்த்து அம்மியில் வைத்து அரைத்துக் கொள்ளவும், பிறகு அரைத்ததை அம்மைத் தழும்பு கண்டு இருக்கும் இடத்தில் பூசி வைத்து அரை மணி நேரம் ஊற வைத்து பின் ஸ்நானம் செய்து கழுவி, சுத்தம் செய்து கொள்ளவும். அம்மைத் தழும்புகள் மறையும் அளவு உடல் தேய்த்து ஸ்நானம் செய்யக் கூடிய அளவு

# குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் குறிப்பிடத்தக்க பணிகள்



**கோ**யம்புத்தூர் நகரில் விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 11 குடிசைப்பகுதிகளில் 1984-85 ஆம் நிதியாண்டில் மேம்பாட்டுப்பணிகள் ரூ.39.50 லட்சம் செலவில் தொடங்கப்பட உள்ளன. இதனால் 15,974 மக்கள் பயன் பெறுவர்.

இந்நிதியாண்டில் கோயம்புத்தூர் நகர் கெம்பட்டிக் காலனி திட்டப்பகுதியில் ரூ.181.83 லட்சங்கள் செலவில் 756 குடியிருப்புகள் கட்டவும் திட்டமிடப்பட்டு விரைவில் தொடங்கப்பட உள்ளது.

குடிசை வாழ்வோர் விருப்பத்திற்கிணங்க மலிவு விலையில் வீடுகள் அட்கோ உதவியுடன் கட்டுவதற்கு முதற்கட்டமாக ரூ.90 லட்சம் செலவில் சுமார் 1500 குடும்பங்கள் பயன் பெறுவதற்கான திட்டம் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

பாப்ப நாயக்கன்பாளையம் ஸ்ரீராம் நகர், செங்காடு ஆகிய குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் செய்ய பரிசிலனையில் உள்ளன.

**ஈரோடு**

ஈரோடு நகர் பெரும்பள்ளப்பகுதியில் 1985-86 நிதியாண்டில் ரூ.119.85 லட்சங்கள் செலவில் 468 குடியிருப்புகள் கட்டும் பணி தொடங்கியுள்ளது.

ஈரோடு நகர் பவானிரோடு கிட்டப் பகுதியில் ரூ.170.95 லட்சங்கள் செலவில் 684 குடியிருப்புகளைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 1985-86ல் தொடங்கப்படும்.

ஈரோடு நகர் மணல்மேடு திட்டப்பகுதியில் ரூ.128.15 லட்சம் செலவில் 516 குடியிருப்புகள் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

ஆக, ஈரோடு நகரில் மொத்தம் 1668 குடியிருப்புகள் ரூ 418.95 லட்சம் செலவில் வாரியத்தால் கட்டப்படவுள்ளன.

**சேலம்**

சேலம் நகரிலுள்ள 22 குடிசைப்பகுதிகளில் சுமார் 100 குடும்பங்களுக்கு மேம்பாட்டுப் பணிகளை ரூ. 5 லட்சத்தில் செய்து கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு, வீடுகள் கட்ட கடனுதவியும் அளிக்கப்படும். அட்கோ நிதி உதவியுடன் ரூ.60 லட்சம் செலவில் 1000 குடும்பங்கள் பயனடையும் வகையில் மலிவு வீடுகள் கட்டும் திட்டம் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

ஆண்டிப்பட்டிப் பகுதியில் 350 மாடிக் குடியிருப்புகள் ரூ.77 லட்சம் செலவில் கட்டும் திட்டமும், அப்பகுதியில் ரூ.10 லட்சம் செலவில் வடிகால் அமைக்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது. வடிகால் திட்டத்திற்கு ரூ. 5 லட்சம் நகராட்சி கொடுக்க முன்வந்துள்ளது.

அண்மையில் சென்னையில் ஏற்பட்ட புயலின்போது 46,560 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. நிவாரணப் பணிகளுக்கென வாரியம் 1984-85 ஆம் நிதியாண்டுக்கு ரூ. 122.00 லட்சம் ஒதுக்கியுள்ளது.

[தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தலைவர் திரு என்.வி.என். செல்வம் பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் (19.11.84) தெரிவித்த கருத்துக்களிலிருந்து]



# கோவை மாவட்டத்தில்... விரைந்து பணி செய்யும் இயந்திரச் செக்கு



நீண்டநேர உழைப்புக்குக் காரணமான நாட்டுச் செக்கு இன்று நமது கிராமப்புறங்களிலிருந்து மறைந்து வருகிறது. விரைவாகவும் அதிகச் சிரமம் இன்றியும் எண்ணெய்பிழிவதற்கு உதவும் நவீன எண்ணெய் பிழியும் இயந்திரங்கள் கிராமங்களில் நிறுவப்பட்டு வருகின்றன.

மாடுகளுக்கும், மனிதர்களுக்கும் அலுப்பூட்டும் நாட்டுச் செக்குகளுக்கு பதிலாக இயந்திரச் செக்குகள் இடம்பெற்று கிராமப்புற மக்களின் உழைப்பாற்றலை மீதப்படுத்தி வருகின்றன.

கிராமப்புற மக்களின் உழைப்பாற்றல், வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இயங்கி வரும் கதர்-கிராமத் தொழில் கமிஷன் • நாட்டுச் செக்கின் அமைப்பில் சில மாற்றங்களைச் செய்து அதிகப் பலன் கொடுக்கும் விசைச் செக்குகளை உருவாக்கியுள்ளது. குறைந்த செலவில் விசைச் செக்கை அது உருவாக்கியிருப்பதோடு ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எளிதில் எடுத்துச் செல்லத் தக்கதாகவும் அதனை அமைத்திருக்கிறது.

கோவை அருகே உள்ள சர்க்கார் சாமக்குளம் கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுகம், கதர் கிராமத் தொழில் கமிஷன் உருவாக்கியுள்ள புதிய ரக விசைச் செக்கை வாங்கிப் பயன்படுத்தத் தொடங்கியிருப்பவர்களில் ஒருவர் ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அவரது கிராமத்தில் உள்ள கனரா வங்கிக் கிளையின் மூலமாக இதன் பொருட்டு அவருக்கு ரூ. 9000/- கடனுதவி அளிக்கப்பட்டது. மேற்கொண்டு மானியமாக ரூ. 3000/- வழங்கப்பட்டது. புதிய விசைச் செக்கை நிறுவுவதற்கும், அருகாமையில் இருக்கும் அன்னூரிலிருந்து வேளாண் பொருட்கள் கொள் முதல் மையத்திலிருந்து தேவையான எண்ணெய் வித்துக்களை வாங்குவதற்கும் அந்தத் தொகை அவருக்குப் போதுமானதாக இருந்தது. இன்று அவர் தனது புதிய விசைச் செக்கின் துணையால் மாதம் ரூ. 300-க்கு மேல் சம்பாதிக்கிறார்.

# செங்கல்பட்டு மாவட்டத்தில்.... ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்பு



**ஊ**ரகப் பகுதிகளில் வாழும் வேலை வாய்ப்புக் கிட்டாத தகுதிக்கேற்ற வேலை கிட்டாதவர்களுக்கு வருவாய் தரும் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல், துரித ஊரகப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் சமூக சொத்துக்களை உருவாக்குதல், ஊரக ஏழை— எளிய மக்களின் வருவாயை உயர்த்துதல் போன்ற மூவகை இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ், 1983-84-ல் செங்கல்பட்டு மாவட்டத்தில் 16.48 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் பாதியளவு வேலைவாய்ப்புகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்பட்டன.

திட்டத்தின் பயனாக, 243 எக்டேர் நிலம் சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு 24.56 இலட்சம் மரங்கள் நடப்பட்டன. பாசன நீர்த் தேக்க வளர்ச்சிக்கென 23 கிராமக் குளங்கள் புதிதாகக் கட்டப்பட்டன. பிரச்சினைக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கென 87 கிணறுகள் தோண்டப்பட்டன. 653.5 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலைகள் போடப்பட்டு மேம்படுத்தப்பட்டது.

உருவாக்கப்பட்ட சொத்துக்களில் 57 பள்ளிக் கட்டடங்கள், 157 சமுதாயக் கூடங்கள், 86 வீட்டுத் தொகுப்புகள், இதர பணிகளுக்குப் பயன்படும் 82 கட்டடங்கள் ஆகியவை குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை. ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு வசதி வழங்குவதற்காக, மூன்று வீட்டு மனைப் பகுதிகள் மேம்பாடு செய்யப்பட்டன.

நடப்பு (1984-85) ஆண்டில் 6 கோடியே, 24 இலட்சத்து, 65 ஆயிரம் ரூபாய் செலவில் 1,395 நின்று போன பணிகளும், 2113 புதிய பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 24 லட்ச ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இதில் பத்து சதவீதத்தினைச் சமூகக் காடுகள் திட்டம் பெறும். ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நலத்துக்கென 10 சதவீதத்திற்கு அதிகமான தொகை பயன்படுத்தப்படும்.




## " இருதயம் ஒரு புதிர் "

ஆசிரியர் : டாக்டர் எஸ். ராஜா, எம்.பி.பி.எஸ்.,

வெளியீடு : அன்னை பதிப்பகம்' 4, ஸ்டேஷன் ரோடு மேற்கு மாம்பலம் சென்னை-33.

விலை : ரூ. 5.00

"இதயத்தின் குரலைச் சரியாகப் புரிந்து கொள்ளாத வரைக்கும் அது ஒரு புதிர்தான்" என்று கூறிய இந்நூலாசிரியர், இந்நூல் முழுவதும் வெகு பாடுபட்டு அப்புதிரை விடுவித்து இருக்கிறார்.

இதயத்தைப் பற்றி இவ்வளவு விவரங்களா?

மலைப்பாக இருக்கிறது. சற்று பயமாகக் கூட இருக்கிறது.

ஒவ்வொரு கருத்தும் அழகான உதாரணங்களோடும் விளக்கப் படங்களோடும் சொல்லப்பட்டிருக்கின்றன.

இருதய நோயாளிகள் எதை உண்ண வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும்என்பதையும், அவை எக்காலத்தில் உண்ண வேண்டும் என்பதற்கான பட்டியலையும் போட்டுச் சொல்லி இருக்கிறார் ஆசிரியர்.

இருதயம் வலுவுறவும், நோய்கள் மட்டுப்படவும், யோகாசனம் பெரிதும் உதவும் என்று கூறும் ஆசிரியர் என்னென்ன ஆசனங்கள் போடவேண்டுமென்பதையும் வேறு பல உடற்பயிற்சி விவரங்களையும்கூறியிருக்கிறார்.

இருதய நோய்களின் நண்பன் இன்னின்ன பழக்க வழக்கங்கள், எதிரிகள் -இன்னின்ன பழக்க வழக்கங்கள் என்று இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன. இருதய நோய்களுக்கான நாட்டு வைத்திய முறைகளையும் இவர் தொடாமல் இல்லை.

ஒவ்வொருவரும்இருதயத்தைப் பற்றி முன்னெச்சரிக்கையாக அறிந்து கொள்ள வேண்டிய ஏராளமான விவரங்களை, ஆர்வத்தோடு படிக்கத் தூண்டும் வண்ணம் எழுதி இருக்கும் முறை பாராட்டுக்குரியது.

## சுவையான பலகாரங்கள் தயாரிப்பது எப்படி ?

ஆசிரியர் : செல்வி

வெளியீடு : இலக்குமி நிலையம், 10, காசிம் சாஹிப் தெரு, இராயப்பேட்டை, சென்னை-14.

விலை : ரு 5.25

இக்காலத்து படித்த பெண்களுள் நன்றாகச் சமைக்கத் தெரிந்தவர்கள் நூற்றில் ஒருவர் இருக்கலாம். அவர்கள் கூட படிப்புகளுக்கிடையே தன்னார்வத்தோடு கற்றுக் கொண்டவர்களாகவே இருப்பார்கள்.

பெரும்பாலான படித்த பெண்களுக்குப் பலவகை உணவுகள் செய்யவோ, குறித்த நேரத்திற்குள் சமைக்கவோ தெரியவில்லை என்றால் அவர்களுக்கு அதற்கான நேரமின்மைதான் காரணம்.

திருமணமாகிக் கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்தால், ஓரளவு சமாளித்துத் தப்பித்துக் கொள்ளலாம். மெல்லமெல்ல சமையலையும் கற்றுக்கொண்டு விடலாம். ஆனால் ... தனிக் குடித்தனம் போனால், இவர்கள் பாடு மட்டு மல்ல, இவர்கள் கணவர்களின் பாடும் திண்டாட்டம்தான்!

அத்தகையவர்க்கு எளிதாக, விரைவாக, அளவோடு சமைக்கப் போதிக்கிறது இந்நூல்.

இனிப்புப் பலகாரங்கள் ஐம்பத்தாறு வகையும், காரவகைகள் இருபத்தியாறு வகையுமாய் எண்பத்தி இரண்டு வகை உணவுகள் பற்றி இந்நூலில் முறையாக, விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மணவிழாவின்போது அன்பளிப்பு வழங்கும் பயனுள்ள நூல்கள் வரிசையில் இதைச் சேர்க்கலாம்.

## "ஒரு டாக்டரின் கடிதங்கள்"

ஆசிரியர் : டாக்டர் எஸ்.ராஜா, எம்.பி.பி.எஸ்.,டி.சி.எச்.

வெளியீடு : நியூ செஞ்சுரி புக் அவுஸ், அண்ணா சாலை, சென்னை-2

விலை : ரு. 5.00

"குழந்தைகள் எதிர்கால இந்தியாவின் சொத்துக்கள் எதிர்ப்படும் சவால்களைச் சந்திக்க-சமாளிக்க வலிமை மிகு இந்தியா வேண்டுமெனில் குழந்தைகளை நன்கு கவனியுங்கள்" என்றார் பண்டித நேரு.

குழந்தைகளைப் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. பேணிக்காத்து, அவர்களை எதிர்கால இந்தியாவின் நல்ல ஆரோக்கியமான குடிமக்களாக வளர்க்க வேண்டும் என்று ஆதங்கம் ஒரு மருத்துவருக்கு வந்திருக்கிறது. அதன் விளைவு..

குழந்தைச் செல்வங்களை எப்படி வளர்க்கவேண்டும்? குழந்தை வளர்ப்பில் உள்ள பிரச்சினைகள் என்னென்ன? அவற்றை எப்படிச் சமாளித்துக் குழந்தைகளைக் காப்பது.. போன்ற மிக முக்கியமான பிரச்சினைகளை இந்நூலில் மிகத் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கிறார் ஆசிரியர்.

எளிய தமிழில் மருத்துவத்தில் பயனுள்ள நூல்கள் வருவதில்லை என்ற குறையை 'ஒரு டாக்டரின் கடிதங்கள்' நிவர்த்தித்து இருக்கிறது.

'பிறந்த குழந்தைக்குப் பராமரிப்பு' தொடங்கி, பேதியானது குழந்தை பாதியானது வரை எளிய நடையில் நகைச்சுவை உணர்வோடு, படிப்பவர்க்குச் சலிப்பேற்படாத வண்ணம் எழுதிஇருக்கும் முறை பாராட்டுக்குரியது.

குழந்தை வளர்ப்பில் தொன்று தொட்டு இருந்து வரும் பழக்கங்கள் சிலவற்றை இவை அறியாமை என்று கூறி ஆதாரத்தோடு மறுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு இளந்தம்பதியினரிடமும் இருக்க வேண்டிய சிறந்த நூல் இது. —மாலா



## எனது நண்பர்கள்

ஆசிரியர் : கி.ஆ.பெ. விசுவநாதம்

வெளியீடு: பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை-600 108

பக். 138 விலை ரூ.10.00

மறைமலையடிகள், கா. நமச்சிவாய முதலியார், ஓ.பி. இராமசாமி ரெட்டியார், காமராசர், வழக்குரைஞர் வன்னிய சிங்கம், செட்டிநாட்டரசர் கலைத் தந்தை, தொழிலதிபர் சேஷசாயி போன்ற பல துறையைச் சேர்ந்த 23 பெரியவர்களைப் பற்றி இந்நூலில் சொல்லப்பட்டுள்ளது. இப்பேரறிஞர்களின் வரலாறும் அவர்தம் பண்பும் அறிவுரைகளும் வழிகாட்டுதலும் தமிழக மக்கட்குப் பயன்பட வேண்டும் என்ற உயரிய எண்ணத்தின் வெளிப்பாடே இந்நூல்.

"உன்னுடைய நண்பர்களைச் சொல், பிறகு நான் உன்னை மதிப்பிடுகிறேன்" என்ற ஆங்கிலப் பழமொழிக்கு ஏற்ப அருமையான நண்பர்களைப் பெற்ற ஆசிரியர், இந்நூலின் மூலம் நட்பின் பெருமையை உலகுக்கு உணர்த்துகின்றார். கருத்து வேறுபாடு இருப்பினும், காழ்ப்புணர்ச்சி இல்லாமல் அன்பு செலுத்தும் பெருமை படைத்த பெருமனம் மிக்க பெரியோர் வாழ்க்கையினைப் படிப்பதன் வாயிலாகச் சமுதாயம் பயன் பெற - நலம்பெற முடியும்.

நாடறிந்த தலைவர்களை, நாமறிந்த முத்தமிழ்க் காவலர் நலமறிந்து, இனமறிந்து, குணமறிந்து, பண்பறிந்து, கருத்து விருந்து படைக்கிறார். ஏடறிந்து படிப்பவர்க்கு ஏற்றம் தருவது; எழுச்சியூட்டுவது; இளைஞர்க்கும், மாணவர்க்கும் நல்வழி காட்டுவது. அனைவரும் படிக்க வேண்டிய அருமையான நூல்.

## பாப்பா பாரதம்

ஆசிரியர் : 'ஒன்பதாம் தொகையார்' கவிஞர் ஆற்றலரசு,

வெளியீடு: கவிதா பப்ளிகேஷன்ஸ்,

பம். 71 விலை ரூ. 6.00

'பாப்பா பாரதம்'-புதுமையான பாடல்களைக் கொண்டு விளங்கும் குழந்தைகட்கான நூல். கவிஞர் ஆற்றலரசின் ஆற்றலுக்கோர் சிறந்த சான்று இப்புதுமைப் படைப்பு.

குழந்தைகள் மனத்தில் ஒருமைப்பாட்டுணர்வு வளர்வதற்கு இந்நூல் வழிகாட்டியாக இருக்கும்.

காஷ்மீரத்தில் விழும் அருவி ஒலியிலும் தமிழோசையே கேட்கப்படுகிறது. காசி, ஆந்திரம், அஸ்ஸாம், இமயமலை, ஆக்ரா, ஒரிசா, கர்நாடகம், ராஜஸ்தான் முதலிய 26 இடங்கள் இந்நூலுள், நெஞ்சையள்ளும் வகையில் செஞ்சொற்களைக் கொண்டு வண்ணக்கலவையில் வருணித்துச் சொல்லப்பட்டுள்ளன.

இயற்கை எழில் கொஞ்சும் இந்தியாவின் பகுதிகளும், நற்றமிழ்க் கவிஞர்களும் நாட்டுத் தலைவர்களும் போற்றப்படுகின்றார்கள்.

இந்நூலின், தலைப்பு, மிகப் பொருத்தமாகவும், புதுமையாகவும் அமைந்துள்ளது.

இளம் குழந்தைகளின் உள்ளங்களில் ஒருமைப்பாட்டுக் கருத்துரைகள் பசுமரத்தாணி போல் பதியுமானால், நாளைய தலைமுறைகளான அவர்களால் நாடு நிச்சயம் நலம் பெற வாய்ப்புண்டு.

குழந்தைகட்கு இந்நூலை வாங்கிப் பரிசளித்துப் பயன் பெறச் செய்யலாம்.

—டாக்டர் சிவஅரசி முத்துக்காளத்தி

## விசித்திர டால்பின்

ஆசிரியர் : டி.எம். சௌந்திர ராசன்,

வெளியீடு: மயிலவன் பதிப்பகம், 7, எம். கே. அம்மன் கோவில் தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004

பக் :40. விலை ரூ.3.00

டால்பின்கள் பெரும்பாலும் கூடியே வாழ்கின்றன. இவை பொதுவாக 25 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன. இவற்றின் எதிரி 'ஷார்க்' மீனாகும்-இப்படி பல சுவையான செய்திகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார் ஆசிரியர் இந்நூலில்.

டால்பின்களின் விசித்திர வாழ்க்கை, அவை மனிதனுக்குப் பயன்படும் விதம் முதலான அறிவியல் செய்திகளை இந்நூலில் படித்து மகிழலாம். மாணவர்கள் விரும்பிப் படிக்கின்ற வகையில் படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

## விநோத பறவை பென்குயின்

ஆசிரியர் : டி.எம். சௌந்திர ராசன்,

வெளியீடு: மயிலவன் பதிப்பகம், 7, எம்.கே. அம்மன் கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004

பக்: 40 விலை ரூ.3.

மனிதர்கள் சாதாரணமாகப் பார்க்க முடியாத, அதிக எண்ணிக்கையில் காணப்படாத பறவை இனம் ஒன்று உண்டு. அதுதான் பென்குயின்.

இந்த விசித்திரப் பறவையின் வாழ்க்கை நம்மை வியக்க வைக்கின்றது. பறவைகளின் அழகன் என்று வர்ணிக்கப்படும் இது, பறவை என்று பெயர் பெற்றிருந்தும் பறக்க முடியாத உயிரினமாகும்!

படித்து மகிழ நூலில் இது பற்றிய நிறைய செய்திகள் உள்ளன. பார்த்து மகிழப் படங்களும் உள்ளன. பள்ளிக் குழந்தைகளுக்கு ஏற்ற நூல்.

— பி. வி. கிரி



மாணவர் பக்கம்



# தமிழ் ஆண்டு

— பல்லவன்

தமிழர்களுக்குக் காலத்தைக் கணக்கிடத் தொடர் ஆண்டு இல்லை என்னும் குறை பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது.

இன்று தமிழ் வருடங்கள் என்று கூறப்படுகிற பிரபவ முதல் அட்சய வரையில் உள்ள அறுபது ஆண்டுகளும் தமிழ் ஆண்டுகள் அல்ல.

தமிழர்களுக்குத் தொடர் ஆண்டு இல்லாத குறையை நிறைவு செய்ய அறிஞர்களும் புலவர்களும் அடங்கிய தமிழகப் புலவர்குழு முயற்சி மேற்கொண்டது.

1921ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழகப் புலவர்குழு கூடியது.

இயேசுநாதரின் பெயரால் கிறித்துவர்களுக்குத் தொடர் ஆண்டு உள்ளது.

முகமது நபியின் பெயரால் இஸ்லாமியர்களுக்கு ஹிஜிரி ஆண்டு இருக்கிறது.

புத்தரின் பெயரால் புத்தர் நிர்வாண ஆண்டு வழக்கில் உள்ளது.

மகாவீரரின் பெயரால் சமணர்களுக்கு மகாவீர நிர்வாண ஆண்டு நடைமுறையில் இருக்கிறது.

இதுபோல, உலகம் புகழும் குறளைத் தந்த திருவள்ளுவர் பெயரால் தமிழர்களுக்கு ஒரு தொடர் ஆண்டினைப் புலவர் குழு உருவாக்கியது.

இயேசுநாதரைவிடத் திருவள்ளுவர் 31 ஆண்டுகள் முன் பிறந்தவர் என்றும்

திருவள்ளுவர் ஆண்டுப் பிறப்பு தை மாதம் முதல் நாள் என்றும் அறிஞர்கள் ஆய்ந்து அறிவித்தனர்.

வழக்கில் உள்ள ஆங்கில ஆண்டுடன் 1985+31ஐக் கூட்ட வரும் 2016 திருவள்ளுவர் ஆண்டாகும்.

1971ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு திருவள்ளுவர்தொடராண்டினைப் பயன்படுத்துமாறு அரசாணையிட்டது.

1981 முதல் தமிழ்நாடு அரசின் அனைத்து அலுவல்களிலும் திருவள்ளுவர் ஆண்டினை நடைமுறைப்படுத்தி வருகிறது.

வங்காளிகளுக்கு, பார்சிகளுக்கு, யூதர்களுக்கு, சௌராட்டிரர்களுக்கு, மலையாள நாட்டினருக்குத் தொடர் ஆண்டுகள் இருக்கின்றன.

தமிழர்களுக்கு மட்டும் தொடர் ஆண்டு இல்லையே என்னும் ஏக்கத்தைப் போக்கிய தமிழகப் புலவர் குழுவைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்றியுடன் போற்றுகிறது.

பொங்கற் புத்தாண்டுதான் திருவள்ளுவர் பிறப்பாண்டு என்பதை நெஞ்சில் நிறுத்துவோம்!

திருவள்ளுவர் ஆண்டு முறையை நம் வாழ்விலும் வழக்கிலும் பயன்படுத்துவோம்!

## புத்தக உலகில்...

புத்தக விற்பனையில் உலக சாதனை படைத்த எழுத்தாளர் ஏர்ல் ஸ்டான்லி கார்ட்னர் ஆவார். இவர் தான் புகழ்பெற்ற ''பெரிமேசன்'' என்ற பாத்திரத்தைப் படைத்தார். இவருடைய நூல்கள் 37 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன. இதுவரை 32 கோடி பிரதிகள் விற்பனை ஆகி உள்ளன.

பைபிள் 1763 மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது. 1815 - லிருந்து 1975-வரை 250 கோடிப் பிரதிகள் பைபிள் அச்சிடப்பட்டுள்ளன. அவற்றில் 150 கோடி பிரதிகள் பைபிள் சொசைட்டியால் வெளியிடப்பட்டன.

ஆக்ஸ்போர்டு யுனிவர்சிடி பிரஸ்தான் முதன்முதல் நூல் வெளியிட்ட பதிப்பகம். அதன் முதல் நூல் கி.பி.1468ஆம் ஆண்டு எனத் தேதியிடப்பட்ட போதிலும் கி.பி.1478ல் தான் வெளியிடப்பட்டது.

உலகிலேயே நீண்டகாலம் பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றிய பெருமை மைசூர்க்காரரைச் சேரும். திரு எம்.எஸ்.கிருஷ்ணாராவ் (1895-1981) ''சத்கவி'' என்ற பத்திரிகைக்கு அவர் இறக்கும் வரை சுமார் 63 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இது ஓர் உலகச்சாதனை.

அதிகமான தலைப்புகளில் புத்தகம் விற்பனை செய்யும் கடை லண்டனில் உள்ள டபுள்யூ. அண்ட் ஜீ ஃபாயில் லிமிடெட் ஆகும். புத்தக செல்ப் நீளம் 30 மைல் ஆகும். பரப்பளவு 75,825 சதுர அடி.

தகவல்: திரு அழகுதாசன்
நன்றி: சர்வோதயம்



## உயர்ந்திட வாழ்வில் படித்திடுக!

புத்தம் புதிய சித்திரமே!
நித்தம் எழுவாய் அதிகாலை!
சுத்தம் செய்து குளித்திடு,
சோம்பல் போக்கி மகிழ்ந்திடு!

பத்தும் சொல்வார் மற்றவர்கள்,
பக்குவப் படுவார் கற்றவர்கள்!
முத்துத் தமிழைப் படித்தவர்கள்,
முன்னோர் வழியில் நடப்பார்கள்!

உண்மையை உயர்த்தி நடைபோடு,
உயர்ந்தவர் சொல்லே வழிபாடு!
நன்மையே செய்யும் நினைப்போடு,
நாளும் வாழ்வில் பண்பாடு!

புதிய வரலாறு படைத்திடுக!
புவியில் சமத்துவம் வளர்த்திடுக!
உதய நிலவாய் ஒளிர்ந்திடுக!
உயர்ந்திட வாழ்வில் படித்திடுக!

—அழக பாண்டியன்

## விளையும் பயிர்

செங்கல்பட்டு தூய சூசையப்பர் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கும் த. அருள்சிவபாலன் என்னும் இம் மாணவன் வளரும் இளம் கவிஞன். பல சிறுவர் இதழ்களில் இவருடைய கவிதைகள் வெளியாகியுள்ளன. இவர் தன் நண்பர்களோடு இணைந்து 'வெண்ணிலா சிறுவர் சங்கம்' ஒன்றை அமைத்து நடத்தி வருகிறார். 'வெண்ணிலா' என்ற தட்டச்சுப் பிரதிகையையும் வெளியிட்டு வருகின்றார்.



# கிளைடர் விமானம்

கிளைடர் என்பது இயந்திரங்கள் பொருத்தப்படாத ஆகாய விமானமாகும்.

கிளைடர் எப்பொழுதும் மேலிருந்து கீழ்நோக்கியே பறக்கும் தன்மையுடையவை. ஆனால் இதனை ஓட்டும் விமானியின் திறமை மூலம் மேலிருந்து கீழோ கீழிருந்து மேலேயோ பறக்கச் செய்யலாம்.

1853ஆம் ஆண்டு சர். ஜார்ஜ் கேலே என்பவர் முதன் முதலில் இக்கிளைடர் விமானத்தை உருவாக்கி உலகச் சாதனை புரிந்தவர்.

1903இல் தான் ஆகாய விமானம் கண்டுபிடிக்கப்பட்டது. இது கிளைடரில் இயந்திரம் பொருத்தப்பட்ட விமானமாகவே இருந்தது.

கிளைடர் ஆகாய விமானத்தோடு இணைக்கப்பட்டு எவ்வளவு உயரத்திற்கும் பறந்து செல்லும் தன்மையுடையவை.

அதன் மூலம் 1500 கிலோ கிராம் எடையைத் தூக்கிக் கொண்டு, 5500 கிலோ மீட்டர் தூரம் அட்லாண்டிக் கடலின் மேல் பறந்து சாதனை புரிந்தன.

இரண்டாவதுமகா யுத்தத்தின் போது பெரிய கிளைடர்கள், படைகளுக்கு நடுவே சப்தமில்லாமல் போர் வீரர்களையும், யுத்தத்திற்குத் தேவையான பொருட்களையும் எடுத்துச் செல்வதற்குப் பெரிதும் உதவின.

ஆகாய விமானம் தரையிலிருந்து சுமார் 10,000 மீட்டர் உயரம்வரை பறக்கும். ஆனால் கிளைடரோ 14,102 மீட்டர் உயரம் தொடர்ச்சியாக 1460 கிலோ மீட்டர் தூரம் பறந்து உலகை வியப்பில் ஆழ்த்தியது.

1952ஆம் ஆண்டு பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த சார்லஸ் அட்கெர் என்பவர் கிளைடரில் 56 மணி 15 நிமிடநேரம் பறந்து காட்டினார்.

—நன்றி 'பூக்கூடை'



# சாதனை படைத்த நாய்!

படத்தில் இருக்கும் இந்தத் துப்பறியும் நாயின் பெயர் கான். இங்கிலாந்து போலீஸ் துறையான ''ஸ்காட்லாண்டு யார்டில்'' இந்த நாய் இருக்கிறது. குற்றவாளிகளைத் துப்பறிவதில் பல சாதனைகளைச் செய்துள்ள நாய் 'கான்,' 1984ஆம் ஆண்டின் சாதனையாளர் பட்டியலில் இடம் பிடித்து, தங்கப்பதக்கம் பெற்றுள்ளது. கானின் சாதனை பற்றி போலீஸ்காரர் திரு ஆலன் கூறுகிறார்:

''கடந்த ஆகஸ்டு மாதம் எங்கள் காவல் நிலையத்திற்கு ஒரு மாமத் தொலைபேசிச் செய்தி வந்தது. தொலைபேசியில் மிரட்டியவர்களைக் கண்டுபிடிக்க கானை அழைத்துச் சென்றேன். கடத்தல்காரர்கள் பேசிய 'டெலிபோன் பூத்தை' மோந்து பார்த்துவிட்டு அந்த 2 ஆசாமிகள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்தது.

''நாயைக் கண்டு அவர்கள் ஓடினார்கள். கான் விடவில்லை. அவர்களைத் துரத்தியது. ஒரு தெருமுனை திருப்பத்தில் வேகமாக வந்த காரில் கானின் கால் சிக்கிக் கொண்டது. உடனே நான் ஓடிச் சென்று நாயின் காலை எடுத்துவிட்டேன்.

''ரத்தம் சொட்டச் சொட்ட கான் மீண்டும் ஓடிச்சென்று அந்த 2 மர்ம ஆசாமிகளையும் கவ்விப் பிடித்து விட்டது. நான் அந்த இடத்திற்குப் போகும்வரை பிடியை விடவில்லை!

''அதன்பிறகு கானை மருத்துவமனையில் அனுமதித்தோம். கானின் முதுகெலும்பு, நுரையீரல்கள் பாதிக்கப்பட்டன. பின்னங்கால் உடைந்து விட்டது. கானின் சாதனையைப் பாராட்டித்தங்கப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது. கானுக்கு இப்போது 3 வயது ஆகிறது!

## வாழ்க்கைச் சித்திரம் வரைந்த வள்ளுவர்

ஒன்றேமுக் காலடியில்
உள்ளத்தைக் கொட்டிவிட்டு
அன்றைக்கே உலகைவிட்டுச் சென்றவன்!-இருந்தும்
இன்றைக்கும் இதயத்தில் நிற்பவன்!

எழுசீரை உள்ளடக்கி
இவ்வுலகைப் பார்த்துவிட்டுப்
பழுதின்றிச் சொன்னவன்தான் வள்ளுவன்!-எந்தப்
பொழுதினிலும் நிற்பவன்தான் வள்ளுவன்!

ஒருவையம் ! உயிரெல்லாம்
ஒருகூட்டம் என்றெண்ணி
ஒருநூலைத் தந்தவன்தான் வள்ளுவன்!-வாழும்
பெருநூலைச் செய்தவன்தான் வள்ளுவன்!

அரசன்முதல் ஆண்டிவரை
அனைவருக்குஞ் சொந்தமுற
அறமெடுத்துப் பொருள்கொடுத்த அரியவன்!-இன்பக்
கரங்கொடுத்து மருளழித்த பெரியவன்!

முத்துப்போல் சொல்லெடுத்து
வைரமாக அர்த்தம்வைத்த
வித்தகன்தான் தமிழகத்தின் வள்ளுவன்!-வாழ்க்கைச்
சித்திரத்தை வரைந்தவனத் திருமகன்!

முப்பாலின் மன்னவனின்
முக்காலம் வென்றவனின்
ஒப்பரிய பாதையிலே செல்லுவோம்!-யாண்டும்
செப்பரிய வெற்றிபெற்று உய்யுவோம்!

—நெஞ்சத்தரசு



# பார்த்தோம் படித்தோம்

தமிழரசு 16-12-84 இதழ் கண்டேன். ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்ற ஆன்றோர் பழமொழியை இந்த இதழின் அட்டைப்படம் மெய்ப்பித்துள்ளது.

—இராம. சீனிவாசன்,
வழுத்தூர், தஞ்சாவூர் மாவட்டம்.

16-12-84 தமிழரசு இதழில் வெளியான நற்பணிக்குக் கிடைத்த பரிசு, பாராட்டுக்குரிய பெண்மணி போன்ற கட்டுரைகள் சிறப்பாக அமைந்துள்ளன. அவற்றைப் படிக்கும் அனைத்துத் தரப்பு மக்களும், தாமும் இவ்வாறு சிறப்பான பணிகளை மேற்கொள்ள வேண்டுமென எண்ணுவார்கள். எனவே, தமிழரசில் இதுபோன்ற கட்டுரைகளை அதிக அளவில் வெளியிட வேண்டுகிறேன்.

—சு. சண்முகவல்லி
ஆனைமலை.

''கவிஞன் மறையினும் கவிதை உலாவும்'' என்று பாரதியாரைப் பற்றிப் பாடிய கவிஞர் கண்ணதாசனின் வரிகளே பின்னவருக்கும் பொருந்துமாறு அமைந்த 'கோடிக்கு ஒரு கவிஞர்'பகுதி கழி நன்றே. கவிஞர் கண்ணதாசன் ஓரிடத்தில் 'நான் நிரந்தரமானவன். அழிவதில்லை எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை' என்றதுபோல் 16-12-84 'தமிழரசு' இதழில் 'வாழுங் கவிஞர்'போல் வெளியிட்டுள்ளது ஒருவகையில் சாலப்பொருத்தமே!

—பேராசிரியர் தமிழன்பன்
விழுப்புரம்.

16-12-84 'தமிழரசு' இதழில் வெளியான 'மாண்புமிகு முதல்வரின் வாழ்க்கைக் கல்வித் திட்டம்' என்ற கவிதை மிகஅருமையாக இருந்தது. பரிசு பெறத் தகுதி வாய்ந்த இந்த அற்புதக் கவிதையைத் தீட்டிய கா.பெ. சந்திரசேகரன் அவர்களுக்கு எனது உள்ளம் நிறைந்த பாராட்டுக்கள்.

—சாதிக் நிஜார்,
திட்டச்சேரி.

சுயவேலை வாய்ப்பு, கணிதமேதை பற்றிய கட்டுரைகள் இதயம் கவர்ந்தது. எத்தனைப் புகைப்படங்கள்! எத்தனைச் செய்திகள்! கவிராஜன் பற்றி கவியரசரின் கவிதை மிக அருமை. கொடிநாள் பற்றிய முழுவிவரமே எனக்குப் படித்த பின்பே தெரிந்தது. முதல்வரின் புகைப்படம் அட்டைக்கு அழகு சேர்க்கிறது.

—இரா. நெடுஞ்செழியன்,
சிவகங்கை.

உலகமே வியக்கும் வண்ணம் கணித உலகில் சாதனை பல படைத்த அந்த மாமேதை ராமாநுஜத்தின் வரலாற்றை அழகாகப் படித்தறிய (16-12-84 இதழில்) தந்தீர்கள்! நன்றி பல உரித்தாகுக. இருப்பினும் அம்மாமேதை தனது இளம்பிராயத்திலேயே இறந்தபோது, இந்தியாவிற்கே ஏன் உலகமனைத்திற்குமே ஓர் ஈடுசெய்ய இயலாத இழப்பேயாகும்.

—மதுரை வி. ஹரிகிருஷ்ணன்,
துவாக்குடிமலை, திருச்சி.

டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்களின் நூற்றாண்டையொட்டி வெளியிடப்பட்ட தமிழ்ப்பித்தனின் கட்டுரை வெகு அருமை.

—எம். எஃப், சர்புதீன்
திட்டச்சேரி.

டிசம்பர்-16 இதழில் முதல்வர், முதியவர்களுக்குச் சத்துணவு வழங்கிய போது எடுத்த படத்தை, வாசகர்கள் விருப்பம் அறிந்து முகப்பில் வெளியிட்டு எங்களை மகிழ வைத்ததற்கு நன்றி.

—என்.எம். இராஜன்
மதுராந்தகம்.

16-12-84 இதழில் வெளியிட்டிருந்த நம் பாரதத்தின் முதல் குடியரசுத் தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத்தின் 'வாழ்க்கையில்' அவர் செய்த சாதனைகளைப் படித்து அறிந்தேன். மேலும் இராமாநுஜனின் வாழ்க்கையையும், அவருடைய கணிதத் திறமையைப் பற்றியும்

படித்தபோது என் உடல் சிலிர்த்தது. 'வெற்றி எங்கள் கரங்களிலே...!' மாணவர் பக்கக் கவிதையும் நன்று.

—எஸ்.பி. சந்தான ராஜகோபால்,
அக்கரைக் கோட்டகம், தஞ்சை மாவட்டம்

'தமிழரசு' இதழில் வரும் சின்ன சின்ன செய்திகள், வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள செய்திகள்.

—செந்தூர் மணியன்,
திருச்செந்தூர்.

வேளாண்மை பயிரிடும் முறையைப் பற்றி முன்பு வெளிவந்தது. இப்போது நீண்ட, நாட்களாக வெளிவரவில்லை. ஆகவே, ஒவ்வொரு இதழிலும், வேளாண்மைப் பயிர் செய்யும் முறையைப் பற்றி எழுதினால் நலமாக இருக்கும்.

—பி. தர்மலிங்கம்,
கூத்தூர்.

*16-12-84* இதழில் வெளியான ''வெளிநாட்டவரை வியக்கச் செய்த தமிழகக் கணித மேதை' (ரகமி) என்னையும் வியக்கச் செய்த உயிரோட்டமுள்ள கட்டுரையாகும். படித்து முடிக்கையில் கண்கலங்கவும் மயிர்க்கூச்செரியவும் செய்தது.

—என். ஜோதி,
பைத்தம்பாறை.

*16-12-84* இதழில் முதல் பக்கத்திலே மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் உடல்நிலையில் முன்னேற்றம் என்றும், அமெரிக்க மருத்துவமனையில் கடிதம் படிக்கிறார் என்பதைப் படத்துடன் வெளியிட்டுத் தமிழக மக்களின் உள்ளம் அறிந்தும், வாசகர்களின் விருப்பமறிந்தும் செயல்பட்டுவரும் 'தமிழரசுக்கு எமது உள்ளங்கனிந்த நன்றி.

—டி. எம். சேகர்,
தேத்துறை.

*16-12-84* தேதியிட்ட தமிழரசு முதல்வரின் முன்னேற்றம், மூத்தவர்களின் பொன்மொழிகள், மாமா நேருவின் சிறுகதையுடன் பாதுகாக்கப்பட வேண்டிய கட்டுரைகளுடன் வெளிவந்தது. அதில் வெளிவந்த முதல்வரின் உடல்நிலை பற்றிய கட்டுரையைப் படித்து உருகினோம்!

—கோ. சிங்காரவேலன்,
அம்மாப்பேட்டை

'துறைதோறும் திரு.வி.க.' நூலுக்குப் பாவேந்தர் அறைகூவலை மேற்கோள்



காட்டியிருப்பதும், 'திருக்குறள் பொருள் விளக்கம்' நூலுக்கு மக்கள் வாழும் வகை பற்றிப் பேசும் திருக்குறள் உலக மலரிலிருந்து ஊறி எழுந்த தேன் துளியாகும் என்று 'மதிப்புரை' எழுதியுள்ளதும் டாக்டர் சிவஅரசி முத்துக்காளத்தி அவர்களின் தனித் திறமையைக் காட்டுகிறது.

—ஆ ஜெயராமன்,
வெள்ளிமேடுபேட்டை.

தமிழகத்தில் புரட்சித் தலைவர், பொன்மனச்செம்மல், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசு, செய்த, செய்து கொண்டிருக்கிற சாதனைகளை இதழுக்கு இதழ் அழகுற விளக்கும் தமிழரசு ஒவ்வொரு இதழும் படித்துப் பாதுகாக்கக் கூடியவை. தெளிவான படங்களும், சுவையொழுகும் கட்டுரைகளும், வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்!

—மதினா, முகம்மது அனீஸ்,
பனைக்குளம் (முகவை)

டிசம்பர் 16-இதழ் அட்டைப்படம் கண்டேன். அன்னமிட்ட அந்த அன்புக் கரங்களுக்கு இன்னல் ஏற்பட்டதை, என் இதயவேதனை தாங்க இயலாது மனம் வேதனைப்பட்டேன். அழகிய வண்ணத்தில் அருமையாக அச்சிட்ட தமிழரசுக்கு பாராட்டு.

—ஜி.டி. லட்சுமிதேவி,
கீழப்பழுவூர்.

1985 புத்தாண்டில் அடியெடுத்து வைக்கும், தமிழரசு, பொதுத்தேர்தல் முடிவை, விளக்க இருப்பது குறித்து மகிழ்ச்சி! ஜனவரி 1 இதழ் காண ஆவலாய் உள்ளேன்.

—ஆர்.ஜி. துரைராஜு, வசந்தா
கீழப்பழுவூர்.





# அகழ்வில் கண்ட தமிழகம்

தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை 'பண்பாட்டுப் பலகணி' என்னும் சிறப்பு நிகழ்ச்சியை 1984 நவம்பர்த் திங்கள் முதல் திங்கள்தோறும் நடத்தி வருகிறது. டிசம்பர் திங்கள் சிறப்புச் சொற்பொழிவாக 'அகழ்வில் கண்ட தமிழகம்' என்ற தலைப்பில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் (பொறுப்பு) திரு. நடன காசிநாதன் விளக்கப் படங்களைக் காண்பித்து உரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சிக்குத் தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத்துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் தலைமை தாங்கி, சிறப்புரை ஆற்றினார்.

திரு. நடன. காசிநாதன் தமது உரையில் கூறியதாவது:

தமிழகத்தில் இதுவரை இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னைப் பல்கலைக்கழகத் தொல்பொருள் ஆய்வுத் துறை, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை ஆகியவை வரலாற்றுச் சிறப்புமிக்க பல இடங்களில் அகழ்வாய்வு செய்துள்ளன என்றும் அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகப் பூம்புகார், கொற்கை, உறையூர், கரூர், கங்கைகொண்ட சோழபுரம், பழையாறை ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளைக் குறிப்பிடலாம்.

''தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் முதன் முதலில் ஆனைமலை என்னுமிடத்தில் அகழ்வாய்வு செய்யப்பட்டது என்றும், அதனைத் தொடர்ந்து பல்லவமேடு, வசவசமுத்திரம், கொற்கை, கரூர் கோவலன் பொட்டல் கங்கைகொண்ட சோழபுரம், பழையாறை ஆகிய இடங்களில் அகழ்வாய்வு நடைபெற்றுள்ளது.

''பல்லவர்களின் தலைநகரமான காஞ்சிபுரத்தின் ஒரு பகுதியான பல்லவமேட்டில் அகழ்வாய்வு செய்தபோது சோழர் காலத்திய தரைப்பகுதி கண்டுபிடிக்கப்பட்டது; பல்லவர் காலத்திய சான்றுகள் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை.

''பின்னர் திருநெல்வேலி மாவட்டம் கொற்கையில் இத்துறையால் அகழ்வாய்வு செய்யப்பட்டது. கொற்கை சங்க காலத்தின் இரண்டாம் தலைநகரமாகவும் துறைமுகப்பட்டினமாகவும் விளங்கியிருக்கிறது என்பது சங்க இலக்கியங்களின் வாயிலாகப் புலப்படுகிறது. ஆதலால் அவ்விடத்தை அகழ்ந்து பார்த்தபோது அங்குப் பிற்காலச்சோழர் காலத்திய கட்டடப் பகுதிகளும், கழிவு நீர் செல்வதற்கான வடிநீர் ஜாடிகளும் மற்றும் குவியல் குவியலாக முத்துச் சிப்பிகளும் முழு அளவிலான சங்குகளும் கண்டறியப்பட்டன. இங்கு நடைபெற்ற அகழ்வாய்வில் ரோமானியர்கள் பயன்படுத்திய பானை ஓடுகளும், தமிழ் எழுத்து

# செம்மையான செம்மறிஆடு வளர்ப்பு

டாக்டர் ந. மாரிமுத்து
டாக்டர் மீ. சுப்பராயலு
மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை.

நம் நாட்டில் மக்கட்தொகை அதிகரிப்புக்கேற்ப உணவுப் பொருட்கள் உற்பத்தியில் குறிப்பாக புரதம் உற்பத்தியில் இன்னும் தன்னிறைவு அடையவில்லை. வளரும் எல்லா நாடுகளிலும் நம்நாட்டிலும் புரதப் பற்றாக்குறை அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. தேவையைப் பூர்த்தி செய்ய இறைச்சி உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவ்வகையில் செம்மறி ஆடுகள் மிகவும் உறுதுணையாக உள்ளன.

**இறைச்சி உற்பத்தியில் இன்றைய நிலை:**

உலகிலுள்ள மொத்த செம்மறி ஆட்டின் எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பாகம் தம்நாட்டில் உள்ளன. இருப்பினும் இறைச்சி உற்பத்தி எதிர்பார்க்குமளவிற்கு அதிகரிக்கவில்லை. அமெரிக்காவில் ஒரு ஆண்டில் ஒரு நபருக்கு 82 கிலோ கிடைக்கிறது. ஆனால் இந்தியாவில் ஒரு நபருக்கு 1.50 கிலோ மட்டும் கிடைக்கிறது. தேக ஆரோக்கியத்திற்கு அன்றாடம் சுமார் 70 கிராம் இறைச்சி தேவைப்படுகிறது. இதிலிருந்து நம்நாட்டில் இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பதன் முக்கியத்துவம் தெரியவருகிறது.

பண்டைக் காலத்திலிருந்து செம்மறி ஆடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. பழைய பராமரிப்பு முறைகளையே கையாண்டு வருவதால் மேலும் அபிவிருத்தி யடையாமலிருக்கின்றன. எனவே செம்மறி ஆடு வளர்ப்பில் புதிய யுக்திகளைக்கடைப்பிடித்து இறைச்சி உற்பத்தித் திறனை அதிகரிப்பது அவசியம்.

சினைக்கு வரும் பெட்டை ஆடுகளை விரட்டிக் கொண்டிருப்பதால் கிடா தானும் சரிவர மேயாமலிருப்பதோடு பெட்டை ஆடுகளையும் சரிவர மேயவிடுவதில்லை. இதனால் அரைப்பட்டினி என்ற நிலை ஏற்படுகிறது. இந்நிலையை நீக்க மந்தையிலிருந்து பிரித்து, தொழுவத்தில் கட்டி வைத்துப் பராமரித்து, ஆடுகள் மேய்ச்சலிலிருந்து மாலையில் திரும்பியதிலிருந்து மறுநாள் காலை மேய்வதற்கு ஓட்டிச்செல்லும் வரை கிடாவை மந்தையில் சுமார் 12-14 மணிவரை இனப்பெருக்கத்திற்கு விடுவது நல்லது. இதனால் அதிக எண்ணிக்கையில் வளமான குட்டிகள் பிறக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

இளவயதிலேயே கிடாக்குட்டிகள் இதர ஆடுகளில் தொத்துவதைக் காணலாம். இதனால் தீவனம் தின்னாமல் வளர்ச்சித் திறன் குறைந்து காணப்படும். இதனால் விற்பனைக் காலத்தில் எதிர்பார்க்கும்எடை இல்லாதிருப்பதால் அதிக விலைக்கு விற்க முடிவதில்லை. எனவே மூன்று மாதத்தில் விற்பதற்கென்றுள்ள எல்லாக் கிடாக்குட்டிகளையும் ஆண்மை நீக்கம் (Castration) செய்வது அவசியம்.

செம்மறி ஆட்டு மந்தையின் பொருளாதார முன்னேற்றம் மந்தையில் அதிகமாக உள்ள குட்டிகளை விற்பனை செய்வதின்மூலம் உண்டாகிறது. எனவே விற்பனை செய்ய எண்ணியுள்ள எல்லா குட்டிகளையும் பால் குடி மறந்தவுடன் ஊட்டச்சத்துள்ள சரிவிகித கலப்புத் தீவனம் எடைக்கேற்றவாறு கொடுத்து வளர்த்தால் விரைவில் கூடுதல் வளர்ச்சி அடைந்து எடை அதிகரித்து விற்கும் சமயம் அதிக லாபத்திற்கு விற்க ஆடு வளர்ப்பில் லாபம் ஈட்டித்தர வழி உண்டாகிறது.

நம் நாட்டில் காணும் இறைச்சி இன ஆடுகளில் சராசரியாக ஆண் ஆட்டின் எடை 35-40 கிலோவும் பெட்டை ஆடு 20-30 கிலோவும் கொண்டதாக உள்ளன. அயல் நாட்டு இறைச்சி இனமான ''டார்செட்'', ''சஃப்டோக்'' போன்ற ஆடுகளின் சராசரியாக ஆண் எடை 70-80 கிலோவும் பெட்டை ஆட்டின் எடை 60-70 கிலோவும் உள்ளன. எனவே நம்நாட்டு இறைச்சி இன ஆடுகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, கலப்பின வளர்ச்சி செய்வது அவசியம்.



ஆடுகள் கண்ட இடங்களில் கிடைத்த நீரைப் பருகுவதன் மூலம் குடல் புழுக்களின் முட்டைகள் உடலின் உட்சென்று குடல் மற்றும் இதர உறுப்புகளில் தங்கி, உட்கொள்ளும் உணவை உறிஞ்சி வாழ்வதால் எண்ணிக்கையில் அதிகரித்து இரத்தசோகை, தாடை வீக்கம், வளர்ச்சி குன்றுதல், இரத்தக் கழிச்சல் ஆகிய குணங்கள் காணப்படும். இதனால் வளர்ச்சி குன்றி எடை குறைவதால் இனவிருத்தியில் தாமதம் ஏற்படுவதோடு பாதிக்கப்பட்ட ஆடுகள் இறக்கவும் நேரிடும். இதனால் ஆட்டுப் பண்ணையின் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது.

**தீவன மர இலைகளைப் பயன்படுத்துதல்:**

வறட்சிப் பகுதியில் குறிப்பாக கோடைக்காலங்களில் ஆடுகளுக்குத் தேவையான பசுந்தீவனம் கிடைப்பதில்லை. இதனால் வளர்ச்சி குன்றிக் காணப்படும். பசுந்தீவனம் இல்லாமலிருப்பதால் நுண்ணூட்டச் சத்துக்கள் கிடைக்காமல் சினைப்பிடிப்பதில் பிரச்சனைகள் ஏற்படும். குட்டி பிறப்பதில் நீண்ட கால இடைவெளி (Inter lambing period) அதிகரிப்பதால் பண்ணையின் பொருளாதாரம் பாதிக்கிறது. இத்தகைய நிலையைத் தவிர்க்க இப்பகுதியில் வளரக்கூடிய தீவன மரங்களைப் பயிரிடுவது அவசியம். இவ்வகையில் சூபாபுல், வேலி மசால், வேம்பு, வேலா, அகத்தி, ஆல், ஆயா, வாகை, மல்பெரி, சிசம், பிலா, மூங்கில், இச்சி, பூவரசு போன்ற தீவன மரங்களை வளர்த்து எல்லாப் பருவக் காலங்களிலும் பசுந்தீவனம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

மேலே குறிப்பிட்ட புதிய உக்திகளை செம்மறி ஆடு வளர்ப்பில் கடைப்பிடித்து விஞ்ஞான ரீதியில்ஆடுகளைப்பராமரிப்பதன் மூலம் இத்தொழிலில் சுயவேலை வாய்ப்பும் கூடுதல் வருவாயும் ஆடுவளர்ப்பவர்களுக்கு கிடைப்பதோடு நாட்டின் இறைச்சி உற்பத்தியில் தன்னிறைவு காணவும் வழி ஏற்படுகிறது.





# சாணஎரிவாயு சரித்திரம் படைக்கிறது

மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் இருபது அம்சத் திட்டத்தின் பன்னிரண்டாம் அம்சமாக விளங்குவது, ''சாண எரிவாயு போன்ற மாற்று எரிபொருள் மூலங்களை வளர்க்கும்'' திட்டம் ஆகும்.

பழமையிலும், பழக்க வழக்கங்களிலும் ஊறிப்போன கிராம மக்கள் அறிவியலின் புதுமைகளையும், கண்டுபிடிப்புகளையும் எளிதில் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற கூற்றை இத்திட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழகக் கிராம மக்கள் பொய்யாக்கிவிட்டார்கள்.

1982-83ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சாண எரிவாயுக் கலன்களில் இங்கு ஒரு சாண எரிவாயுக் கலனைக் குறிப்பிட்டுக் கூறல் அவசியமாகிறது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வேப்பம்பட்டு கிராமத்தில் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த திரு. கருணாகரன் என்பவர் வசித்து வருகிறார். இவரது தந்தையார் திரு. அண்ணாமலை ஒரு முன்னாள் இராணுவ வீரர். அறிவியல் கருத்துக்களை ஆர்வமுடன் ஏற்கும் அறிவொளி வாய்ந்த குடும்பத்தில் இவர் வாழ்க்கை நடத்தும் குடும்பத் தலைவராகவும் அதே கிராமத்தில் நிதியுதவிப் பள்ளியில் உதவி ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறார்.

இவர் தம் குடும்ப அங்கத்தினர்கள் எண்மர் ஆவர். ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களும், நெடுங்குணம் தொகுதி நிர்வாக அலுவலரும், ஊர்நல அலுவலருமான திரு டி. லட்சுமிநாராயணன் ஆகிய இருவரும் இவ்வாசிரியரை அணுகி உரையாடினார்கள். உரையாடல் பயனுள்ளதாயிற்று. நாட்டு நடைமுறை நலத்திட்டங்களை ஆய்ந்தனர். அத்திட்டங்களுள் சாண எரிவாயுத் திட்டம் முக்கிய அங்கம் வகித்தது. முடிவில் இவ்வாசிரியர் தம்மிடம் ஏழு உழவு மாடுகள், இரண்டு கறவை மாடுகள் ஆகியவை உள்ளதாகவும், இத்திட்டம் தமக்குச் சாலச்சிறந்தது எனவும் உரைத்த அவர் ஊக்கமுடன் செயலாற்றினார். மொத்தம் நான்கு தவணைகளில் ரூ.6000 கடனாக, சேத்துப்பட்டு யூனியன் வங்கி மூலம் வழங்கப்பட்டது. இதில் மானியத் தொகை ரூ. 2340. 26.1 83ல் ஆரம்பித்த கலன் கட்டும் பணியை இவர் 15.3.83ல் முடித்துச் சாதனை புரிந்தார். தன் பணிகளுக்கு ஏற்றவாறு தவணை முறையில்தமக்குக்கடன் தொகை சரியாக வழங்கப்பட்டது குறித்தும் பெருமிதம் அடைந்தார் இவர்.

''எண்ணித்துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு'' எனும் நீந்தமிழ்த் திருக்குறளுக்கேற்ப எண்ணித் துணிந்து மேற்கொண்ட செயலால் இனிதே எளிதே கலன்முடிக்கப்பட்டு இன்று அதை அனுபவித்துக் கொண்டிருப்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கிறார் இவர். தமது கடன் தொகையில் செலுத்த வேண்டிய தவணைத் தொகையைச் சரியாகச் செலுத்தி வருகிறார். இவர் தம் துணைவியாரும், புதல்வர்களும் அறிவியல் அனுகூலத்தை உணர்ந்து இத்திட்டத்தின் பயனை எண்ணி வியப்படைகிறார்கள். ''ஒரு மாதத்திற்கு 10 குண்டு விறகும் 20 லிட்டர் மண்ணெண்ணெயும் கலன் அமைக்கும் முன்பு தேவைப்பட்டது. தற்போது இத்தேவைக்கே இடமில்லை'' என்று கூறி தமது பொருளாதாரப் பயனைப் பகுத்துணர்கிறார்.

மேலும் இவர் அரசு தனக்கு அளித்த அதிகபட்ச மானியத் தொகையை நன்றியுடன் நினைவுகூர்கிறார். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இவர், தான் செய்துள்ள இச்செயல் இக்கிராமத்தில், ஆசிரியர் சமுதாயத்தை இப்பணியில் ஈடுபடுத்த உறுதுணையாகவும், தூண்டுதலாகவும் இருக்கப்போகிறது என அறுதியிட்டுக் கூறியது பாராட்டத்தக்கது.



பழையாறை அகழ்வாய்வில் கண்டு எடுக்கப்பட்ட சுடுமண் விளக்கு மற்றும் கூரை ஓடுகள்.

பொறித்த பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டன. ஒரு குழியில் பழைய காலத்து அடுப்பில் கரி இருப்பது கண்டெடுக்கப்பட்டு, அந்தக் கரியை மிகவும் பக்குவமாக எடுத்து பாலிதீன் பையில் வைத்து டாட்டா இன்ஸ்டிடியூட் ஆப் பண்டமெண்டல் ரிசேர்ச் (Tata Institute of Fundamental Research)க்கு அனுப்பி ஆய்வு செய்து பார்த்தபோது அதனுடைய காலம் கி.மு. 785 என்று அறியப்பட்டது. ஆதலால் கி.மு.8-ம் நூற்றாண்டிலிருந்தே கொற்கையில் மக்கள் வாழ்ந்திருக்கின்றனர் என்பது இதன் மூலம் தெரிய வருகிறது. மேலும் மௌரிய காலத்துப் பானை ஓடு ஒன்று கொற்கை அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டது. இதன் மூலம் மௌரியர் காலத்தில் தமிழகத்திற்கும், மௌரியருக்கும் தொடர்பு இருந்தது என்பது அறிய முடிந்தது.

''அதற்கு அடுத்து சேரர்களின் தலைநகரம் இதுதான் என்று ஒரு சிலரால் குறிப்பிடப்படும் திருச்சி மாவட்டம் கரூரில் அகழ்வாய்வு செய்யப்பட்டது. அவ்வாய்வில் வெள்ளியால் செய்யப்பட்ட ரோமானியக் காசு ஒன்றும் ரோமானியர்கள் பயன்படுத்திய பானை ஓடுகளும், தமிழில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும், பிற்காலத்திய கட்டடப் பகுதியும், கட்டடத்திற்கு அருகிலே கழிவுநீர் செல்வதற்கான அமைப்பும் இருப்பது கண்டறியப்பட்டன. கரூர் சிறந்த வணிகத் தலமாக இருந்தது என்பதற்குச் சான்றாக, கரூருக்கு அருகில் உள்ள புகழூரில் காணப்படும் கல்வெட்டு ஒன்றில் 'கரூர் பொன் வணிகன்' என்று குறிப்பிடப்படுகிறது. மேலும் கரூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏராளமான ரோமானிய காலத்துக் காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஆதலால் கரூர் ஒரு சிறந்த நகரமாக விளங்கியிருக்க வேண்டும் என்பது மேற்கூறப்பட்ட அகழ்வாய்வின் ஆதாரங்களாலும், கல்வெட்டு ஆதாரங்களாலும் தெரிய வருகிறது.

''திருச்சி மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்தில் இத்துறை தொடர்ந்து நான்கு ஆண்டுகள் அகழ்வாய்வு செய்தது. கங்கைகொண்டசோழபுரத்தை அடுத்துள்ள மாளிகை மேடு என்ற பகுதியில் அகழ்வாய்வு குழி தோண்டப்பட்டு அங்கு மாமன்னன் இராசேந்

கல்வெட்டு கூறும்

''கல்வெட்டுகளில் காணப்படும் செய்திகள் எல்லாம் வெறும் கற்பனைச் செய்திகள் அல்ல; பயனற்ற செய்திகளுமல்ல. அவை அனைத்தும் நம் முன்னோர்களுடைய உண்மை வரலாறுகளையுணர்த்தும் பழைய வெளியீடுகளே. சேர, சோழ, பாண்டியராகிய முடியுடைத் தமிழ் வேந்தரும், பல்லவரும், குறுநில மன்னரும், பிற தலைவர்களும் செய்த அறச் செயல்களும், வீரச் செயல்களும், அன்னோர் செய்துகொண்ட உடன்படிக்கைகளும், அக்கால அரசியல் முறைகளும், போர் நிகழ்ச்சிகளும், பழைய தலைவர்களைப் பற்றிய செய்திகளும் மண்டலம்—வளநாடு—கோட்டம்—நாடு—கூற்றம் என்பவற்றின் வரலாறுகளும், பல ஊர்களின் உண்மைப் பெயர்களும், முற்கால வழக்கங்களும் சமநிலையும், மற்றும் பல அரிய நிகழ்ச்சிகளும் நம் நாட்டுக் கல்வெட்டுக்களாலும் செப்பேடுகளாலும் நன்கு அறியக் கிடக்கின்றன. சுருங்கச் சொல்லுமிடத்து நமது நாட்டின் பழைய சரிதங்களை உள்ளவாறு உணர்ந்து கொள்வதற்குத் தக்க கருவியாயிருப்பன கல்வெட்டுகளும் செப்பேடுகளுமேயாம்.

—டி.வி. சதாசிவபண்டாரத்தார்



## சாசனங்கள் சில தகவல்கள்

கல்வெட்டுகள் சாசனங்கள் என்றும் வழங்கப்பட்டன. தங்கம், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களிலும் சாசனங்கள் பொறிக்கப்பட்டன. இவைதான் சாசனம், இலக்கிய சாசனம் வரலாற்றுச் சாசனம் சமய சாசனம், வாழ்க்கைச் சாசனம், அரசியல் சாசனம், போலிச் சாசனம் என ஏழு வகைப்படும்.

ஒவ்வொரு சாசனமும் மங்கலமொழி, சாசனம் தோன்றிய காலம், செய்திகள், கையெழுத்துகள், காப்புநிலை என்னும் ஐந்து பகுதிகள் பெற்று விளங்கும்.

சாசனம் தோன்றிய காலம் என்னும் பகுதியில் மன்னனின் ஆட்சி ஆண்டு, நாள், திங்கள், பட்சம், திதி, கிழமை, நட்சத்திரம் ஆகியவையும் குறிக்கப்படுவதுண்டு.

திரன் கட்டிய மாளிகைப் பகுதியின் அடித்தளங்கள் கண்டறியப்பட்டன.

இந்த மாளிகைச் சுவர் செங்கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. இதன் சுவர்கள் 1மீட்டர் அகலம் உடையதாகக் காணப்படுகிறது. தரைப் பகுதியில் இருந்து சுமார் 2 மீட்டர் அளவுக்குக் கடைகால் அமைக்கப்பட்டிருக்கிறது. சுவர்களில் குறிப்பிட்ட இடைவெளியில் சதுரமான கருங்கற்கள் காணப்படுகின்றன. கருங்கற்களின் நடுவில் சிறு துவாரம் காணப்படுகிறது. இந்தக் கருங்கல்லின் மீது தூண் அமைக்கப்பட்டு அந்தத் தூண் கூரையைத் தாங்கும் நிலையில் அமைக்கப்பட்டு இருக்க வேண்டும்என்று கருதப்படுகிறது. அத்தகைய ஒரு தூண் மிகவும் சிதைந்து போன நிலையில் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அவ்வகழ்வாய்வில் சீன நாட்டுப் பானை ஓடுகளும், விலையுயர்ந்த கல்லாலான மணிகளும், இரும்பு ஆணிகளும், தந்தம், எலும்பு ஆகியவற்றால் செய்யப்பட்ட கலைப் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன.

ஆதலால் இந்தக் கட்டடம் கங்கை வரை சென்று வெற்றி பெற்று கங்கை கொண்டசோழன் என்று பெயர் பெற்ற முதலாம் இராசேந்திரனால் எடுப்பிக்கப்பட்டது என்பது உறுதியாகிறது.

1983 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் பழையாறையில் அகழ்வாய்வு செய்யப்பட்டது. பழையாறை பிற்காலச் சோழர்களின் தலைநகரமாக இருந்தது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதலே பழையாறை ஒரு சிறந்த தலமாக இருந்தது என்பது அப்பர் பாடலால் தெரிய வருகிறது. பழையாறையில் அகழ்வாய்வு செய்த பிறகு சோழர் காலத்தின் கட்டடப் பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் சோழர் காலத்து மண்ணால் ஆன விளக்குகளும், காதணிகளும் மற்றும் கண்ணாடி வளையல்களும் கண்டெடுக்கப்பட்டன. பழையாறையில் மேலும் தொடர்ந்து அகழ்வாய்வு செய்யத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை திட்டமிட்டுள்ளது.

''மேற்கூறப்பெற்ற அகழ்வாய்வுகளினால் தமிழகத்தில் மக்கள் கி.மு. 8-ஆம் நூற்றாண்டிலிருந்தே நாகரிகத்தோடு வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும், மௌரியர்களோடு தொடர்பு வைத்திருந்தனர் என்பதும், கட்டடக் கலையிலே சிறந்து விளங்கினார்கள் என்பதும், மிகஉயர்ந்த கல்லால் ஆன அணிகலன்கள் அணிந்திருந்தனர் என்பதும், கி.மு. 3, 2-ஆம் நூற்றாண்டிலிருந்தே. தமிழி எழுத்து தமிழர்களால் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது என்பதும் தெரிய வருகிறது.

தமிழகத்தில் சங்க காலத்தைச் சார்ந்த எந்த இடத்தை அகழ்வாய்வு செய்தாலும் அங்கெல்லாம் 'தமிழி' எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் நிரம்பக் கிடைக்கின்றன. அப்படியென்றால் 'தமிழி' எழுத்து சாதாரண பொது மக்களுக்கும் விளங்கக்கூடியதாக இருந்திருக்க வேண்டும். அப்படியிருக்கையில் இவ்வெழுத்து எந்தக் காலம் தொட்டுத் தமிழகத்தில் பயன்படுத்தப்பட்டு இருக்க வேண்டும் என்பது அறிஞர்களால் ஆராயப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது.''

இறுதியாக, சென்னை அரும் பொருட் காட்சியக இயக்குநர் திரு. ஹரிநாராயணா நன்றி கூறினார்.



பொறையாம்பட்டி மேற்பரப்பு கள ஆய்வில் கண்டு எடுக்கப்பட்ட சுடுமண் பொம்மைகள்.

# குழந்தை பேறா ஆண்டு

தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறையைச் சார்ந்த ஊர்தி ஓட்டுநர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்தையும் பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டு, (புதுமணம் செய்தோர் தவிர) 1985 ஆம் ஆண்டை ஏற்கனவே குழந்தை பேறா ஆண்டாகக் கொண்டாடும் வகையில் மாவட்ட வாரியாக நடைபெற்ற கூட்டங்களின் மூலமாகவும், மாநில சங்கத்தில் நடைபெற்ற கூட்டங்களின் மூலமாகவும் உறுதிமொழி எடுத்துள்ளதை நினைவுறுத்தி, மேற்படி திட்டத்தை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அதன் மூலம் குடும்பநலத்தைக் காத்துக் கொள்ள வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசுத்துறை ஊர்தி ஓட்டுநர்கள் தலைமைச் சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு சி. சுப்பிரமணியன், பொதுச் செயலாளர் திரு பெ. கி. ராமசாமி ஆகியோர் வேண்டிக் கொண்டுள்ளனர்.

"சாண எரிவாயுக் கலன்களின் மூலம் சமைக்கும் பணி எளிதாக இருக்கிறது. நெடுங்காலம் இன்னல் தந்து வந்த புகை மண்டலமின்றி மகிழ்வுடன் சமைக்கும் நிலை எய்தியது குறித்து மகிழ்கிறேன்" என ஆசிரியரின் இல்லத்தரசி இத்திட்டத்தைப் பற்றிக் கூறிப் பெருமைப் படுகிறார்.

சாண எரிவாயுக் கலன்கள் சமையலுக்குப் பேருதவி புரிவது மட்டுமல்லாமல் வாயு விளக்கு ஏற்றவும், வயல் வெளிகளுக்கு நீரிறைக்கவும் மோட்டார் இயந்திரத்தை இயக்கவும் பேருதவி புரியும் பாங்கினைப் பாமர மக்களுக்குப் பலவழிகளிலும் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

**ஒன்னுபுரம் திரு பி.ஆர். குமாரசாமி சொல்கிறார்:**

நான் மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஒன்னுபுரம் கிராமத்தில் வசிக்கும் குறு விவசாயி. என்னிடம் 8 மாடுகள் உள்ளன. என்னை எங்கள்பகுதி ஊர்நல அலுவலர் அணுகி சாண எரிவாயு கலன் அமைத்தால் ஏற்படும் நன்மைகள் பற்றி விளக்கமாகச் சொன்னார். இக்கலன் அமைக்க வங்கி மூலம் கடன் வழங்கப்படுவது குறித்தும் தெரிவித்தார். அரசு மானியம் பெறுவதற்கும் கலனை அமைப்பதற்கும் ஆணையாளர் அவர்களுக்கு மனுச் செய்யும்படி சொன்னார்.

நானும் வானொலியில் சாண எரிவாயு பற்றிய விளக்கங்களைக் கேட்டிருந்தேன். இக்கலன் அமைக்க விரும்பினேன். சாண எரிவாயு 4 க. மீட்டர் அளவில் அமைக்க விண்ணப்பபாரத்தை ஆணையாளருக்கு அனுப்பி வைத்தேன். அதில் என் குடும்ப நபர்களின் எண்ணிக்கை, மாடுகளின் எண்ணிக்கை, இடவசதி ஆகியவை பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டேன். இக்கலன் அமைக்கக்கடன் கோரியும் மனுச் செய்தேன்.

ஆணையாளரின் பரிந்துரைக் கடிதத்தின்படி வேலூர் மத்திய கூட்டுறவு வங்கிக் கிளையின் மூலம் ரூபாய் 4,000 கடன் பெற்று, கலன் அமைத்தேன்.

இக்கலம் அமைக்குமுன் நான் விறகு அடுப்பை உபயோகிக்கும் போது, புகையும், கரியும் படிந்து சமையல் அறையும் பாத்திரங்களும் மிகவும் அழுக்கடைந்து காணப்படும். இக்கலன் அமைத்து இவ்வடுப்பை உபயோகிக்க ஆரம்பித்த பின் சமையல் அறை மிகவும் சுத்தமாகவும் புகை, கரி பிடிக்காமலும் உள்ளது. பாத்திரங்கள் கரி பிடிக்காமல் இருப்பதால் அவைகளைச் சுத்தம் செய்ய அதிக நேரம் ஆவதில்லை. பாத்திரங்கள் எப்போதும் புதுப் பொலிவுடனும் இருக்கின்றன.

மேலும் இவ்வடுப்பு அதிக உஷ்ணம் கொடுப்பதால் குறைந்த நேரத்தில் சமையல் முடித்து வேறு வேலைகளைச் செய்யப் போதுமான நேரம் கிடைக்கிறது. புகையில்லாமல் அதிக உஷ்ணம் கொடுப்பதால் பெண்கள் இவ்வடுப்பை உபயோகிக்க ஆர்வம் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். இதில் உண்டாகும் வாயுவின் (கேஸ்) அழுத்தம் முழுதும் வெளியில் இருக்கும் கொள்கலனிலேயே இருப்பதால் வெடிக்கும் அபாயம் எதுவும் இல்லை. இதில் உண்டாகும் மீதேன் வாயு வெளிக் காற்றில் கலக்கும் போது சக்தி இழந்து விடுவதால் எளிதில் தீப்பிடிக்கும் அபாயம் இல்லை. இவ்வடுப்பை இயக்குவதும் எளிது. இதைப் படிப்பறிவு இல்லாத கிராமத்துப் பெண்களும் எளிதில் உபயோகிக்கலாம்.

இக்கலன் குளிர்காலங்களிலும், மழைக்காலங்களிலும் நன்கு வேலை செய்கிறது. எரிபொருள் பற்றாக்குறை நாட்களில் வரும் மண்ணெண்ணெய், கேஸ், விறகு போன்ற கட்டுப்பாடுகள் இவ்வடுப்பில் இல்லை.

இக்கலனில் இடும் சாணம் நன்றாக அழுத்தப்படுவதால் வெளியில் வருவதில் கலந்திருக்கும் புல், விதைகள் மற்றும் தானியக் கழிவுகளும் முளைப்புத் திறன் இழந்து விடுவதால் இக்கழிவை நிலத்திற்கு இடும்போது களைகள் முளைப்பதில்லை. மேலும் அதிகச் சத்துள்ள எருவாகவும் பயன் அளிக்கிறது.

இக்கலன் அமைத்த பின்னர் பராமரிப்புச் செலவு எதுவும் கிடையாது. இக்கலனை நான் எங்கள் கிராமத்தில் அமைக்கும் போது இதில் ஆர்வமில்லாதவரும் நான் பயனடைவதைக் கண்டு, பின்னர் தாமும் அமைக்க முன் வந்தனர். 10 பேர் அமைத்து விட்டனர்.

இதனை ஒவ்வொரு விவசாயி, மாடுகள் வைத்துள்ளவர்கள், மற்றும் அனைத்துத் தரப்பினரும், அமைத்துப் பயன்படுத்தினால் திருமதி இந்திரா காந்தியின் 20 அம்சத் திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டு நாட்டின் எரிபொருள் பற்றாக்குறை பெரும் பகுதி நீங்கும். மேலும் விறகுக்காக மரங்கள் வெட்டப்படுவது குறைவதால் மழை பெய்யவும் வழிவகுக்கும். 'வீட்டுக்கு ஒரு கலன் அமைப்போம்' என்றமுடிவு எடுத்துப் பயன் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



# மகத்தான பொதுத் தேர்தல்

மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள் டிசம்பர் 1-ந் தேதியில் இருந்து 25ந் தேதிவரை இடைவெளி இல்லாமல் இந்தியா முழுவதும் சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்து தேர்தல் பிரசாரம் செய்தார்.

அவர் மொத்தம் 291 மணி நேரம் சுற்றுப் பயணம் செய்திருக்கிறார். இதில் 153 மணி நேரம் பொதுக் கூட்டங்களிலும், சாலையில் கூடிய மக்கள் மத்தியிலும் பேசியிருக்கிறார்.

கடந்த 3 வாரங்களில் அவர் தூங்குவதற்கும், அலுவலகக் கோப்புகளைப் பார்ப்பதற்கும் 144 மணி நேரமே செலவிட்டுள்ளார். ஒவ்வொரு நாளும் நள்ளிரவுக்குப் பிறகே தூங்கச் சென்ற அவர், 3 மணி முதல் 4 மணி நேரம்தான் தூக்கத்திற்காகச் செலவிட்டுள்ளார். மற்ற நேரமெல்லாம் அவர் சுற்றுப் பயணத்திலேயே இருந்திருக்கிறார்.

மொத்தம் அவர் 2½ கோடி மக்களிடையே பேசியிருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. இது தவிர சாலை ஓரங்களில் நின்று வரவேற்றவர்களின் எண்ணிக்கை 1 கோடி இருக்கும்.

விமானத்தில் 25 ஆயிரம் கிலோ மீட்டர் தூரமும், ஹெலிகாப்டரில் 17 ஆயிரம் கிலோமீட்டர் தூரமும், காரில் 5 ஆயிரம் கிலோ மீட்டர் தூரமும் மொத்தம் 47 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்திருக்கிறார்.

பிரதமர் போன்ற முக்கிய பிரமுகர்கள் மாலை 4.30 மணிக்குமேல் ஹெலிகாப்டரில் போகக்கூடாது என்பதால், அதன் பிறகு அவர் நள்ளிரவு வரை காரில் சென்று பிரசாரம் செய்தார்.

மொத்தம் 248 நாடாளுமன்றத் தொகுதிகளில், 350 பொதுக்கூட்டங்களில் அவர் பேசி இருக்கிறார்.

## இந்திரா–எம்.ஜி.ஆர் படம் இல்லையே!

திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள கஞ்சநாயக்கன்பட்டி வாக்குச் சாவடிக்கு வயதான பெரியவர் ஒருவர் வாக்குப் போட வந்தார். தன் கை ரேகையை வாக்குச் சீட்டுப் புத்தகத்தில் பதித்து வாக்குச் சீட்டுகளை வாங்கிக் கொண்டு முத்திரை குத்தச் சென்றார். அந்த வாக்குச் சீட்டுகளில் சின்னங்கள் இருப்பதைப் பார்த்து அவர் குழம்பினார்.

உடனே தேர்தல் அலுவலரிடம் சென்று, "இதில் எம். ஜி. ஆர். படம் இல்லையே, நான் எப்படி ஓட்டுப் போடுவது?" என்று கேட்டார். உடனே தேர்தல் அலுவலர் இதில் படம் எதுவும் இருக்காது. இதில் உள்ள ஏதாவது ஒரு சின்னத்தில் முத்திரை குத்துங்கள்" என்று கூறினார்.

இதேபோல நாடாளுமன்ற வேட்பாளருக்கான வாக்குச் சீட்டில் ஒரு பெண், "இந்திரா காந்தி படம் இல்லையே" என்று கேட்டார். அவருக்கும் தேர்தல் அலுவலர் இதே பதில் கூறினார்.

அமேதி நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் அந்த வெற்றியில் ஒரு சாதனை படைத்துள்ளார்.

அவர் 3,14,878 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

## 200ல் 180 பேர் 'டெபாசிட்' இழப்பு

அரியானாவில் போட்டியிட்ட 200 வேட்பாளர்களில் 180 பேர் 'டெபாசிட்'டை இழந்தனர். டி.எம்.கே.பி, பாரதீய ஜனதா, ஜனதா, ஜெ. காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் நிறுத்திய 23 வேட்பாளர்களில் 10 பேர் மட்டுமே டெபாசிட்டைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்தது. போட்டியிட்ட 10 பெண்களும் 'டெபாசிட்' இழந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

### அதிகரித்து வரும் செல்லுபடியாகாத வாக்குகள்

அறியாமையால் இல்லாவிட்டாலும்கூட அலட்சியத்தின் காரணமாகச் செல்லுபடியாகாத வாக்குகளின் எண்ணிக்கை அண்மையில் தேர்தலில் மிக அதிகமாகியுள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் இது தெரியவந்துள்ளது.

1980 நாடாளுமன்றத் தேர்தலில் 78 ஆயிரமாகவும், 1982 சட்டமன்றத் தேர்தலில் 74 ஆயிரமாகவும் செல்லுபடியாகாத வாக்குகள் இருந்தன. ஆனால் தற்சமய நாடாளுமன்றத் தேர்தலில் கேரளத்தில் மட்டும் 1 லட்சத்து 16 ஆயிரத்து 900 வாக்குகள் செல்லுபடியாகவில்லை. அதாவது ஒரு வேட்பாளர் தனது 'டெபாசிட்டை' இழக்காமல் இருப்பதற்கு இது போதுமானது.

### 32 ஆண்டுகளாகத் தொடர்ந்து எம்.பி. பதவி:

இப்போதைய நாடாளுமன்றத் தேர்தலில் பீகார் மாநில சசாராம் தொகுதியில் வென்றுள்ள முன்னாள் துணைப் பிரதமரும், முதுபெரும் தலைவருமான திரு ஜெகஜீவன்ராம் இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் தனி இடத்தைப் பெற்றவராக விளங்குகிறார்.

இந்திய அரசியல் சட்டம் அமலுக்கு வந்த பிறகு முதல் தடவையாக நாட்டில் வயது வந்தோர் ஓட்டுரிமை அடிப்படையில் 1952ல் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வென்றவரான திரு ஜெகஜீவன்ராம், அதன் பிறகு ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் வென்று இப்போது எட்டாவது முறையாக நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அடுத்தடுத்து எட்டுப் பொதுத் தேர்தலிலும் வென்று 1952லிருந்து தொடர்ந்து எம்.பி.யாக உள்ள தலைவர் அநேகமாக திரு ஜெகஜீவன்ராம் ஒருவராகத்தான் இருப்பார்.

1952ல் முதலாவது நாடாளுமன்றம் ஏற்படுவதற்கு முன்னர் மத்திய சட்டமன்றம் இருந்தது. திரு ஜெகஜீவன்ராம் 1945-ஆம் ஆண்டிலிருந்து அந்த மன்றத்திலும் உறுப்பினராக இருந்தார். அந்த வகையில் பார்த்தால் திரு ஜெகஜீவன்ராம் 39 ஆண்டுகளாக முதலில் மத்திய சட்டசபையிலும், பின்னர் நாடாளுமன்றத்திலும் தொடர்ந்து உறுப்பினராக இருந்து வருகிறார்.

### வாக்குறுதியைக் காப்பாற்றிய எம்.எல்.ஏ.

தேர்தல் முடிவுபற்றிப் பந்தயம்கட்டியிருந்த ஒரு கேரள எம்.எல்.ஏ. பந்தயத்தில் தோற்றுப் போனதால் தாம் கூறியபடி தலையை மொட்டையடித்து, சந்நியாச உடைகளை அணிந்து கொண்டார். அந்த எம்.எல்.ஏ.யின் பெயர் திரு சி.ஜி. ஜனார்த்தனன்.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் தேர்தல் பிரசாரம் உச்சநிலையில் இருந்தபோது, ஆலப்புழையில் நடந்த சோஷலிச குடியரசுக் கட்சி ஊழியர்கள் கூட்டத்தில் ஒரு பந்தயம் கட்டினார்.

அதன்படி, ஆலப்புழைத் தொகுதியில் காங்கிரஸ் (இ) வேட்பாளர் திரு வைக்கம் புருசோத்தமன் வெற்றி பெற்று, கேரளத்தில் காங்கிரஸ்(இ) பாதி இடங்களுக்கு மேல் கைப்பற்றினால் தாம் தம்முடைய தலையை மொட்டையடித்து சந்நியாச உடைகளை அணிந்து கொள்வதாக அவர் கூறினார். திரு வைக்கம் புருசோத்தமன் வெற்றி பெற்றதோடு கேரளத்தில் பாதித் தொகுதிகளுக்கு மேல் காங்கிரஸ்(இ) வெற்றி பெற்றது. எனவே, ஜனார்த்தனன் தம்முடைய மகனுடன் பழனிக்குச் சென்று தலையை மொட்டை அடித்து, சந்நியாச உடைகளை அணிந்து கொண்டார்.

### நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்ட காங்கிரஸ் (இ)-அ.இ.அ.தி.மு.க. அனைவரும் வெற்றி:

தமிழ்நாட்டிலிருந்து நாடாளுமன்றத்திற்கு காங்கிரஸ்(இ) மற்றும் அ.இ.அ.தி.மு.க கட்சிகள் சார்பில் நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள் அனைவரும் வெற்றி பெற்றனர்.

காங்கிரஸ்(இ) சார்பில் போட்டியிட்ட 25 பேரும் வென்றனர். அ.இ.அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட 12 பேரும் வென்றனர். ஒரே ஒரு தொகுதியில் தி.மு.க. வெற்றி பெற்றுள்ளது.

தி.மு. கழகம் வெற்றி பெற்ற தொகுதி மத்திய சென்னையாகும். இங்கு அ.இ.அ.தி.மு.க. - காங்கிரஸ்(இ) கூட்டணியைச்சேர்ந்த காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி ஏணிச் சின்னத்தில் போட்டியிட்டது. அந்த இடத்தில்தான் தி.மு. கழகம் வெற்றிபெற்றது.

தேர்தல் ரத்தான வடசென்னை நீங்கலாக, தமிழ்நாட்டில் 38 நாடாளுமன்றத் தொகுதிகளில் தேர்தல் நடந்தது. இந்த 38 தொகுதிகளின் இறுதி முடிவுகள் வருமாறு: காங்கிரஸ்(இ)-25, அ.இ.தி.மு.க.-12, தி.மு. கழகம்-1

— செய்தித் தாள்களிலிருந்து சேகரித்தவை

### பொது வருங்கால வைப்பு நிதியில் விடுபடும் வரவுக் குறிப்புகளுக்குத் தீர்வு காண தொடர்பு அலுவலர்கள் நியமனம்

தொடர்பு அலுவலராக அரசுத் துணைச் செயலாளர்/கூடுதல் இயக்குநர் பதவித் தரத்தில் பணியாளர்களுக்கென்று பொறுப்பு வகிக்கிற முதுநிலை அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு தலைமைச் செயலக அனைத்துத் துறைத் தலைவர்களுக்கும் அரசு நிதித் துறையில் (நிதிகள்), உத்தரவு பிறப்பித்துள்ளது. பொது வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்துகிற அரசுப் பணியாளர்கள் தாங்கள் செலுத்துகிற தொகை கணக்கில் போய்ச் சேராமல் விடுபடுகிற வரவுக் குறிப்புகளுக்குத் தீர்வு கண்டு அவர்களுடைய வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை நாளது வரையில் சீர் செய்து வைத்துவர கணக்குத் துறைத் தலைவர் இவருடன் தொடர்பு கொள்ளலாம். எனவே, தங்களுடைய வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளில் சேராமல் விடுபட்ட வரவுத் தொகைக் குறிப்புகள் வரப்பெற்றதும் அரசுப் பணியாளர்கள் அனைவரும் அவரவர் துறையிலுள்ள தொடர்பு அதிகாரியுடன் தொடர்பு கொண்டு அவற்றுக்கு உடனடியாகத் தீர்வு காணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தானியல் ஜி. ரத்னாகர்
அரசுத் துணைச் செயலாளர்



## உழவர் திருநாள்
## உவகைத் திருநாள்

பொங்கல் உழவர் விழா! தமிழர் திருநாள்! நம்பவொண்ணாப் புராணக் கருத்தினை நாட்டினர் மனதிலே மூட்டிடும் மற்றைய விழாக்கள் போலன்றி, உழைப்பின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் உன்னதமான விழா!

களத்திலே காணப்பட்ட பலன், வீட்டிலே புதுப்பானையிலே, பொங்கி வழியும் நாள் பொங்கல் விழா!

செந்நெல்லும் கரும்பும் செங்கரும்பும் பச்சைக் காய்கறியும் பசும் பொன்னிறப் பண்டங்களும் வண்ணக் கோலமும், வாடா மலர்களும், மனைதோறும் குவிக்க, மக்கள் மனதிலே மகிழ்ச்சியூட்டும் நன்னாள்.

மார்பிலே சந்தனம் மணக்கும் பொன்னாள்!

கூந்தலிலே மலர்கள் மொய்க்கும் நாள்!

ஆடல், பாடல், கொட்டு முழக்கு, குதூகலம் வந்தாடும் நாள்.

பாடுபட்ட உழவன் தன் வீட்டுப் பானையில், தான் உழைத்ததில் சிறிதளவு பலனாவது சேர்வதைக் காணும் நாள்.

## தமிழர் திருநாள்

அறுவடைத் திருநாளாக — உழைப்பின் பயனை உணர்த்தும் திருநாளாக இருக்கும் பொங்கல் திருநாள், தமிழர்கள் அனைவருக்கும் பொதுவான தமிழர் திருநாள் ஆகும்.

திருநாள் என்றால் என்ன? பொருள் புரியாமல் பயன்படுத்தப்படும் பல சொற்களில் ஒன்றாகத் திருநாள் இருக்கிறது.

திருநாள் என்பது மகிழ்ச்சி தருவது 'அவருக்கென்ன, நாள் எல்லாம் திருநாள்' என்று, கஷ்டப்படுகிறவன் சொல்லக் கேட்கிறோம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? மகிழ்ச்சிப் பயனைத் தருவதுதான் திருநாள்; மகிழ்ச்சி வேண்டாம் என்று யாரும் சொல்வதில்லை!

பொங்கல் திருநாளையே தமிழர் திருநாளாக நாம் கொண்டாடி வருகிறோம்.

—பேரறிஞர் அண்ணா

## வீடியோவில் மாண்புமிகு தமிழக முதல்வர்



புரூக்ளின் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவரும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், புத்தாண்டு தினமான ஜனவரி முதல் நாளன்று, நிருபர்களைச் சந்தித்த நிகழ்ச்சியின் வீடியோ படம், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களின் அறையில், நிருபர்களுக்கு (7.1 1985ல்) இயக்கிக் காண்பிக்கப்பட்டது.

இரண்டு நிமிடங்களுக்கு மேல் ஓடும் இந்தப் படத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறையிலிருந்து நடந்து வருகிறார். இரு கரங்களையும் உயர்த்தி நிருபர்களுக்கு வணக்கம் தெரிவிக்கிறார். கூடத்தில் வந்து சோபாவில் அமர்கிறார். தமது கட்சி பெரும்பான்மை பெற்றதைத் தெரிவிக்கும் வகையில் இரு விரல்களைக் காண்பிக்கிறார். பூரித்து மகிழ்கிறார். அமர்ந்தவாறே இரு கரங்களால் வணக்கம் தெரிவிக்கிறார். பின்னர் எழுந்து செல்கிறார். மருத்துவர் ஒருவரின் கரத்தைத் தனது வலது கையால் பிடித்துக் குலுக்குகிறார். பின்னர் நடந்து அறைக்குச் சென்றுவிடுகிறார். அருகில் அவரது துணைவியார் வருகிறார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உடல் நலத்தில் பெரிதும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதையும்-அவர் தமது இயல்பான தோற்றத்தைப் பெற்றுவிட்டார் என்பதையும் வீடியோ படம் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.



# இந்தியாவிலேயே இரண்டாவது இடம் வகிக்கும்....

# 12 ஆவது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி

இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தை வகிக்கின்ற, இதயமெல்லாம் கவருகின்ற பொருட்காட்சி எது?

அதுதான் சென்னைத் தீவுத் திடலில் நடைபெறுகின்ற 12-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி!

வண்ண விளக்குகள் மின்னிட, நம் எண்ணமெல்லாம் இனிக்கின்ற பொருட்காட்சியின் தொடக்க விழாவைக் காண அறிஞர் அண்ணா கலையரங்கில் திரளான மக்கள் கூடியிருக்கிறார்கள்.

9.1.85 அன்று மாலை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு என். கோவிந்தன் இ.ஆ.ப. வரவேற்க, பொருட்காட்சி கோலாகலமாகத் தொடங்கியது.



மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''கடந்த ஆண்டு இந்தப் பொருட்காட்சியில் 294 அரங்குகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இந்த ஆண்டு 316 ஆக உயர்த்தியிருக்கிறோம். கடந்த ஆண்டு 40 லட்சம் மக்கள் பொருட்காட்சியைக் கண்டு களித்தார்கள். இந்த ஆண்டு 50 லட்சம் பேர் பொருட்காட்சியைக் காண வருவார்கள் என்று கணக்கிட்டிருக்கிறோம்.

''இந்த இடத்தில் நிரந்தரப் பொருட்காட்சி அமைத்து அதை வெவ்வேறு மாநிலத்தவரும் தமிழ்நாட்டின் இதர பகுதிகளில் உள்ளவர்களும் நாள்தோறும் பார்க்கும் அளவில் செய்ய வேண்டும் என்று புரட்சித்தலைவரின் அரசு கொள்கையளவில் முடிவெடுத்தது.





''நிதி ஒதுக்கீடு செய்வதில் தடை ஏற்பட்டிருந்தது. இப்போது இங்கு நிரந்தரப் பொருட்காட்சி அமைக்க அரசு உத்தரவு போட்டுவிட்டது. ஆண்டுக்கு 40-50 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து நிரந்தரமாக அமைக்கின்ற பணியைத் தொடங்கியிருக்கிறோம். மூன்று ஆண்டுக்காலத்தில் இங்கு நிரந்தரப் பொருட்காட்சி ஏற்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''விழா நடத்தப்படுகின்ற அறிஞர் அண்ணா கலையரங்கம் ரூ.12 லட்சம் செலவில் இன்னும் ஆறு மாத காலத்தில் நிரந்தரமாக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

4-வது ஆட்டை சொல்லும் கட்டுரை

''இந்தக் கலையரங்கில், நல்ல நாடகங்கள், நடனங்கள், கிராமியக் கலை நிகழ்ச்சிகள், இலக்கிய நிகழ்ச்சிகள் போன்றவை நடத்தப்படும். மாலை நேரத்தில் கடற்கரைக்கு வருபவர்கள் பயனுள்ள வகையில் பொழுதைக் கழிக்க இது ஏதுவாக இருக்கும்.

''உலகத்திலேயே புகழ் பெற்று விளங்கும் கன்னியாகுமரி, மாமல்லபுரம், ராமேசுவரம், ஊட்டி ஆகியவற்றைச் சுற்றுலா மையமாக ஆக்க ரூ.80 கோடியில் மிகப் பெரிய திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அது விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தை வகிக்கும் பொருட்காட்சி இது என்பதையும் கூறிக்கொள்கிறேன்.''





மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் பொருட்காட்சியைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில்—

''சுற்றுலாக்கலை ஆதி கலை. இன்றும் அது ஒரு கலையாகவே விளங்கிவருகின்றது. ஒவ்வொரு கோயிலும் சுற்றுலாத்துறை அலுவலகம்தான். ஒவ்வொரு நதியும் சுற்றுலாத்துறை பாதைதான். ஏன்? செய்தியே ஒரு சுற்றுலாதான்.

''அந்நியச் செலாவணியைத் திரட்டித் தருவதற்குச் சுற்றுலாத்துறை மிகமிக அவசியமாகிறது.''

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் அறிஞர் அண்ணா கலையரங்கைத் திறந்து வைத்துப் பேசுகையில் தெரிவித்த கருத்துக்களாவன:

''நடந்து முடிந்த தேர்தலுக்குப் பிறகு அரசு நடத்தும் முதல் நிகழ்ச்சி இது. அரும்பாடுபட்டு இந்த ஆண்டு பல சிறப்புகளைச் சேர்த்திருக்கிறார்கள். இந்தப் பொருட்காட்சி கண்ணுக்கு மட்டுமல்ல, காதுக்கும் விருந்தூட்டுவதாக-சிந்தனைக்கு விருந்தூட்டுவதாக அமைந்துள்ளது.

''சென்னை அண்ணாசதுக்கத்திலிருந்து மாமல்லபுரம் வரை கப்பல் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பல்வேறு துறைகளையும் சேர்ந்தவர்களை ஈர்க்கும் வகையில் சுற்றுலாத்துறை செயல்பட வேண்டும்.''

விழா முடிவில் கலைமாமணி வெண்ணிற ஆடை நிர்மலா குழுவினரின் ' திருவரங்கன் ஆண்ட கோதை' என்னும் நாட்டிய நாடகம் நடந்தது.

22 ஏக்கர் நிலப்பரப்பில், போர்வீரர் நினைவுச் சின்னத்திற்கு எதிரில், தீவுத்திடலில் அமைந்துள்ள அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி இந்தியா முழுவதிலிருந்தும் சுமார் 50 இலட்சம் மக்கள் பார்வையிடும் இந்திய ஒருமைப்பாட்டு விழாவாக விளங்க உள்ளது.





தமிழகமும், இந்தியா முழுவதும் சுற்றுலா மற்றும் தொழில் துறையில் பெற்றுள்ள முன்னேற்றத்தையும், சித்திரிக்கும் வண்ணம் பொருட்காட்சி உருவாகியுள்ளது.

போர் வீரர் நினைவுச் சின்னத்திற்கு எதிரே தலை வாயிலாக நம்மை வரவேற்கிறது, வண்டலூர் விலங்குக் காட்சிச்சாலையின் முகப்பு வாயில். அண்ணாசாலையில் மாமல்லபுர அருங்காட்சியக நுழைவாயில், பொருட்காட்சியின் பின்புற வாயிலாக அமைந்துள்ளது.

உலகப் புகழ் பெற்ற இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் அரங்கில் இந்தியாவில் முதல் ஏவுகணை எஸ்.எல்.வி.3 செயற்கைக்கோள், ரோகிணி செயற்கைக்கோள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

அமெரிக்காவில் உள்ள வால்ட்டிஸ்னியின் விந்தை உலகத்தைப் போல், தேசிய குழந்தைக் கல்வி வளர்ச்சிக்குழு உதவியுடன் அமைந்துள்ள ''குழந்தைகள் உல்லாச சொர்க்கம்'' எல்லாரையும் கவருகின்றது.

இந்தியக் கப்பற்படையின் காட்சி அரங்கு இந்தக் கண்காட்சியில் முதன் முதலாகப் பங்கேற்று, தமிழக மக்களுக்குத் தன் சாதனைகளை விளக்குகிறது.

இந்து சமய அறநிலையத்துறை, அருள்மிகு தண்டாயுதபாணி எழிற் கோலத்தையும் பழனி மலையின் மாட்சியுடன் இழுவைரயில் இயங்குவதையும் காட்டி அமைந்துள்ளது. ஒளி, ஒலிக்காட்சி சிறப்பிடம் பெற்றுள்ளது.

1931 முதல் இன்று வரை திரைப் படக்கலையின் வரலாற்றையும் வளர்ச்சியையும் விளக்கும் நிழற்படங்கள் நமக்கு





ஒரு சிறப்பு விருந்தாகும்.

தீயணைப்புப் படையினரின் தீரச் செயல்கள், மத்திய அரசின் நிறுவனங்களாகிய சென்னைத் துறைமுகம், தென்னக இரயில்வே, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் ஆகியவை வழக்கத்தைவிட மிகச் சிறந்த முறையில் தங்கள் அரங்குகளை அமைத்திருக்கின்றன.

மாநில, மத்திய சுற்றுலாத்துறையினர் கூட்டாக அமைக்கும் அரங்கில் இந்தியக் கலாச்சார, சமய, தேசிய ஒருமைப்பாட்டைச் சித்திரிக்கும் காட்சிகளும், பழங்குடியினரின் நாகரிகச் சிறப்புகளும், முட்டுக்காடு ஏரி முதலான இடங்களின் வளர்ச்சிக்காக அறிமுகப்படுத்தப்பட்டுவரும் நீர் விளையாட்டுக் காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

இவை மட்டுமா? நாள்தோறும் கலை நிகழ்ச்சிகள், நாய்க் கண்காட்சி, உணவுக் கண்காட்சி, தோட்டக்கலைக் கண்காட்சி ஆகியவையும் உள்ளன.

தமிழகத்தின் 16 மாவட்டங்களின் காட்சி அரங்குகள், வளரும் தமிழகத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

தென்னங்கீற்றால் பின்னப்பட்ட தஞ்சைப் பெரியகோயில் கோபுரம், மாதவிக் கலையரங்காக நம்மை மகிழ்விக்கிறது. அங்கே கிராமியக் கலை நிகழ்ச்சிகள், விகடக் கச்சேரிகள் மூலம் நமது கலாச்சார வளர்ச்சியை அறிந்திட அரிய வாய்ப்பு!

இந்தியாவின் பல்வேறு மாநிலக் கைத்தறி, மற்றும் கைவினைப் பொருட்களின் அங்காடிகள் விற்பனைக் கூடங்களாக விளங்குகின்றன.

இராட்டினங்கள், பொம்மலாட்டம், தந்திரக்காட்சிகள், மரணக்கிணறு, பாம்புப் பண்ணை இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிரந்தர உணவு விடுதியான ''ஓட்டல் தமிழ்நாடு'' நமக்குச் சுவையான உணவு வகைகளைப் பரிமாறுகிறது.

இவ்வாறு கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டும் கவின்மிகு பொருட்காட்சியாக இது விளங்குகிறது என்றால் அது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.!

—பி. வி. கிரி



“[illegible]” என்பது ஆன்றோர் வாக்கு. தமிழ்நாட்டிற்கே பெருமை தருவது நெய்தல் தொழிலாகும். [illegible] ஆண்டுகளாக, சிறுபட்டும் சிறப்புடனும் விளங்கிவந்த நெய்தல் தொழில் [illegible] நிலைக்குத் கொண்டுவரவேண்டும். கிராமங்கள் தன்னிறைவுபெற, கிராமப்புறங்களில் [illegible] பல்பெருக வேண்டும். புதிய பஞ்சாயத்து ஆட்சி கிராமப்புறங்களிலே நல்லதொரு [illegible] தோற்றுவித்துள்ளது. சிறுதொழில்கள் பெருகி வளர்ந்து கொண்டிருக்கின்றன.





கிராமப்புறங்களில் சிறுதொழில்கள் பெருகி வளரவேண்டும். தேனீ வளர்த்தல் கிராமங்களில் போற்றி வளர்க்கப்படவேண்டிய சிறுதொழில்களில் ஒன்றாகும். சிறுதொழில் வளர்ச்சி பஞ்சாயத்து யூனியன்களை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



கோழி வளர்த்தலும் முக்கியமான சிறு தொழில்களில் ஒன்றாகும். சத்துள்ள உணவுத் திட்டத்தின் கீழ் கோழி வளர்த்தலுக்கு விசேஷ அக்கறை காட்டப்பட்டு வருகிறது. இப்பொழுது செயலாற்றப்படத் தொடங்கி இருக்கும் சத்துள்ள உணவுத்திட்டத்தினை வெற்றியுடன் நடத்தித்தரவேண்டியது பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் கடமையாகும்.



**கிராமப் பொருளாதார நிலை உயர......**கிராமப் பெண்கள் தங்களுடைய ஓய்வுநேரத்தை வீணாக்காமல், பயனுள்ள கைத்தொழில்களைச் செய்வதன்மூலம், பொருளாதார நிலையில் உயர்வெய்தவும், கிராமங்கள் தன்னிறைவு அடையவும் பாடுபடமுடியும். கிராமக் கைத்தொழில் வளர்ச்சியினைத் திட்டமிட்டுச் செயல்படுத்தும் பொறுப்பு பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



**கிராமங்கள்தோறும் தண்ணீர் வசதி:** மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளில் நீர் ஒன்று. நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டக்காலம் முடிவுக்குள்ளாக, பருகு நீர் வசதி செய்து தரப்படல் வேண்டுமென்பது அரசின் நோக்கம். புதிய பஞ்சாயத்து ஆட்சியில், பஞ்சாயத்து நிர்வாகம் சம்பந்தப்பட்டவர்கள் இத்துறையில் அக்கறை எடுத்துக்கொண்டு



கல்விச்செல்வமே அழியாச்செல்வம். நாட்டு [illegible] தொண்டு புரிகின்ற பள்ளி ஆசிரியர்களின் சேவை பாராட்டற்குரியது. [illegible] கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. [illegible] ஒற்றுமை உணர்வையும், [illegible] இளைஞர்களின் [illegible] முறையில் ஆசிரியர்கள் தொண்டாற்றவேண்டும். இன்றைய [illegible] அல்லவா ?



உணவு உற்பத்தியைப் பெருக்குதல், மக்கள் தொகைப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்துதல்—இந்த இரண்டு இலட்சியங்களை முக்கியமாகக்கொண்டு பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் கடமையாற்றவேண்டும். விவசாயத்தைப் பெருக்க சாத்தியமான வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். விஞ்ஞான ரீதியில் விவசாயத்தில் வளர்ச்சி காண முயலவேண்டும். பயிர்களைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். பூச்சிகள் அழித்துவிடாமல், மருந்துகள் தூவுவதன்மூலம் பயிர்களைக் காப்பாற்றவேண்டும். [illegible]

# சுடர்

விளக்குகள் இன்றி வாழ்க்கை இல்லை என்று சொல்லத் தக்க அளவுக்கு விளக்குகள் நம்மிடையே விளங்கி வருகின்றன.

“விளக்கேற்றி வைக்க ஒருத்தி வீட்டுக்கு வரவேண்டாமா?” என்று சொல்லக் கேட்கிறோம். இதிலிருந்து விளக்கின் மகத்துவம் வெளிச்சமாகிறதல்லவா?

மின் விளக்குகளின் மாட்சி இன்று பெருமளவில் இடம்பெற்றிருந்தாலும், எண்ணெய் விளக்குகளே அன்றும் காட்சியளித்தன, இன்றும் காட்சியளிக்கின்றன. தீபாவளி, கார்த்திகைத் தீபம் போன்ற விழாக்களில் விளக்குகளே விளக்கமுறுவதை நாம் பார்க்கிறோம்.

அவரவர் வசதிக்கேற்ப விளக்குகள் வீடுகளில் இடம் பெறுகின்றன. பெரிய சிறிய விளக்குகள், அலங்கார விளக்குகளை எல்லாம் நாம் பார்க்கிறோம். இவ்வாறு எல்லாவிதமான விளக்குகளையும் ஒரே இடத்தில் பார்த்தால் எப்படி இருக்கும்?

இந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது பூம்புகார் கைவினைத் தொழில் வளர்ச்சிக் கழகம்.

சென்னைத் தேனாம்பேட்டை எல்டாம்ஸ் சாலையில் உள்ள சி. பி. ஆர்ட் சென்ட்டரில்தான் வகைவகையான விளக்குகள் கண்காட்சி நடந்தது.

''சுடர்'' என்ற பெயரில் 1984 நவம்பர் 28 முதல் டிசம்பர் 9 வரை நடந்த இந்தக் கண்காட்சி, காண்போரின் கண்ணையும் கருத்தையும் வெகுவாகக் கவர்ந்தது. பித்தளை, வெண்கலம், மாக்கல் ஆகியவற்றாலான விளக்குகள், சிறிய பெரிய, ஆள் உயர விளக்குகள் எல்லாம் நம்மை வியக்க வைத்தன.

164 வகையான விளக்குகள் பூம்புகார் நிறுவனத்தால் தயாரிக்கப்படுகின்றன. ரூ. 2 முதல் ரூ.7,700 வரை விலையுள்ள விளக்குகள் இங்கே வைக்கப்பட்டிருந்தன.

இவ்வாண்டு சில புதிய வகைகள் விற்பனைக்கு வந்தன. அவை நாகதீபம், கணபதி தீபம், பத்ம தீபம், சுமங்கலிதீபம், லட்சுமி தீபம், மயில், யானை, அன்ன விளக்குகள், நேபாள விளக்கு, மலபார் விளக்கு, மூகாம்பிகை, காளிகாம்பாள் விளக்குகள். இவையெல்லாம் இவ்வாண்டு அதிகமாகவிற்பனை ஆகியுள்ளன.

சுமார் 5000 விளக்குகள் கண்காட்சியை அணிசெய்தன. இவற்றின் மதிப்பு ரூ. 3 லட்சம். பெங்களூர் ராம் நகரிலுள்ள கொசப்பேட்டை டெரக்கோட்டா விளக்குகளும் காட்சியில் இடம் பெற்றன.

இந்த விளக்குகள் எல்லாம் தமிழ்நாட்டில் நாச்சியார் கோயிலில் அதிகம் தயாரிக்கப்படுகின்றன. திருநெல்வேலியிலுள்ள வாகைக்குளம் மற்றும் மதுரை, தஞ்சாவூர், சேலம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலும் விளக்குகள் தயாரிக்கப்படுகின்றன.

நான்காவது முறையாக நடக்கும் இந்தக் கண்காட்சி சென்னை தவிர, புதுதில்லி, பெங்களூர், கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய இடங்களிலும் நடந்தது.

பூம்புகாரால் உருவாக்கப்படும் விளக்குகள் ஸ்ரீலங்கா, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன.

கண்காட்சியைப் பார்க்க வாய்ப்பில்லாதவர்கள் கவலைப்பட வேண்டாம். சென்னை போன்ற இடங்களில் நிரந்தரமாக இருக்கும் பூம்புகார் விற்பனைக் கூடங்களைப் பார்வையிடலாம். விளக்குகளோடு விரும்புகின்ற பொருள்களையும் வாங்கிக்கொள்ளலாம்.

கலைமிகு வேலைப்பாடு அமைந்த இந்த விளக்குகள், நம் இல்லத்துக்கு மட்டுமல்ல, உள்ளத்துக்கும் ஒளியூட்டும்!

**பி. வி. கிரி.**

## மனம்கவர் மரக்குடில்!

முதுமலைக் காட்டில் உள்ள மரத்திலான உல்லாசக் ''குடில்'' உல்லாசப் பயணிகள் தனிமையில் அமைதியாகத் தங்கி மகிழ அழகான இடமாகும். இந்தக் குடிலில் ஒரு படுக்கை அறை மட்டுமே உள்ளது. இருவர் மட்டுமே தங்க முடியும்.

நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே தெப்பக்காடு உள்ளது. இது முதுமலை வனப் பாதுகாப்புப் பகுதியாகும்.

தெப்பக்காடு என்ற இடத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் காட்டிற்குள் வனத்துறையினரால் உல்லாசப் பயணிகள் தங்கி மகிழ மரத்தினால் ஆன 'குடில்' அமைக்கப்பட்டுள்ளது. நான்கு தூண்களும் கற்களால் கட்டப்பட்டு மேற்புறத்தில் மரத்தினால் அமைந்த குடில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 21 அடி ஆகும்.

குளிர் காலங்களில் தங்க இங்குச் சூடாக இருக்கும். குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. அமைதியான இடம். காட்டு விலங்குகள் இயற்கைச் சூழ்நிலையில் தனிமையில், அவைகளின் பழக்க வழக்கங்களைப் பார்வையிட ஏற்ற இடம். இதன் முன்புறத்தில் வற்றாத நீரோடை உள்ளது. இந்த நீரோடையில் காட்டு யானை, காட்டெருமை, மான் கூட்டம், புலி, கரடி போன்ற விலங்குகள் இங்கு இயற்கைச் சூழ்நிலையில் தண்ணீர் குடிக்க வருவதை இங்கிருந்தே கண்டு களிக்கலாம்.








1-2-1985 75 காசு

# ஏழை எளிய மக்களுக்கு தரமான பால்



ஏழை எளிய மக்களுக்கும் தரமான பால் கிடைக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் தமிழக அரசு பணியாற்றி வருகிறது. பொதுமக்களின் வசதிக்காக ஆங்காங்கே தானியங்கி பால் விற்பனை நிலையங்களைத் திறந்துவருகிறது. இதுவரை 26 நிலையங்களைத் திறந்துள்ளது. ஜனவரி 8ஆம் நாளன்று 27வது தானியங்கி விற்பனை நிலையத்தை ஆயிரம் விளக்குப் பகுதியில் உள்ள காவலர் குடியிருப்புப் பகுதியில் திறந்துள்ளது. மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் இந்த நிலையத்தைத் திறந்து வைத்தார். திறப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

வரவேற்புரை ஆற்றிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணைய நிர்வாக இயக்குநர் திரு வே. சங்கர சுப்பையன் இ.ஆ.ப., தெரிவித்ததாவது:

''சென்னை நகரில் ஒருநாளுக்கு 4 இலட்சத்து 25 ஆயிரம் லிட்டர் பால் விநியோகம் செய்யப்படுகிறது. ஏறக்குறைய 6 லட்சம் மக்கள் இதன் வாயிலாகப் பயனடைந்து வருகின்றனர்.''

விழாவுக்குத் தலைமை தாங்கிய தமிழக அரசின் இரண்டாவது செயலர் திரு டி.வி.அந்தோணி, இ.ஆ.ப., குறிப்பிட்டார்;

''மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் தான் பால் விலை குறைவாக உள்ளது.''

சென்னை நகர காவல்துறை ஆணையாளர் திரு ஸ்ரீபால் தமது உரையில் குறிப்பிட்டார்:

''இந்தப் பகுதியில் பற்பல வசதிகள் செய்யப்படுகின்றன. அவற்றுள் இந்தத் தானியங்கி பால் வழங்கு நிலையமும் ஒன்று. இங்கு வசிக்கும் காவலர்கள் இது வேறு யாருக்கோ செய்து கொடுக்கப் பட்டுள்ள வசதி என்று எண்ணிக் கொள்ளாமல், சுற்றுப்புறச் சூழ்நிலைகள், சுகாதாரம் ஆகியவற்றைக் கவனித்துக் கொள்ள வேண்டும். நகரில் உள்ள ஏனைய குடியிருப்புகளுக்கெல்லாம் முன் உதாரணமாக விளங்க வேண்டும் இந்தக் காவலர் குடியிருப்பு''.

அடுத்து உரையாற்றிய திரு. பா. அங்கமுத்து, எம்.எல்.சி. தெரிவித்தார்:

''இந்தப் பகுதியின் முன்னேற்றத்தை மாண்புமிகு பால்வள அமைச்சர் அவர்கள் திட்டமிட்டு உருவாக்கி வருகிறார்கள்.''

. அடுத்து உரையாற்றிய திரு. ஜேப்பியார், எம்.எல்.சி. குறிப்பிட்டதாவது:

''ஏழைகளுக்குத் தரமான பால் கிடைக்க வேண்டும் என்ற முறையிலே அரசு நல்ல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுகிறது. சமூக விரோதிகள் இந்தத் தானியங்கி நிலையத்தின் மூலம் பாலைப் பெற்று, அதில் தண்ணீரைச் சேர்த்து, ஏழைகளுக்கு அதிக விலைக்கு விற்கின்ற சூழ்நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.''

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் பொது மேலாளர் திரு.ஜலால், ''பால் உற்பத்தியில் தமிழகம் முன்னேற்றம் பெற்றுள்ளது. உற்பத்தியாளர், நுகர்வோர் இரு தரப்பினருக்கும் நன்மை கிடைக்கும் வகையில் திட்டம் தீட்டிச் செயல்படுகிறது'' என்றார்.

தானியங்கி விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுகின்ற காவல் துறையினருக்கு வீட்டில் எந்தப் பிரச்னைகளும் இருக்கக் கூடாது-அவ்வாறு இருந்தால் அவர்கள் கடமையைச் சரிவர ஆற்ற முடியாது என்று கருதி அவர்களுக்கு என்னென்ன வசதிகளைச் செய்துதர வேண்டுமோ, அவற்றை எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் செய்து வருகிறார்.

''அந்தத் திட்டத்தின் அடிப்படையில் தான் இங்கே தானியங்கி பால் வழங்கு நிலையம் இன்று திறக்கப்பட்டிருக்கிறது.

''சென்னை நகரில் இது 27வது நிலையம் ஆகும். இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் 75 தானியங்கி பால் விற்பனை நிலையத்தைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

''இந்தக் காவலர் குடிவிருப்பில் ஒரு பகுதியில் சுமார் 250 வீடுகளுக்குப் பகலில் மின்சார வசதி கிடைக்கவில்லை என்ற குறை ஒன்று உள்ளது. விரைவில் அந்தக் குறை களையப்படும். 24 மணி நேரமும் மின்வசதி கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''இந்தப்பகுதியில் நூலகம் ஒன்றும் அமைப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ரூ.5 இலட்சம் செலவில் விரைவில் அமைக்கப்படும்.''

—தமிழ்ப்பித்தன்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.





மாவட்டங்களில் 20 அம்சத் திட்டச் செயலாக்கம் பற்றி ஆய்வு செய்யும் மாவட்ட ஆட்சியாளர்களின் மாநாடு மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் 17-1-1985 அன்று நடைபெற்றது.




Advt.

# முதலமைச்சர் சார்பில் எழுத்தாளர்க்குப் பரிசு!




அமுதசுரபி குறுநாவல் போட்டியல பரிசுபெற்ற ஐவருக்குத் தலா ஆயிரம் ரூபாய் பரிசளிக்ரும் விழா 
சென்னையில் 22-1-85 அன்று சிறப்புற நடைபெற்றது.

மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமை வகித்துப் பரிசுகளை வழங்கிய இவ்விழாவில்-மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ். மோகன், சென்னை நகரக் காவல்துறை ஆணையர் திரு எஸ். ஸ்ரீபால் இ.கா.ப., அரசு பதிவுத் துறைத் தலைவர் திரு. பொ. இல. பொன்னுசாமி இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறைச் செயலர் டாக்டர் அவ்வை நடராசன், திருமதி விமலா வாசுதேவராவ் ஆகியோரும் பங்கேற்றுப் பாராட்டுரை வழங்கினர்.

'அமுதசுரபி' ஆசிரியர் திரு. விக்கிரமன் வரவேற்புரையாற்றினார்.

திரு. வி. க. கட்டுரைப் போட்டியில் வென்ற திருமதி அரசு மணிமேகலைக்கும் விழாக் குழுவினரால் ரூ. 500 பரிசளிக்கப்பட்டது.

'அமுதசுரபி' சார்பில், இளைஞர் ஆண்டையொட்டி 'கனவுகளைக் கரை சேர்ப்போம்' என்ற கட்டுரை நூல் போட்டியொன்றும் அதற்கான முதல் பரிசு பத்தாயிரம் ரூபாயென்றும் இவ்விழாவில் அறிவித்தார்கள்.

விழாத் தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள்- ''இங்கே சிறந்த ஐந்து குறுநாவல்களைத் தேர்ந்தெடுத்துப் பரிசு தரப்பட்டது. இந்த ஐந்தில் சிறந்த ஒன்றை ஒரு குழு அமைத்துத் தேர்ந்தெடுத்தால் அதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் சொந்தப் பொறுப்பில் மூவாயிரம் ரூபாய் பரிசு தரப்படும்'' என்றார்.

மேலும் அவர் பேசுகையில் ''இளைஞர் ஆண்டையொட்டி நடத்தும் போட்டியிலே வெற்றிபெறும் நூலாசிரியருக்குப் பத்தாயிரம் ரூபாய் பரிசளிப்போம் என்றார்கள். இந்தப் போட்டியை 20 வயது முதல் 35 வயது வரை உள்ளோர் பங்கேற்பதாகவும், 35 வயது முதல் 50 வயது வரையானோர் பங்கேற்பதாகவும் இரண்டாகப் பிரித்து வைத்து இதற்குப் பத்தாயிரமும் அதற்குப் பத்தாயிரமும் பரிசளிக்கலாம். இவர்கள் பத்தாயிரம் தருவதாக அறிவித்தார்கள். இந்த நாட்டு இளைஞர் சமுதாயம் ஏற்றம் பெறச்செய்யும் திட்டம் என்பதால், இன்னொரு பத்தாயிரம் ரூபாய் தமிழகத்தின் தளநாயகர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சார்பிலே அளிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வகையிலெல்லாம் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடும் 'அமுதசுரபி' ஆசிரியர் திரு. விக்கிரமனையும் அதன் உரிமையாளர் திரு ஏ.வி.எஸ். ராஜாவையும் இதயபூர்வமாகப் பாராட்டுகிறேன்'' என்றார்.

—பி. எல். ஆர்.

## முதல் அட்டை சொல்லும் செய்தி :

அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வேகமாக உடல் நலம் தேறி வரும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை, மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தலைமைச் செயலர் திரு கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப. ஆகியோர் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர். மாண்புமிகு முதல்வரின் துணைவியாரும் உடன் இருந்தார்.

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2016
ரக்தாக்ஷி - தை 19
மலர் : 15 இதழ் : 15
1-2-1985



தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களையெல்லாம் ஒரே இடத்தில் காண வேண்டுமா?

பட்டுப்புழு கூடு கட்டுவது எப்படி என்பதைப் பார்க்க வேண்டுமா?

'கடல் நீருக்குள்ளே போய் ஆராயும் மனிதரை'ச் சந்திக்க வேண்டுமா?

எல்லாவற்றையும் அகில இந்திய

தொழில்துறைக் காட்சி அரங்கு என்ன சொல்கிறது?

தமிழ்நாடு வெடி மருந்துத்தொழிற்சாலை, டான்செம், எல்காட், இரசாயனத் தொழில் பிரிவு எல்லாம் ஆற்றிவருகின்ற பணிகளையெல்லாம் அழகிய படங்கள் வாயிலாக விளக்கியிருப்பது அருமை.

சுயவேலைவாய்ப்பு, சத்துணவுத் திட்டம், பார்வையற்றோர் நலன் போன்ற

# கருத்துக்கு விருந்தளிக்கும் கவின்மிகு காட்சி அரங்குகள்

சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சிக்குப் போனால் பார்த்துப் பிரமிக்கலாம்!

வண்டலூர் உயிரியல் பூங்கா மாதிரி வடிவ நுழைவாயிலினுள் நுழைகிறோம்.

முதலில் நம்மை வரவேற்பது காவல் துறைக் காட்சியரங்கு. என்றோ எப்போதோ நாம் செய்தித்தாளில் படித்ததெல்லாம் அங்கே படமாக அதேசமயத்தில் பாடமாக விளங்குகிறது. கொலை, கொள்ளை போன்ற சம்பவங்களில் துப்பு துலக்குதல், அதற்குத் துப்பறியும் நாய் உதவி புரிதல் போன்றவை நம்மை வெகுவாகக் கவர்கின்றன. விந்தை புரியும் விரல் ரேகை, மண்டைஓட்டுடன் முகம் ஒப்பிடுதல் போன்ற புகைப்படங்களைப்பார்த்து நாம் வியக்கிறோம். சாலை விதிகளை மீறுவோர் இறுதியில் 'இறுதி யாத்திரை'க்குச் செல்லும் பயங்கர நிகழ்ச்சியைப் படமெடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதைப் பார்த்தபிறகாவது எல்லாருக்கும் சாலையில் எச்சரிக்கையுடன் நடக்கவேண்டும் என்ற எண்ணம் நிச்சயம் வரும்.

சமூக நலப்பணிகளைப் படம் பிடித்துக் காட்டுவது சமூக நலத்துறைக் காட்சி அரங்கு.

திருநெல்வேலி திருவள்ளுவர் ஈரடுக்கு மேம்பாலத்தின் மாதிரிவடிவம், கொடைக்கானல் குகைச்சாலை, கொள்ளிடம் ஆற்றுப்பாலம் ஆகியவற்றின் மாதிரி வடிவங்கள், நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறைக் காட்சி அரங்கில் பார்க்கிறோம்.

பளபளக்கும் பட்டுப் புடவையும், வேட்டியும், பார்க்க எவ்வளவு அழகாக இருக்கின்றன! அந்தப் பட்டுத் துணிகள் எப்படித் தயாராகின்றன? அதைப் பட்டுக் கத்தரித்தாற் போன்று விளக்குவதுதான் பட்டுவளர்ச்சித்துறை. பட்டுப்புழுவளர்ப்பு, பட்டுப்புழு கூடு கட்டுவது, பட்டுநூல் எடுப்பது போன்றவற்றைப் பற்றிப் பாடங்களில் படித்திருக்கிறோம். ஆனால் இங்கே எல்லாவற்றையும் நேரில் பார்த்துத் தெரிந்துகொள்கிறோம்.

தீயணைக்கும் ராட்சத வண்டி செயல்படும் விதத்தை நேரில் பார்க்கிற வாய்ப்பைத் தருவது, தீயணைப்புத்துறை. இங்கே





பல்வேறு தீயணைப்பு நடவடிக்கைகளைப் பார்க்கிறோம். அலுமினிய உடையணிந்த தீயணைப்புவீரர்-கல்நார் . உடையணிந்த தீயணைப்புவீரர் இவர்கள் ஆள் உயர பொம்மை வடிவில் காட்சியளிக்கிறார்கள்!

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்!' அந்தக் கல்வியைத்தரும் கல்வித் துறை காட்டுவன என்ன?

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், பள்ளிக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை, சட்டக்கல்வி, பொது நூலகத்துறை, பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி, அர்சுத் தேர்வுத்துறை, சிற்பக்கலைக் கல்லூரி ஆகியவை ஆற்றும் அரும்பணிகளின் தொகுப்பாக விளங்குகிறது இக்காட்சியரங்கு.

வேலைவாய்ப்புகளை விளக்கும் அரங்கமாக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை விளங்கினால், அளவான குடும்பம் அதிக இன்பம் என்பதை எடுத்துக்காட்டுகிறது குடும்பநலத்துறை அரங்கு.



'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்!' என்பதைச் சொல்லாமல் சொல்கிறது, வேளாண்மை அரங்கம். தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சி, அமோக மகசூல் காண வழிமுறைகள் போன்ற உழவுக் குறிப்புகள் எல்லாம் தெரிந்துகொள்கிறோம் இங்கே!

நல்வாழ்வு வாழும் முறைகளைக் கோடிட்டுக் காட்டுகிறது டேனிடா. தமிழ்நாடு நகராட்சிகளின் சீர்மிகு பணிகளைத் தொகுத்துச் சொல்கிறது நகராட்சி நிர்வாக இயக்ககம்.

''நகருக்கு உழைப்பது எங்கள் கடமை: நேசக்கரம் நீட்டுவது உங்கள்கடமை''

—இந்த வாசகம தென்படுவது 'சென்னை மாநகராட்சி'யில். துப்புரவுக்கு மாநகராட்சி என்பதை, இந்த அரங்கு துப்




புரவாக வைக்கப்பட்டிருப்பதிலிருந்து தெரிந்துகொள்கிறோம். இங்கே, பெண்கள் குடும்பக்கட்டுப்பாட்டுக்கு இலவச ஆலோசனை பெறலாம். வெறிநாய்க்கடிப் பகுதியை ஒவ்வொருவரும் பார்க்கவேண்டும்.

அதோ! நம் கண்ணில் தென்படுவது சிப்காட். பக்கத்தில் ஓட்டல் தமிழ்நாடும் தான்!

சிப்காட் தொழில் வளர்ச்சிக்குச் செய்யும் சிறப்புகளைப் பார்த்துவிட்டு, சுற்றி வந்த களைப்பு தீரவும், சுற்றுவதற்குச் சுறுசுறுப்பு ஏற்படவும் ஓட்டல் தமிழ்நாட்டுக்குள் நுழைகிறோம். தரமான சுவையான பலகாரங்கள் உண்ட திருப்தியுடன் வெளியே வரும் நம்மை வரவேற்பது சுற்றுலா! இங்கே சுற்றுலாத்துறைகளைக்காட்டும் புகைப்படங்கள் மட்டுமல்ல, நாள் தோறும் நேரில் கண்டு மகிழும் நடன, நாடக, மந்திர தந்திரக்காட்சிகளும் உண்டு.





அதைப் பார்த்துவிட்டு வெளியே வந்ததும் அப்படியே நின்று விடுகிறோம்! ஆம். 'ஆழ்நிலை தியானக் காட்சி அரங்கு' நம் கண்ணில் தென்படுகிறது!

சரி, வாருங்கள், பழனிமலைக்கு! ஆம். பழனி மலை உருவத்தில் அமைந்த அறநிலையத்துறை அரங்குக்குள் பயபக்தியுடன் நுழைகிறோம். கண்ணையும் கருத்தையும் கவரும் பல்வேறு மரச்சிற்பங்கள், ஆழ்வார்களின் திருவுருவப்படங்கள், தமிழ்நாட்டுத் திருக்கோயில் படங்கள், சுவாமிமலை மாதிரி வடிவம் எல்லாவற்றையும் பரவசத்துடன் பார்க்கிறோம். ஒலி, ஒளிக் காட்சிகள் நம் உள்ளத்தைக் கவர்கின்றன.

நிலக்கரிச் சுரங்கம் எப்படி இருக்கும்? அதை அப்படியே பார்ப்பதுபோன்று தோன்றுகிறது, நெய்வேலி லிக்னைட்கார்ப்பரேஷன் காட்சிக் கூடத்தில். பழுப்புநிலக்கரிச் சுரங்கம், அனல்மின் நிலையம் ஆகியவற்றின் மாதிரி அமைப்புகள் நம்மைக் கவர்கின்றன.

கப்பலுக்குள் நுழைகிறோம்—கப்பல் வடிவிலான சென்னைத் துறைமுக அரங்கினுள் நுழைகிறோம். துறைமுக வளர்ச்சிப் பணிகளைப் பார்த்துக் கொண்டே வரும்



நாம் பூதாகாரமான ஆள் உருவத்தையும் பார்த்து ஒரு கணம் நின்று விடுகிறோம். கடலில் 100 அடி ஆழம் வரை சென்று ஆராய்வதற்கென்றே தயாரிக்கப்பட்ட சிறப்பு ஆடையுடன்கூடிய உருவம் மற்றும் சாதனங்கள் அங்கே காணப்படுகின்றன.

ஊரக வளர்ச்சித்துறை, தமிழ்நாடு சேமிப்பு நிறுவனக் கிடங்கு ஆகியவை தத்தம் துறைபற்றிய வளர்ச்சிப்பணிகளை விளக்கிச் சொல்கின்றன.

இந்தியாவில் முதன்முதலில் தொடங்கப்பெற்ற சுரங்க ரயில் கல்கத்தாவில் உள்ளது. அதைக்காட்டும் மாதிரிவடிவம், மினி



ரயில்பெட்டிகள், ரயில் வண்டிகள் எல்லாம் குழந்தைகளை மட்டுமல்ல, பெரியவர்களையும் குதூகலப்படுத்தும்-இந்திய ரயில்வே அரங்கில்!

''தொலைதூரம் எங்களுக்கு வெகு தூரம் அல்ல!''

—இது பொன்மொழி அல்ல, போக்குவரத்துக் கழகங்களின் புதுமொழி! தமிழ்நாட்டில் இயங்கும் பல்வேறு போக்குவரத்துக்கழகங்கள் பற்றிய விளக்கங்கள், விவரங்கள் இங்கே காணலாம்.

சில செடிகள் மருந்துக்குப் பயன்படுகின்றன என்று நமக்குத் தெரியும். அந்தச் செடிகளைப் பார்க்க வேண்டும் என்று யாருக்குத்தான் ஆசை வராது? அந்த

ஆசையை நிறைவேற்றும் வகையில் இந்திய மருத்துவத்துறை பல்வேறு மருந்துச்செடிகளை வைத்து அவற்றின் பெயர்களையும் எழுதி வைத்திருக்கிறார்கள். இதேபோல பதினெட்டு வகைச் சித்தர்களை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்களைப் பார்த்ததில்லை. இங்கே பார்க்கிறோம், படமாக!

மனைவளம் ஓங்கிட மகத்தான பணிகள் புரிந்து வரும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பற்றிய படத்தொகுப்புகள், புள்ளி விவரங்கள், சாதனைகள் எல்லாம் தெரிந்து கொள்கிறோம் இந்த அரங்கில்.

சிங்காரச் சென்னை உருவாகச் சீர்மிகு பணிகள் ஆற்றிவரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பற்றிய அரங்கும், வறட்சியிலும் வளத்திலும் கைகொடுக்கும் சென்னைக்குடிநீர்க் காட்சியரங்கும் அரசின் பணிகளை விளக்குகின்றன.

'தமிழரங்கம்' அதுதான் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை அரங்கம்.

அழகிய ஓவியங்கள்—சுண்கவர் மரச் சிற்பங்கள்—இயல் இசை நாடகமன்ற இசைக் கருவிகள் எல்லாம் இங்கே பார்க்கலாம்.

கால்நடை பராமரிப்புத் துறைக் காட்சிக் கூடத்தில்—

யார்க்ஷயர் வெள்ளைப்பன்றிகள், இராமநாதபுரம் வெள்ளை இன ஆடுகள், ஜெர்சி காளைகள் இவையெல்லாம் பார்க்கிறோம்—உருவத்தில் அல்ல உயிரோடு!

ரூ. 10,000க்கு மேல் தேசிய சேமிப்பு பத்திரம்—6, 7வது வெளியீடு வாங்கினால் ஒரு சதவிகித ஊக்கத்தொகை வழங்கப்படுவதைச் சேமிப்புத் துறையில் பார்க்கிறோம்.

கிருஷ்ணா குடிநீர்த்திட்டப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதை விளக்கும் படங்களுடன், பல்வேறு நீர்த்தேக்கங்கள் பற்றிய படங்களும் இடம்பெற்றிருப்பது பொதுப்பணித்துறைக் காட்சி அரங்கில்.

ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் நலப்பணிகளை—தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் அவர்கள் பெற்ற முன்னேற்றங்களை விளக்குகிறது ஓர் காட்சியரங்கு.

'வண்டலூர் உயிரியல் பூங்கா' வின் மாதிரி அமைப்பு நம்மை மகிழ்விப்பது வனத்துறைக் காட்சியரங்கில். வனவிலங்குகளைக் காப்பது, வனவளம் பெருக்குவது போன்ற வளர்ச்சிப் பணிகளைக் காட்டும் கண்ணாடியாகவும் இது விளங்குகிறது.

பல வண்ண மீன்கள் நீந்துகின்ற அழகிய காட்சியைக் கண்டு மகிழ, அதே சமயத்தில் மீன் வளத்துக்கு அரசு ஆற்றும் பணிகளையும் அறிய மீன்துறைக் காட்சி அரங்கு நம்மை அழைக்கிறது.

தலைநகரிலிருந்து, பிற மாவட்டங்களையும் பார்க்க இயலுமா? இயலும். சென்னை, செங்கல்பட்டு, வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை கன்னியாகுமரி ஆகிய மாவட்டக் காட்சி

**ஸ்டவ் எரிந்து கொண்டிருக்கும் பொழுது எண்ணை ஊற்றக்கூடாது**



**வைக்கோல் போர்களுக்கு அருகில் புகை பிடிக்காதீர்கள்**



**தீ விபத்து செய்தியை தொலைபே 101 மூலம் தீயணைப்புத்துறைச் தெரிவியுங்கள்.**



# பார்த்தோம் படித்தோம்

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் நினைவுத் தூண் பற்றி ஆய்ந்து எழுத வேண்டுகிறோம். 'தமிழரசு' ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் திருக்குறள் ஒன்று வெளியிட வேண்டுகிறோம்.

—ஆ. செயராமன்,
வடசிறுவளூர்,
தென்னார்க்காடு மாவட்டம்.

1-1-85 தமிழரசு படித்தேன். சட்டப்பேரவை மற்றும் நாடாளுமன்ற முடிவுகள் குறித்து முழு விவரங்களும் அடங்கியிருந்தன.

—சா. என்றிதேவதாசன்,
இடையான்குடி,
திருநெல்வேலி மாவட்டம்.

தமிழக முதல்வரின் வண்ணப்படத்தோடு, 'தமிழரசு நாட்காட்டி' மிக அருமையாக வெளியிட்ட 'தமிழரசுக்கு நன்றி' பொதுமக்களின் உபயோகத்திற்கு ஏற்றவகையில் தமிழ்நாட்டுத் தேர்தல் முடிவுகள் அனைத்தும் வெளியிட்ட தமிழரசுக்கு மனங்கனிந்த பாராட்டுகள்.

—ஆர். ஜி. துரைராஜு,
கீழப்பழுவூர்.

தமிழக அரசின் சேவையை அறிய உதவும் ஒரே இதழ் தமிழரசு.

எஸ். பி. மனோகரன்,
சமத்தூர்,
கோவை மாவட்டம்.

தமிழரசு இதழைக் கண்டேன். கற்கண்டுபோல் இனித்தது உள்ளம்! தமிழரசில் கவிதைகள் அதிகம் வேண்டும்.

—அ. இருதயராஜ்,
தருமபுரி.

அரங்குகள் ஒரே வட்டத்தில் அமைந்து அந்தந்த மாவட்டச் சிறப்பு அம்சங்களை முகப்பாகக் கொண்டு, மாவட்ட வளர்ச்சிப் பணிகளைப் படங்கள் வாயிலாகவும், புள்ளி விவரங்கள் மூலமாகவும் விளக்கிடும் பாங்கு மகிழ்தற்குரியது. இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு வெளியேவரும்போது- நம் நினைவில் நிற்பது: 'தமிழகம் வளர்கிறது'.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பதை உணர்த்தும் கூட்டுறவு அரங்கும், சித்திரக் கைத்தறித் துணிகளின் சிறப்பை உணர்த்தும் கைத்தறி அரங்கும், தரமான பாலை வழங்கும் ஆவின் அரங்கும், சிறு தொழில் வளர்ச்சியைக் காட்டும் டான்சி அரங்கும், நியாயவிலையில் தரமான பொருள்களை வழங்கும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும், நில மேம்பாட்டை விளக்கிடும் நில அளவைத் துறையும், நீரின்றி அமையாது உலகு என்பதை [illegible] அரங்கும் அரசின் பணிகளை எடுத்துக் காட்டும் பலகணிகளாகும்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை அரசின் கண்ணாகவும், காதாகவும்இருந்து செயல்படுவது. அரசின் திட்டங்கள், ஆக்கப்பணிகள் முதலியனவற்றை மக்கள் மன்றத்துக்குக் கொண்டு செல்லும் பிரச்சாரப் பீரங்கியாக விளங்கும் இத்துறையின் காட்சியரங்கில்—'தமிழரசு' இதழின் பல்வேறு இதழ்கள், வெளியீடுகள் வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் 'தமிழ் டெலிபிரிண்டர்' ஒன்றும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

ரோகிணி, ஆரியபட்டா, பாஸ்கரா, ஆப்பிள், இன்சாட்—1 இவையெல்லாம் இந்தியச் செயற்கைக்கோள் என நாமறிவோம். இவை பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள உதவுதான் 'விண்வெளி' அரங்கு.

இந்தியக் கடற்படையின் சாகசங்களை இதன் காட்சியரங்கு விளக்குகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தொழிலாளர் துறை ஆகியவை தொழில் வளர்ச்சி, தொழிலாளர் நலம் பற்றிய அரிய தகவல்களைத் தெரிவிக்கின்றன.

இவை மட்டுமா?

இந்திய, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, பஞ்சாப், ஜம்மு காஷ்மீர் சுற்றுலாத் துறை அரங்குகள், தமிழ்நாடு மற்றும் பிறமாநிலக் கைத்தறிக் கடைகள் எல்லாம் உள்ளன.

குழந்தைகளையும் பெரியவர்களையும் குதூகலப்படுத்தும் ரயில், ராட்சத ராட்டினம், இலவசத் திரைப்படக்காட்சி போன்றவையும், அறிஞர் அண்ணா கலையரங்கில் நாள்தோறும் நடைபெறும் நடன, நாடக நிகழ்ச்சிகளும், கண்கவர் காட்சிகளாகும்.

இவை தவிர ஏராளமான கடைகளும் உள்ளன.

நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் கண்டுகளித்துவரும் இந்தப் பொருட்காட்சி 22 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்து 316 காட்சி அரங்குகளை உள்ளடக்கி நம் உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொண்டு வருகிறது. வண்ண மயமான இந்தப் பொருட்காட்சி, நம் எண்ணமெல்லாம் இனிக்கின்ற எழில்மிகு பொருட்காட்சியாகவும் விளங்குகிறது என்றால் அது மிகையல்ல!

—பி.வி. கிரி

## தீரச் செயல்புரிந்து தேசிய விருது பெற்ற வீரச் சிறார்களுடன் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள்



## தமிழ்நாட்டு மாணவிக்கு முதற்பரிசு

சர்வதேச இளைஞர் ஆண்டினை முன்னிட்டு, புதுடெல்லியில் 12-1 85-ஆம் நாளிலிருந்து 17-1-85-ஆம் நாள் வரையில் டெல்லி நிர்வாகத்தினால் மாநிலங்களுக்கிடையேயான கலை நிகழ்ச்சிப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 15 மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு கலைஞர்கள் கலந்துகொண்டனர்.

தமிழ்நாட்டிலிருந்து தமிழ்நாடு அரசின் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சிக் கல்லூரியினைச் சார்ந்த மாணவர்களும் கலைஞர்களும் கலந்துகொண்டனர். இப்போட்டியில் தமிழ்நாடு அரசின் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சிக் கல்லூரி மாணவர்களால் நடத்தப்பட்ட ''வந்தே மாதரம்'' என்னும் ஓரங்க நாடகம் மூன்றாவது பரிசினைப் பெற்றது.

இதில் நடித்த பயிற்சிக் கல்லூரியின் மாணவி செல்வி ஸ்மிதா ராஜ் சிறந்த நடிகையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பதினைந்து மாநிலங்களிலிருந்து பங்கு கொண்ட கலைநிகழ்ச்சிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவி சிறந்த நடிகையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

பயிற்சிக் கல்லூரி மாணவர்களால் நடத்தப்பட்ட ''ஒன்றே குலம்'' என்னும் கிராமிய நடனம் பார்வையாளர்களின் பெரும் பாராட்டினைப் பெற்றது.








# இணையற்ற தலைவர்

## -பேரறிஞர் அண்ணா

உலக உத்தமர், மறைந்ததால் உள்ளம் நொந்து கிடக்கும் நாம், ஒருவருக்கொருவர் ஆறுதல் மொழி கூறிக்கொள்ளும் நிலையிலே இருக்கிறோம். ஒரு கிழமைக்கு மேலாகிவிட்டது, இழிகுணத்தான், மாநிலம் போற்றும் மகாத்மாவைக் கொலை செய்து; உலகம் இன்றும் அழுதுகொண்டுதான் இருக்கிறது. அவருடைய மாண்புகளைப் பற்றிப் பேசாத நாடில்லை. எழுதாத ஏடில்லை. எங்கும் கலக்கம்—ஏக்கம்—எவருக்கும் தாங்கொணாத் துக்கம். அதை மாற்ற அவரைப் பற்றிப் பேச முனைகிறோம். ஒவ்வொரு பேச்சும், மீண்டும் மீண்டும், கண்ணீரைக் கொண்டு வரவே உதவுகிறது. மூண்ட தீ அணையவில்லை—துக்கம் தரும் நிலை அது. ஆனால் அவர் புகழ் ஒளி பரவுகிறது. அதை எண்ணுவோம். ஆறுதல் பெற முயற்சிப்போம்.

நாம் அரசுரிமை இழந்திருந்தபோது அவர் பிறந்தார்; அவர் மறையும்போது நாம் அரசுரிமை பெற்று வாழ்கிறோம்.

அவர் பிறந்தபோது நமது நாடு, உலகிலே இழிவும் பழியும் தாங்கிய நாடாக இருந்தது. அவர் மறைந்திடுவதற்கு முன்னம், மாஸ்கோவிலிருந்து நியூயார்க் வரையிலே உள்ள சகல நாடுகளிலும் நமது விடுதலையை விளக்கும் விருது பெற்று, தூதுவர்களும், பிரதிநிதிகளும் வீற்றிருக்கும் நிலை உண்டாகிவிட்டது.

அவர் பிறந்தபோது உலக மன்றத்திலே, நமக்கு இடம் கிடையாது. இன்று, நாம் இருந்தால் உலக மன்றத்திலே புதியதோர் பலம் என்று பல நாடுகள் எண்ணும் நிலை ஏற்பட்டுவிட்டது.

அவர் பிறந்தபோது, இங்கு தேவைப்படும் எந்தச் சாமானுக்கும், வெளிநாட்டின் தயவை நாடி, ஏங்கிக் கிடந்தோம். இன்று வெளிநாடுகள், நமது சரக்குகளைப் பெற நம்முடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்குத் தமது ராஜ தந்திரத்தை உபயோகிக்கும் அளவு மாறுதலைக் காண்கிறோம்.

அவர் பிறந்தபோது, கோயில்கள் மூடிக் கிடந்தன. தீண்டாதார் என்று தீயோரால் அழைக்கப்பட்டு வந்த தியாகப் பரம்பரையினருக்கு அவர் கண் மூடுமுன், மூடிக்கிடந்த கோயில்கள் எல்லாம் திறந்துவிடப்பட்டன.

அவர் சாதித்தவைகள் மகத்தானவை; ஆனால் அவர் சாதிக்க எண்ணியிருந்தவை, வேறு பல; அவை மேலும் மகத்தானவை.

நாட்டிலே உள்ள மற்றக் கொடுமைகள் சாதிச் சனியன், வறுமை, அறியாமை ஆகியவற்றை அடியோடு களைந்தெறிந்துவிட்டு, உலகினர் கண்டு பின்பற்றத்தக்க முறையிலே, உன்னதமான இலட்சியங்களைக் கொண்ட ஓர் சமுதாயத்தைக் காண விரும்பினார். அதற்காக அரும்பாடுபட்டு வந்தார். அந்த நேரத்தில், ஆத்திரத்தால் அறிவை இழந்தவனால், அவர் கொலை செய்யப்பட்டார்.

வேறு நாடுகளிலே விடுதலைப் போர் தொடுத்தவர்கள், இரகசியமாகவோ பகிரங்கமாகவோ, சொந்தத்திலேயோ, வேறு நாட்டின் துணைகொண்டோ, ராணுவத்தைத் திரட்டுவது, போர்ப் பொருளைத் குவிப்பது, மறைந்திருந்து தாக்குவது, சதி செய்வது என்ற பலமுறைகளைக் கையாண்டனர். தாய்நாட்டின் விடுதலைக்காக இவையாவும். எனவே, சரியா தவறா என்ற கேள்விக்கும் இடம் இல்லை என்றனர்.

உலக வரலாற்றிலேயே முதல் முறையாக இந்தத் திட்டம் வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு, புதியதோர் தத்துவத்தைக் கொண்ட திட்டத்தை, ஆயுதமின்றி, இரகசியமின்றி, வெளிப்படையாக, தூய்மையுடன், விடுதலைப்போர் நடத்தலானார்; அதிலே வெற்றியும் கண்டார்.

விடுதலை பெற்றுத் தந்ததோடு வேலை முடிந்தது என்று அவர் முடிவு கட்டவில்லை. நாட்டை மீட்க வேண்டும்—நல்லாட்சி அமைக்க வேண்டும்—மக்களை நல்லவர்களாக்க வேண்டும்—வீரம், திறம், விவேகம் மூன்றையும் விரும்பினார். மக்களை நல்லவர்களாக்க வேண்டும் என்பதே அவருடைய இறுதி இலட்சியம்.

நாட்டை மீட்க ஒரு ரணகளச் சூரரையும், நல்லாட்சி அமைக்கப் பல கலைவாணரையும், மக்களை நல்வழிப்படுத்த அறநெறி கூறுவோரையும் நாடியாக வேண்டும். எந்த நாட்டிலும் அனைவரும் ஏககாலத்தில் கிடைக்கமாட்டார்கள். ஒரு தலைமுறையிலே வீரன் தோன்றி விடுதலை தருவான். மற்றோர் தலைமுறையிலே நிபுணர் தோன்றி நல்லாட்சி அமைப்பார். பிறிதோர் சமயம் பேரறிஞர் தோன்றி மக்களுக்கு நல்வழி காட்டுவார்.

உத்தமர் காந்தியாரின் உள்ளம் இந்த மூன்று பண்புகளையும் ஏககாலத்தில் ஒன்றுக்கொன்று குறையாத அளவில் கொண்டு இருந்தது. மூன்று தலைமுறைகள் மூன்று தனித்தனித் தலைவர்கள் கொள்ள வேண்டிய குணத்தை அவர் கொண்டிருந்தார். உலக வரலாற்றிலே இதற்கு வேறு ஈடு கிடையாது.

**வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து**



# இலட்சிய உணர்வு கொண்டவர்கள் இளைஞர்கள்

— பேரறிஞர் அண்ணா

1985ஆம் ஆண்டு அனைத்துலக இளைஞர் ஆண்டாகக் கொண்டாடப்பெறுகிறது. பதினைந்து வயதிலிருந்து 24 வயது வரை உள்ள பருவத்தினர் இளைஞர் தொகுதியில் இடம் பெறுவர்.

இவர்கள் நாட்டுக்காகவும் வீட்டுக்காகவும் சிறந்த பணிகளை ஆற்றுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதும் பல்வேறு துறைகளில் தலைமைப் பொறுப்புக்கு அவர்களைத் தயார்ப்படுத்துவதும் இந்த ஆண்டின் நோக்கங்களாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பல்லாண்டுகளுக்கு முன்னரே, வானொலியில் 'வாலிபர் தேவை' என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் சில பகுதிகள் இளைஞர் ஆண்டினையொட்டி இங்கே வெளியிடப்படுகின்றன.

வாலிபர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகள். அவர் தம் உள்ளத்தில் புரட்சிப் புயலிருக்கும், வாழ்க்கை எனும் பொய்கையிலே விசாரம் என்னும் நஞ்சு கலக்கப்படாத பருவம். பகுத்தறிவு எனும் பகலவன் எரிபட்டு விஷப்பூச்சிகள் போன்ற சுயநல, சுய சுகக் கருத்துக்கள் அழிக்கப்பட்டிருக்கும் தூய்மையான அந்த வாலிப உள்ளங்களில்.

சந்தனக்காட்டைக்கடந்து மணமும் குளிர்ச்சியும் மருவி மக்களை மகிழ்விக்க வருகிறதே தென்றல், அது போன்றது வாலிபம்.

மாயா வாதமும் மனமருட்சியும் வாலிபர்களிடம் நெருங்க நடுங்கும். வெட்டிப் பேச்சைத் தட்டி நடக்கும் தீரம், வீணரின் கொட்டத்தை அடக்கியாக வேண்டுமென்ற வீரம், ஆபத்துகளைப் பொருட்படுத்தாமல் அநீதியைக் கண்டால் கொதித்தெழுந்து தாக்கும் பண்பு, வாலிபர்களிடையே மிகுந்திருக்கும்.

முடியுமா? காலம் சரியா? போதுமான பலம் இருக்கிறதா? நாளைவரை பொறுத்திருக்கக் கூடாதா? என்பன போன்ற பேச்சுகள் வாலிபர்களுக்கு இனிப்பாக இராது.

கேட்டாயோ இந்தக் கொடுமையை? சும்மா இருப்பதோ? நாம் என்ன சொரணையற்றவர்களோ? புறப்படு, போரிடு, அநீதி ஒழியுமட்டும் அல்லது நாம் ஒழியும் வரை போர். இந்தப் பேச்சுத்தான் வாலிபர் செவி ஏறும்.

வாலிபர்கள் நடமாடும் எஃகுக் கம்பிகள். அகத்திலே அருவிபோல் ஆர்வம். முகத்திலே வீரக்களை. செயலிலே துடிதுடிப்பு காணப்படும். தலைகுனிந்து நிற்பது, பெருமூச் செறிவது நம்மால் ஆகிற காரியமா என்று இழுத்துப் பேசுவது, ஆகிய முறைகள் அவர்களுக்குப் பிடிக்காதன. அவர்கள் செயலாற்றும் வீரர்கள்.

வாலிபர்கள் தமது போர்த்திறனோடு மட்டும் திருப்திப்படுவரல்ல. இலட்சியங்கள் கொண்டவர். உலகிலே பல்வேறு நாடுகளிலே நலனும் நாகரிகமும் ஓங்கி கல்வியும் தொழிலும் மிகுந்து, மக்கள் இன்பமாக வாழ்கிறார்கள் என்று ஏடுகளிலே படித்தறிந்த வாலிபர்கள் தமது தாய் நாட்டிலே அடிமைத்தனமும் அறியாமையும் நெளியக் கண்டால் கொதிப்படைவார்களல்லவா?

உலகெங்கும் கல்வியும் தொழிலும் வளரும்போது இங்கு 100-க்கு 80 பேருக்கு மேல் படிப்பற்று இருக்கக் கண்டால் ஆத்திரம் வரத்தானே செய்யும்! உரிமைக்காகப் போராடிய உத்தமர்கள், அக்கிரமங்களை அழிக்க அனைத்தையும் அர்ப்பணித்த தியாகிகள், மக்கள் வாழ உழைத்த மாவீரர்கள் ஆகியோர் பற்றிய வரலாறு படித்தறிந்த அவர்கள் சிந்தனையிலே, 'நம்மாலாவதென்ன பராபரமே', என்ற பஜனைப் போக்கு ஏற்பட முடியாதல்லவா? ஆகவேதான் வாலிபர்கள் விறுவிறுப்புடன் காணப்படுகின்றனர்.

என்நாடு பொன்னாடு. எங்கும் இதற்கு இல்லை ஈடு என்று மார்தட்டுகிறான் வாலிப வீரன். நாட்டின் நிலை உயரவேண்டும். வளம்பெருக வேண்டும். செல்வம் வளரவேண்டும், தொழில் செழிக்க வேண்டும், ஒருவர் ஒருவரை அடக்குவது, சுரண்டுவது, மேல்கீழ் என்று பேதம் காட்டுவது, விசாரத்தோடு விண்ணை அண்ணாந்து பார்ப்பது, 'வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்' என்று வேதாந்தம் பேசுவது 'பிறவாவரம் தாரும்' என்று சலிப்புச் சிந்து பாடுவது ஆகிய போக்கும் முறையும் மாறி 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்று பாரதியார் சொன்னபடி அனைவரும் உரிமையுடன் உவகையுடன் வாழவேண்டும், நாடும், பூந்தோட்டமாக விளங்கி, நானிலத்தோர் கண்டு புகழும் நிலை அடைதல் வேண்டும் என்பது வாலிபர்களின் இன்பக் கனவு.

சுதந்திரம்-விடுதலை-என்றால், சட்ட சம்பந்தமான சொற்களின் மாற்றம் என்றல்ல வாலிபன் எண்ணுவது, புதிய நிலை-புது அழகு-புது உருவம்-புதிய மகிழ்ச்சி, நாடு புதுக்கோலம் கொள்வது என்றே கருதுகிறான். உண்மையும் அதுதான்.

மனிதன் மனிதனாக வாழ வழி கண்டுபிடிக்கும் மகத்தான வேலை, வாலிபர்கள் முன் இருப்பது-நாட்டின் இயற்கை வளத்தையும், மக்களின் மனவளத்தையும் பெருக்கும் பெரும் பணி இருக்கிறது. புதிய வாழ்வு அமைக்கும் பொறுப்புள்ள வேலை.

இதற்குப் பல பொருள் பற்றிய அறிவும், எதையும் பகுத்தறியும் தன்மையும், காரணம் கண்டே எதையும் ஏற்றுக்கொள்ளும் போக்கும், அறிவுடன் தொடர்பு கொண்ட ஆற்றலும், மக்களிடம் மட்டற்ற அன்பும், அவர்களை வாழச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையும் அவர்கள் அனைவரும், வஞ்சிக்காமல், சுரண்டாமல் அடக்கி ஆளாமல் அடிமைப் படாமல் வாழக்கூடிய விதத்தில் நாட்டின் வளத்தையும் முறையையும் புதுப்பிக்க முடியும் என்ற எண்ணமும், பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, என்ற எண்ணமும் வாலிபர்களுக்குத் தேவை

சிற்பியிடம் கற்பாறை தரப்படுகிறது. அவன் வேலைக்கான மூலப்பொருள்-இனி அவனுக்குத் தேவை. சிறிய உளியும், பெரிய உள்ளமும், சுதந்திர இந்தியாவிலே இதுபோலவே வாலிபர்களுக்குப் பகுத்தறிவும், சுயமரி[illegible] உண[illegible]ச்சியும் தேவை-புதுவா[illegible] பெற-மு[illegible]ழ்வு பெற.

## மும்மொழிகளில் அச்சுக் கோக்கும் விந்தைப் பொறி!

ஒரு பொறியின் மூலம், ஒரு மொழியில் அச்சுக் கோக்கலாம் அல்லது இரண்டு மொழிகளில் அச்சுக் கோக்கலாம். ஆனால், மூன்று மொழிகளிலும் அச்சுக் கோக்க முடியுமா? எல்லாம் முடியும், அறிவியல் துணையால்!

ஒரே இயந்திரத்தில் மூன்று மொழிகளில் தட்டச்சு செய்யக்கூடிய மின்னணுத் தட்டச்சுப் பொறி ஒன்று இப்போது புழக்கத்துக்கு வந்துள்ளது. இதுபோன்ற மின்னணுத் தட்டச்சுப் பொறி உலகத்திலேயே இதுதான் முதலாவது ஆகும். இந்தியத் தொழிலநுட்ப வல்லுநர் டாக்டர் டி. ஆர். எஸ். கோயெல் இதை உருவாக்கியுள்ளார்.

85352



# கதிர்மதியம் அண்ணா



—புலவர் சி. துரைசுவாமி.

பங்காரு அன்னைக்கு மகவாய்த் தோன்றிப்
பாலகனாய் வளர்ந்துகல்விப் பட்டம் பெற்றுச்
சிங்காரச் சென்னையிலே குடியும் வந்து
சிறப்பனைத்தும் எய்யும்பல செயலில் ஓங்கச்
சங்கீத இசைபோன்று சொல்லின் ஆற்றல்
சக்தியிலே தமிழகத்தைக் கவர்ந்து மேலும்
மங்காத புகழனைத்தும் மதியி னாலே
மாநிலத்தில் மலைபோன்று படைத்தார் அண்ணா!

பகுத்தறிவுப் பெரியாரின் பாதை தன்னில்
படித்தறிவுப் பட்டம்பெற்ற படிப்யில் மேலாம்
தகுந்தறிவு படைத்திட்ட தமிழர் எல்லாம்
தாழ்ந்துவிட்ட நிலையறிந்து உள்ளம் வெம்பி
புகுந்துபர்ந்த சாதிமதப் புராண மெல்லாம்
பொலிந்திருந்த தமிழகத்தைத் தாழ்த்திற் றென்றே
வகுத்தறிந்தார், வஞ்சகத்தின் செயலை நன்கு
வகையோடு களைந்துமதில் வெற்றி கண்டார்!

சொல்லழகு வல்லமையினால் சோர்வில் லாது
தூய்மையுற நாடெல்லாம் சுழன்று வந்தே
தொல்லையுறும் மக்களிடைத் துயரம் நீங்க
துலங்கிடுமவ் வாய்மைதனில் தொடர்ந்து சொல்ல
கல்வியிலே கற்றறியாக்கருத்தை எல்லாம்
கணித்துரைக்கும் அண்ணாபால் விளக்கம் கேட்டு
நல்லறிவு படைத்திட்ட தமிழர் போற்றி
நாடாளும் செங்கோலை அளித்திட் டாரே!



ஆதியிலே உலகிற்கு மறையை ஈந்த
அறிவுமணம் பரப்பியதோர் தமிழர் நாடு,
பாதியிலே, பகுத்தறிவைத் தத்தம் செய்து
பாழான பழைமையிலே மூழ்கிற் றந்தோ!
சாதிமதப் பிரிவாலே இந்தக் கேடு,
சார்ந்ததென உணர்ந்ததனால் அதனை நீக்க
நீதிமனப் புத்தரைப்போல் பாடு பட்டார்;
நேர்மைவழி புதுமைநெறி காட்டிச் சென்றார்.



கலைபூத்த அறிவகமாய், கடலில் தோன்றிக்
களிப்பருளும் ஒளிமுத்தாய், தமிழர் சொத்தாய்
மலைபூத்த மாமணியாய், மாவில் பூத்து
மணம்பரப்பும் மாங்கனியாய் தேன்பூங் கொத்தாய்
நிலைபூத்த மாப்புகழின் வடிவாய்; நெஞ்சில்
நிறைவாகும் பாசத்தின் ஊற்றாய்; கோவிற்
சிலைபூத்த பேரழகாய். திங்கள் தோறும்
சென்றுவரும் கதிர்மதியாய்த் திகழ்ந்தார் அண்ணா!



# எல்லாமே ஆனாய் அண்ணா

கவிஞர் மு. முத்துக்காளத்தி

அண்ணாதான் வாழ்வெமக்கு; அண்ணாதான்
வழியெமக்கு;
அண்ணாதான் பேசவைத்தார்; பேனாவைப்
பிடிக்கவைத்தார்;
எழுதிடுஏழைக் கென்றார்; எழுப்பிடு
நாட்டையென்றார்;
உழைத்திடும் மக்கள்தம்மைப் பிழைக்கநீ
வைப்பாயென்றார்;
மொழிக்காக நாட்டுக்காகப் பிறபட்டோர்
மேன்மைக்காகச்
செயல்பட வைத்த அண்ணா செகத்தினில்
தனித்தலைவர்!

அமுதூட்டி வளர்ப்பாள் அன்னை; அனைத்துமே
தருவார் அப்பா;
அறிவூட்டி வளர்ப்பார் ஆசான்; அன்பான
தோழர்தாமோ
வழிகாட்டி நிற்பார்கள்; உறவின் முறையோ
வரும்இன்ப துன்பத்தில் பங்கு கொள்ளும்;
சான்றோர்கள் ஆன்றோர்கள் அவ்வப்போது
தோன்றும் அறிவுரைகள் சொல்லி வைப்பார்!



இத்தனைபேர் உருவாக்க முனைந்திட் டாலும்
அத்தனைக்கும் உயர்வாக அண்ணாவே
நீஇருந்து
தித்திக்கும்படி செய்தாய் வாழ்வை; திக்கெட்டும்
தமிழ்ப்பண்பைப் பரப்பிவைத்தாய்; தன்மானம்
காத்தாய்;
உத்தமனாய் வாழ்ந்து உயரத்தில் கொண்டு
வைத்தாய்;
அத்தனைக்கும் கைம்மாறாய் அமைந்ததே
இவ்வரசு

தினம்தினம் உன்னையே எண்ணி யெண்ணி
கணம்கணம் திட்டம்தீட்டிக் கழனி யெங்கும்
விளைச்சலைப் பெருக்கி, தொழிலை வளர்த்து
உளைச்சலை நீக்கி, மக்கள் உண்டுசெழித்திடத்
தொண்டுகள் செய்வதாலே தழைத்திடும்
தமிழகம்தான்
நிலைத்தது உனக்கே; நீயும் எமக்கு
எல்லாமே ஆனாய்; எம்ஊனொடும் உயிரொடும்
கலந்தாய் அண்ணா; கலங்கரைவிளக்கம் நீயே'



# அண்ணா வாழ்க!

—கவிஞர் சாமி பழனியப்பன்





தலைகுனிந் திழிந்தி ருந்த
தமிழினம் எழுச்சி பெற்று
நிலையுயர்ந் திடற்கு ழைத்து
நீள்புகழ் தேடித் தந்து
நிலையுறும் அன்பி னாலெம்
நெஞ்சிடம் கொண்டி லங்கும்
தலைவனாம் காஞ்சி தந்த
தகைமைசால் அண்ணா வாழ்க!

அரசியல் தனிலும் நல்ல
அன்பினைக் கமழச் செய்தே
திருசீலக் கொள்கை தந்து
சீர்மிகும் ஒழுக்கங் காத்தோன்!
இரக்கமே உருக்கொண் டெம்மை
இயக்கினான்; மாற்றார் தம்மின்
கருத்துக்கும் மதிப்ப ளித்த
கண்ணியன் அண்ணா வாழ்க!

உருப்படாச் சாதிக் கொள்கை
ஒழிந்திட வழிவ குத்தான்!
திருந்திய திரும ணங்கள்
சீர்பெறச் சட்டம் செய்தான்!
இருமொழித் திட்டம் கண்டான்!
இந்நாடு தமிழ்நா டென்னும்
திருப்பெயர் இலங்கச் செய்த
சீலனாம் அண்ணா வாழ்க!

# அண்ணா... அண்ணா...!

கவிஞர் பட்டுக்கோட்டை இராசேந்திரன்



அறத்தினால் சிறந்தார் சிலபேர் தூய
அகத்தினால் சிறந்தனை அண்ணா!
மறத்தினால் உயர்ந்தார் சிலர்நீ மேலாம்
மாண்பினால் உயர்ந்தனை அண்ணா!
புறத்தினால் தமிழ்த்தாய் களித்தாள்; யாம்உம்
பேச்சிலே களித்தோம் அண்ணா!
திறத்தினால் சிறந்தாய்; எங்குநீ பறந்தாய்?
தேற்றுவார் யாரெமை அண்ணா?

எங்குவான் தம்பி எனநினைத் தாயா,
ஏன்எமைப் பிரிந்தனை அண்ணா?
தாங்குவான் தலைவன் என்றிருந் தாரைத்
தவித்திட விட்டதேன் அண்ணா?
தேங்குவான் உண்டா, நீஅழைத் தாயேல்?
தனித்(து)ஏன் சென்றனை அண்ணா?
ஓங்குவான் புகழே உனக்கிருந் தாலும்
ஒதுங்கிவிட் டாயே அண்ணா!

தாக்கினா ரெல்லாம் கலங்கினார் எதையும்
தாங்கினாய் என்பதால் அண்ணா!
நோக்கினா லுயர்ந்தாய் வடக்கிலும் நீபுகழ்
நாட்டினாய் அரசினால் அண்ணா!

வாக்கினா லெவரும் சுட்டெரித் தாலும்
முறுவல்பூப் பாயே அண்ணா!
தூக்கினா ரெல்லாம் எனினும்ஏன் மறைந்தாய்
தாங்குமா தமிழகம் அண்ணா!

படுத்தவ ரெல்லாம் பதைபதைப் போடெழும்
படிச்செய் தாயே அண்ணா!
தடுத்தவ ரெல்லாம் நிலைகுலை யும்படி
தலைநிமிர்ந் தாயே அண்ணா!
அடுத்தவ ரெல்லாம் வியப்புற நூற்கள்
ஆக்கிவைத் தாயே அண்ணா!
தொடுத்தவன் அம்பு துவண்டு விழும்படி
தோள்நிமிர்ந் தாயே அண்ணா!

வெறுத்தது பாலும் புளித்தது தேனும்
வெல்லம்நேர் சொல்லின்முன் அண்ணா!
சிறுத்தது பாரும் சிலிர்த்தனர் மாற்றார்
சிறந்தஉன் படையினால் அண்ணா!
கறுத்தது கதிரும் எரித்தது நிலவும்
நீஇல் லாததால் அண்ணா!
அறுத்தது நோய்நம் பாசப் பிணைப்பில
அமைதிகொண் டாயே அண்ணா!

# காலத்தை வென்ற மகன் கண் மூடித் தூங்கட்டும்



கவிஞர் இளந்தேவன்

கருமணியில் நிழலாடுங் காஞ்சிநகர்த் தலைமகனே!
கருணையெனுந் தேன்சிந்துங் கண்மலரால் சிரிப்பவனே!
இருவிழிக்குள் வியர்வைவர, இரைப்பைக்குள் குருதிவர
நெருப்புக்கும் வியர்வைவர நீஎங்கே போய்விட்டாய்?

உன்னுதட்டுப் படியினிலே உருண்டுவரும் வார்த்தைகளால்
சின்னமணித் தேர்செய்து செந்தமிழை யேற்றிவைத்தோம்!
சின்னமணித் தேரிருக்க, செந்தமிழ்த்தாய் அங்கிருக்க
மன்னவனே உனைக்காணோம்! மணல்மேட்டில்
தேடுகிறோம்!

வில்லுதட்டைத் தொட்டுரசி விரைந்திடுமுன் நாக்கம்பு
செல்லுமிடம் எல்லாமும் செந்தமிழர் பகைசாயும்
செல்லுமிடம் எல்லாமுஞ் செந்தமிழர் பகைசாய
வெல்லும்வழி தேடிடுமுன் வேறுவழி தேடிவிட்டாய்!

காலநதிக் கரையருகே காத்திருந்த நாங்களெலாம்
மூலபலம் நீயென்றே முன்னேறத் துடித்திருந்தோம்!
ஓலமிடும் புயற்காற்றாய் உள்ளத்தைக் குமுறவிட்டு
நீலநிறக் கடற்கரையை நீதூங்கத் தேர்ந்தெடுத்தாய்!

ஏழைமனை விளக்குகளுக் கிளஞ்சிரிப்பால் ஒளியேற்றித்
தோளினிலே அவருடைய துயர்ச்சுமையைத் தூக்கியநீ
தோளினிலே தூக்கிவைத்த துயர்ச்சுமையே
தலையணையாய்ச்
சாலையிலே தூங்கியதால் சரித்திரத்தைத்
தூங்கவைத்தாய்

சுற்றிவரும் கதிரவனும், தூங்குகின்ற தலைவா! உன்
நெற்றியிலே முத்தமிட்டே நிலமகளைக் கொஞ்சுகிறான்!
நெற்றியிலே உன்னடியின் நீறுதனை வைத்தபின்தான்
வெற்றிமகள் தனையணைக்க விரைகின்றோம் பாரண்ணா!

பெண்ணுக்குள் போட்டவிதை பிள்ளையென வந்துவிடும்!
மண்ணுக்குள் போட்டவிதை மலர்ச்செடியாய் வருவதுண்டு!
மண்ணுக்குள் உனைப்போட மனமில்லாக் காரணத்தால்
கண்ணுக்குள் போட்டிருந்தும் கனவினிலேன் வரவில்லை?

மாலைவந்த பின்னாலும் மனந்தூங்கா வெள்ளலையே!
நீலநிறக் கடலுடம்பு தெளியவரும் பேய்க்காற்றே!
ஓலமிட்டுப் பாடாதீர்; உறுமலுடன் பேசாதீர்;
காலத்தை வென்றமகன் கண்மூடித் தூங்கட்டும்!

# திருவள்ளுவர் திருநாள்



ஏந்த ஆண்டும்போல இந்த ஆண்டும் திருவள்ளுவர் திருநாள், சென்னையிலுள்ள வள்ளுவர்கோட்டத்தில் சிறப்புறக் கொண்டாடப்பட்டது(15.1.85).

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு அரசின் தமிழ்வளர்ச்சித் துறை சார்பில் நடத்தப்பெற்ற இவ்விழாவில் மாண்புமிகு சட்டமேலவைத் தலைவர் சிலம்புச்செல்வர் டாக்டர் ம.பொ.சி., மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க.இராசாராம், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு.ச.இராமச்சந்திரன், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு.இராம.வீரப்பன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி முதலான பலரும் பங்கேற்றனர்.

இவ்விழாவில் பாவாணர் உருவாக்கிய 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி' முதல் மடலம் வெளியிடப்பட்டது.

அன்று மாலை டாக்டர் சீர்காழி ச. கோவிந்தராசன், டாக்டர் சோ. சிவ சிதம்பரம் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

**விழாத் தொடக்கம்**

தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு.கு.சொக்கலிங்கம் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

4-வது ஆட்டை சொல்லும் கட்டுரை

''தமிழ் வளர்ச்சிக்குத் தமிழக அரசு பல்வகையிலும் அரும்பணி ஆற்றி வருகிறது. தேரழுந்தூரில் கம்பருக்கு இந்த அரசு நினைவாலயம் எழுப்பியுள்ளது. 1981ல் ஐந்தாம் உலகத் தமிழ மாநாட்டை மதுரைமாநகரிலே நடத்திப் பெருமை கொண்டது. தஞ்சையில் தமிழுக்கென்றேதனியொரு தமிழ்ப்பல்கலைக் கழகம் அமைத்தது. மதுரையில் உலகத்தமிழ்ச் சங்கம் அமைப்பதற்கான ஏற்பாடு நடந்துவருகிறது. அரசவைக் கவிஞர்கள் இந்த அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர். திருக்குறள் நெறி பரப்பு மையம் அமைக்கப்பட்டிருக்கிறது. தேசியகவி பாரதி, தமிழ்த்தென்றல் திரு. வி. க., மறைமலை அடிகளார், வ.வே.சு. ஐயர் உமாமகேசுவரனார், ந.மு.வேங்கடசாமிநாட்டார் ஆகியோருக்கு அரசால் நூற்றாண்டு விழா சீரியமுறையில் நடத்தப்பட்டது. ராஜராஜ சோழனுக்கு ஆயிரமாவது முடிசூட்டு விழா எடுக்கப்பட்டது. தமிழ்வளர்ச்சி இயக்ககம், நலிந்துள்ள தமிழறிஞர்க்கு உதவித் தொகை, ஆட்சிச்சொல் அகராதி தொகுப்பு, திரு.வி.க.விருது, பாவேந்தர் விருது, நூலாசிரியர்க்குப் பரிசு போன்ற வகையிலும் ஆர்வம் கொண்டு செயல்படுத்தி வரும் தமிழக அரசு தமிழக வரலாற்றை ஆறு தொகுதிகளாக விரைவில் வெளியிடவிருக்கிறது.

''இப்படித் தமிழ் முன்னேற்றத்தில் அரசு ஆற்றிவரும் பணிகளில் தமிழ்மக்கள் யாவரும் ஒத்துழைக்கவேண்டும்.''



—இவ்வாறு அரசு தலைமைச் செயலாளர் உரையாற்றிய பின், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் இயக்குநர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

**தலைமையுரை :**

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு.செ. அரங்கநாயகம் அவர்கள் தமது தலைமை உரையின் போது தெரிவித்ததாவது:

"புரட்சித்தலைவர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு, ஆட்சி மொழியாகத் தமிழ் சிறப் படையவேண்டுமென்பதற்காக மூன்றாண்டுத் திட்டம் ஒன்றை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் 70 சதவீதத்திற்கு மேலான பணிகளை நிறைவேற்றிப் பெரு வெற்றி கண்டிருக்கிறோம்.

''எல்லா நிலையிலும் எல்லாத்துறையிலும் தமிழ் வழங்கப்படும் நிலை வந்தால்தான் தமிழ் வளரும். அந்த அளவுக்கு எல்லாத் துறையிலும் தமிழ் வளர்க்கப்பட்டாக வேண்டும்.

''இதுபோன்ற மொழிவளர்ச்சிப் பணிகளை அரசைவிடப் பல்கலைக் கழகங்களே முழுமையாகச் செய்ய முடியும். அந்த அடிப்படையில், கடந்த இரண்டாண்டுக் காலமாக மருத்துவக் கல்லூரியிலும், பொறியியல் கல்லூரியிலும் முதல் இரண்டாண்டுக்காலப் படிப்புக்கான பாடத்தைத் தமிழிலேயே தயாரித்துத் தந்திருக்கிறார்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தார். பல்வேறு துறையிலும் தமிழ் வளருவதற்கான ஆக்கப்பூர்வமான அறிகுறி இது.

''செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியைத் தயாரித்து வந்த பாவாணரின் முயற்சி முழுமைபெற வேண்டும் என்பதற்காகத்தான் அதன் முதல் மடலம் இங்கே வெளியிடப்படுகிறது. மற்றவைகளும் தகுதிமிக்கோரால் விரைவில் உருவாக்கப்பெற்று அரசால் வெளியிடப்படும்.

''புரூக்ளின் மருத்துவமனையிலே இருக்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்களிடம் ஒரு கடிதத்தைத் காட்டியிருக்கிறார்கள். அதில் சில இடங்களில் சீர்திருத்த எழுத்தில்லாமல் இருந்ததைச் சுட்டிக்காட்டி முதல்வர் அவர்கள் வருந்தினார்கள் என அறிகிறோம். தமிழ் முன்னேற்றத்தில் அவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் அவர்கள்.



''எழுத்துச் சீர்திருத்தத்திலும் மற்ற சீர்திருத்தங்களிலும் இந்த அரசு முனைந்து நிற்கும்.''

—மாண்புமிகு கல்வியமைச்சர் இவ்வாறு உரையாற்றியபின், அகரமுதலிஇயக்ககத்தின் இயக்குநர் பேராசிரியர் மதிவாணன் அவர்கள் அகரமுதலி தொகுக்கப்பட்ட விதம்பற்றி விளக்கவுரையாற்றினார்.

**நூல் வெளியீடு**

இதைத் தொடர்ந்து மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்கள் உருவாக்கிய 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி' முதல் மடலத்தை மாண்புமிகு மின்துறை அமைச்சர் வெளியிட, முதற்படியை மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் பெற்றுக் கொண்டார்.

தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் வெளியிடப்பட்ட நூலை அறிமுகப்படுத்தி, அதன் அருமை பெருமைகளைப் பற்றி விளக்கிப் பேசுகையில், ''தமிழ் வளர்ச்சியில் அரசுக்குள்ள ஆர்வத்தின் காரணமாகவே இப்போது இந்த முதல் மடலம் வெளியிடப்படுகிறது'' என்றார்.

**படத்திறப்பு**

''மொழிஞாயிறு'' தேவநேயப்பாவாணர் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு:

''வெறும் அரசு விடுமுறையாகவே கடந்த ஏழாண்டுகளுக்கு முன்புவரை அறிவிக்கப்பட்டிருந்த திருவள்ளுவர் திருநாளை, இப்போது முழுப்பொருளும் விளங்கக் கொண்டாடுகிறோமென்றால், இந்தப் பெருமை மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்களையே சாரும்.



''செந்தமிழ்ச் செல்வர்'' எனப் புரட்சித் தலைவர் அவர்களாலேயே பட்டம் வழங்கிப் பாராட்டப்பட்டவர் பாவாணர். அவருடைய படத்தைத் திறந்துவைத்து, அவர் அரும்பாடுபட்டு உருவாக்கிய 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி'யை வெளியிட்டு அந்த மொழிஞாயிறை நினைவு கூரும் இதே நேரத்தில் —இவ்விழாவுக்குக் காரணமான மாண்புமிகு முதல்வர், தமிழகத்தின் தனநாயகரை நன்றிப் பெருக்கோடு நினைவுகூரவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

''ஆங்கிலத்தை நாம் ஒரு மொழியாக ஏற்போம். ஆனால் அது தமிழின்மேல் ஆதிக்கம் செலுத்த விடமாட்டோம் என்ற கொள்கையுடையது இந்த அரசு. இதுபற்றிப் பெருமை கொண்ட பாவாணர் அவர்கள் மதுரையிலே ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டில் பேசுகையில் 'தமிழுக்கு வாழ்வு வந்துவிட்டது' என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார். தமிழைக் காக்க நாங்கள் இருக்கிறோம். நீங்கள் உணர்ச்சி வசப்படாதீர்கள்; உடலைக் கவனித்துக் கொள்ளுங்கள், என்றெல்லாம் கூறி அவருக்குத் தெம்பளித்தார் நமது புரட்சித்தலைவர்.

''தந்தை பெரியாரை எண்ணி சீர்திருத்த எழுத்தை வெறுப்பவர்கள், பாவாணரை எண்ணியாவது ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டும். பெரியாரை வெறுப்பவர்கள் மட்டுமல்ல; நாங்கள்தான் பெரியாரின் சீடர்கள் என்று கூறிக்கொள்கிறவர்களும் அதை ஏற்க மறுக்கும் வேடிக்கையையும் நாம் பார்க்கிறோம்.

''பதிப்பாளர்கள், பத்திரிகையாளர்கள் எல்லோரும் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்க வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

''தமிழால் முடியும்' என்று புத்தகம் எழுதியவர்களே, 'தமிழ்ப்புலவர்களால் தான் எல்லாம் கெடுகிறது' என்று பேசும் அளவுக்கு இன்றைக்கு நிலைமை வந்திருக்கிறது. இது நல்லதல்ல.

''கல்வி வளர வளர, தமிழைப் பின்னுக்குத் தள்ளுவது போன்ற நிலை உருவாவதைக் காண்கிறோம். இது கூடாது. தமிழ்மொழியை மட்டுமல்ல; தமிழ் உணர்வையும் நாம் இன்றைய இளம் நெஞ்சங்களிலே வளர்த்தாக வேண்டும்.''





—மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் இவ்வாறு உரையாற்றினார்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ச.இராமச்சந்திரன் அவர்கள் பேசியதாவது:

''தமிழுக்குத் தொண்டுசெய்வோன்
சாவதில்லை;
தமிழ்த் தொண்டன் பாரதிதான்
சாவ துண்டோ?'

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் பாடினாரென்றால், நீண்ட நெடுங்காலப் பழக்கம் பாரதியோடு அவருக்கிருந்தது. இப்போது பாரதிதாசனார் இருந்திருந்தால் பாவாணரைப்பற்றி அப்படிப் பாடியிருப்பார்.

''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று கூறியிருக்கிறார் தொல்காப்பியனார். எனவே, கொடுஞ் சொற்களும் கொச்சைச் சொற்களும் தமிழில் இடம் பெறாமல் பார்த்துக்கொள்வோமானால், அதுவே தமிழ் மொழியை வளரச் செய்யும் என்கிறார் பாவாணர்.

''கடலில் மூழ்கிய இலெமூரியாக் கண்டத்தில்தான் மனித இனம் முதலில் தோன்றியது; அங்கிருந்த மக்கள் பேசிய முதன் மொழியே தமிழ்தான என்பது அவரது அசைக்கமுடியாத நம்பிக்கை. இன்று வெளியிடப்பட்ட இந்த அகரமுதலியில் அகரத்தை முதலாகக் கொண்ட சொற்கள் மட்டுமே தொகுக்கப்பட்டுள்ளன. இன்னும் மூன்றுலட்சம் சொற்கள் வரவேண்டும் என்கிறார்கள். பாவாணர் காட்டிய வழியிலேயே மற்ற மடலங்களும் தொகுக்கப்பட வேண்டும்.''

—இவ்வாறு மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தில்-தமிழக அரசில் எத்தனையோ புதுமைகளை, புரட்சிகளையெல்லாம் செய்தார்கள். தமிழ் வளர்ச்சி கருதியும், முன்னேற்றம் கருதியும் அண்ணா கண்ட கனவிற்கெல்லாம் அவர்கள் வடிவம் கொடுத்தார்கள்.

''இந்த வகையிலெல்லாம் அவர்கள் ஒரு முன்மாதிரியான தலைவராகவே விளங்கி வருகிறார்கள்.

''ஒரேவானம், ஒரே பூமி, ஒரே நிலவு என்பதுபோலத் தமிழில் ஒரே மூதறிஞராக விளங்கியவர்தான் நமது பாவாணர் அவர்கள். அவரால் தயாரிக்கப்பட்ட இந்த நூல் தமிழ்த் தாயின் அணிகலன்களில் ஒன்றாகி இன்னும் சிறப்புச் சேர்க்கும் என்பது உறுதி.''

**மேலவைத் தலைவர்:**

மாண்புமிகு சட்ட மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் பேசியதாவது:

''காசிக்குப்போக இயலாதவர்கள், அங்கே போய்வந்தவர்களைத் தரிசித்து மகிழ்வதைப் போல, அமெரிக்காவுக்குச் சென்று மாண்புமிகு புரட்சித்தலைவரைக் கண்டுவந்த நாவலரைப் பார்ப்பதில் நான் பெருமகிழ்ச்சிகொள்கிறேன் 'காலா இங்கே வாடா உன்னைக் காலால் உதைக்கிறேன்' என்றான் பாரதி. அப்படி, காலனை வென்ற நீலகண்டனாக இங்கு வரவிருக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவரை வரவேற்குமுன், அவர் நலம்பெறப் பிரார்த்தனை செய்தோர் அனைவரும் அந்தத் தெய்வத்திற்கு நன்றி செலுத்த அரசு சார்பில் விழா எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

''சூன்யத்திற்கு வந்துவிட்ட நிலையிலே இங்கே நாம் வள்ளுவருக்கு விழா எடுக்கிறோம். 'ஒருநாட்டை அடிமைப்படுத்தவேண்டுமானால் முதலில் அந்த நாட்டு மொழியை அடிமைப்படுத்து' என்றான் ஆங்கிலேயன். அந்தப் பாதிப்பு இன்னும் நீடிப்பதால், பல துறைகளில் தமிழை நிலைநிறுத்தத் தடுமாற வேண்டியுள்ளது.

நமக்கு இரண்டுமொழி வாழ்க்கை மொழியாக உள்ளது. இருதாரம் கூடாது.

சோவியத் நாட்டில், அவர்கள் மொழியிலே தமிழ் இலக்கியத்தை மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்கள். அப்படிப் பிறமொழி இலக்கியங்களைச் சிறப்புறத் தமிழில் இங்கே மொழிபெயர்த்துத் தரும் நிலைமை எப்போது உருவாகப்போகிறதோ!

''ஏதிலார் குற்றம்போல் தன் குற்றம் காண்கிற்பின் தீதுண்டோ மன்னுமுயிர்க்கு' என்றார் திருவள்ளுவர். மற்றவர்களைக் குறைகூறுகிறவர்கள், தாம் செய்த குற்றங்களை நினைத்துப் பார்ப்பதில்லை; அதற்கெல்லாம் குறளோவியம் பயன்படுவதில்லை.''

**சட்டப் பேரவைத் தலைவர்:**

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.க.இராசாராம் பேசுகையில்-''சட்டக்கல்லூரியில் தமிழில் சட்டச்சொற்களை ஆக்கித் தரல்வேண்டும். வடசொற்களைக் கலந்துபேசுவது பெருமைபோலக் கருதப்படும் சிறுமை நீங்கவேண்டும். ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மூத்தமொழியாக இருந்தது என்கிறார் பாவாணர். அதன் பெருமை பாதுகாக்கப்படவேண்டும். நாமெல்லாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சமுதாயம் எப்படியிருக்க் வேண்டும் என்று கூறிவழிகாட்டிய வள்ளுவர் வழிநடக்கவேண்டும். தமிழ் இலக்கியங்களைக் கட்டிக் காக்க வேண்டும்'' என்றார்.

தமிழ்ப் பழங் கலை இயக்கக இயக்குநர் திருக்குறள் வீ.முனிசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

ஒவ்வொன்றையும் பற்றிப் பத்துப் பத்து குறளில் கூறியிருக்கிறார் திருவள்ளுவர்—ஒரு தடவைக்குப் பத்துத் தடவை சொன்னேனே என்று பெரியவர்கள் கூறுவார்களே? அதைப்போல.

இந்த அரசு குறள் வழி நடப்பது. அதனால்தான் திருக்குறளில் 133 அதிகாரம் இருப்பது போல 133 சட்டமன்ற உறுப்பினர்கள் சென்ற தேர்தலில் வந்திருக்கிறார்கள்; இன்னும் வருவார்கள்.

''இங்குள்ள திருக்குறள் மையத்தில் தொடர்ந்து குறள்வகுப்பு நடத்தி வருகிறோம்; யோகி ராமபத்திரன் அவர்களைக் கொண்டு உடற்பயிற்சி மூலமும் குறள் பயிற்சி வகுப்பு நடத்துகிறோம்.

''தூய தமிழை வளர்ப்பது கூட அல்ல; இருக்கிற தமிழ் சாகாமல் பார்த்துக் கொள்வதே இப்போது முக்கியம். கடிகாரம், தீப்பெட்டி போன்ற சாதாரண சொல்லைக் கூட ஆங்கிலத்தில் சொல்லுவது தவிர்க்கப்பட வேண்டும்.







''தன்னுடைய வாழ்வைத் தமிழுக்காக அர்ப்பணித்த பாவாணாரின் புகழ் காப்பது மட்டுமல்ல; தமிழின் புகழையும் காக்கும் இந்த அகரமுதலி.''

**நிறைவுரை:**

உதவித்தொகை வழங்கியும், சிறந்தநூல் ஆசிரியர்களுக்குப் பரிசுகள் கொடுத்தும், அந்நூற்களைப் பதிப்பித்தோர்க்குச் சான்றிதழ்கள் அளித்தும் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் பேசியதாவது:

''பத்தாயிரம் மைல்களுக்கப்பால் புரூக்ளின் மருத்துவமனையில் இருக்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்களைப் பார்க்கச்சென்றோம். செல்லும்போது என்னவெல்லாம் எண்ணிச் சென்றோமோ அதற்கு மேலாகவே அவர் குணம் பெற்றிருப்பது கண்டு பெருமகிழ்ச்சி கொண்டோம்.

''அவருக்கு வரும் ஆபத்துக்கள் கண்டு எதிரிகள் மகிழ்ந்தாலும் அவர் தப்பித்துத்தான் இதுவரை வந்திருக்கிறார். 1958ல், நாடகத்தில் நடித்த போது குண்டுமணி என்ற நடிகர் தவறி அவர்காலில் விழுந்ததால் ஆறு இடங்களில் எலும்பு முறிவு ஏற்பட்டது; அப்போது நலம் பெற்றார். துப்பாக்கியால் சுடப்பட்ட பலபேர் மாண்டிருந்தும், இவர் உயிர் மீண்டார்.

''மனத்திட்பம் ஒருவருக்கு இருக்குமானால் எவரையும் எதையும் வெல்லலாம் என்றார் திருவள்ளுவர். அதற்கு நமது புரட்சித்தலைவர் ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. புரூக்ளின் மருத்துவமனையின் தலைமை மருத்துவர் டாக்டர் பிரீட்மென் என்பார் நம்முடைய முதல்வர் இவ்வளவு விரைந்து நலம்பெற அவரது மனோவலிமையே காரணம் என்றார் எங்களிடம்.

இந்த விழாவிலே அவர் நம்மோடு வந்து கலந்துகொள்ள இயலாவிட்டாலும், விரைவில் வந்து கலந்துகொள்ளுவார்.

''துறைதோறும் தமிழ் ஆக்கமும் ஊக்கமும் பெற மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் பெரிதும் முயன்று வருகிறார்கள். அதனால்தான், எங்கும் எதிலும் என்றும் தமிழ் இருக்கவேண்டுமென்ற கருத்தில் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை என ஒரு தனித் துறையையே முழு அந்தஸ்தோடு அமைத்தார்கள். திருக்குறள் நெறிபரப்பு மையமும் அந்த வகையிலேதான் உருவாக்கப்பட்டது.

''சொற்களுக்குப் பொருள்தரும் நூல்தான் அகராதி. ஆனால், சொற்களின் வேரைக் கண்டறிந்து, என்னென்ன சொற்கள் எந்தெந்தச் சொற்களை வேராகக் கொண்டு பிறந்தன என ஆராய்ந்து கண்டுபிடித்துத் தருவதே அகரமுதலி. இன்று வெளியிடப்பட்ட நூல் அவ்வாறானதேயாகும். பாவாணர் வழியில், இந்த வகையில் இன்றைய இளைஞர்கள் முயலவேண்டும்.

''மற்றமொழிகளில் வேர்ச்சொல் இல்லை; தமிழில் உண்டு. முதலில் லத்தீனும், பிறகு பிரஞ்சும் உலகமொழியாயிருந்தது. இந்த நூற்றாண்டிலேதான் ஆங்கிலம் உலகமொழியாயிற்று. நம் தமிழும் அந்த அந்தஸ்தைப் பெறச் செய்யவேண்டும்.

இந்த ஆண்டு முதல் சிறந்த மொழி பெயர்ப்பாளரை உருவாக்கவென மதுரைப் பல்கலைக் கழகத்திலும், திருச்சி பல்கலைக் கழகத்திலும் பட்டப் படிப்பு வகுப்பு துவக்கப் பட்டுள்ளது.

இந்த ஆண்டுமுதல் சிறந்த மொழி பெயர்ப்பாளருக்குப் பரிசு தரப்படும்; கம்பர் கோட்டத்தில் கம்பர்விழா ஆண்டு தோறும் நடத்தப்படும்; கோவையில் இனி இளங்கோ வடிகளுக்கு விழா எடுக்கப்படும்; திருக்குறள் பற்றிச் சிறந்த ஆராய்ச்சிநூல் எழுதுவோர்க்கு திருவள்ளுவர் விருதும், பத்தாயிரம் ரூபாயும் அளிக்கப்படும். அண்ணாவின் அரசியல், கலை, பண்பாடு பற்றிச் சிறந்த ஆராய்ச்சி நூல் எழுதுவோர்க்கு அண்ணா விருது ரூபாய் பத்தாயிரம் தரப்படும். தெரிந்தவரை, சங்க காலப் புலவர்கள் பிறந்த ஊர்களில் படிப்படியாக நினைவுச்சின்னங்கள் ஏற்படுத்தப்படும்: அவரவர் எழுதிய சிறந்த பாடலொன்று கல்வெட்டில் அங்கே பொறிக்கப்படும்.

100 லட்சம் டன் உணவுதானிய விளைச்சலோடு மிக நிறைவாக இந்தப் புதிய ஆண்டு, துவங்குகிறது. இந்த நிலை தொடரவும், இலங்கைவாழ் தமிழர்கள் இன்னல்கள் நீங்கி அவர்கள் நிலை உயரவும் நாமெல்லாம் விழைவோமாக.''

—இவ்வாறு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.

**பாராட்டும் பரிசும்:**

மொழி பெயர்ப்புத் துறையில் சிறந்து விளங்கிய திரு எம்.ஆர்.பெருமாள் முதலியார், பேராசிரியர் கிளாரன்ஸ் மேத்தா, திரு சி.எம். முத்துசாமி பிள்ளை, திரு கோ.முத்துப்பிள்ளை, திரு கா.ஸ்ரீ.ஸ்ரீ, திரு தி.ந. இராமச்சந்திரன், திரு ஏ. வி. சுப்பிரமணியம் ஆகியோர் இவ் விழாவில் பொன்னாடை போர்த்திப் பாராட்டப்பட்டனர்.

சிறந்த மொழிபெயர்ப்பாளர்கள் ஆண்டு தோறும் இவ்வாறு அரசால் கவுரவிக்கப்படுவார்கள்.

சென்ற ஆண்டில் சிறந்த கவிதை, நவீனம், மொழிஇலக்கிய ஆராய்ச்சி, பொறியியல் மருத்துவம், தத்துவம், சிறுகதை, பயணநூல், வரலாறு, குழந்தை இலக்கியம் ஆகிய பல்வேறு நூற்களைச் சிறப்புற எழுதிய எழுத்தாளப் பெருமக்களுக்கு முதல் பரிசாக இரண்டாயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக ஆயிரம் ரூபாயும் மாண்புமிகு நிதியமைச்சரால் அளிக்கப்பட்டது.

விழா முடிவில் தமிழ்வளர்ச்சி இயக்குநர் திரு.சிலம்பொலி சு.செல்லப்பன் அவர்கள் நன்றி கூறினார்.

**—இல. இராசேந்திரன்**





# தனித் தலைவன்

கவிஞர் பி.வி. கிரி

சமுதாயம் வாழ்வதற்குச்
சரியான வழிகாட்டி
அமுதான தமிழ்க்கடலின்
அற்புதஞ்சேர் படகோட்டி

புரட்சிப்பூ மணந்திடவே
புதுமைசெய்த சிற்பியவன்
வரட்டுவே தாந்தமெலாம்
விரட்டிவிட்ட ஞானியவன்!

சமரசம் ஓங்கிடவே
சமயத்தில் வந்தஒளி
தமக்கென்று வாழாத
தனித்தலைவன் எம்அண்ணா!

நாடுமொழி இரண்டினை
நல்விழியாய்க் கொண்டவனைக்
கூடிநின்று தொழுதிடுவோம்!
கொள்கைவழி நடந்திடுவோம்!









# தாயென வாழ்ந்த அண்ணா

—புலவர் தமிழ்ப்பித்தன்

பூரண நிலவும் தோற்கப்
புன்னகை சிந்தும் மன்னன்;
ஆரணப் பொருளாய்த் தோன்றி
அகிலமே வியக்கச் செய்த
சாரணர் அறிஞர் அண்ணா
தாயகம் போற்றி வாழ்த்த,
சீர்பல அமைத்துத் தந்தார்!
செந்தமிழ் மொழியைக் காத்தார்.

மன்னவர் இதய மெல்லாம்
மக்களின் வாழ்வில் நன்மை
நண்ணிடும் வழியைத் தேடும்!
நயனமும் கவிதை பாடும்!
பன்னருங் கீர்த்தி கொண்ட
பைந்தமிழ் வீரர் அண்ணா
எண்ணவும் முடியா தான
எளிமையில் இன்பங் கண்டார்!

அண்ணலாம் காந்தி யைப்போல்
அன்பருள் வழங்கிச் சென்றார்,
தன்னலப் பேயைக் கொன்று
தரணியைச் செழிக்கச் செய்தார்!
கன்னலைத் தோற்கச் செய்த
காவியப் புலவர்; தூய
வெண்ணிலா போன்றே என்றும்
பார்வையில் குளிர்ச்சி தந்தார்!

தாய்த்திரு நாட்டைப் போற்றித்
தாயகப் பண்பைப் போற்றி
ஆய்வுடை அறிவு நூல்கள்
அன்பொடு போற்றி; நெஞ்சத்
தூய்மையை என்றும் போற்றித்
தொண்டினைப் போற்றிப் போற்றித்
தாயென வாழ்ந்த அண்ணா
தகவினை நினைவோம்! உய்வோம்!



இந்தியத் தாயின் அடிமை விலங்கொடிக்க மக்கள் அனைவரையும் ஓரணியில் திரட்டி, அகிம்சை முறையில் போராட வைத்தவர் அண்ணல் காந்தியடிகள். அவர் கனவு கண்ட இந்தியாவின் அரசியல் விடுதலை கிடைத்து விட்டது. அதுபோலவே, சமுதாய மற்றும் பொருளாதார விடுதலையைப் பெற்றிட, அண்ணலின் நினைவு நாளில் அனைவரும் உறுதி பூண்டு தொடர்ந்து பாடுபடுவோம்!



தமிழ்ச் சமுதாயம் எழுச்சியும் ஏற்றமும் பெற்றிட எழுத்தால், பேச்சால், எண்ணத்தால், செயலால் தூய்மை உள்ளமுடன் தாய்மை உணர்வுடன் பாடுபட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவரது பெயரால் அமைந்துள்ள அரசு அவரது லட்சியங்களையே உறுதியுடன் உண்மையுடன் நிறைவேற்றி வருகிறது. இந்த மகத்தான பணியில் மக்களும் அரசும் தோளோடு தோள் நின்று தொடர்ந்து பணியாற்றிட, தென்னாட்டுக் காந்தி பேரறிஞர் அண்ணாவின் நினைவுநாளில் அனைவரும் உறுதி பூணுவோம்!

# இந்தியாவின் நந்தா விளக்கு

ஜவகர்லால் நேரு



நண்பர்களே தோழர்களே! நம் வாழ்விலிருந்த விளக்கு அணைந்துவிட்டது. எங்கும் இருள் சூழ்ந்திருக்கிறது. உங்களிடம் என்ன சொல்வது, எப்படிச் சொல்வது என்றே தெரியவில்லை. நமது அன்புமிக்க தலைவர், தேசத் தந்தை, நாம் பாபு என்று அன்புடன் அழைத்தவர் நம்மிடத்தில் இல்லை. ஒருவேளை நான் இப்படிச் சொல்வதும் தவறாகத்தான் இருக்கும். என்னதான் இருந்தாலும் இத்தனை ஆண்டுகள் நாம் அவரை நேரில் பார்த்ததைப்போல இனி பார்க்க முடியாது. ஆலோசனை நாடி நாம் அவரிடம் ஓடமாட்டோம். அவரிடம் ஆறுதல் கேட்க மாட்டோம். இது எனக்கு ஒரு பெரிய இடி. எனக்கு மட்டுமல்ல, இந்நாட்டில் லட்சக்கணக்கான மக்களுக்கு இப்படித்தான். நான் தரும் அறிவுரையினாலோ வேறு யாரேனும் வழங்கும் அறிவுரையினாலோ இந்தப் பேரிடியைச் சரிசெய்ய முடியாது.



விளக்கு அணைந்து விட்டது என்றேன். அதுவும் தவறுதான். ஏனென்றால் இந்நாட்டில் எரிந்து கொண்டிருந்த அந்த ஒளிவிளக்கு சாதாரண விளக்கு அல்ல. பல்லாண்டுகள் இந்நாட்டில் ஒளிவிட்டுப் பிரகாசித்த அந்த ஜோதி இன்னும் பல்லாண்டுகள் இந்நாட்டில் ஒளி பரப்பும். ஆயிரம் ஆண்டுக்குப் பின்னரும் அந்த நந்தா விளக்கின் ஒளியை இந்நாட்டில் பார்க்க முடியும். உலகம் அதைப் பார்க்கும். எண்ணற்ற உள்ளங்களுக்கு இந்த ஒளி ஆறுதல் தரும். ஏனெனில் அந்த ஒளிவிளக்கு நிகழ்காலத்தை மட்டும் பிரதிபலிக்கவில்லை. என்றும் அழியாத சத்தியங்களை அது பிரதிபலிக்கிறது. நமக்கு நல்வழி காட்டி, தவற்றிலிருந்து நம்மை விலக்கி, இந்தப் பழம்பெரும் நாட்டை விடுதலைக்கு இட்டுச் சென்றது.

அவருக்குச் செய்வதற்கு இன்னும் எவ்வளவோ இருக்கும்போதே இது நடந்துவிட்டது. அவர் தம் பணியை முடித்து விட்டார் என்றோ, அவர் இனிமேல் அவசியமில்லை என்றோ யார் தான் எண்ண முடியும்? ஆனால் இப்போது, குறிப்பாக நமக்கு இத்தனைச் சிரமங்கள் இருக்கும்போது, அவர் நம்மிடம் இல்லாதது தாங்க முடியாத பேரிடியாகும்.

ஒரு பைத்தியக்காரன் அவரது வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டான். இதைச் செய்தவனை நான் பைத்தியம் என்றுதான் சொல்லமுடியும். இருப்பினும் கடந்த சில ஆண்டுகளில் நம்நாட்டில் வேண்டிய அளவு விஷம் பரவியிருக்கிறது. இந்த விஷம் மக்கள் உள்ளத்திலும் விளைவை ஏற்படுத்தியுள்ளது. இந்த விஷத்தை நாம் சமாளிக்க வேண்டும். இதை வேரோடு ஒழிக்க வேண்டும். நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கும் எல்லா இன்னல்களையும் சமாளிக்கத்தான் வேண்டும். வெறியுடனோ மோசமாகவோ அவற்றைச் சமாளிக்கக்கூடாது. நமது அன்புக்குரிய தலைவர் கற்றுத் தந்த வழியில் அவற்றைச் சமாளிக்க வேண்டும்.

நம்மைச் சூழ்ந்திருக்கும் இன்னல்களைச் சமாளிக்கும் உறுதியுடன், நமது மாபெரும் ஆசான்-நமது மாபெரும் தலைவர் நமக்குத் தந்துள்ள கட்டளையை நிறைவேற்றும் உறுதியுடன், அவரது ஆத்மா மேலிருந்து நம்மைப் பார்க்க நேர்ந்தால் நாம் ஒரு சிறிய வன்முறைச் செயலில் ஈடுபட்டாலும், அவரது ஆத்மா வேதனையடையும் என்ற நினைவுடன் நாம் நடந்துகொள்ள வேண்டும்.

ஆதலால் நாம் அப்படி வன்முறையில் ஈடுபடக்கூடாது. அதற்காக நாம் பலவீனமாக இருக்க வேண்டும் என்று அர்த்தமில்லை. நம் முன் உள்ள எல்லா இன்னல்களையும் வலுவான ஒற்றுமையுடன் சமாளிக்க வேண்டும். நாம் ஒன்றுபட்டே இருக்கவேண்டும். இந்தப் பெரும் சோகத்தில் நமது சில்லறைச் சிரமங்களும் இன்னல்களும் தகராறுகளும் தீர வேண்டும். இத்தகைய சோக நிகழ்ச்சியின்போது வாழ்வின் பெரிய விஷயங்களை நினைத்துக் கொள்ளவும், நாம் அதிகமாக நினைக்கும் சிறிய விஷயங்களை மறந்துவிடவும் வேண்டும். அவர் தமது மரணத்தில் வாழ்வின் பெரிய விஷயங்களை, வாழும சத்தியத்தை, நமக்கு நினைவூட்டியுள்ளார். அதை நாம் நினைத்தால் இந்தியாவுக்கு நல்லது.

லட்சக்கணக்கான மக்கள் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் பொருட்டு மகாத்மாஜியின் உடலை ஒரு சில நாட்கள் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும் என்று சில நண்பர்கள் யோசனை சொன்னார்கள். ஆனால் இப்படி எதையும் செய்யக்கூடாது என்பதே அவரது விருப்பம். இதை அவர் பலமுறை சொல்லியும் இருக்கிறார். அவரது உடலைத் திரவத்தில் பக்குவமாய்ப் பாதுகாப்பது அவருக்குப் பிடிக்காத ஒன்று. மற்றவர்கள் என்னதான் விரும்பினாலும் இந்த விஷயத்தில் அவரது விருப்பப்படி நடப்பதென்று முடிவு செய்தோம்.

டில்லிக்கு வெளியே இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ளவர்கள் இந்த இறுதி அஞ்சலியில் முடிந்த அளவு பங்கு பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை. அவர்களுக்கும் இது உண்ணா விரதமிருந்து பிரார்த்தனை நடத்தும் நாளாக இருக்கட்டும்.

பிரார்த்தனை செய்யும்போது சத்தியத்துக்கு நம்மையே அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். இந்த மாபெரும் புருஷர் எந்த நோக்கத்துக்காக வாழ்ந்தாரோ, எதற்காக உயிர் இழந்தாரோ அந்த நோக்கத்துக்காக அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். இதுதான் நாம் செய்யக்கூடிய மிகச் சிறந்த பிரார்த்தனை. இதைவிடச் சிறந்த பிரார்த்தனை அவருக்காகவோ, அவரது நினைவுக்காகவோ நாம் செய்ய இயலாது. இந்தியாவுக்கும் நமக்கும் இதுதான் மிகச் சிறந்த பிரார்த்தனை.

(காந்தியடிகள் மறைவு எய்திய 30.1.1948 அன்று வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து...)

## தொழிலாளர் ஆசிரியர்கட்குப் பயிற்சி

சென்னைத் துறைமுகப் போக்குவரத்துக் கழகமும், வட்டாரத் தொழிலாளர் கல்வி இயக்ககமும் இணைந்து நடத்திய தொழிலாளர்-ஆசிரியரை உருவாக்கும் பயிற்சி வகுப்பு நிறைவு விழா, சென்னைத் துறைமுக நிர்வாக அலுவலகத்தில் 9.1.85 அன்று நடைபெற்றது.

இந்தப் பயிற்சி வகுப்பு முகாம் டிசம்பர் 10-ஆம் தேதி தொடங்கி, ஒரு மாத காலம் நடைபெற்றது. இதில் 28 பேர் கலந்து கொண்டனர். தொழில்துறை பற்றியும், அணுகு முறைகள் பற்றியும் அறிந்து கொண்டனர்.

சென்னை வட்டாரத் தொழிலாளர் நலக் கல்வி இயக்குநர் (பொறுப்பு) தலைமை வகித்துப் பேசுகையில, "இதுவரையில் தொழிலாளர்கள் முகாம்கள் நெய்வேலியிலும், சென்னையில் சில இடங்களிலும் நடத்தப்பட்டுள்ளன. தொழிலாளர்கள், கருத்துகளை உருவாக்கும் தலைவராக உருவாக வேண்டும். குடும்ப நலம், சேமிப்பு முதலியவற்றில் நாட்டம் செலுத்த வேண்டும்'' என்றார்.

இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் தலைவர் திரு ஆர் ரகுபதி, அகில இந்திய தொழிலாளர் யூனியன் காங்கிரஸ் தலைவர் திரு எம். ஜெயவேலு, இந்து மஸ்தூர் சபா தலைவர் திரு எஸ். கனகசபை ஆகியோர் தொழிலாளர் கல்வி ஆசிரியர் பயிற்சியில் தங்கள் அனுபவத்தை விளக்கிக் கூறினார்கள்.

துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் துணைத் தலைவர் திரு எஸ். கணேசன் நிறைவுச் சொற்பொழிவு ஆற்றுகையில், "நிர்வாகத்தின் தலைவராக அல்லாமல் இந்தப் பயிற்சியின் மூலம் தொழிலாளர் தலைவராக விளங்க வேண்டும். கடந்த 5 ஆண்டுகளில் துறைமுகம் துரித வளர்ச்சி பெற்றுள்ளது. நிர்வாகத்திற்கு நல்ல ஆலோசனைகளை வழங்கக் கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

சென்னைத் தொழிலாளர் கல்வி அலுவலர் திரு எஸ். ஆர். ராதாகிருஷ்ணன் வரவேற்றுப் பேசினார்.

விழா இறுதியில் துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் பயிற்சி மேலாளர் திரு எம். ஆர். ரங்கநாதன் நன்றி கூறினார்.




# அகிம்சைக்கோர் அண்ணல்



—கல்கி—

பிறக்கும்போதே காந்திஜி மகாத்மாவாகப் பிறந்துவிடவில்லை. எல்லாரையும் போல் அவரும் பிறந்தபோது சாதாரண குழந்தையாகத்தான் பிறந்தார். அப்படிப் பிறந்த குழந்தை மாநிலத்துக்கு ஒரு தலைவராகவும் மனித குலத்துக்கு ஒரு வழிகாட்டியாகவும் பிற்காலத்தில் ஆகப்போகிறது என்று அப்போது யாரும் எண்ணவில்லை; குழந்தையின் பெற்றோர்களும் அவ்விதம் நினைக்கவில்லை.

இந்திய தேசப் படத்தில் குஜராத் எனப்படும் கூர்ஜரத்துக்கு மேலே கத்தியவார் என்று இருக்கிறதல்லவா? இந்தப் பிரதேசத்திலேதான் முன்னொரு சமயம் ''ஸ்ரீ கிருஷ்ண பகவான்'' வட மதுரை நகரை விட்டு வந்து, துவாரகை என்னும் புதிய தலைநகரை அமைத்துக் கொண்டார். எதற்காகத் தெரியுமா? ஸ்ரீ கிருஷ்ணன் மதுரையின் மன்னராயிருந்தபோது ஓயாமல் பொல்லாத பகைவர்களுடன் யுத்தம் செய்ய வேண்டியிருந்தது. ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு யுத்தம் போதும் போதும் என்று ஆகிவிட்டது. ''யுத்தமும் வேண்டாம்; மதுரை ராஜ்யமும் வேண்டாம்!'' என்று சொல்லிவிட்டு,



ஸ்ரீ கிருஷ்ணபகவான் தம்முடைய உற்றார், உறவினர், நண்பர்கள், பிரஜைகள், சேனா வீரர்கள் எல்லாரையும் அழைத்துக்கொண்டு கத்தியவாருக்கு வந்துவிட்டார்.

இப்படிச் செய்வதன் மூலமாகவாவது அந்தப் பகைவர்களின் மனத்திலுள்ள துவேஷம் போகாதா, பகைமை மறையாதா, அவர்கள் நல்லவர்களாகிவிட மாட்டார்களா என்று நினைத்தே பகவான் அவ்விதம் செய்தார்.

கத்தியவார் கடற்கரையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் துவாரகை நகரைக் கட்டிக்கொண்டார். இதனாலேதான் துவாரகாபுரி ஆலயத்திலுள்ள கண்ணபெருமானுக்கு 'ரண சோட் நாதர்' என்ற திருநாமம் வழங்கி வருகிறது. ரணம்: யுத்தம்; சோட்: விட்ட; நாதர்: பெருமான்)

பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு அதே கத்தியவார் பிரதேசத்திலேதான், ''யுத்தம் வேண்டாம்! பகைமை வேண்டாம்!'' என்று உபதேசித்த காந்தி மகானும் பிறந்தார். அவர் பிறந்த ஊருக்குப் போர்பந்தர் என்று பெயர். 'சுதாமாபுரி' என்ற பழைய பெயரும் அந்தப் பட்டணத்துக்கு உண்டு. 'சுதாமா' என்பது குசேலருக்கு இன்னொரு பெயர்.

பெரிய மகான்களுடைய வாழ்க்கையைப் பற்றி நாளடைவில் கற்பனைக்கதைகள் பல உண்டாகிச் சேர்ந்து விடுவது வழக்கம். மகாத்மா தம்முடைய சரிதையைத் தாமே எழுதியிருக்கிறபடியால் அவரைப் பற்றிக் கற்பனைக் கதைகள் ஏற்பட இடமில்லாமற் போய்விட்டது. ஆனால், என்ன துரதிர்ஷ்டம்! 1920ஆம் வருடத்தோடு மகாத்மா தமது சுய சரிதத்தை நிறுத்திவிட்டிருக்கிறார். அதற்குப் பிறகு எத்தனை எத்தனை அற்புதச் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன! இன்னும் சில காலம் அவர் வாழ்ந்திருந்து இந்தியா சுதந்தரம் அடைந்த 1947 ஆகஸ்டு 15ஆம் நாள் வரையில் தமது சரிதத்தை எழுதிப் பூர்த்தி செய்திருக்கக் கூடாதா? அது முடியாதபடி ஒரு கொடும் பாதகன் அவரைக் கொலை செய்து விட்டானே!

(''மாந்தருக்குள் ஒரு தெய்வம்'' என்னும் நூலிலிருந்து)




நாம் அணியும் ஆடையையே நுண் கிருமிகளை ஒழிக்கவும் தொத்து நோய்களைக்கட்டுப்படுத்தவும் பயன்படுத்தலாம். இத்தகைய அதிசய ஆடையைப் பிரெஞ்சு ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். உண்மையில் இந்தப் புதுமை ஆடையில் இல்லை. அந்த ஆடையின் ஏற்படுத்தப்படும் ரசாயன மாற்றத்திலேயே இருக்கிறது. ஆனால், இத்தகைய ஆடையில் ஏற்படுத்தப்பட்ட ரசாயன மாற்றம் முதல் சலவையிலேயே மறைந்துவிடும். குறை இருப்பதையும் இந்த ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (Lille) லில்லே பல்கலைக் கழகத்தின் நுண்கிருமி இயல் விஞ்ஞானிகளும் பிரெஞ்சு டெக்ஸ்டைல் டெக்ஸ் யூனியனும் இணைந்து இந்த ஆடைக்கான செயல்முறைகளை ஆராய்ந்தனர். நைட்ரஜன் அம்மோனியா ஆகியவற்றிலிருந்து பெறப்படும் அம்மோனியம் கூட்டுப்பொருள்கள் இந்த ஆடையில் பயன்படுத்தப்படுகின்றன. ரசாயன மாற்றத்தின் மூலம் ஆடையிலுள்ள நுண்துளைகளில் இப்பொருள்கள் நிறைகின்றன. இந்தத் துணியை ஈரம் படாமல் தீப்புண்களிலும், பிற புண்களிலும் போடுவதன் மூலம் கிருமிகளை அழிக்க முடியும்.

பிரசவ வேதனை எனும் பிரச்னையைத் தீர்க்க ஒரு புதிய முறை! வலியின்றி குழந்தை பெற்றுக் கொள்ள மருந்தொன்றைக் கண்டுபிடித்துள்ளனர். சிசரியன் போன்ற அஞ்சத்தக்க அறுவைச் சிகிச்சையையும் இதனால் தவிர்க்கலாம். ( Prostaglahdin ) புரோஸ்டாகிளண்டின்) எனும் புதிய மருந்தினால் இது சாத்தியமாகிறது. இந்த மருந்தைக் கருத்தரித்த தொடக்க நிலையில் கருச்சிதைவுக்கும் பயன்படுத்தலாம். இதனை உட்கொள்வதால் கருப்பை சுருங்குகிறது. இதனால் குழந்தையோ அல்லது சிதைந்த கருவோ எளிதில் வெளிக் கொணரப்படுகிறது என்று நோபல் பரிசு பெற்ற மகப்பேறு மருத்துவத் துறை வல்லுநர், பெர்க்ஸ்டார்ம் (Bergstorm), பேராசிரியர் உம்ஸ்டன் ( Ulmsten) ஆகியோர் விளக்கினர். இந்த மருந்தைச் சோதனை முறையில் பயன்படுத்திப் பார்க்க இந்திய மருத்துவக் கழகம் திட்டமிட்டிருக்கிறது. இதற்கு உலகச் சுகாதார நிறுவனத்தின் ஒத்துழைப்பும் இருக்கும்.



பருத்திக் கொட்டையிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட புதிய பாதுகாப்பான கருத்தடை மருந்தை சீன விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர். கோசிபோல் ( Gossipol ) பெனோலிக் ( Phenolic ) எனப்படும் இந்த சக்திவாய்ந்த கருத்தடை மருந்தினை 4 ஆயிரம் ஆண்கள் மூலம் பரிசோதித்துப் பார்த்ததில் 99 புள்ளி 89 சதவீத வெற்றி கிடைத்திருக்கிறது. கருத்தடை மாத்திரைகளை உட்கொள்ளத் தயங்கும் பெண்கள்கூட இந்த எண்ணெய் வகை மருந்தினைப் பயன்படுத்தலாம் என்று லக்னோவில் உள்ள மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவனம் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

பூச்சியினங்கள் தாய்லாந்தின் வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கவும் உணவுப் பண்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. வறுத்தல், வாட்டல், கொதிக்கவைத்தல், புதைத்துவைத்தல் எனும் பல நிலைகளில் பூச்சியினங்கள் பக்குவப்படுத்தப்படுகின்றன

பத்துக்கும் மேலான வகைகளில் பூச்சிகள் பயன்படுத்தப்படுகின்றன. பூச்சி உணவு சுவையாக இருப்பதோடுகூட அதிகபட்ச புரோட்டின் சத்துக்களையும், தாதுப்பொருட்களையும், விட்டமின்களையும் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. பூச்சியினங்கள் மட்டுமின்றி, பல்லிகள், பாம்புகள், ஆமைகள், தவளைக் குஞ்சுகள் ஆகியவையும் தாய்லாந்து கிராமவாசிகளுக்குச் சுவையூட்டும் உணவுப் பொருள்களாகவுள்ளன.

நிக்கோடின் அமிலம் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் என்கிறார்கள். ஆனால் சில மருந்துப் பொருள்களில் அதைச் சேர்த்திருப்பது ஏன்?

நிக்கோடின் வேறு. நிக்கோட்டினிக் அமிலம் வேறு. நிக்கோடின் என்பது புகையிலையில் உள்ள ஒரு நச்சுப் பொருள். ஆல்கலாயிட் என்ற வகையைச் சேர்ந்தது. இது உடலுக்குத் தீங்கு விளைவிக்கும். நிக்கோட்டினிக் அமிலம் அல்லது நியாசின் என்பது மிகக் குறைந்த அளவில் உடலுக்குத் தேவைப்படும் வைட்டமின் வகையைச் சேர்ந்த ஒரு வேதிப் பொருள். அதனால் இதைச் சில மருந்துகளிலும் டானிக்குகளிலும் சேர்க்கிறார்கள்.

சாலையில் செல்லும் வாகனங்களில் இருந்து வெளிப்படும் கார்பன் மானாக்ஸைடைக் குறைக்க என்ன செய்ய வேண்டும்?

வாகனங்களில் இருந்து வெளிப்படும் புகையில் உள்ள கார்பன் மானாக்ஸைடின் அளவு மோட்டார் இயந்திரத்தைப் பொறுத்து வேறுபடும். புகை வெளியேறும் பாதையில் சில உறிஞ்சிகளையும் இரசாயனப் பொருள் களையும் அமைத்து, இதனைக் குறைக்கலாம். கார்பன் மானாக்ஸைடு வாயுவை ஆக்ஸிஜன் ஏற்றம் செய்து கார்பன்டை ஆக்ஸைடாக மாற்ற வேண்டும். இதற்கு உயர் உலோகக் கலவைகளை மேற்பூச்சாகக் கொண்ட சுட்ட களிமண் உருண்டைகளையோ (Ceramic Pellets ) அல்லது பிளாட்டினம், பல்லேடியம், ரோடியம் ( Rhodium ) உலோகங் களைக் கொண்ட தேன்கூடு போன்ற நுண் அமைப்புகளையோ பயன்படுத்தலாம். இத னால் நச்சுத் தன்மை உள்ள மானாக்ஸைடு தீங்கற்ற கார்பன்டை ஆக்ஸைடாக மாற்றப் படுகிறது.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் துணிகள், பெயிண்டுகள் ஆகியவற்றில் உள்ள வண்ணங்கள் ( dyes) எந்தப் பொருள்களில் இருந்து செய்யப்படுகின்றன?

நிறமுள்ள ஒரு பொருள் தன்னுடன் சேர்ந்த இன்னொரு பொருளுக்கு நிலைத்த நிறத்தைக் கொடுக்க முடியுமானால் அதனை 'dye' அல்லது சாயம் என்கிறோம். பழங்காலத்தில் தாவரங்கள் அல்லது மிருகங்களிலிருந்து சாயப் பொருள்கள் பெறப்பட்டன. மத்தியதரைக் கடலில் உள்ள ஒருவகை நத்தையினத்திலிருந்து எடுக்கப்பட்ட டிரியன் பர்ப்பிள் என்ற நிறத்தை அரசர்கள் திலகமாகப் பயன்படுத்தினார்கள். இண்டிகோ அவுரிச்சாயம் தாவரத்திலிருந்து எடுக்கப்பட்டதை அறிவோம். தற்போது சாயங்கள் இரசாயன முறையில் பெரும் அளவில் தயாரிக்கப்படுகின்றன. (பெர்க்கின் என்பவர் 1856ல் முதல் செயற்கைச் சாயத்தைத் தயாரித்தவர்). பென்சீன், டொலுவீன், நாப்தலீன் முதலிய நிலக்கரித் தார் கரிமச்சேர்மங்களை அடிப்படையாகக் கொண்டு டைஅசோடைசொஷன் முதலிய பல வேதி வினைகளால் தேவைக்கேற்ப இச்சாயங்கள் தயாரிக்கப்படுகின்றன.

– விடையளித்தவர்:
டாக்டர் சுந்தரம்.

**1816**ல் இங்கிலாந்தில் கோடைகாலம் தோன்றாமல் போனதற்குக் காரணம் விண்ணிலே தூசிப் படலம் அதிகரித்ததால்தான் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுபோன்று நேராமல் இருக்க தற்போது ஆய்வு செய்யப்பட்டு வழி கண்டுபிடித்திருக்கிறார்களா?

மூடுபனியும் (Fog) புகையும் (Smoke) ஒன்று சேர்ந்தால் Smog என்று சொல்லப்படும் ஒரு பொருள் உருவாக ஏதுவாகிறது. Smog உருவானபின் காற்று மண்டலத்தை அடைகிறது. இதன் அளவு மிகவும் அதிகமானால் வானத்தில் மேகங்கள் உள்ளது போல், பூமியின் மேல் மட்டத்திலேயே Smog பரவி பார்வையின் தொலைவைக் குறைக்கிறது. சூரிய ஒளியும் பூமியின் மேல் படாதவாறு தடுக்கிறது. பூமியில் சூரிய ஒளி இல்லையேல் மனித மற்றும் தாவர விலங்கு வாழ்க்கைகள் பெரிதளவு பாதிக்கப்படுகின்றன. இதைத் தவிர்ப்பதற்காகப் பல ஆய்வுகள் நடந்து கொண்டுள்ளன. அதன் விளைவாகத் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் புகையை மிகவும் சீரிய முறையில் சுத்திகரித்து அதன் பின்னரே வெளிப்படுத்த வேண்டும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத்தகைய புகையைச் சுத்திகரிப்பதற்காகப் பலதரப்பட்ட முறைகள் இன்று வகுக்கப்பட்டுள்ளன.

—விடையளித்தவர்:
டாக்டர் ஜெ. என். ராமசாமி



## உலக நகைச்சுவை மாநாடு!

ஐதாராபாத்தில் 1985 பிப்ரவரி 8ஆம் தேதி முதல் 12ஆம் தேதி முடிய 'உலக நகைச் சுவை மாநாடு' நடைபெறும். உலகில் இத்தகைய மாநாடு நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும்.

மாநாட்டின் முக்கிய நோக்கம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் சர்வதேச நல்லெண்ணத்தை ஏற்படுத்துவதாகும். நிகழ்ச்சிகள் இந்திய மற்றும் 9 வெளிநாட்டு மொழிகளில் நடைபெறும்.

பிப்ரவரி 10ஆம் தேதி உலக நகைச் சுவைகள் பற்றிச் சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெறும்.

பிப்ரவரி 9ஆம் தேதி நகைச்சுவைத் திரைப்பட விழாவை மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சர் திரு வி. என். காட்கில் அவர்கள் தொடங்கி வைப்பார்.

துருப்பிடிக்காத எஃகு எவ்விதம் தயாரிக்கப்படுகிறது?

குரோமியம், நிக்கல் உலோகங்களைத் தகுந்த அளவில் இரும்புடன் சேர்த்து துருப்பிடிக்காத எஃகு தயாரிக்கப்படுகிறது. உதாரணம்: 18 குரோமியம், 8 நிக்கல், எஃகு, ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் (எவர்சில்வர்) எனப்படுவது. இதில்கார்பன் 0.1 சதவிகிதத்திற்கும் குறைவாக இருக்க வேண்டும்.

—விடையளித்தவர்:
டாக்டர் கே. ஏ. பத்மநாபன்

பெண்களை 'Weaker Sex' அதாவது பலவீனமானவர்கள் எனக் குறிப்பிடுவதுண்டு. ஆனால், பிறந்தவுடன் குறிப்பாக மூளை வளர்ச்சியைப் பொறுத்தவரை பெண் குழந்தைகளே வலிமையானவர்கள் என ஜெர்மானிய நாட்டுப் பெண் மருத்துவ விஞ்ஞானிகள் இருவர் கூறுகின்றனர். பெண் குழந்தைகளின் கேட்கும் திறன் ஆண் குழந்தைகளைவிடத் துல்லியமானதாக உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் ஆண் குழந்தைகளின் நரம்பு மண்டல வளர்ச்சி குறைவாகவே இருப்பதாலேயே. பொதுவாக, பிறந்த குழந்தைகள் தங்கள் ஆறறிவினை உபயோகப்படுத்துவது-முதலில் கையால் தொட்டு உணர்தல், பின் மூக்கினால் வாசனை அறிதல், பிறகு காதால் கேட்டல் என்றவரிசையிலேயே நிகழ்கிறது. இவ்வரிசை வளர்ச்சி ஆண் குழந்தைகளுக்குப்படிப்படியாகவே நிகழ்கிறது. ஆனால் பெண் குழந்தைகளுக்கோ தொடுதல், நுகர்தல், கேட்டறிதல் ஆகிய மூன்று உணர்ச்சிகளும் குறிப்பிடத் தகுந்த அளவு வேகமாக மொத்தமாக வளர்வதாக ஜெர்மானிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

# சேமிப்புப் பத்திரம்: தமிழக அரசு சலுகை



தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத் துறை, சென்னையில் நடைபெறும் அனைத்திந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் பங்கேற்று தேசிய சேமிப்புப் பத்திரங்கள் VI மற்றும் VIIவது வெளியீட்டுப் பத்திரங்களை விற்பனை செய்கிறது.

கடந்த ஆண்டு சுற்றுலாப் பொருட்காட்சி சிறுசேமிப்பு அரங்கில் தேசிய சேமிப்புப் பத்திரம் வாங்கியோருக்கு 1% ரொக்க ஊக்கத் தொகை வழங்க, அரசு ஆணையிட்டது. இந்த ஊக்கத் திட்டம் பிறகு மாவட்டங்களில் நடைபெற்ற மற்ற அரசுப் பொருட்காட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

கடந்த ஆண்டு சென்னைப் பொருட்காட்சியில் தேசிய சேமிப்புப் பத்திரத்தின் மூலம் வசூல் செய்யப்பட்ட ரூ.190 லட்சத்தில் பெரும்பாலான தொகை 1% ஊக்கத் தொகை மூலம் வசூலிக்கப்பட்டதாகும். பொதுமக்களின் இந்த அமோக வரவேற்பைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் இனி நடைபெறும் அனைத்து அரசுப் பொருட்காட்சிகளிலும் ரூ. 10,000க்கு மேல் பத்திரம் வாங்குவோருக்கு 1% ஊக்கத் தொகை வழங்க ஆணையிட்டுள்ளது.

எனவே, 1% ஊக்கத் தொகை சென்னையில் நடைபெறும் சுற்றுலாப் பொருட்காட்சியில் தேசிய சேமிப்புப் பத்திரம் VI மற்றும் VII-வது வெளியீடு வாங்கும் பொதுமக்களுக்கு வழங்கப்படும்.

பொருட்காட்சியில் தேசிய சேமிப்புப் பத்திரங்களைச் சிறுசேமிப்பு முகவர்கள் மூலமாகவும் வாங்கலாம். முதலீட்டுத்தாரர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். சுற்றுலாத் தொழிற் பொருட்காட்சியில் இவ்வாண்டு வசூல் கடந்த ஆண்டைவிட உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொருட்காட்சி அரங்கில் வாங்கப்படும் தேசிய சேமிப்புப் பத்திரங்களுக்கு இரு வாரத்திற்கொரு முறை அதிர்ஷ்டக் குலுக்கல் நடத்தப்படும்.

1983-84ல் சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் ரூ.67.10 கோடி வசூலிக்க வேண்டுமென மாநிலம் முழுவதற்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இவ்விலக்கினை மிஞ்சி ரூ.83.42 கோடி வசூல் ஆனது.

1983-84ல் சிறு சேமிப்பு வசூல் நன்றாக இருந்தது. அனைத்து மாவட்டங்களும் இலக்கினை மிஞ்சியது கடந்த ஆண்டின் முக்கிய அம்சம். இது சேமிப்புப் பழக்கம் மாநிலத்தின் முன்னேற்றம் அடைகிறது என்பதைத் தெளிவாக்குகிறது.

1984-85ஆம் ஆண்டிற்கு ரூ. 105 கோடி சிறுசேமிப்பு நிகர வசூல் செய்ய வேண்டுமென்று அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. நவம்பர் '84 முடிய சிறுசேமிப்பு நிகர வசூல் ரூ. 38.81 கோடியாகும். இதே காலத்தில் கடந்த ஆண்டு சிறுசேமிப்பு நிகர வசூல் ரூ. 10.70 கோடி ஆகும்.

மாநிலத்தில் திரட்டப்படும் சிறுசேமிப்பு வசூலில் 3ல் 2 பங்கு 20 ஆண்டுகளில் செலுத்தப்படும் நீண்ட காலக் கடனாக மாநில அரசுக்கு இந்திய அரசு வழங்குகிறது.

சிறு சேமிப்புத் திட்டத்தில் பொதுமக்களால் முதலிடப்படும் தொகை அவர்கள் குடும்பத்திற்கு உதவுவது மட்டுமின்றி, மாநிலத்திற்கும் நிதி ஆதாரமாகவும் முன்னேற்றத் திட்டங்களுக்கும் பயன்படுகிறது.

**(26.12.84 அன்று செய்தியாளர்கள் கூட்டத்தில் சிறு சேமிப்பு இயக்குநர் திரு க. சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப. தெரிவித்த தகவல்களிலிருந்து).**

**வௌவால்**களும், டால்பின் வகை மீன்களும் ''கேளா ஒலிகளை'' வெளிப்படுத்தி அவைகளின் எதிரொலி கொண்டு வழி அறிவது நமக்குத் தெரிந்த உண்மை. இவைகளைப் போலவே எலிகளும் இருட்டில் வழி அறிய 'கேளா ஒலிகளை' மூக்கினாலும், பற்களை நெரிப்பதாலும் வெளிப்படுத்துகின்றன என அமெரிக்கா உயிரியல் விஞ்ஞானி ஒருவர் கூறுகிறார். மூக்கினால் வெளிப்படுத்தும் சப்தத்தைக் குறைந்த தூரத்திற்கும், பற்களை நெரிப்பதால் வெளிப்படும் ஒலிகளைத் தொலை தூரத்திற்கும் எலிகள் பயன்படுத்துகின்றனவாம். இவ்வகை ஒலிகளின் அலை எண் சுமார் 8Khz அளவுள்ளதாகவும், இவ்வகை ஒலிகள் எலிகளின் இரவு நேர எதிரியான ஆந்தைகள் கேட்க முடியாதபடியும் உள்ளனவாம். எலிகளின் காதுகளை அடைத்து ஆராய்ச்சிகள் நடத்தி இவ்வுண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**'T**attooing' உடம்பில் பச்சை குத்திக் கொள்வது இக்கால மருத்துவ முறையான 'Acupuncture'க்கு ஒப்பானதோ என ஒருபுறம் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அதே சமயம் குத்தப்பட்ட பச்சைக் குறிகளை நீக்க வழிமுறைகளையும் விஞ்ஞானிகள் கண்டு வருகின்றனர். தற்போது நடைமுறையில் உடம்பில் குத்தப்பட்ட பச்சைக் குறியை நீக்க இரு வழிகள் உள்ளன. முதல் வழியில் குத்தப்பட்ட பகுதியின் அளவுக்கு ஏற்ப தோல் பகுதியை வழித்தோ அல்லது வெட்டி எடுத்து வேறு பகுதியை ஒட்டியோ பச்சை குத்திகளை நீக்குகின்றனர். இரண்டாவது முறையில் குத்தப்பட்ட பச்சைக்குறிகளை நீக்க தொடர்ச்சியான லேஸர் கதிர்களை இப்பகுதி மீது செலுத்துகின்றனர். லேஸர் கதிர்கள் பச்சை மையை மட்டுமல்ல, பல சமயம் தோல் பகுதிகளையும் கூட எரித்து அழித்துவிடுவதுண்டு. இவ்விரு முறைகளுமே உடம்பில் தழும்புகளை ஏற்படுத்தலாம். எனவே தழும்புகள் ஏற்படுத்தா புதுமுறை ஒன்றை ஸ்காட்லாண்ட் நாட்டு விஞ்ஞானக் குழு ஒன்று கண்டுபிடித்துள்ளது. இப்புதுமுறையில் லேஸர் கதிரைத் தொடர்ச்சியாக உடம்பின் பச்சை குத்தப்பட்ட பகுதிகள் மீது செலுத்தாமல் விட்டுவிட்டுச் செலுத்துவதால் பச்சை 'மை' மட்டும் கரைக்கப்படுகிறது. இவ்வாறு கரைக்கப்பட்ட மையின் பகுதிகளை மனித உடல் கிரகித்து ஓரிரு வாரத்தில் வெளியேற்றிவிடுவதாகவும் சோதனைகள் காட்டியுள்ளன.

**—நன்றி : "வானொலி"**





## வெள்ளி வீதி

ஆசிரியர் : பேராசிரியர் மா. சேசையா

வெளியீடு: மாணிக்கம் பதிப்பகம்
73, மந்தவெளித் தெரு,
சென்னை-600 028.

விலை: ரூ. 10 பக்கம்: 158

சங்க காலப் பெண்பாற் புலவரான வெள்ளிவீதியாரின் வாழ்க்கையையும் அவரைக் குறித்த திறனாய்வையும் எடுத்துச்சொல்கிறது இந்நூல்.

பழங்காலத்தில், ஒரு பெண்ணின் விரல் நகத்லைதக் கொண்டே அவள் எத்தகைய உருவமைப்புப் பெற்றவள் என்பதைக் கற்பனைக் கண்களால் கண்டு, ஓவியமாகத் தீட்டிய கலைஞர்கள் தமிழகத்தில் இருந்திருக்கிறார்கள் என்று கேள்விப் படுகிறோமல்லவா? அதைப்போலவே வெள்ளி வீதியாரின் செய்யுட்களை வைத்துக் கொண்டு - அவற்றில் இழையோடும் சோகச் சுவையை அலசிப் பார்த்து, அவர் காதலில் தோல்வியுற்றவர் என்பதை ஆசிரியர் நன்கு நிறுவியுள்ளார்.

வெள்ளிவீதியாரின் உள்ளத்தைப் புதிர்க்கதிர் (எக்ஸ்ரே) போல எடுத்துக் காட்டும்பாக்கள் நேர்த்தி பாராட்டத் தகுந்தது. பேசுகின்ற ஒருசில சொற்களை வைத்து அவர்கள் இன்ன மாவட்டத்துக்காரர் என்று சிலர் சொல்லிவிடுவதுண்டு; அதைப்போல வெள்ளிவீதியாரின் கவிதையில் காணப்படும் ஏக்கம், அவலம், உவமை ஆகியவற்றைக் கொண்டு அவர் காதலிலே தோல்வியுற்ற காரிகை என்பதைச் சான்றுகாட்டி நிறுவும் ஆசிரியர், அவரை ஒரு பேனா ஓவியமாகவே தீட்டியுள்ளார்.

நூலின் நடை எளிமையானது; எவரும் படிக்க ஏற்றது. நடையில் ஓட்டம் இருக்கிறது; அமைதி இருக்கிறது.

''தன் அனுபவத்தைப் பிறர் அறியச் செய்பவர் உரைநடை ஆசிரியர். ஆனால் தன் அனுபவத்தைப் பிறர் அனுபவமாக ஆக்குபவர் கவிஞர்'' என்று நூலாசிரியர் கூறியிருப்பது ஏற்புடையதாக உள்ளது.

மொத்தத்தில் வெள்ளி வீதியாரைப் பற்றிய திறனாய்வு-படிப்போர் உள்ளத்தைக்கவர்ந்து விடுகிறது.

## நெஞ்சம் நிறைந்த மலேசியா

ஆசிரியர் : மூவேந்தர் முத்து

வெளியீடு: பூவழகி பதிப்பகம்
31, சீனிவாசப் பெருமாள் சந்நிதி தெரு,
ராயப்பேட்டை,
சென்னை-600 014.

விலை: ரூ. 25 பக்கம்: 328

பயண நூல் எழுதுவதற்கு நுணுக்கமான உணர்வும் நினைவாற்றலும் மிகவும் தேவை: அவை இரண்டும் தன்னிடம் நிறைந்துள்ளன என்பதை இந்நூலின் வாயிலாக ஆசிரியர் மெய்ப்பித்துள்ளார்.

தமிழகத்திலிருந்து மலேசியாவிற்குப் புறப்பட்டது முதல், மறுபடியும் தாய் மண்ணை மிதித்தது வரை-வானொலி நேர்முக வர்ணனைபோல்-தான் பார்த்த - இடங்களையும் கேள்விப்பட்ட செய்திகளையும் விவரித்துள்ளார்.

பற்பல இடங்களில் வெளிநாட்டுச் செய்திகளைச் சொல்லும்போது நமது தமிழக - இந்தியச் செய்திகளையும் இணைத்து, ஒப்பிட்டுச் சொல்கிறார் ஆசிரியர். இதிலே குறிப்பிடத் தக்க செய்தி ஒன்றுள்ளது. அதாவது வெளிநாட்டைப் பற்றிய செய்திகளை நம்மவர்கள் தெரிந்துகொள்ளும் போது-நம்நாட்டைப் பற்றிய தகவல்களை வெளிநாட்டவர்கள் தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிட்டுகிறது. இருநாட்டுச் சுவைஞர்களும் நூலை விரும்பிப் படிப்பதற்கு இது வகை செய்கிறது.

மலேசிய நாட்டின் முன்னேற்றத்தையும் பெருமையையும் நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிற சமயத்தில் நமது நாட்டின் சிறப்பையும், மறக்காமல் குறிப்பிடுகின்றார். வெளிநாட்டுப் பயண நூல் எழுதும்போது, பலர் நமது சொந்த நாட்டை மறந்தேவிடுகின்றனர். -அதாவது நமது நாடு நாடே இல்லை என்ற பாணியில் எழுதுகின்றனர். ஆனால் இந்த நூலாசிரியர் தாயகத்தை மறக்கவில்லை. தாய் மண்ணை நினைத்துக் கொண்டே இருக்கிறார்.

மலேசியாவில் உள்ள தமிழர்களின் விருந்தோம்பல் முறையைப் பற்றி நூலாசிரியர் விவரமாகக் குறிப்பிடும் செய்தியிலிருந்து அவர்கள் எல்லாம் வள்ளுவரின் நெறிப்படி விருந்தோம்பல் பண்பை விடாது கைக்கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

மலேசியா செல்வோருக்கு வழிகாட்டி நூலாகவும் -போக இயலாதவர்களுக்கு வரலாற்று நூலாகவும் - ஆய்வாளர்களுக்குத் தகவல் களஞ்சியமாகவும் விளங்கும் இந்நூல்-எளிய இனிய நடையில் இயங்குவது மற்றொரு சிறப்பம்சமாகும்.

## செவ்வல்லி

ஆசிரியர் ; காவனூர்வேலன்

வெளியீடு: பாவலன் பதிப்பகம்
211, காயிதே மில்லத் சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

விலை: ரூ. 10 பக்கம்: 136

காதல் மணம் - கலப்பு மணம் ஆகியவற்றை ஆதரித்து எழுதப் பெற்றுள்ளது இக்காவியம். இனிய எளிய ஆற்றொழுக்கு நடை, ஒரே மூச்சில் படிக்கவைத்து விடுகிறது.

செவ்வல்லி, காத்தமுத்து-கதைத் தலைவி, கதைத் தலைவர் ஆவர். வீரவாணர் என்னும் துணைப் பாத்திரத்தைச் சித்த மருத்துவராகப் படைத்து, அவரின் வாயிலாகத் தமிழ் மருத்துவ முறைக்குப் பாராட்டு வழங்குகிறார் நூலாசிரியர். பல வகை நெல், பலவகைக் காளைகள் ஆகியவற்றின் பெயர்களை 'நிகண்டு' போல் பட்டியல் போட்டுக் காண்பித்திருப்பது பாராட்டுக்குரியது.

காத்தமுத்து - பெயருக்கேற்ற ஏரியில் பெருகும் வெள்ளத்தைத்

தடுத்து - ஊரைக் காத்த, முத்தாகவே விளங்கியதைத் தக்க வகையிலே எடுத்துக் காண்பிக்றார் ஆசிரியர். ஊரார் தன்னை வதைக்க முற்படும்போதும்- ஊரைக் காப்பதற்கு முந்துகின்ற உத்தமனாக விளங்கும்காத்தமுத்தின் பாத்திரப் படைப்பு போற்றலுக்குரியது.

அகப் பொருட் சுவையும், புறப் பொருட் சுவையும் நிறைந்த இந்தக்காவியம் நினைவில் நிற்கும் தன்மை பெற்றிருக்கிறது.

—தமிழ்ப்பித்தன்

## 22 நாட்களில் தமிழ் மூலம் ஆங்கிலம்

ஆசிரியர் : பி. பாலகிருஷ்ணன்

வெளியீடு: மீனாட்சி வெளியீடு
அரியலூர்,
திருச்சி 621704.

விலை: ரூ. 6 பக்கம்: 96

''22 நாட்களில் தமிழ்மூலம் ஆங்கிலம்'' என்ற நூல் ஆங்கில அறிவு அறவே இல்லாதாரும் ஆங்கிலம் கற்க உதவிடும் சிறிய எளிய நூலாகும். இதன் ஆசிரியர் பி.பாலகிருஷ்ணன் உச்சரிப்பு ஒழுங்குபடாத ஆங்கில மொழி ஒழுங்காகக் கற்பிக்க முயன்றுள்ளார். அட்டவணையிலேயே உச்சரிப்பு அடையாளங்களைக் காட்டி, உள்ளே படவிளக்கங்களுடன் பயிற்றுவிக்க முனைந்துள்ளது பாராட்டுக்குரியது.

—சி. நல்லரசு

## நிலாச் சோறு

ஆசிரியர் : மழலைக் கவிஞர்
பி. வி. கிரி

வெளியீடு: திருமலைப் பதிப்பகம்
பிளாக் நெ. 385,
அறிஞர் அண்ணா
நகர் கிழக்கு,
சென்னை-600 102.

விலை: ரூ. 6

மழலைக் கவிஞர் திரு.பி.வி. கிரி, எளிய நாடையில் இனிய சந்தங்களுடன் நல்ல பல கருத்துக்களை இளம் உள்ளங்களில் பதிய வைக்கின்றார்.

கடவுள் எங்கே, அரசமரத்துப் பிள்ளையார், அன்பு உள்ளங்கள், சிட்டுக்குருவி, எங்கள் வீட்டுப் பிள்ளை, அம்மா, நல்ல மாணவன், மனிதனும் மிருகமும், காட்டுக்குள்ளே கல்யாணம், பிரெஞ்சு தெரியுமா? உலகின் திருநாள். பாரதி-யார்? தேசமே பெரிது, நூலகம் முதலிய 62 தலைப்புகளில் குழந்தைகளுக்கு ஏற்ப அழகுத் தமிழில் அருமையாக எழுதியுள்ளார் மழலைக் கவிஞர்.

அன்பாயிரு; ஆணவம் தவிர்; ஈகை கொள்; உழைத்திடு நாளும் என்று உயிரெழுத்துக்களின் வரிசையில் இளம் மழலைகளுக்குக் கவிஞர் கூறும் கருத்துக்கள் நயமானவை. கூறும் முறை புதுமையானது.

மெள்ள மறைந்து கொண்டிருக்கும் நல்ல பண்புகள் முழுமையாக மக்கள் மனத்தைவிட்டு மறைந்துவிடக் கூடாது என்றெண்ணும் ஆசிரியர் அன்பு, பணிவு, எளிமை, இனிமை, உதவுதல், ஈகை போன்ற உயர் பண்புகளை நினைவுபடுத்தி, சின்ன குழந்தைகளின் சிங்கார உள்ளங்களில் பதிய வைக்கின்றார்.

'புத்தகம்' பற்றிக் கவிஞர் தந்திருக்கும் விளக்கங்கள் மிக அருமையானவை. 'நூலகம் 'பயன்படுத்தப்படவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்துகின்றார்.

'நிலாச்சோறு', உண்பவர் மனம் நிறையச் செய்வது; மழலைக் கவிஞர் படைத்தளித்த 'நிலாச்சோறு'ம் கற்போர் உள்ளங்களைக் கவரவல்லது; ஊன்றிப் படிப்போர்க்கு உயர் பயனை விளைக்கக்கூடியது.

அரும்பு உள்ளங்களிலே அரிய கருத்து மலர்கள் நிச்சயம் மலர்ந்திட வேண்டும். அப்போதுதான் அவர்களின்-நாட்டின் எதிர்காலம் மணம் நிறைந்த பூக்காடாக அமைய முடியும். இத்தகைய நூல்கள் இன்னும் பலவாக வெளிவருதல் வேண்டும்.

—டாக்டர் சிவஅரசி
முதநுக்காளத்தீ

> புத்தகங்[illegible]
> சமுகத்திற்[illegible]
> பேரறிஞர்கள் [illegible]டுச்
> சென்றுள்ள பரம்பரைச்
> சொத்தாகும், தலைமுறை
> தலைமுறையா[illegible] இனி வரப்
> போகும் ச[illegible]ார்களுக்கு
> அளித்தவர [illegible]டும்.
> —[illegible]

## தொலைக்காட்சிக் கலை

ஆசிரியர்: வெ. நலலதம்பி, எம். ஏ.,
வெளியீடு: வள்ளுவன் வெயீட்டகம்,
81; 3வது கிழக்குத் தெரு,
திருவான்மியூர், சென்னை-41.

விலை : ரூ. 22 பக்கம்: 231.

தொலைக்காட்சியில் பங்கு கொள்வோர் எம்மாதிரியான ஆடைகளை அணிய வேண்டும்?

தொலைக்காட்சி என்றால் என்ன?

தொலைக்காட்சிக் காமிராவில் படச்சுருள் உள்ளதா?

இந்தியாவில் குறிப்பாகச் சென்னையில் தொலைக்காட்சி எப்போது தோன்றியது?

—என்பன போன்ற வினாக்களுக்கெல்லாம் விளக்கமாக விளங்குகிறது இந்நூல்.

'காற்றுச் சூழல்மூலம் செலுத்தப்படும் ஒளி அஞ்சல்தான் தொலைக்காட்சி என்பது' என்று முதல் அத்தியாயத்தில் ரத்தினச் சுருக்கமாக விளக்குகிறார் ஆசிரியர். மேலும், தொலைக்காட்சியி[illegible] தனித்தன்மைகள், 'தொலைக்காட்சியும் பிற துறைகளும் என்னும் தலைப்புகளில் பல அரிய செய்திகளை நாம் அறிந்து கொள்கிறோம்.

தொலைக் காட்சிக் காமிரா வகைகள், அவை இயங்கும் விதம், ஆடிகளின் தன்மைகள் ஒலி, ஒளி அமைப்பு முறைகள், அரங்க அமைப்பு, ஒப்பனை, ஆடை அணிகலன்கள் எல்லாம் மிகத் தெளிவாக, அழகாக, யாவரும் புரிந்து கொள்ளும் வகையில் ஆசிரியர் கூறியுள்ளார்.

நாடகத தயாரிப்பு, மெல்லிசை, நடனம், கலந்துரையாடல், செய்தி வாசித்தல்; பேட்டி காணல் போன்ற நிகழ்ச்சிகள் எப்படி அமைய வேண்டும் என்பதற்கு அனுபவ ரீதியாக ஆசிரியர் கூறும் விளக்கங்கள் இளைய தலைமுறையினருக்கு இன்றியமையாக் குறிப்புகளாகும்.

தொலைக்காட்சி பற்றித் தமிழ்மொழியில் வெளிவந்த முதல் நூலாக மட்டுமல்ல, தமிழ் வளர்ச்சித் துறையின் முதல் பரிசு பெற்ற நூலாகவும் விளங்குவது இதன் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

— பி வி. கிரி





# மாமல்லபுரத்தில் பொங்கல் விழா!





முத்தமிழ் முழங்கிட மூன்று நாள் பொங்கல் விழா மாமல்லபுரத்தில் மிகச் சிறப்பாக நடந்தது. மாமல்லபுரமே வண்ண விளக்குகளாலும், வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், 15.1.1985 அன்று நடந்த இந்த விழாவுக்கு வந்திருந்தவர்களை செங்கல்பட்டு மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் திரு எம்.சொக்கலிங்கம் வரவேற்றார்.

மாமல்லபுர நகரியத் துணைத் தலைவர் திரு நா.ஜனார்த்தனன் செங்கல்பட்டு மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் திரு காஞ்சி பன்னீர் செல்வம், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதிரு நரசிம்ம பல்லவன் ,திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்புட்டுள்ள திரு வே.தமிழ்மணி செங்கற்பட்டு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. ஆறூர் ஜெகதீசன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.



சுற்றுலாப் பயணிகள் சார்பில் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த தொழிலதிபர் திரு கேவின் கேயர்ஸ் பேசுகையில், ''இங்கு அமைக்கப்பட்டிருக்கும் மின் அலங்காரங்கள்,கண்கவர் அமைப்புகள் பற்றி மிகவும் மகிழ்ச்சி கொள்கிறேன். எனக்கு இந்த விழாவில் பேச வாய்ப்பளித்த உமக்கு மிக்க நன்றி'' என்றார்.

திரு.கேவின் கேயர்ஸ் அவர்களுக்கு மலர் மாலைகளும், சந்தன மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவரும் சீர்காழி.சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள-வருமானதிரு க.பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், ''மாண்புமிகு புரட்சித் தலைவர் இட்ட பணியைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றோம். வெளிநாட்டுப் பயணிகள் நம்மைப் பற்றியும், நம் நாட்டைப் பற்றியும் மேலும் அதிகம் தெரிந்து கொள்ள இதுபோன்ற விழாக்கள் பெரிதும் உதவுகின்றன'' என்று குறிப்பிட்டார்.




இந்த விழாவில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும்அனைத்து மதத்தைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டது சிறப்பு அம்சமாகும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பொது மேலாளர் கேப்டன் வி.ச.சுப்பராமன் நன்றியுரைக்குப் பின், திருமதி சரசாகுழுவினரின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. பிறகு 'தர்மம் தலை காக்கும்' திரைப்படம் காண்பிக்கப்பட்டது. சுற்றுப்புறக் கிராம மக்கள் ஆயிரக்கணக்கில் விழாவைக் கண்டு களித்தனர்.

—அ. மருது

# புதிய பருத்தி நாற்றங்கால்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின், விவசாயக் கல்லூரி முதல்வர் திரு ஏ. ஆர். லெட்சுமணன் தலைமையில் உழவியல் துறை வல்லுநர்கள், வாழைச் சருகுகளினால் தயாரித்த தொன்னைகளைப் பயன்படுத்தி, புதிய பருத்தி நாற்றங்கால் முறையைக் கண்டுபிடித்துள்ளார்கள்.

பொதுவாகப் பருத்தி விதைகளை நிலங்களில் நேரடியாக, ஊன்றும் பழக்கமே எங்கும் உள்ளது. பருத்தி நாற்றுகள் பிடுங்கி நடும் முறையில் சரியாக வளர்வது இல்லை என்பதால் நேரடி விதைப்பே கடைப்பிடித்து வரப்படுகிறது.



அண்ணாமலைப் பல்கலைக் கழக உழவியல் துறை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ள இம்முறையில் அக்குறைகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

முன்பு பருத்தி விதைகளைப் பாலித்தீன் பைகளில் போட்டு, நாற்றுகளைப் பிடுங்கி நடும் முறை பரிந்துரைக்கப் பட்டது.

பாலித்தீன் பைகளின் விலை அதிகமான காரணத்தால் பருத்தி விவசாயிகளிடம், அம்முறை பிரபலமாகவில்லை. ஆகவே; இம்முறையில் பாலித்தீன் பைகளுக்குப் பதிலாக வாழைச் சருகுகளில் தயாரித்த தொன்னைகள் பயன்படுத்தப் படுகின்றன.

வாழைத் தொன்னை, மண்ணோடு மண் மக்கி இளம் பருத்திச் செடிக்கு எருவாக ஆவதோடு வேறு பல நன்மைகளும் இம்முறையில் உள்ளன.

**பருத்தி நாற்று தயாரித்தல்**

இப்புதிய தொன்னை நாற்றங்கால் முறையில் முதலில் மண், மூன்று பங்கு நல்ல மக்கிய எரு ஒரு பங்கு என்ற விகிதத்தில் கலந்து தொன்னைகளில் நிரப்பி அத்துடன் சிறிது டி.ஏ.பி. உரமும் கலந்து கொள்ள வேணடும் (ஒரு கிலோ டி.ஏ.பி. 1000 தொன்னைகளில் போடப் போதுமானது.) பயிர்ப் பாதுகாப்பிற்காகத் தொன்னைகளில் நிரப்பப்படும் மண், எரு, உரம் கலவையில் சிறிது பவஸ்டினும் ப்யூர்டான் குறுணைகளையும் கலந்து கொள்வது நல்லது.

இதற்கு 200 கிராம், ப்யூர்டானும்; 10 கிராம் பவஸ்டினும், 1000 தொன்னைகளில் போடப் போதுமானது. பஞ்சு நீக்கப்பட்ட பருத்தி விதைகளைச் சிறிது நீரில் 12 மணி நேரம் ஊறவைத்த பின்பு, தொன்னைகளில் உள்ள கலவைகளில் 1-2 சென்டி மீட்டர் ஆழத்தில் ஊன்றப்பட வேண்டும்.



தினமும், காலையும், மாலையும் தவறாமல் பூவாளியால் தண்ணீர் ஊற்றிவர வேண்டும். கடுமையான வெயிலினால் இளம் நாற்றுகள் வாடிவிடுவதைத் தவிர்க்க, சிறிது நிழற்பாங்கான இடத்தில் நாற்றங்கால் இருப்பது அவசியம்.

மேற்கண்ட முறைப்படி போடப் பட்ட பருத்தி விதைகள், நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குள் ஒன்றுகூடப் பழுது போகாமல் முளைத்து விடுகின்றன. 15 நாள் வயதுள்ள பருத்தி நாற்று வயல்களில் நட மிகவும் ஏற்றது. ஆனால் 60 நாள் வரை பருத்தி நாற்றுகளைத் தொன்னைகளில் வைத்திருந்த பிறகும் நடவு செய்யலாம் என்று பரிசோதனைகள் மூலம் நிரூபணமாகி உள்ளது.

**நடவு செய்தல்:**

நடவு வயலில் பருத்தி ரகத்திற்குத் தகுந்தவாறு இடைவெளி விட்டு, கடப்பாரைகளினால் துளை போடப்பட்டு, பதினைந்து நாட்கள் வயதான பருத்தி நாற்றுகள் தொன்னைகளுடன் வயலில் புதைக்கப்படுகின்றன. நாற்றுகளுடன் கூடிய தொன்னைகளைப் புதைப்பதற்கு முன், தொன்னையில் அடிப்பாகத்தைச் சிறிது கிழித்து விட்டுப் புதைக்க வேண்டும்.

இவ்வாறு நடப்படும் பருத்தி நாற்றுகள், ஒன்றுகூட வாடிவிடாமல், மிக விரைவிலேயே, தழைத்து வளர்கின்றன என்று விவசாயத்துறைப் பேராசிரியர் ஏ. ஆர். லெட்சுமணன் கூறினார்.

தொன்னைகளில் நாற்று விட்டு நடும் முறையே சிறந்தது. ஏனெனில், பருத்தி நாற்றுகளைப் பழைய முறைகளில் பறித்து நடுவதால் ஏற்படும் அதிர்ச்சியிலிருந்து பயிர்கள் சோர்ந்து விடுகின்றன. இப்புதிய முறையால் பருத்தி நாற்றுகள் சோர்வில்லாமலேயே நன்கு வளர்கின்றன. இம்முறையால் செலவும் குறைகின்றது. பருத்தி நாற்றுகளை நட்ட பின்பு கடைப்பிடிக்கும் சாகுபடி முறைகள் மற்ற சாதாரணச் சாகுபடியைப் போலவே செய்தால் போதுமானது.

இம்முறையில் நடப்படும் நாற்றுகளிலிருந்து, வளர்ந்த பருத்திகளில் பூ விழுதல், காய்கள் விழுதல் போன்ற குறைகள் இல்லை என்று விவசாயத் துறைத் துணைப் பேராசிரியர் ஜி. குப்புசாமி கூறினார்.

இம்முறைப்படி நடப்படும் பருத்தி, நாற்றுகள் மிக விரைவிலேயே தழைத்து வளர்ந்து விடுவதால், களைகளினால் அவை அதிகம் பாதிக்கப்படுவதில்லை. மேலும் தண்ணீர் அதிகம் கட்டினாலும் அதனால் அவை பாதிக்கப்படுவதில்லை.

இம்முறையில் முதல் 15 நாட்கள் பருத்தி நாற்றுகள் தொன்னைகளிலேயே இருப்பதால் நடவு வயல்களில் நெல் அறுவடை சிறிது நாட்கள் தாமதமானாலும் காலத்தில் நாற்றுகளைத் தயார் செய்து வைத்துக் கொள்ளலாம்.

நேரடியாக வயலில் பருத்தி விதைக்கும் முறையில் நடவு வயல் சரியான மெழுகுப் பதத்திற்கு வரும்வரை காத்திருந்து விதை ஊன்றவேண்டும். பதம் தவறி விட்டால் விதை முளைப்பு மிகவும் பாதிக்கப்பட்டு, செடிகளுக்கு இடையே நிறைய இடைவெளி விழுந்துவிடும்.

இம்முறைப்படி பருத்தி சாகுபடி செய்வதற்கு ஒரு எக்டேருக்கு நடவு செய்ய ஆகும் செலவும், பருத்திநாற்றுகள் தயாரிக்க ஆகும் செலவும் சேர்த்தால் மொத்தம் ரூ. 360 ஆகிறது. மேலும் நடவு செய்வதற்கு, நேரடி விதைப்பு முறையை விட, ஒரு எக்டேருக்கு ரூ. 250 தான் அதிகமாகிறது.

ஆனால் பருத்தி கண்டு முதலை ஒப்பிட்டுப் பார்க்கும்போது 35ல் இருந்து 40 குவிண்டால் வரை ஒரு எக்டேரில் சராசரியாகக் கிடைக்கிறது. நிகர லாபம் ரூ. 13,750 முதல் 17,500 வரை நிச்சயமாகக் கிடைக்கும் என்று டாக்டர் ஏ.ஆர். லட்சுமணன் கூறினார்.

— அ. ராமையா



# இதன் வயது நூறு!

நியூயார்க் துறைமுகத்தில் கையில் சுடர் ஒளி ஏந்திய கோலத்துடன் 150 அடி உயரத்திற்கு மேல் எழும்பி நிற்கும் 'சுதந்திர தேவி' சிலைக்குத்தான் 1986ல் பிறந்த நாள் விழா! சுதந்தர தேவி கடல் வழியாகத்தான் நியூயார்க் வந்தடைந்தாள்.

பாதம் முதல் தீபம் ஏந்திய கை வரை சிலையின் உயரம் 50 மீட்டர் (150 அடிக்கும் மேல்). தேவியின் பதாகையில் கதிர் வீச்சுகள் போல் ஏழு கூர்முனைகள் உள்ளன. அவை ஏழு கடல்களைக் குறிப்பன. சிலையின் உள்ளே உள்ள படிகளில் ஏறி காரிகையின் முடி வரை பார்வையாளர் ஏறிச்செல்ல வசதி உண்டு.

நூறு ஆண்டுகளுக்கு முன் ஃபிரான்ஸ் நாட்டில் சிலை வடிக்க 4 லட்சம் டாலர் நன்கொடை திரண்டது. பாரிஸ் மாநகரில் சிலை அமைப்பதில் முனைந்தார், சிற்பி ஆக்ஸ்ட் பார்தோல்டி. அவருக்குத் துணை நின்றவர் அலெக்ஸாண்டர் கஸ்டேவ் ஐஃபல்.

இவர்கள் முதலில் வெண்கலச் சிலை நிறுவ நினைத்தார்கள். அது மலைபோல் அல்லவா கனக்கும்! எனவே அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டு 200 டன் எடையில் உள்ளே இரும்புச் சட்டங்கள் உறுதியாக நிற்க செப்புச் சிலை வடித்தனர். சிலையைப் பலப்பல பகுதிகளாகப் பிரித்து 85 பெரிய, பெரிய மரப்பெட்டிகளில் அடைத்து, ரயில் மூலமும், கப்பலேற்றியும் நியூயார்க் துறைமுகத்துக்கு அனுப்பி வைத்தனர். 1886 அக்டோபரில் பெட்டிகள் வந்து சேர்ந்தன; சுதந்தரதேவி இவ்வாறு வடிவெடுக்கத்தொடங்கினாள். இதுதான் 100 வயது சுதந்தர தேவியின் கதை!

இதற்கிடையில், சுதந்தரதேவி நிற்பதற்குரிய 30 மீட்டர் உயரமுள்ள பீடம் அமைப்பதற்காக அமெரிக்கர்கள் 2,70,000 டாலர் திரட்டினார்கள். இதற்குத் தலைமை ஏற்றவர், ஜொசஃப் புலிட்ஸர், அமெரிக்க நாட்டுப் பத்திரிகை முதலாளி. இவர்கூட ஹங்கேரி நாட்டிலிருந்து குடியேறியவர்தாம்.

## மாணவர் பக்கம்

## விளையும் பயிர்



வடார்க்காடு மாவட்டம் வந்தவாசி அரசினர் ஆண்கள் மேனிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர் கு. லோ. நெடுஞ்சேரலாதன். சமூகப் பணிகளில் உதவி செய்தல், வினா-விடைப் போட்டிகள் நடத்துதல் போன்றவற்றில் ஈடுபட்டு வரும் இவர், பள்ளி சாரணர்-தேசியப் படைகளிலும் சிறந்து விளங்குகிறார். கிராமப்புற ஊக்குவிப்புத் திட்டத்தில் நடந்த தேர்வில் வெற்றி பெற்றவர். பேச்சுப் போட்டிகளிலும் பரிசுகள் பெற்றுள்ளார்.

## நாணயங்களின் ஆயுட்காலம்!

ஐந்து காசு, பத்து காசு, இருபது காசு ஆகிய நாணயங்களின் ஆயுட் காலம் 10 முதல் 15 ஆண்டுகள் வரை ஆகும்; 25 காசு, ஐம்பது காசு, ஒரு ரூபாய் நாணயம் ஆகியவைகளின் ஆயுள் 15 முதல் 20 ஆண்டுகள் வரை.

ஒரு ரூபாய் நோட்டின் ஆயுள் சுமார் 8 மாத காலம். 2 ரூபாய் நோட்டுக்கு ஒரு ரூபாய் நோட்டைவிட ஆயுள் 2 மாதம் அதிகம் உள்ளது.

ரூபாய் நோட்டுகளை அச்சிட ஆகும் செலவுப் பட்டியல் வருமாறு:

ஒவ்வொரு ரூபாய் நோட்டுக்கும் ஆகும் செலவு அடைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு ரூபாய் (4.91 காசு) இரண்டு ரூபாய் (5.59 காசு) ஐந்து ரூபாய் (6.55 காசு), பத்து ரூபாய் 'ஆப்செட் டிசைன்' (8.47 காசு) பத்து ரூபாய் 'லித்தோ ஆப்செட் டிசைன்' (14.26 காசு), இருபது ரூபாய் (14.71 காசு), ஐம்பது ரூபாய் (16.13 காசு) நூறு ரூபாய் (17.29 காசு).

நாணயங்கள்: 5 காசு நாணயம் (10.37 காசு), 10 காசு (12.12 காசு), 25 காசு (23.50 காசு) 50 காசு (44.81 காசு) ஒரு ரூபாய் நாணயம் (52.81 காசு)

—மாண்புமிகு மத்திய நிதித் துறைத் துணை அமைச்சர் திரு ஜனார்த்தன் பூஜாரி அவர்கள் மாநிலங்கள் அவையில் தெரிவித்த தகவல்களிலிருந்து.

# சேமிப்போம்!

மட்டப்பாறை - பாக்கியமணாளன்



புற்றில் வாழும் எறும்பெல்லாம்
புரிந்து சேர்க்கும் இரையெல்லாம்
சுற்றித் திரியும் எலியெல்லாம்
சூழ்ந்து சேர்க்கும் கதிரெல்லாம்!

பாடிப் பறக்கும் வண்டெல்லாம்
பார்த்துச் சேர்க்கும் தேனெல்லாம்
நாடி வாழும் ஆவெல்லாம்
நாளும் சேர்க்கும் பாலெல்லாம்!

நாட்டைக் காக்கும் மண்ணெல்லாம்
நாளும் சேக்கும் நீரெல்லாம்
கூட்டை நாடும் புள்ளெல்லாம்
கொண்டு செல்லும் உணவெல்லாம்!

பகுத்து வாழும் நாமெல்லாம்
பார்த்துச் சேர்ப்போம் நாளெல்லாம்
தொகுத்து வைத்த பொருளெல்லாம்
துணையாய் நிற்கும் வாழ்வெல்லாம்!

## அறிவியல் துணுக்குகள்

- சுரங்கத் தொழிலாளி ஒருவர் மூச்சுவிடும் போது சுமார் 150 கிராம் அளவு நிலக்கரித் துகள்களை அவரால் ஓர் ஆண்டில் சுவாசிக்கப்படுவதாகவும், அவற்றில் 1.5 முதல் 15 கிராம் வரை அவரது நுரையீரல் காற்றறைகளில் வந்தடைவதாகவும், அதில் 0.5 கிராம் அங்கே நிரந்தரமாகத் தங்கி விடுவதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.
- நன்கு வளர்ந்த ஓர் இலவங்க மரத்திலிருந்து 4 முதல் 8 கிலோ கிராம் இலவங்கம் ஓர் ஆண்டில் கிடைக்கும்.
- குளோஸினா ஈ (Glossina fly) என்னும் இரத்தம் உறிஞ்சும் பூச்சிக்கு ஒரு விசேடமான சக்தி உண்டு. இது தனது இரையாகிய கால்நடைகளை 1370 மீட்டர் தொலைவிலிருந்தே கண்டு அவற்றிடமிருந்து வரும் வாசனையை வைத்து, அருகில் சென்று இரத்தம் உறிஞ்சும்.
- ஒவ்வொரு மருந்தும் அதற்கே உரிய விளைவுகளைக் கொண்டு உள்ளது. மருந்தின் பயனின் நேர அளவு இரவிலும், அதிகாலையிலும் மிகக் குறைவாகவும், மாலை வேளையில் அதிகமாகவும் இருப்பதாகக் கூறப்படுகிறது. இடத்திற்கு ஏற்பவும் இம்மாறுதல் அமைகிறது. பருவகாலம் மற்றும் நேரத்திற்கேற்ப நமது உடலின் தன்மையும் (biological rhythms) மாறுதல் அடைவதுதான் இதற்குக் காரணமாம்.
- தாளிப்பதற்குப் பயன்படுத்தும் சத்து நிறைந்த கறிவேப்பிலை, கொத்தமல்லி தழை ஆகியவற்றைச் சாப்பிடாமல், அவற்றை எடுத்து எறிகிற பழக்கம் பலரிடையே உண்டு. இதனால் இவைகளில் உள்ள உயிர்ச்சத்து 'ஏ', இரும்புச் சத்து முதலியவைகளை இழக்கிறோம் என்பதை அவர்கள் ஏனோ உணர்வதில்லை. கருவேப்பிலையில் 'வாய்ப்புண்' போன்றவை வராமல் தடுக்கும் 'ரைபோபிளேவின்' என்ற சத்தும், சோகை நோய் வராமல் தடுக்கும் ஃபோலிக் அமிலச் சத்தும் நிறைந்துள்ளன.
- கி.பி. 1621-ல் ஜலந்தர் நகரில் விழுந்து கிடந்த விண்கல் ஒன்றிலிருந்து இரண்டு வாள்கள், ஒரு பிச்சுவா, ஒரு சிறு கத்தி ஆகியவற்றை ஜஹாங்கீர் மன்னர் தயாரித்தாராம். பெரும்பாலும் விண்கற்கள் இரும்பு, நிக்கல் முதலிய உலோகப் பொருட்களைக் கொண்டவை.

— ஆர். எஸ். சுப்பிரமணியன்

நன்றி: விஞ்ஞானச் சுடர்

# 'மக்களுக்காக நாங்கள்'



ஆவடி என்றதுமே இந்திய ராணுவத்திற்குப் பெருமை சேர்க்கும் ''வைஜந்தா'' டாங்குகள் நினைவிற்கு வரும். அந்த டாங்குகளைத் திறம்பட இயக்கி எதிரிகளை வெற்றிகொள்ளும் வீரர்களை உருவாக்கும் இடம்தான் மகாராட்டிரத்திலுள்ள அகமத் நகர். இது இந்தியாவின் மிகப் பெரிய ஒரே பயிற்சி நிலையமாக விளங்குகிறது. இங்குள்ள ஆயுதப் படைப்பள்ளி ஒரு சாதாரண குடிமகனை நாட்டின் கவுரவத்தையும், சுதந்திரத்தையும், ஒற்றுமையையும் உயிரினும் மேலாகப் பேணிக் காக்கும் சிறந்த வீரனாக மாற்றுவது ஒரு சுவையான செய்திதானே?

காடு மேடு பள்ளத்தாக்கு போன்ற எத்தகைய சூழ்நிலையிலும் குறிக்கோளை எட்டுவதையே நோக்கமாகக் கொண்டு விரைந்து முன்னேறும் குதிரை வீரர்களின் பராக்கிரமத்தையும் ஒருங்கிணைந்த மனோபாவத்தையும் தூண்டுகோலாகக் கொண்டுள்ளது இன்றைய ஆயுதப்படை.

ராணுவ வரலாற்றில் குதிரை வீரர்களுக்குப் பதில் ஆயுதப் படைகளும் டாங்குகளும் 1938 முதல் பயன்படுத்தப்படுகின்றன. தற்காலப் போர்களில் ஆயுதப் படைகளுக்கிடையேயான ஒருங்கிணைந்த போக்கே வெற்றிக்கு வழிகோலும் அம்சமாக விளங்குகின்றது. இத்தகைய கூட்டுப் படைத் துறையில் இந்தியா கொஞ்சமும் பின்தங்கிய நிலையில் இல்லையென்பதைத் திண்ணமாகத் தெளிவுபடுத்தகிறது அகமத்நகர் பயிற்சிப்பள்ளி.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் இளம் வீரன் முதல் இளநிலை அதிகாரிவரை அனைவருக்கும் அவர்களுக்குத் தேவையான டாங்கி ஓட்டுதல், துப்பாக்கிச்சுடுதல், தொலைத்தொடர்பு ஆகிய துறைகளில் நவீன தொழில் ஒட்டத்துடன் கூடிய கடுமையான பயிற்சிகளை அளிக்கிறது. இந்த ஆயுதப்படை நிலையம் மற்றும் பள்ளி. அகமத்நகர் மலைச்சாரலிலுள்ள இப்பள்ளிக்குச் சொந்தமான 60,000 ஏக்கருக்கும் மேற்பட்ட பரந்த வெளியில் வீரர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகிறது. அங்கு அணிவகுத்து நிற்கும் சுதேசி வைஜந்தா டாங்குகளும், சோவியத் நாட்டில் தயாரான டி.72, டி-55 டாங்கிகளும் கற்பனையில் உருவான எதிரி டாங்கிகளையும் கூடாரங்களையும் பெரும் வெடி குண்டுகளை வீசி அழித்த வண்ணமிருப்பதைக் காணலாம்.

துப்பாக்கி வீரர்கள் மறைந்திருக்கும் டாங்கிகள் 50 மீட்டர் தொலைவில் பின்தொடர்ந்துவர கரடு முரடான நிலப்பரப்பில் ஆயுத டாங்கிகள் முன்னேறிச் சென்று, எதிரியின் டாங்கிகளைச் சுட்டு வீழ்த்த, துப்பாக்கி வீரர்களின் துணையோடு அப்பகுதியை ஆக்கிரமித்துக் கொள்ளும் செயல்முறை விளக்க நிகழ்ச்சிகளும் இங்கு நடந்தவண்ணம் உள்ளன.

இரவு நேரங்களில் விண்ணில் ஏவப்படும் 51 மி.மீ. ஒளிவீச்சுக் குண்டுகள் அப்பகுதியையே ஒளி வெள்ளத்தில் ஆழ்த்தி, ஆயுத டாங்கிகள் உடன் செயல்பட்டு எதிரி டாங்கிகளைச் சுட்டு வீழ்த்துவது ஒரு மெய்சிலிர்க்கச் செய்யும் அனுபவம். அதேபோன்று பெரும் அகழிகளும் நீர் நிரம்பிய ஏரிகளும் குறுக்கிடும்போது டாங்குகள் தற்காலிகப் பாலங்களை அமைத்து எவ்வாறு கடந்து செல்லாம் என்றும், நீரிலும் மிதந்து செல்லக்கூடிய பயிற்சிகளை எவ்விதம் பயன்படுத்தலாம் என்றும் வீரர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

இன்றைய ராணுவத்தின் நாளைய படைப்பிரிவு என்றழைகப்படும் நவீன இயந்திரத்துப்பாக்கிப் படைப்பிரிவு, அகமத் நகரில் 1979ல் துவக்கப்பட்டது. இப்படைப்பிரிவு தாக்குதல் மற்றும் தற்காப்பு நடவடிக்கைகளின் போது இதர ஆயுதப்படைப்பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டியுள்ளது. இப்படைகளிடம் சோவியத் நாட்டில் தயாரான பியெம்பி-1 எனும் துபபாக்கி வீரர் செல்லும் டாங்கியுள்ளது. இந்த டாங்கியில் பொருத்தப்பட்டிருக்கும் ஏவுகணைகளை 3,000 மீட்டர் தொலைவிலுள்ள எதிரிகளையும் வீழ்த்தக்கூடியது.

இப்படை வீரர்களுக்குத் தேவையான அடிப்படைப்பயிற்சிகள் அனைத்தையும் மிக நவீன யந்திர அமைப்புக்களின் உதவியோடு இப்பிரிவு வழங்குகிறது. வேகமாக நிறைவடைந்து வரும் இப்பிரிவின் கட்டட அமைப்புகள் முடிவடைந்ததும் இந்திய ராணுவத்தின் மிக நவீன பயிற்சி மையமாக இது விளங்குமென்று நம்பப்படுகிறது.

''மக்களுக்காக நாங்கள், எங்களுக்கு உள்ளது ஒரேகுறிக்கோள்'' என்ற வாசகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள இப்படைப் பிரிவு நமது ராணுவத்திற்குப் பெருமை சேர்ப்பதன்றோ!



# வீட்டுக்கு ஒருவருக்கு வேலை



வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் குடும்பங்களில் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை அளிக்கும் திட்டத்தின் கீழ், கட்டுமான தொழிவில் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் ஒன்றைத் தமிழக அரசு நடைமுறைப்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 375 பேருக்குத் தொழிற் பயிற்சி மையத்தில் பயிற்சி அளிக்கப்படும்.

ஐந்து வார காலம் தொழில் பயிற்சி மையத்தில் பயிற்சியும் இரண்டு வார காலம் அரசாங்கத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெறும் திட்டப் பகுதிகளில் நேரடிப் பயிற்சியும் மேலும் ஐந்து வார காலத்துக்குத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், குடிசைப் பகுதி மாற்றுவாரியம், மாநிலக்கட்டுமானக் கழகம் போன்றவை நிறைவேற்றும் திட்டப் பணிகளில் இவர்கள் நேரடியாக ஈடுபடுத்தப்பட்டு பயிற்சி பெறுவர். மொத்தம் பன்னிரண்டு வார காலம் இவர்களுக்குக் கட்டடத் தொழிவில் பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சிக் காலத்தில் உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு இருநூறு ரூபாய் வழங்கப்படும்.

அரபு நாடுகளில் நிறைய கூலி கிடைக்கிறது; கைநிறைய சம்பாதிக்கலாம் என்பதாலும் கட்டடத் தொழிலாளர்களுக்கு அந்த நாடுக்ளில் நல்ல வேலைவாய்ப்பு வசதி உள்ள காரணத்தாலும் தமிழகத்தைச் சேர்ந்த ஏராளமான கட்டடத் தொழிலாளர்கள் அரபு நாடுகளுக்குச் சென்று விட்டனர். இதன் காரணமாகத் தமிழ்நாட்டில் கட்டடத் தொழிலாளர் கிடைப்பது சற்று அரிதாகி வந்துள்ளதோடு அவர்களுக்கு அதிகக்கூலி கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இதைத் தவிர்க்கவும், குடும்பத்துக்கு ஒருவருக்கு வேலை அளிக்கும் திட்டத்தின் கீழ் கட்டடத் தொழிலில் பயிற்சி அளித்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கச் செய்வதற்காகவும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

முப்பது வயதுக்குட்பட்டு எழுதப்படிக்கத் தெரிந்த தகுதியிருந்தால் போதுமானது. வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் குடும்பத்தைச் சேர்ந்த - அக்குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்ற தகுதியின் அடிப்படையில் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இதேபோல கிராமப் பகுதிகளில் மின்சாரப் பம்பு செட்டுகளைப் பழுது பார்ப்பது உள்ளிட்ட வேளாண்மைக் கருவிகள் பணிமையம் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, பூந்தமல்லி அருகேயுள்ள கடப்பாக்கம் என்கிற கிராமத்தில் இருநூறு இளைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான பயிற்சி மையம் அமைக்கப்பட இருக்கிறது. இதற்கான பணிகள் நாடைபெற்று வருகின்றன.

சென்னை மீனம்பாக்கத்துக்கும், தாம்பரத்துக்கும் இடைப்பட்ட வெளிநாட்டு ஏற்றுமதிக்குத் தகுதிபடைத்த பண்டங்களை உற்பத்தி செய்யும் சுங்கத் தீர்வையற்ற மண்டலத்தில், இருபது கோடி ரூபாய் முதலீட்டில் 19 தொழில்களைத் தொடங்குவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

எலெக்ட்ரானிக் ஏற்றுமதிக்குத் தகுதியான தரமுள்ள ஆடைகள் மற்றும் இரசாயனப் பண்ட உற்பத்தி போன்ற தொழில்கள் அமைப்பது இதில் அடங்கும்.

சுங்கத்தீர்வையற்ற இந்த மண்டலத்தில் புதிய தொழில்கள் தொடங்குவதற்காகத் தொழில் முனைவர்கள் காட்டும் ஆர்வம் மிகுந்த மனநிறைவு அளிப்பதாக உள்ளது. இந்த மண்டல அமைப்புக்கான நிலங்களைக் கையகப்படுத்தும் வேலைகள் முடிந்து சுற்றுப்புறச் சுவர் எழுப்பும் பணி நடந்து வருகிறது. சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகம் இந்தச் சுங்கத் தீர்வை அற்ற மண்டலத்தில் சரக்குப் பெட்டக மையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இப்போதைக்கு இம்மண்டல அலுவலகம் தாம்பரத்தில் உள்ள விருந்தினர் விடுதியிலிருந்து செயல்படும்.

**(18-1-85 அன்று தலைமைச் செயலகத்தில் நடந்த செய்தியாளர்கள் கூட்டத்தில் தலைமைச் செயலர் திரு கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப. தெரிவித்த தகவல்களிலிருந்து.)**




# நோயற்ற வாழ்வு

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழி நகர்ப்புறங்களை விட, கிராமப்புறங்களில் பிரபலமாக விளங்கி வருகிறது. இருப்பினும், நோயற்ற வாழ்வை அமைத்துக் கொள்ளக் கிராமப்புற மக்கள் அதிகக்கவலைகொள்வதில்லை. அக்கறை எடுத்துக் கொள்வதுமில்லை.

இன்றும் நம் கிராம மக்களில் பலர், இயற்கைக் கடன்களைக் கழிக்க வெளிப்புறங்களையும் வீட்டின் பின்புறமுள்ள திறந்த வெளிப் பரப்புகளையும் பயன்படுத்தி வருகின்றனர். கிராமப்புறக் குழந்தைகளோ வீதி ஓரங்களைக் கழிப்பிடங்களாக மாற்றி வருகின்றனர். இவர்களின் இப்பழக்கத்தால் கிராம மக்கள் இடையே வாந்திபேதி, சீதபேதி, வயிற்று வலி, குடற்புழு, போன்ற வியாதிகள் பரவுகின்றன.

நோய்களை அதற்குரிய மருந்துகளைக் கொடுத்துக் குணப்படுத்துவதை விட அந்த நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டுபிடித்து அதை ஒழித்துவிட்டால் அந்நோய்கள் மக்களிடையே பரவாமல்பார்த்துக் கொள்ளலாம். வருமுன் காப்பதே விவேகமல்லவா?

கழிவறைகளை விடுத்துக், கண்ட கண்ட இடங்களில் இயற்கைக் கடன்களை கழிக்கும் கிராம மக்களின் வழக்கத்தை மாற்றவும், எல்லாக் கிராமங்களிலும் வீட்டுக்கு வீடு கழிவறைகள் அமைக்கப்பட ஏதுவாகவும் ஒரு மாபெரும் திட்டத்தைத் தீட்டியுள்ளது மத்திய அரசு.

குறைந்த செலவில் தனியார் வீடுகளில் கழிப்பிடங்கள் கட்டும் இத்திட்டத்தின்கீழ், ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் இந்தியா முழுவதும் 36,000 கிராமங்களில் குறைந்த செலவுக் கழிப்பிடங்களை உலகவங்கி, யூனிசெப், யு.என்.டி.பி. உதவியோடு கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில், ஈடுபட்டுள்ள சுகாதாரப் பொறியாளர்கள், நிர்வாகிகள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிக்கும் முகாம் ஒன்று பூவிருந்தவல்லி பொதுச் சுகாதாரப் பயிற்சி நிலையத்தில் ஊரக வளர்ச்சித்துறை ஆணையாளர் மற்றும் செயலாளர் திரு.வி.சுந்தரம் இ.ஆ.ப. அவர்களால் 21.1.85 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

அவர் தனது உரையில் "சிறுநீர், மலம் கழிப்பிடங்கள் கிராமங்களில் இல்லாத காரணத்தால்தான் கிராம மக்கள் பல நோய்களால் அவதிப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் ஒரு கோடி குடும்பங்கள் இருக்கின்றன. ஏழாவது ஐந்தாண்டுத்திட்டம் முடிவதற்குள், 25 இலட்சம் குடும்பங்களுக்குக் கழிப்பிடங்கள் அமைத்தல் உள்ளிட்ட கிராமச் சுகாதாரத் திட்டத்தின் மூலம் பல்வேறு கிராமச் சுகாதாரப் பணி



களின் நன்மைகளை அளிப்பதற்கு, அரசு தீவிரமாக முயற்சி செய்து வருகிறது. இந்த இலக்கினை அடைவதற்குப் பல ஆக்கத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்" என்று குறிப்பிட்டார்.

ஊரக வளர்ச்சி இயக்குநர் திரு.என். நாராயணன் இ.ஆ.ப. தன்னுடைய தலைமை உரையில, குறைந்த செலவில் கழிப்பிடங்களை அமைப்பதற்காகத் தமிழ்நாட்டில் 230 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமத்திலும் ஏழு மாதிரி விளக்கக் கழிப்பிடங்கள் தனியார் இல்லங்களில் அமைக்கப்படும். இந்தத் திட்டத்தின் தீவிர முயற்சியாக 15 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து கிராமம் ஒன்றுக்கு 50 கழிப்பிடங்கள் அமைத்துக் கொடுக்கப் படும். கிராம மக்கள் கழிப்பிடங்களைப் பயன்படுத்த முன்வர வேண்டும். இப்போது தயாரிக்கப்பட்டுள்ள கழிப்பிட வடிவமைப்பு குறைந்த செலவில் கட்டப்படக் கூடியது. பராமரிப்பு எளிது. இதனைப் பொதுமக்களிடம் பிரபலப்படுத்துவதற்குக் கிராம மக்களுடன் அரசு ஊழியர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டு ஆர்வமுடன் செயல்பட வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

யூனிசெஃப், உலக வங்கி நிறுவனங்களைச் சார்ந்த டாக்டர் டி.பி. பாலகோபாலன், வி.ஆர்.ஐயர் ஆகியோர் கலந்து கொண்டனர். ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் திரு முத்தையா நன்றி நவின்றார்.

**சிவசங்கரி**



# 'டான்சி' ஈட்டிய அனைத்திந்தியப் புகழ்

**1984** டிசம்பர் திங்களில் நடைபெற்ற சட்ட மன்ற-நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்திந்தியாவின் கவனத்தையும் ஈர்த்த பெருமை மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உண்டு.

இந்தத் தொகுதியில் மொத்தம் 90 பேர் வேட்பாளர்களாகப் போட்டியிட்டுப் புதிய வரலாற்றை உருவாக்கிவிட்டார்கள். இதுவரை இந்தியாவில் நடைபெற்ற எந்த தேர்தலிலும் ஒரே தொகுதியில் இத்தனை வேட்பாளர்கள் போட்டியிட்டதில்லை.

வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாக்குச் சீட்டின் நீள அகலமும் அதிகரித்துக் கொண்டு போவது இயல்பு. 90 வேட்பாளர்களின் பெயர்களும் அந்த வாக்குச்சீட்டில் இடம்பெற்றதால், அது ஒரு சுவரொட்டி அளவுக்குப் பெரிதாக அச்சடிக்கப்பட்டிருந்தது. அது மட்டுமல்ல-இந்தத் தொகுதிக்காகவே பெரிய அளவில் வாக்குப்பெட்டியும் தயாரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது.

மதுராந்தகம் தொகுதிக்கு $1\frac{1}{2}$ அடி அகலத்திலும் $1\frac{3}{4}$ அடி உயரத்திலும் 350 வாக்குப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டன. இவற்றை டான்சி நிலையங்கள் மிகக்குறுகிய காலத்தில் தயாரித்துத் தந்திருக்கின்றன என்பது தமிழகத்துக்குப் பெருமை சேர்க்கும் செய்தியாகும்.



மதுராந்தகம் தொகுதிக்காகப் பிரத்தியேகமாக டான்சி நிறுவனத்தினரால் தயாரிக்கப் பட்ட பெரிய அளவிலான வாக்குப் பெட்டி.

வாக்குப் பெட்டிக்குரிய மாதிரிப் பெட்டியை **டான்சி நிலையம்** உருவாக்கி வாக்குப் பெட்டிக்குரியமாதிரிப்பெட்டியை டான்சி நிறுவனம் 1984 ஜூலையில் புது டெல்லியில் நடைபெற்ற முதன்மைத் தேர்தல் அலுவலர்கள் மாநாட்டுக்கு அனுப்பி வைத்தது. அனைத்திந்திய அளவில், வேறு பல மாநிலங்களும் வாக்குப் பெட்டியின் மாதிரி வடிவங்களை அனுப்பி வைத்தன. இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் டான்சி அனுப்பி வைத்த மூலப் பெட்டியைத்தான் அங்கீகாரம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை டி. வி. நிலையக் கோபுரத்தை உருவாக்கியதும் டான்சி நிலையம் தான் என்பது உலகறிந்த செய்தி. தற்போது வாக்குப் பெட்டிகள் தயாரிப்பிலும் டான்சி பெரும் பங்கு வகிப்பது குறிப்பிடத்தகுந்த செய்தியாகிவிட்டது.

ராஜபாளையம், வேலூர், பழனி, கும்பகோணம் ஆகிய இடங்களில் உள்ள

டான்சி நிலையங்கள் வாக்குப் பெட்டிகளையும், சென்னை கிண்டியில் உள்ள டான்சி அழுத்தத் தகடு நிலையம் பெட்டிகளின் மூடிகளையும் உதிரி உறுப்புகளையும் தயாரித்துள்ளன. இந்தப் பணியில் ஏறக்குறைய 500 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். தேவைப்பட்டியல் கிடைத்த 60 நாட்களுக்குள் பெட்டிகளைத் தயாரித்துக் கொடுத்தது டான்சி.

பெட்டிகள் தயாரிக்கப்பட்டவுடன் அவற்றிலுள்ள துரு முதலில் நீக்கப்பட்டு, பிரைமர் பெயிண்ட் பூசப்படுகிறது. பின்னர், மட்டி வண்ணம் பூசப்பட்டு, இரண்டு முறை சிந்தடிக் எனாமல் வண்ணம் பூசப்படுகிறது. அதன் பிறகுதான் பெட்டிகள் முழுமை பெறுகின்றன.

தமிழ்நாடு அரசுக்கு 35,000 பெட்டிகளை 60 நாட்களுக்குள் செய்து தந்துள்ள டான்சி நிறுவனம், ஆந்திரம் மேற்குவங்கம், கர்நாடகம், குஜராத், மைய அரசின் நேரடி நிர்வாகத்தில் உள்ள தாதர் நகர் ஹவேலி ஆகிய பிற மாநிலங்களுக்கும் மொத்தம் 7,580 பெட்டிகளை உருவாக்கித் தந்தது. வெளிமாநிலங்கள் தமது தேவைகள் குறித்துத் தாமதமாகவே தெரிவித்திருந்தபோதிலும், குறுகிய காலத்திற்குள் வேலூர், ராஜபாளையம், பழனி முதலிய இடங்களிலுள்ள டான்சி நிலையங்களின் மூலம் பெட்டிகள் தயார்செய்யப்பட்டு அனுப்பப்பட்டன.

ஆந்திரத்திற்கு 3,000, மேற்குவங்கத்திற்கு 2,000, குஜராத்திற்கு 1,500, தாதர் மற்றும் நாகர்ஹவேலிக்கு 80 என்கிற அளவில் பெட்டிகள் அனுப்பப்பட்டன. இவற்றிற்காகிய மொத்தச் செலவு ரூ.96 இலட்சம் ஆகும்.

வாக்குப் பெட்டிகள் மட்டுமின்றி அவற்றை மூடுவதற்குப் பயன்படும் கேன்வாஸ் பைகள், பாலிதீன் பைகள், மற்றும் சில துணைப் பொருட்களையும் டான்சி நிறுவனம் தயாரித்து வழங்கியது. தமிழ்நாட்டிற்கு மட்டும் 30,000 பாலிதீன் பைகளையும் சிறிய அளவில் 1,40,000 பைகளையும் ரூ. 3 லட்சத்து 69 அயிரம் செலவில் தயாரித்து வழங்கியது.

மிகக் குறுகிய காலத்தில், பிற மாநிலங்கள் வியக்கும் வகையில் இந்தப் பணிகளைச் சிறப்புடன் முடித்துச் சாதனை புரிந்துள்ளது டான்சி நிறுவனம்!

## ஆய்வுக் கருவி அனுராதா

இதன் பெயர் "அனுராதா"; விண்வெளியில் 'காஸ்மிக்' கதிர்களை ஆராய்வதற்காக, இந்தியா தயாரித்துள்ள நுட்பமான கருவி இது.

அமெரிக்க விண்வெளி ஆய்வுக்கலத்தில் இந்தக் கருவி வைத்து அனுப்பப்படுகிறது.

பம்பாயில் உள்ள பாபா அணு ஆராய்ச்சிக் கேந்திரத்தின் ஆதரவில், பம்பாய் டாடா அடிப்படை ஆராய்ச்சிக் கழகம், ஆமதாபாத் பௌதிக ஆராய்ச்சிக் கூடம், பெங்களூர் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் விஞ்ஞானிகளும், பொறியாளர்களும் ரூ.40 லட்சம் செலவில் இதனை உருவாக்கியுள்ளனர்.

விண்வெளியிலிருந்து காஸ்மிக் கதிர்கள் மற்றும் ஏவப்படும் கதிர்கள் பூமியைத் தாக்கிய வண்ணம் உள்ளன. இந்த மிக மர்மமான கதிர்கள் பற்றி "அனுராதா" ஆராயும்.






அஞ்சல்துறை இந்த ஆண்டு (1985) 44 சிறப்பு நினைவு அஞ்சல் தலைகளை வெளியிடும். பூனாவிலுள்ள பெர்குசன் கல்லூரி பற்றியும், பீரங்கிப் படைபற்றியும் ஜனவரி மாதத்தில் ஏற்கெனவே மூன்று அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்திய தேசிய காங்கிரசின் நூற்றாண்டு விழாவின் நினைவாக நான்கு அஞ்சல் தலைகள் வெளியிடப்படும். திருமதி இந்திரா காந்தியைச் சிறப்பிக்கும் வகையில் குடியரசு தினத்தன்று இரண்டு அஞ்சல் தலைகள் வெளிப்பட்டன.

சென்னை, கல்கத்தா, ஆகிய இடங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகளின் நூற்றாண்டு விழாவையொட்டி இரண்டு அஞ்சல்தலைகள் வெளியிடப்படும்.

இந்த ஆண்டு நடைபெற இருக்கும் அஞ்சல் தலைக் கண்காட்சியின் நினைவாக இரண்டு அஞ்சல் தலைகள் வெளியிடப்படும்.

நாடக, நாட்டியக் கலைகளின் நினைவாக மே மாதத்தில் நான்கு அஞ்சல் தலைகளும், செப்டம்பர் மாதத்தில் ஒரு அஞ்சல் தலையும் வெளியிடப்படும். இந்தியத் திருவிழாவின் நினைவாக ஜூன் மாதத்தில் இரண்டு அஞ்சல் தலைகளும், அக்டோபர் மாதத்தில் இரண்டு அஞ்சல் தலைகளும் வெளியிடப்படும்.

வனவிலங்குகள் சம்பந்தமாக அக்டோபர் மாதத்தில் இரண்டு அஞ்சல் தலைகளும், வழக்கம்போல நவம்பர் 14-ந் தேதியன்று குழந்தைகள் தினத்தின்போது ஒரு அஞ்சல் தலையும் வெளியிடப்படும்.

சர்வதேச சமாதான ஆண்டின் நினைவாகவும், சர்வதேச வானநூல் ஒன்றியத்தின் நினைவாகவும், சர்வதேச இளைஞர் ஆண்டின் நினைவாகவும் மூன்று அஞ்சல் தலைகள் வெளியிடப்படும்.

பிரமுகர்கள் வரிசையில் ஜெய்ராம்தாஸ் தவலத்ராம், சுவாமி ஹரிதாஸ், பாபா ஜேசாசிங் அலுவாலியா, தாராசிங் ஆகியோர்களுடைய அஞ்சல் தலைகளையும், சுதந்திரப் போராட்ட வீரர்கள் வரிசையில் ஒரு சுதந்திரப் போராட்ட வீரருடைய அஞ்சல் தலையையும் அஞ்சல் துறை வெளியிடும்.

இராணுவ வரிசையில் அஸ்ஸாம் துப்பாக்கிப்படை பற்றியும், இராணுவத்தின் மூலம் தேசிய ஒருமைப்பாடு பற்றியும் இரண்டு அஞ்சல் தலைகள் வெளியிடப்படும்.

அஞ்சல்தலை வெளியிடுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வேறு பொருட்களின் விவரம் வருமாறு:

போகெயின்வில்லா செடி, மினிக்காய் கலங்கரை விளக்கம், கல்கத்தாவிலுள்ள புனித சேவியர் கல்லூரி, உருளைக்கிழங்கு ஆராய்ச்சி, காமகியா கோயில், சதுரங்கம், ஒருவகை வாத்து ஆகியவையாகும்.

### குழந்தைகளுக்குத் தனிக் கழிப்பிடம்!

சென்னை நகரில் இருக்கும் கழிப்பிடங்கள் அவசர அடிப்படையில் பழுது பார்க்கப்பட்டு, அவற்றில் நிரந்தரமாகத் தண்ணீர் மற்றும் விளக்கு வசதி இருக்குமாறு செய்யப்படும். கட்டணக் கழிப்பிடங்களில் இவ்வசதிகள் உடனடியாகச் செய்யப்படும்.

குழந்தைகளுக்கான கழிப்பிடங்களையும் தற்போதுள்ள கழிப்பிடங்களுக்கு அருகிலேயே கட்ட மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. குழந்தைகள் கழிப்பிடத்தின் மாதிரி ஒன்று ஏற்கெனவே கிரீம்ஸ் சாலையில் பம்பிங் ஸ்டேஷன் அருகே கட்டப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

### சாலை விபத்துக்களைத் தடுக்க ஒரு வழி

"இளைய தலைமுறையினருக்குச் சாலைப் போக்குவரத்து விதிகள் பற்றிப் போதிக்கப்படுவது அவசியம். இதைச் செய்தால் அடுத்த பத்து ஆண்டுகளில் சாலை விபத்துக்களால் ஏற்படுகிற உயிர் இழப்புக்களைக் குறைக்க முடியும். அதுவரை சாலை விதிகளை எவரும் மீறாமல் இருக்க தடைகள் அமைப்பது தவிர்க்க முடியாதது" என்று பல்லவன் போக்குவரத்துக் கழகத் தலைவர் திரு கே. ரவீந்திரன், இ.கா.ப. கூறினார்.

சென்னை அரிமா சங்கங்களின் கூட்டு மாநாட்டையொட்டி சாலைப் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்கு 20-1-85 அன்று சென்னையில் நடந்தது.

கருத்தரங்குக்கு முன்னதாக "உயிரைக் காப்போம்!" என்ற பெயரில் அரிமா சங்கம் தயாரித்த செய்திப்படம் ஒன்று திரையிடப்பட்டது. பொதுமக்கள் மத்தியில் சாலைப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு உண்டாக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தச் செய்திப்படம் நகரின் பல திரையரங்குகளி



லும் திரையிடப்படுவதற்கு ஏற்பாடாகி இருக்கிறது.

''கடந்த 5 ஆண்டுகளில் சாலை விபத்துக்களில் 1800 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். போபாலில் விஷவாயு பரவியதில் 2 ஆயிரம் பேர் கொல்லப்பட்டார்கள். போபால் நிகழ்ச்சி எவ்வளவு துயரம் மிக்கதோ அதே அளவு சாலை விபத்துச் சாவுகளும் துயரம் மிக்கவைதான். கால எல்லை மட்டுமே வேறுபடுகிறது. உயிர் இழப்பு ஒன்றுதான். ஒவ்வொரு தனி மனிதனும் அவரவரது பொறுப்புக்களை உணர்ந்து செயல்படுவதன் மூலமே நேர்த்தியை எட்ட முடியும்.'' என்று திரு சுரேஷ் கிருஷ்ணா என்னும் தொழிலதிபர் கருத்து தெரிவித்துள்ளார்.

### இராணுவ வீரர்கள் வீட்டு வசதி

இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு, கேரளம், ஆந்திரப் பிரதேசம், பாண்டிச்சேரி, கர்நாடகம் மாநிலங்களின் காவல்துறை உயர் அதிகாரிகளின் பொது உறவு மாநாடு சென்னைத் தலைமைச் செயல்கத்தில் 19-1-85 அன்று நடைபெற்றது. தென் வட்டார இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எச்.சி. சச்தேவ் மாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசினார்.

ஆண்டுதோறும் நடைபெறும் இந்த மாநாட்டில் சிவில் அதிகாரிகளுக்கும் இராணுவ அதிகாரிகளுக்குமிடையே ஒருங்கிணைந்த நட்பு மற்றும் நல்லுறவு குறித்து விவாதிக்கப்பட்டது.

தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப. பாண்டிச்சேரி தலைமைச் செயலாளர் திரு பானுனா, மற்றும் ஆந்திரப்பிரதேசம், கேரளம், கர்நாடக மாநிலச் செயலாளர்கள், போலீஸ் டைரக்டர் ஜெனரல்கள், இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள், இராணுவ அதிகாரிகள், தாம்பரம் விமான நிலைய அதிகாரி, தென் வட்டார என். சி. சி. இயக்குநர்கள் உள்ளிட்டோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

நாட்டின் பாதுகாப்பு முக்கியத்துவத்தைக் கருதி இராணுவப் பயிற்சிக்கு வேண்டிய நிலம் ஒதுக்குதல், இராணுவத்தினருக்குப் பல்வேறு வசதிகள் செய்வது பற்றியும் இராணுவத்தினரின் நலனுக்கு மாநில அரசுகளும் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தென் வட்டார இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் திரு எச். சி. சச்தேவ் கூறினார்.

இருபது அல்லது 30 ஆண்டுகள் இராணுவத்தில் சேவை புரிந்துவிட்டுச் சொந்த ஊர் திரும்பும் இராணுவ வீரர்கள் அவர்களது விருப்பப்படி உறவினர்கள் இருக்குமிடத்தில் சொந்தமாக வீடு கட்டிக் கொள்ளலாம் என்றும், ஓய்வு பெறுவதற்கு முன்னதாக வீடு கட்டிக் கொள்ள முடியாதவர்களுக்கு உதவ சிறப்புத் திட்டம் ஒன்றைக் கொண்டு வர தமிழக அரசு தீர்மானித்துள்ளது என்றும் தலைமைச் செயலாளர் திரு கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப. கூறினார்.

### சிறந்த மருத்துவத் தொண்டு

'சிலோவம் இந்தியா' என்ற நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளில் சென்னையில் தனது மருத்துவச் சேவையை விரிவுபடுத்தி வளர்ந்துள்ளது.

குறிப்பாக பார்வையற்றோருக்கும் தொழு நோயாளிகளுக்கும் நிவாரணம் அளிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்ட இந்த நிறுவனம் சென்னையிலும் தமிழகத்தின் வேறு சில பகுதிகளிலும் ஆண்டொன்றுக்குச் சுமார் 50 லட்சம் ரூபாய் செலவில் மருத்துவ சேவை மையங்களை நடத்தி வருகிறது.

இது பத்து படுக்கைகள் கொண்ட கண் மருத்துவமனை ஒன்றை அடையாறு கஸ்தூரி பாய் நகரில் நடத்தி வருகிறது. இங்கு வாரம் தோறும் செவ்வாய்க்கிழமைகளில் 'சிலோவம் இந்தியாவின்' கண் மருத்துவர்களால் ஏழை எளிய நோயாளிகளுக்கு இலவச அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது.

இந்த மருத்துவமனையை 20 படுக்கைகள் கொண்டதாக விரிவுபடுத்த இந்த ஆண்டு கட்டட வசதி செய்யப்படும் என்று இந்நிறுவனத்தின் மருத்துவத் தொண்டுக்கான இயக்குநர் டாக்டர் ஆர். எபனேசர்விக்டர் தெரிவித்தார்.

தொழுநோய் உள்ளதா என்று கண்டறிந்து நோய் உள்ளவர்களுக்கு அவசியமான எல்லா மருந்துகளையும் இலவசமாக அளிக்கும் தங்களது திட்டப்பணி இப்போது நொச்சிக்குப்பம், சீனிவாசபுரம், டொமிங்குப்பம் ஆகிய மீனவர் பகுதிகளில் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

மாலை நேரங்களில் சென்னை நகரில் ஏழைக் குழந்தைகள் ஆயிரம் பேருக்குச் சத்துணவு கொடுத்துவரும் இந்நிறுவனத்தின் சேவை, பல்லாவரம் மலையில் கல்லுடைக்கும் தொழிலாளர்களது குழந்தைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

—செய்தித்தாள்களிலிருந்து சேகரித்தவை







# தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம்

இந்திய அரசு, இலங்கை அரசுடன் ஏற்படுத்திக் கொண்ட சாஸ்திரி-சிரிமாவோ உடன்பாட்டின்படி பதினைந்து வருடகாலத்தில் 5,25,000 இலங்கைவாழ் இந்தியக் குடிமக்களை இந்தியாவிற்குத் திரும்ப ஏற்றுக் கொள்ள வேண்டும். இவர்களில் பெருவாரியானவர்கள் தேயிலை மற்றும் இதர தோட்டத் தொழில்களில் பணி புரிந்தவர்களாக இருப்பதால் அவர்களை அதே மாதிரியான தொழில்களிலேயே அமர்த்தி மறுவாழ்வளிக்கலாம் என்ற நோக்கத்துடன் நீலகிரி மாவட்டத்தில் தேயிலை வளர்ப்புப் பணியினை மேற்கொள்ள இந்திய அரசால் திட்டம் வகுக்கப்பட்டு முதன் முதலில் 1968 ஆம் ஆண்டு சோதனை முறையில் தேயிலைப் பயிர் செய்வது தொடங்கப்பட்டது. இத்திட்டம் தமிழக அரசால் 1976ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாள் வரை நிறைவேற்றப்பட்டது. 1.4.1976 முதல் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் அரசு நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது.

### இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரை ஏற்றல்

மறுவாழ்வுத்துறை இயக்குநரால் அனுமதிக்கப்பட்ட, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோரை இக்கழகம் வேலைக்கு அமர்த்துகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் இரண்டு நபர்களுக்கு வேலை அளிக்கப்படுகிறது. இது வரை 2325 குடும்பங்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளன. 1980-81ஆம் ஆண்டு முதல் 1983-84 வரை 322 குடும்பங்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளன. 1980-81ல் 109 குடும்பங்கள், 1981-82ல் 154 குடும்பங்கள், 1982-83ல் 59 குடும்பங்கள் என 322 குடும்பங்கள் (அதாவது 649 தொழிலாளர்கள்) பயன் பெற்றுள்ளனர்.

2325 தொழிலாளர் குடும்பங்களில் 2201 குடும்பங்களுக்கு நிரந்தரமான வீட்டு வசதி செய்யப்பட்டுள்ளது. ஏனைய தொழிலாளர்களுக்குத் தற்காலிக வீட்டு வசதி செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்குக் கட்டப்பட்டு வரும் நிரந்தரமான வீடுகள் பல்வேறு கட்டங்களில் உள்ளன. 1980-81 முதல் 1983-84 வரையில் 529 தொழிலாளர் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.



## [illegible] லாபம் !

[illegible] விரும்பப்படும் [illegible] வகைகளில் தக்காளியும் [illegible] பச்சையாகவும், [illegible] விதமாகச் சமைத்தும் [illegible]. தக்காளிச் சாற்றை [illegible] பருகுவது [illegible]

[illegible] தக்காளியைப் பயிரிட்டு [illegible] லாபம் சம்பாதிக்க விவசாயி [illegible] பெரிதும் உதவி உள்ளது.

வேளாண்மைத்துறை விஞ்ஞானி [illegible] ஆலோசனைப்படி பி.கே.எம்-1 [illegible] தக்காளி பயிரிடும் திரு அங்கதா [illegible] இப்பொழுது 5 [illegible] ரூபாய் வருமானம் [illegible]. மழை எவ்வளவு [illegible] இருந்தபோதிலும் [illegible] 3000 ரூபாய்க்குக் [illegible]

[illegible]

1980-81ல் 85 குடும்பங்கள், 1981-82ல் 89 குடும்பங்கள் 1982 83ல் 87 குடும்பங்கள், 1983-84ல் 268 குடும்பங்கள் என மொத்தம் 529 குடும்பங்கள் பயன் பெற்றன.

இத்தேயிலைக் கழகம் அரசு தேயிலைத் தோட்டத் திட்டத்திடமிருந்து 945.28 எக்டேர் நடவு செய்யப்பட்ட நிலப்பரப்பை எடுத்தது. இது வரையில் 2,419.86 எக்டேர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது.

1980-81ல் 206 எக்டேர், 1981-82ல் 221.90 எக்டேர் 1982-83ல் 69.08 எக்டேர், 1983-84ல் 24 எக்டேர் என மொத்தம் 520.98 எக்டேர் நிலத்தில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது.

### உற்பத்தி மற்றும் விற்பனை

இக்கழகத்தில் ஆண்டிற்கு 1.50 மில்லியன் கிலோ உற்பத்தித் திறன் கொண்ட சேரங்கோடு தேயிலைத் தொழிற்சாலையும் (சி.டி.சி. பதப்படுத்துதல்) ஆண்டிற்கு 0.75 மில்லியன் கிலோ உற்பத்தித் திறன் கொண்ட டைகர் ஹில் தேயிலைத் தொழிற்சாலையும் (பழைய முறை பதப்படுத்துதல்) உள்ளன. மூன்றாவதாக, ஆண்டிற்கு 1.50 மில்லியன் கிலோ உற்பத்தி திறன் கொண்ட தேயிலைத் தொழிற்சாலை ரூ. 1.40 கோடியில் கட்டப்பட்டுள்ளது. இத்தேயிலைத் தொழிற்சாலையில் மார்ச் 1984ல் உற்பத்தி தொடங்கியது.

கடந்த நான்கு ஆண்டுகளில் (1980-81 முதல் 1983-84வரை) உற்பத்தியாகியுள்ள தேயிலைத் தூள் மற்றும் இதன் மூலம் விற்பனையில் கிட்டியுள்ள வருமானம் 1980-81ல் ரூ.181.83 இலட்சம் மதிப்பீடுள்ள 15,27,703 கிலோ, 1981-82ல் ரூ.239.12 இலட்சம் மதிப்புள்ள 18,69,310 கிலோ 1982-83ல் ரூ.309.20 இலட்சம் மதிப்புள்ள 18,49,998 கிலோ, 1983-84ல் ரூ.512.80 இலட்சம் மதிப்புள்ள 23,01,584 கிலோ தேயிலைத்தூள் சி.டி.சி முறையில் பதப்படுத்தப்பட்டன.

1980-81ல் ரூ.71.64 இலட்சம் மதிப்புள்ள 5,30,942 கிலோ, 1981-82ல் ரூ.100.19 இலட்சம் மதிப்புள்ள 6,03,777 கிலோ, 1982-83ல் ரூ.114.7 இலட்சம் மதிப்புள்ள 6,66,254 கிலோ 1983-84ல் ரூ.262.10 இலட்சம் மதிப்புள்ள 8,25,793 கிலோ தேயிலைத் தூள் பழைய முறையில் பதப்படுத்தப்பட்டது.

தென் இந்தியாவில் இக்கழகத்தின் தேயிலைத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் உயர்தர தேயிலைத் தூள்கள் ஏலத்தில் அதிக விலையில் விற்பனையாகின்றன. டைகர் ஹில் தேயிலைத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் தேயிலைத் தூள் ஐக்கிய அமெரிக்க நாடுகள், கனடா, இங்கிலாந்து மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன் மூலம் 1982 83ல் ரூ.11.29 இலட்சம், 1983-84ல் ரூ.22.06 இலட்சம், அந்நியச் செலாவணி ஈட்டப்பட்டுள்ளது. 1982-83ல் 53,360 கிலோ, 1983-84ல் 58,880 கிலோ தேயிலைத் தூள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

### பங்கு மூலதனம்

தொழில் நிறுவன நிதி உதவியைப் பயன்படுத்த அரசு தேயிலைத் திட்டம் 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்படி 22.8.1975ல் ரூ. 2.75 கோடி பங்கு மூலதனத்துடன் ஒரு கழகமாகப் பதிவு செய்யப்பட்டது. 18.12.1978ல் இம் முதலீட்டுத் தொகையின் அளவு 5 கோடி ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது. பங்குதாரர்கள் அளித்த நிதிப் பங்கு மூலதனம் ரூ.245.34 இலட்சம் இதில் ரொக்கமாக அளிக்கப்பட்டது. ரூ. 21.72 இலட்சம், கழகத்தால் எடுத்துக் கொள்ளப்பட்ட சொத்துக்களின் மதிப்பு- இது அரசால் வழங்கப்பட்ட பங்கு மூலதனமாகக் கருதப்பட்டது.

### நிதி வாயில்கள்

இத்தேயிலைத் தோட்டக் கழகம் வேளாண்மை மறு நிதியுதவி வளர்ச்சிக் கழகத்தினால், யூகோ வங்கி, கனரா வங்கி மற்றும் இந்தியன் வங்கி மூலமாக நிதியைக் கடனாகப் பெற்று வருகின்றது. இக்கழகம் இதுவரை ரூ. 693.13 இலட்சத்தைக் கடனாகப் பெற்றுள்ளது. இந்திய அரசு இக்கழகத்தினால் வங்கிகளுக்குக் கட்டப்படும் வட்டியில் சலுகை காட்டி உதவி புரிகிறது.

இக்கழகம் 1981-82 வரையில் நஷ்டத்தில் இருந்தது. ஆனால் 1982-83 முதல் லாபம் ஈட்டத் தொடங்கியுள்ளது. 1982-83ல் ரூ. 8இலட்சம் லாபம் ஈட்டியுள்ளது. 1983-84ல் ரூ. 202 லட்சம் லாபம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### தொழிலாளர்கள் நலன்

தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்குப் பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

இலவசக் குடியிருப்பு, குடிநீர் வசதிகள், மருத்துவ வசதிகள், வேலை செய்த 20 நாட்களில் ஒருநாள் சம்பளத்துடன் விடுப்பு, ஒன்பது தேசிய மற்றும் திருவிழா நாட்களில் முழுச்சம்பளத்துடன் விடுப்பு, ஒவ்வொரு ஆண்டும் 14 நாட்கள் உடல் நலமின்மை விடுப்பு (சம்பளத்தில் மூன்றில் இரண்டு பகுதி), பெண் தொழிலாளர்களுக்கு 84 நாள் மகப்பேறுவிடுப்பு முழுச்சம்பளத்துடன். குடும்பநலத் திட்டத்தின் கீழ் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் ஆண், பெண், இருபாலருக்கும் உதவித் தொகை அளித்தல், குழந்தைகள் காப்பகம் அமைத்தல், தொடக்கப்பள்ளி வசதிகள் செய்து கொடுத்தல்- ஆகியவை குறிப்பிடத்தகுந்த வசதிகள் ஆகும்.

இவ்வாறு தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம் தனது பணியின் வாயிலாகப் பெரும்புகழ் எய்தி வருகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.






ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
26 FEB 1985
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர் சென்னை-8.

# தமிழரசு

**16-2-1985 75 காசு.**
திருவள்ளுவர் ஆண்டு 2016
ரக்தாக்ஷி - மாசி 5





தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் 30.1.1985 அன்று மாண்புமிகு திரு அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், தியாகிகள் தினம் கொண்டாடப்பட்டது. மாண்புமிகு அமைச்சர்களும் அரசு அலுவலர்களும் இரண்டு நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தி, தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.



# நாட்டு மக்கள் நலனுக்கே நாளும் உழைப்பேன்!

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.**

என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என் வணக்கத்திற்குரிய பெரியோர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே! உங்கள் அனைவரையும் கைகூப்பி வணங்குகிறேன்

உங்கள் அனைவருடைய வேண்டுதல்களினாலும், நல்வாழ்த்துக்களாலும், நல்லாசிகளின் துணையாலும் மீண்டும் தமிழகத்தின் புனிதமான பூமியில் அடியெடுத்து வைக்கும் பாக்கியம் கிட்டியதை எண்ணி என் மனம் ஆனந்த உணர்வுகளால் விம்மிப் பெருமிதம் அடைகிறது.

கடந்த நான்கு மாதங்களாக எனக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டு சிகிச்சை பெற்ற நேரங்களில் எல்லாம் என் உடலில் ஏற்பட்ட வலியைவிட தமிழ்மக்களை நேரில் காணமுடியாமல் நேரிட்டுவிட்டதே என்ற வலிதான் என்னைப் பெரிதும் வாட்டியது.

எந்த மக்கள் என்னை வளர்த்து ஆளாக்கி, ஆதரவு தந்து, அரவணைத்து ஆட்சிப் பொறுப்பையும் அளித்திருக்கிறார்களோ அந்த அன்புத் தெய்வங்களை நான்கு மாத காலம் பிரிந்திருக்க நேரிட்டுவிட்டதே என்ற துயரத்தைவிட எனக்கு வேறு எந்தத் துயரும் பெரியதாகத் தோன்றியதில்லை.

சென்னை நகரில் அப்பல்லோ மருத்துவமனையிலும், பின்னர் நியூயார்க்கில் டவுன்ஸ்டேட் மருத்துவமனையிலும் நான் நலம்பெற வேண்டும் என்பதற்காக மருத்துவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் ஒரு புனிதமான தியாக வரலாறாகும்.

பல நெருக்கடிகளுக்கு இடையில் சென்னை வந்து என்னைக் கண்டு தைரியம் கூறி மத்திய அரசின் சார்பில் இதுவரை யாருக்கும் செய்திராத உதவிகளைச் செய்ய உத்தரவிட்டு விட்டு மறைந்துவிட்ட அன்னை இந்திரா காந்தி அம்மையார் நம்மிடையே இல்லாததை எண்ணும் போது என் இதயம் துயரத்தால் வெடிக்கிறது. அன்னையின் வழியிலிருந்து மாறாத நிலையில் நாட்டின் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு கடும் பிரச்சினைகளுடன் கூடிய கொந்தளிப்பான நிலையிலும் என்னை மறவாது அனைத்து உதவிகளையும் செய்த பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு எவ்வாறு நன்றி சொல்வதெனத் தெரியவில்லை.

ராஜபவனத்துக்குச் சென்றிருந்த (7.2.1985) மாண்புமிகு முதல்வர் அவர்கள், அங்கு வருகை புரிந்திருந்த மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களைச் சந்தித்தார்.





அண்ணா சதுக்கத்தில்



ஆளுநர் மாளிகையில்

அங்கிருந்து நேராகத் தலைமைச் செயலகத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 9-57 மணிக்கு வந்தார். அங்குத் தலைமைச் செயலாளர் திரு கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப. அவர்களும் மற்றும் அலுவலர்களும் வரவேற்றனர்.

பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்களை முதல்வர் அறைக்குத் தலைமைச் செயலாளர் அழைத்துச் சென்றார்.

தலைமைச் செயலகத்திலுள்ள முதல்வர் அறையில் சுமார் பத்து நிமிட நேரம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி ஆர் அவர்கள் தங்கியிருந்தார். ஒரு முக்கிய கோப்பு அவர் பார்வைக்கு வைக்கப்பட்டது. அதில் அவர் கையெழுத்திட்டார்.

பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இல்லம் சென்றார்.

தருமை ஆதீனகர்த்தர், மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.



# தாய்மனத்து முதல்வருக்கு தமிழகத்தின் வரவேற்பு



மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை திரும்பினார்!

கோடையிலே மழைகண்ட நிலம் போலக் குளிர்ந்தது தமிழகத்தார் நெஞ்சம்!

நாடு நலம்பெற-நன்மை விளைந்திட நாளும் உழைத்த அந்தப் பொன்மனச் செம்மல், உடல் நலிவுற்றதாலே அப்பல்லோ மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டார், கடந்த ஆண்டு அக்டோபர் 5ல். அதன்பின், அமெரிக்க நாடு சென்று சிகிச்சை பெற்றுச் சென்னைக்குத் திரும்பினார் 4.2.85ல். அவர் இங்கில்லாத அந்த நாட்களில் பெரும்பாலானோர் பேதலித்துப் போயினர் தமிழகத்தில் என்றால் அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!

16.10.84ல், சென்னைக்கு நம் முதல்வர் அவர்களைக் காண்பதற்காகவே வந்தார் இந்தியப் பிரதமராயிருந்த திருமதி இந்திரா காந்தி அவர்கள். அப்பல்லோ மருத்துவமனையில் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கண்டு நலம் விசாரித்த பிரதமர், ''எவ்வளவோ சோதனைகளில் வெற்றி கண்ட தாங்கள், இதிலும் வெற்றி பெற வேண்டும்'' என்று வாழ்த்துக் கூறிச் சென்றதோடு, எத்தகைய உயர்ந்த முறைச் சிகிச்சை அவருக்கு அளிக்கப்பட்டாலும் அதற்கான செலவை மத்திய அரசு ஏற்கும் என்றும் தெரிவித்தார்.



அவர் வந்து போன மறுநாள்-அமெரிக்க டாக்டர்களான பிரீட்மன், கிறிஸ்டோபர் பிளாக், ஸ்ரீபாதராவ், ஜான்ஸ் டர்லிங்மோர் ஆகியோர் சென்னைக்கு வருகைதந்து மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பரிசோதித்தார்கள்.



18.10.84ல் இருந்து, இந்துக் கோயில்களில், இஸ்லாமியர் மசூதிகளில், கிறிஸ்தவ தேவாலயங்களில் எல்லாம் கூட்டு வழிபாடு தொடங்கியது நாட்டு மக்கள் நலிவு நீங்கப் பாடுபட்ட அந்த நல்லிதயத்தின் நலம் கருதி!

20ஆம் தேதி, ஜப்பானிய டாக்டர்களான கானூ, நக்மோரா ஆகிய இருவரும் வந்தனர், முதலமைச்சரின் உடல் நிலையைப் பரிசோதிக்க. 3.11. 84ல் டாக்டர் கானூ மீண்டும் சென்னை வந்தார் தன்னைக் கவர்ந்த தலைவனின் நலம் காண.

**அமெரிக்கப் பயணம்...**

தமிழக அரசும் அமைச்சரவையும் முடிவெடுத்தபடி மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிகிச்சைபெற அமெரிக்க நாட்டுக்குப் பயணமானார்(15.11.84)தனி விமானத்தில். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி வி.என். ஜானகி அம்மையார், தனிச் செயலாளர் திரு. மு. பரமசிவம் இ.ஆ.ப., டாக்டர் பி.ஆர்.சுப்ரமணியம் உட்பட 21பேர் அவ்விமானத்தில் உடன் சென்றனர். மறுநாளே அமெரிக்க நாடு போய்ச் சேர்ந்த அவர், நியூயார்க்கைச் சேர்ந்த புரூக்ளின் டவுன் ஸ்டேட் மருத்துவ மனையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டார்.

நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் நலம்தேறி வந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழகத்தில் அறிவிக்கப்பட்ட பொதுத் தேர்தலில் போட்டியிடச் சம்மதிக்கவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மூலம் கொண்டு வரப்பட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களின் வேட்புமனு, 23.11.84ல் தாக்கல் செய்யப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உடல் நலிவைப் பூதாகாரமாக்கித் தேர்தலில் ஆதாயம் தேட முனைந்தோரின் வீண் வாதங்களைப் பலவீனப்படுத்தும் வகையில், அவர் விரைந்து நலம் பெற்று வருகிறார் என்பதை மக்களுக்கு உணர்த்தும் விதத்தில் 6.12.84ல் மாண்புமிகு முதல்வர் அவர்களின் சில புகைப்படங்களும், 9.12.84ல் வீடியோ படமும் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்களால் இங்கே தமிழகமெங்கும் வெளியிடப்பட்டன. கலங்கித்



தவித்த மக்கள் குழப்பம் நீங்கி மனத் தெளிவு பெற்றனர்.

19.12.84ல் மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மூன்று மணி நேரம் அம்மருத்துவ மனையிலே வெற்றிகரமாக நடந்தேறியது.

24.12.84ல் நடந்து முடிந்த பொதுத் தேர்தல் முடிவுகள், அதற்கடுத்த நான்காம்



**********************************************

பரங்கிமலை இராணுவ மைதானத்திடல் வரவேற்பு மேடைக்குச் சற்றுத் தள்ளி, கீழே அமர்ந்திருந்த சட்டப்பேரவை-மேலவைத் தலைவர்கள், அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் மீது மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனம் திரும்புகிறது.

மேலே வரும்படி வலக்கரம் அசைக்கிறார் சிரித்தபடி.

''மேடைக்கு வாருங்கள்'' என்று அவர்களை அழைக்கிறார் முதல்வர், வலக்கரத்தால் சைகைகாட்டி.

'இப்போது வேண்டாம்; பிறகு வந்து பார்க்கிறோம்' என்பது போலச் சைகை செய்கிறார் மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி.

'நீங்கள் இங்கு வருகிறீர்களா, அல்லது நான் அங்கு வரவா...?' என்பதுபோல் மீண்டும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கையசைத்தாரோ இல்லையோ, பதறிக் கொண்டு எழுந்து போனார்கள் சட்டப் பேரவைத் தலைவரும், மேலவைத்தலைவரும்.

மேடையில் ஏறிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு.க. ராசாராம் மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. ஆகியவர்களிடம் கைகுலுக்கி, நெஞ்சாரத் தழுவி நெக்குருகிப் போகிறார் மாண்புமிகு முதல்வர். அடுத்து மேடைக்கு வந்த அத்தனை அமைச்சர்களின் வாழ்த்துக்களையும் ஏற்று ஆசி வழங்குகிறார்.

**********************************************

நாள் வெளியிடப்பட்டன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் 31,454 வாக்குகள் வித்தியாசத்தில் பெரு வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டது.

இந்த மகிழ்ச்சிச் செய்தியை நேரில் தெரிவித்துப் பாராட்ட - அரசமைப்பது பற்றிக் கலந்து பேச-மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களும், அரசு தலைமைச் செயலாளர் திரு கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப. அவர்களும் 4.1.85ல் அமெரிக்க மருத்துவமனைக்குச் சென்று வந்தார்கள். அவர் நலம் பெற்றுவிட்ட செய்தியை அகமகிழ்வோடு நாட்டு மக்களுக்குத் தந்தார்கள்.

**வரவேற்பில்...**

28.1.85ல் அமெரிக்கத் தமிழ் நெஞ்சங்கள் அங்கே அன்பினாலே அளித்த வரவேற்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், அவர்தம் துணைவியாரும் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். அமெரிக்கச் சிகிச்சைக்கு இயன்ற வகையிலெல்லாம் இதயபூர்வமாக உதவிய டாக்டர் பெரியசாமி அவர்கள் முன் நின்று நடத்திய அவ்



விழாவில், சத்யா அறக்கட்டளை சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூன்று லட்சம் ரூபாய் நன்கொடை வழங்குவதாக அறிவித்தார்.

அமெரிக்கத் தமிழன்பர்களும், சிறப்புறச் சிகிச்சையளித்த புரூக்ளின் டவுன் ஸ்டேட் மருத்துவமனை டாக்டர்களும், அங்குள்ள இந்தியத் தூதர் திரு சி. சி.



அரோராவும் பிரிவாற்றாமல் வழியனுப்ப அமெரிக்காவை விட்டு அதற்கடுத்தவாரமே தமிழகத்திற்குப் புறப்பட்டார் மாண்புமிகு முதல்வர்.

அவ்விமானம் பம்பாய்க்கு வந்து சேர்ந்தபோது, மாண்புமிகு மத்திய சமூக நலத் துறை இணையமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்கள் வரவேற்றார்கள். மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் தம் இதய வாழ்த்துக்களைத் தெரிவிக்கச் சொன்னதாக மாண்புமிகு மராட்டிய மாநில நிதியமைச்சர் திரு சுஷில்குமார் ஷிண்டே அவர்கள் கூறக்கேட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்

கள் பெரிதும் மகிழ்ந்தார். மாண்புமிகு மராட்டிய மாநில வனத்துறை அமைச்சர் திரு ஸ்வரூப்சிங் நாயக் அவர்கள், தமது மாநில முதல்வர் திரு வசந்ததாதா சார்பில் நல்வாழ்த்துக்களைக் கூறினார். அதன்பின் விமானம் பம்பாய் விமான நிலையத்தை விட்டுப் புறப்பட்டது.

**தமிழகத்தில்...**

'முப்பிறவி கண்ட முத்தமிழ் வித்தகரே வருக... '

'அண்ணனை மீட்டுத் தந்த அண்ணியாரே -மஞ்சள் குங்குமத்தோடு நீர் பல்லாண்டு வாழ்க.....'

'இயற்கையை வென்ற எங்கள் தலைவரே வருக, வாழ்க....'

'எல்லாரும் எல்லாம் பெற என்ற கொள்கையில் இம்மியும் தவறாத எங்கள் தெய்வமே வருக, வருக..'

'மக்கள் பிரார்த்தனையால் மறு வாழ்வு பெற்ற முதல்வரே வருக...'

4.2.85ஆம் நாள் திங்கட்கிழமையன்று தமிழகத்தின் தளநாயகராம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை வந்து சேர்கிறார் என்ற செய்தி தெரிவிக்கப்பட்ட நாள் முதல், இதுபோன்ற பலவகை வாசகங்களும் உடைய வண்ணச் சுவரொட்டிகள் நகர் முழுதும் ஒட்டப்பட்டன. ஆங்காங்கே பதாதைகள்-அலங்கார வளைவுகள் கட்டப்பட்டன.

பரங்கிமலை இராணுவ மைதானமாம் மொகிதி திடலில் வரவேற்பு. 'ஏர்இந்தியா' தனி விமானம் அதிகாலை 6 மணிக்கெல்லாம் தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைவரோடு சென்னை வந்துசேரும் என்ற செய்தி அறிந்து அதற்கு முதல் நாளிரவே தமிழகம் தலைநகரில் அணி திரண்டது; எல்லாச் சாலைகளுமே சென்னைக்கு என்ற நிலை உருவாயிற்று. நதியிடையே தெப்பங்கள்போல், மக்கட் பெருக்கிடையே வண்டி வாகனங்கள்!

பொதுத் துறையினரால் விரைந்து செப்பனிடப்பட்ட அத்திடலில், 'மாண்புமிகு முதல்வர் அவர்களே வருக, வாழ்க!' என்ற வாசகங்கள் மின்விளக்கால் ஒளிவிட எழுப்பப்பட்ட அழகுமேடை முன்னாலே விரிந்து கிடந்த வெற்றுத்திடல், மக்கள் மயமாயிற்று. 'பார்சிறுத்தலின் படை பெருத்ததோ...படைபெருத்தலின் பார் சிறுத்ததோ' என்ற இலக்கிய அடிகளுக்கு எடுத்துக் காட்டாயிற்று சீர்மிகு சென்னை மாநகர். மார்கழி மாதப் பனிவேகம் இந்தத் தையிலும் தொடர்ந்து தரையை மட்டுமல்ல, பகலிரவு பாராமல் கூடியிருந்தோர் தலையையும் நனைத்திருந்தது. எங்கும் புகைமூட்டம் போலப் பனிமூட்டம். ஒலி பெருக்கிகளில் நாதசுர இசை ஒட்டம்!

கிழக்கையே பார்க்கும் தாமரைபோல அத்தனைபேரின் முகங்களும் வானத்தையே பார்த்திருந்தன. விண்மீன்கள் ஒளி கெட்டு, விடிவெள்ளி பளபளக்கும் வேளை. 5.40க்கெல்லாம் அந்த விமானம் வந்துவிட்டது என்ற செய்தி அப்பெருங்கூட்டத்தாரிடையே பரவியது; மக்கள் வெள்ளத்தில் ஏற்பட்ட உற்சாகக் கொந்தளிப்பை ஒரு



கட்டுக்குக் கொண்டுவர, காவல்துறையினர் சுறுசுறுப்படைகிறார்கள்.

விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சார்பிலே அரசுச் செயலாளர் திரு கு.சொக்கலிங்கம், இ.ஆ.ப. அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாலை அணிவித்தார்.

தமிழ்நாடு அமைச்சரவை சார்பிலே மாண்புமிகு நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் மாலை சூட்டி மகிழ்ச்சி தெரிவித்தார்.

அண்ணா தி.மு.கழகப் பொதுச் செயலாளர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் கழகத்தின் சார்பிலே மாலை அணிவித்தார்.

மணி 6.50. கிழக்கு வானில் கதிரவனே வியந்து தலைதூக்கிப் பார்த்தபடி எழ, அதே திக்கிலிருந்து மாண்புமிகு முதல்வர் எப்போதும் பயன்படுத்தும் டி.எம்.க்யூ. 4777 பச்சை வண்ணக் கார் வருகிறது. கூடியிருந்த லட்சோபலட்சம் மக்களின் விழிகளும் ஆனந்த மிகுதியாலே அகலமாகின்றன.

**மேடை மின்னல்...**

மின்னலே மேடைக்கு வந்தால் எப்படியிருக்கும்?

# தமிழகத்தின் நாயகனே வருக!

— கலைமாமணி புத்தனேரி சுப்பிரமணியம்



வருக வருக தமிழகத்தின் நாயகனே வருக!
மாசில் லாத மழைத்துளிபோல தூயவனே வருக!
தரும மெல்லாம் தலைகாக்கும் சான்றுகாட்டு கின்றாய்
சங்கடங்கள் அத்தனையும் விலகிஓட வென்றாய்!
(வருக வருக)

அமெரிக் காவில் சிகிச்சைபெற்ற அற்புதப்பொன் மேனி
ஆயுள்பலம் பெற்ற நீயே அரசியல் விஞ்ஞானி;
எமனை வென்ற மாமனிதன் என்றபுகழ் சேர்த்தாய்!
எத்தனையோ கோடிமக்கள் இதயமெல்லாம் ஈர்த்தாய்
(வருக வருக)

மனவலிமைப் புரட்சியினால் தேர்தல் வெற்றி கண்டாய்;
மறுபடியும் முதல்வர்எனும் மகுடம் சூடு கின்றாய்;
உனது முக ராசிகண்டு துள்ளும் எங்கள் உள்ளம்
உன்புகழை ஒலிக்குதுபார் அன்பு மக்கள் வெள்ளம்
(வருக வருக)

மறுபிறவி இரண்டுமுறை எடுத்த விந்தை கண்டோம்
வையகமே கண்டறியா விந்தை இது வன்றோ?
வரலாறு படைத்துவிட்டாய் மக்கள் திலகம் நீயே
வள்ளலே அன்புமழை பொழிய வருக வாழ்க!
(வருக வருக)

சத்தியத் தாய் பெற்ற புகழ் உத்தமனே வருக!
சாதனைகள் புரிந்த புரட்சித் தலைவனே நீ வாழ்க!
சத்துணவுத் திட்டம் கண்ட வித்தகனே வருக!
சமதர்மக் காவலனே உனதுபுகழ் வாழ்க!

என்னுடைய உடலுக்குச் சிறு அவதி கூட ஏற்பட்டுவிடக்கூடாதே என்ற கவலையில் பல லட்சம் ரூபாய்கள் இழப்பையும் பொருட்படுத்தாமல் புகழ் பெற்ற மருத்துவ நிபுணர்களை அழைத்துவந்ததுடன், விமானப் பயண வரலாறே கண்டிராத வகையில் பறக்கும் மருத்துவமனையை அமைத்து அமெரிக்கா அழைத்துச் சென்று மீண்டும் என்னை சென்னைக்குக் கொண்டு வந்து சேர்த்த எனது மறுபிறவிக்கு அடித்தளமாக விளங்கிய ஏர்-இந்தியா நிர்வாகத்தை அதன் செம்மல்களை எப்படிப் பாராட்டுவது?

அரசையும், கழகத்தையும் தேர்தல் உள்ளிட்ட பல்வேறு கடும் சோதனைகளையெல்லாம் சமாளித்துக் கட்டிக்காத்த என் மூத்த மற்றும் இளைய உடன்பிறப்புக்களை எப்படிப் புகழ்வது?

ஆலயங்களிலும், மாதா கோயில்களிலும், மசூதிகளிலும், ஆலைகளிலும், அலுவலகங்களிலும் கூடி நின்று என் நலனுக்காகத் தங்கள் தங்கள் நம்பிக்கைக்கு ஏற்ப வழிபாடுகள் செய்து கண்ணீருடன் முறையிட்டு மன்றாடிய தமிழகத்தின் மனித தெய்வங்களை எப்படிப் பாராட்டுவது என்றெல்லாம் எண்ணி நான் திகைத்து நிற்கிறேன்.

பிப்ரவரி 4-ம் தேதி சென்னையில் என தருமை மக்களைக் கண்ணால் கண்டவுடன் நான் பெற்ற இன்பத்தை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. தங்களுடைய உயிர்ச் சகோதரனாக என்னைக் கருதியுள்ள தமிழக மக்களுக்கு நான் பட்டுள்ள நன்றிக் கடனைத் திருப்பிச் செலுத்த இயலுமா என்றே நான் மீண்டும் மீண்டும் சிந்தித்த வண்ணம் இருக்கிறேன்.

கடந்த நான்கு மாதங்களாக மேற்கொண்டுள்ள சிகிச்சைகளின்போது நான் ஏற்றுக்கொண்ட உடல் வேதனையும், மன உளைச்சல்களும் என் மக்களைக் கண்டவுடன் ஒரு கணத்தில் பறந்து விட்டதையும் என் உடலில், மனத்தில் புதியதோர் சக்தி பிறந்திருப்பதையும் நான் நன்கு உணர்கிறேன்.

தமிழக மக்களுக்கும், இந்திய நாட்டிற்கும் தொண்டு செய்ய மறுமுறையும் எனக்கு வாய்ப்பு கிட்டியுள்ளது. இந்த மகத்தான பொறுப்பை உங்களுடைய ஒத்துழைப்பினாலும், நீடித்த ஆதரவினாலும் செம்மையாகச் செய்து முடிக்க இயலும் என்று நான் திடமாக நம்புகிறேன். எனது எண்ணங்களையும் உணர்வுகளையும் நேரடியாக உங்களிடம் எடுத்துக்கூறும் தி[illegible] வெகுவிரைவில் வரும் என்கிற உறுதியுடன் நான் உள்ளேன்.



கடவுள் என்ற சொல்லுக்கு எல்லாவற்றையும் கடந்து நிற்கும் ஒரு மெய்ப்பொருள் அல்லது 'மெய்யுணர்வு என்பதே பொருளாகும். இத்தகைய சிறந்த கருத்தமைந்த கடவுள் என்ற சொல், தமிழைத் தவிர வேறெம்மொழியிலும் அமையவில்லை.

என்னைப் பெற்றெடுத்த அன்னை சத்தியா அம்மையார், ''இந்த உலகத்தில் எந்தப் பணிக்காக நீ பிறப்பிக்கப்பட்டிருக்கிறாயோ அந்தப் பணி முடிவடையும்வரை உன்னுடைய உயிருக்கு எந்த ஆபத்தையும் யாராலும் ஏற்படுத்த முடியாது'' என்று அடிக்கடி கூறுவார்கள். அந்த வாக்கு தான் பல நேரங்களில் நெருப்பாறுகளைக் கடந்திட எனக்கு உதவியது.

கடந்த நான்கு மாதங்களாக அரசியலிலும், மற்ற துறைகளிலும் நடைபெற்ற அனைத்துச் சம்பவங்களையும் நான் தேவையான அளவு அறிந்துள்ளேன்.

நான் அறிந்த அனைத்தையும் வைத்துப் பார்க்கும்போதும், தேர்தல் தீர்ப்புக்களை எண்ணும்போதும் பிப்ரவரி 4ஆம் தேதி நான் மக்களின் ஆசிகளைப் பெற்றிட வணங்கி நின்றபோதும் என் உள்ளத்தில் ஒரு கருத்து அழியாத கனல்போல எழுந்துள்ளது.

'இந்த மக்களிடமிருந்து என்னைப் பிரித்திடவோ என்னிடமிருந்து இந்த மக்களைப் பிரித்திடவோ எந்தச் சக்தியாலும் முடியாது' என்ற எனது நெடுநாளைய உறுதி மேலும் மேலும் வலிவு பெற்றுள்ளது. உரம் பெற்றுள்ளது. நான் உங்களுக்காக என்னை என்றுமே ஒப்படைத்துவிட்டவன் எனினும், சிகிச்சைக்குப்பின் உங்களைக் காணுகின்ற நேரத்தில் 'பாராட்டு, புகழ்ச்சி, நன்றி, வணக்கம்' என்கிற சொற்கள் எல்லாம் என் உணர்வுகளை வெளிப்படுத்தப் போதுமானதாக இல்லையென்பதால் தமிழக மக்களே! எஞ்சியுள்ள என் வாழ்நாளையும் உங்கள் நலனுக்காக உழைக்க காணிக்கையாக உங்கள் காலடியில் வைக்கிறேன் என்ற உறுதியினையே எனது நன்றியாக ஏற்று அருளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

வணக்கம்.

[தமிழக மக்களின் தீர்ப்பின்படி மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்றதை ஒட்டி 10.2.85 அன்று விடுத்துள்ள அறிக்கை.]





# மூன்றாவது முறையாக முதல்வராகப் பதவியேற்பு

தமிழக முதல்வராக மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மூன்றாவது முறையாக 10-2-1985 அன்று காலை கிண்டி ராஜ்பவனில் நடைபெற்ற ஒரு எளிய விழாவில் பதவி ஏற்றுக் கொண்டார். மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள், அவருக்குப் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புறுதிப் பிரமாணமும் செய்து வைத்தார்.



பிரமாண வாசகங்களை மேதகு ஆளுநர் அவர்கள் ஆங்கிலத்தில் படித்தார், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 'உளமார உறுதி கூறுகிறேன்' என்று தமிழில் இருமுறை கூறி பதவி ஏற்பும், ரகசியக் காப்புறுதிப் பிரமாணமும் செய்து கொடுத்தார்.

முதல்வராகப் பதவி ஏற்றுக் கொள்வதற்கு, கிண்டி ஆளுநர் மாளிகைக்குச் சரியாக 8-50 மணிக்கு மாண்புமிகு டாக்டர் எம்.ஜி ஆர், தமது துணைவியார் திருமதி வி. என். ஜானகி அம்மையாருடன் வந்தார். நியூயார்க் புரூக்ளின் மருத்துவமனை டாக்டர் ஸ்ரீபாதராவும், அமெரிக்கத் தமிழ் மையத்தின் தலைவர் டாக்டர் பெரியசாமியும் முதல்வருடன் வந்திருந்தனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் வந்து சேர்ந்ததும் அவரைத் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப, ஆளுநர் மாளிகையில் மாலை அணிவித்து வரவேற்றார். பின்னர் தலைமைச் செயலாளருடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவரது துணைவியாருடன் மேதகு ஆளுநருடைய அலுவலக அறைக்குச் சென்றார். அங்குப் பதவி ஏற்பு விழா 9 மணிக்கு நடந்து முடிந்தது.

பதவி ஏற்பு விழாவிற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம், மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம், சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு சந்துர்கர் ஆகியோர் வந்திருந்தனர். நாடாளு மன்றத் துணைத் தலைவர் திரு எம். தம்பித்துரை மற்றும் முதல்வரின் டாக்டர்கள் பதவி ஏற்பு விழாவில் கலந்துகொண்டனர்.

பதவி ஏற்பு விழா நடந்ததும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அனைவருடனும் கைகுலுக்கிவிட்டு, தேநீர் அருந்தியதும், மேதகு ஆளுநர் அவர்களுடன் புகைப் படம் எடுத்துக்கொண்டார். பின்னர் சரியாக 9-50 மணிக்குக் கடற்கரையிலுள்ள அண்ணா சதுக்கத்திற்குச் சென்றார். அண்ணா சமாதியில் அவரும், அவரது துணைவியாரும் அஞ்சலி செலுத்தினர்.

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2016
ரக்தாக்ஷி - மாசி 5
மலர் : 15 இதழ் : 16
16-2-1985



# புருக்ளின் மருத்துவ மனையில் முதல்வர் பெற்ற பாராட்டு

அமெரிக்காவிலுள்ள தமிழ்நாடு பவுண்டேஷன், நியூயார்க் தமிழ்ச் சங்கம், பாரதி சங்கம் உள்ளிட்ட பல்வேறு தமிழ்ச்சங்கப் பிரிவுகள் 27.1.1985 அன்று புருக்ளின் மருத்துவமனை அரங்கில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஒரு சிறப்பான, உணர்ச்சி மயமான வரவேற்பை அளித்தன. தமிழ்நாடு பவுண்டேஷனின் தலைவர் டாக்டர் பழனி பெரியசாமி இதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

அந்த அரங்கில் அமெரிக்காவின் தொலைதூரப் பகுதிகளிலிருந்தெல்லாம் தமிழர்கள் வந்திருந்தனர். 200 பேர்கள் மட்டுமே அமரக்கூடிய அந்த அரங்கில் 500க்கும் மேற்பட்ட ஆர்வமிக்க தமிழர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. டாக்டர் பெரியசாமி வரவேற்புரை நிகழ்த்தினார். டாக்டர் ஸ்ரீபாதராவ், டாக்டர் கல்த்பட், டாக்டர் ரேமாண்ட் பெல்ஸ்கி, திரு தில்லைநாயகம் ஆகியோர் முதலமைச்சருக்கு வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்தார்கள்.

அனைத்துச் சங்கங்களின் சார்பிலும் குழந்தைகள் முதலமைச்சருக்குப் பூச்செண்டு கொடுத்தார்கள். முதல்வர் அவற்றைத் தனக்கே உரிய அன்போடு குழந்தைகளிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

நியூயார்க் மாநகராட்சி மன்றத்தின் மாநகராட்சிப் பிரதிநிதியான டாக்டர் நோவாக், முதல்வரை மிகவும் பாராட்டிப் பேசினார். புருக்ளினையும், மன்ஹாட்டனையும் இணைக்கும் பாலம் கட்டப்பட்டு 75ஆம் ஆண்டில் அது உடைந்துபோகும் என்று பலர் கருதினர். ஆயினும் அந்தப் பாலம் இன்னும் அப்படியே நல்ல நிலையில் இருக்கிறது. அப்பாலம் கட்டி இப்போது 102 ஆண்டுகள் ஆகிவிட்டன. தற்போதும் அது நல்ல நிலையிலிருந்து பொதுமக்களுக்குப் பயன்பட்டு வருகிறது என்பதைக் குறிப்பிட்டு, "அதுபோலவே முதலமைச்சரும் நல்ல ஆரோக்கியத்துடன் பல்லாண்டு வாழ்ந்து நாட்டுக்கு அரும்பணி ஆற்றுவார்கள்'' என்று தழுதழுத்த குரலில் உணர்ச்சியுடன் கூறி அப்பாலத்தின் 100வது ஆண்டு நிறைவின்போது தனக்கு வழங்கப்பட்ட 'டை'யை முதலமைச்சருக்குப் பரிசாக அளித்தார்.

எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் வழிபாடு நடத்தினர். உலக நாட்டியப் பேரொளி திருமதி பத்மினி அங்குள்ள கோவிலில் முதல்வருக்காகக் கோடி அர்ச்சனை செய்து பிரசாதம் கொண்டு வந்து கொடுத்தார். தமிழ்நாடு பவுண்டேஷனின் துணைத்தலைவர் டாக்டர் பிச்சுமணி நன்றி தெரிவித்தார்.

தான் சிகிச்சை பெற்ற டவுன்ஸ்டேட் மருத்துவமனைக்குத் தனது நன்றியை வெளிப்படுத்தும் வகையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், 25,000 டாலர்கள் நன்கொடையின் மூலம் கல்வி அறக்கட்டளை ஒன்றைத் தனது தாய் அன்னை சத்யாவின் பெயரால் நிறுவ முடிவு செய்திருப்பதாக விழாவில் அறிவிக்கப்பட்டது. இது, மாண்புமிகு முதல்வரின் சொந்த நிதியிலிருந்து மைய அரசு அனுமதியுடன் வழங்கப்படும்.







மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தனது அறையிலிருந்து வெளியே வந்து லிப்டின் மூலம் வரவேற்பு நிகழவிருக்கும் தளத்திற்கு இயல்பாக நடந்து வந்தார். லிப்டிலிருந்து சுமார் 250 அடி தூரம் வரை யாருடைய உதவியும் இன்றி நடந்தே வந்து அரங்கை அடைந்தார். அரங்கினுள்ளே நிகழ்ச்சி சுமார் 1½ மணி நேரம் நிகழ்ந்தது. இந்த 90 நிமிட நிகழ்ச்சி முழுவதும் மாண்புமிகு முதல்வர் தமது பழைய நிலையில்-எவ்வித களைப்பும் இன்றிக் கலந்து கொண்டார்.

மாண்புமிகு முதல்வருக்கு அமெரிக்காவில் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சி 50 நிமிட நேரம் ஓடும் வீடியோ படமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

சென்னை கோட்டையில் தலைமைச் செயலர் திரு.கு.சொக்கலிங்கம், இ.ஆ.ப. முன்னிலையில் இந்த வீடியோ படம் செய்தியாளர்களுக்கு 1.2.1985 அன்று திரையிட்டுக் காட்டப்பட்டது.

அதில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் வெள்ளை வேட்டி ஜிப்பா அணிந்து வழக்கமாகக் கழுத்தில் அணியும் பச்சை நிறச் சால்வையுடனும், தலையில் வெள்ளைத் தொப்பியுடனும், கறுப்புக் கண்ணாடி அணிந்தவாறும் காட்சி அளிக்கிறார்.

இரு கைகளும் நன்கு செயல்படுவதையும் அதில் காண முடிகிறது. முன்பு பொதுக்கூட்டங்களில் அமர்ந்திருக்கும் போது எப்படி நடந்து கொள்வாரோ அதேபோல் அவருடைய செயல்கள் அமைந்து இருக்கின்றன.

மேடையில் புன்சிரிப்புடன் அமர்ந்திருக்கும் முதல்வரின் ஒரு பக்கத்தில் டாக்டர் ஸ்ரீபத்ராவ், மற்றொரு புறத்தில் முதல்வரின் துணைவியார் திருமதி வி.என்.ஜானகி, பெரியசாமி ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். அனைவரையும் சுற்றிச் சுற்றிப் பார்க்கிறார். பெரியசாமியிடம் சைகை காட்டி ஏதோ பேசிவிட்டுக் கூட்டத்தைப் பார்த்துக் கையசைக்கிறார்.

எப்போதும் அவரது வலது கையில் அணிந்திருக்கும் பெரிய கடிகாரம், அவர் கையை அசைக்கிறபோது ஏறி இறங்குகிறது. அதை மறு கையால் சரிசெய்து கொள்கிறார். தனக்கு வழங்கப்படும் பரிசுகள், பொன்னாடைகள், கேடயம் ஆகியவற்றை எழுந்து நின்று இருகைகளாலும் பெற்றுக் கொள்கிறார்.

**குழந்தைகள் அளித்த மலர்ச் செண்டுகள்**

குழந்தைகள் அளித்த மலர்ச்செண்டுகளை அன்புடன் பெற்றுக் கொள்கிறார். இருகைகளாலும் தொப்பியைச் சரிசெய்கிறார்.

தனக்கு அளிக்கப்படும் மாலைகளை வழக்கம்போல், இரண்டு கைகளாலும் முன்புறத்தில் தூக்கி, பின்புறம் நகர்த்த அவருடைய உதவியாளர் அதைப் பெற்றுக் கொள்கிறார்.

புருக்ளின் மருத்துவமனையில் சத்யா அறக்கட்டளை என்ற அமைப்பு ஏற்படுத்தப்படும் என்று விழாவில் அறிவிக்கப்பட்ட போது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் புன்முறுவல் பூக்கிறார். முதல்வர் அவர்கள் உடல் நலம் தேறி, பழைய நன்னிலைக்கு வந்துவிட்டதை வீடியோ படம் உறுதிப்படுத்தியது.

காண்போரை வியக்க வைக்கும் இந்த வீடியோ காட்சி, தீவுத்திடலில் ஊரக வளர்ச்சித் துறை அரங்கில் 3 நாட்கள் காண்பிக்கப்பட்டது. மருத்துவத் துறையின் பெருந்திறமையைப் பறைசாற்றும் வகையில் அமைந்துள்ள வீடியோ காட்சி, பொது மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் என்பது உறுதி.

கப்படும் கண்காட்சி, மருத்துவம் பற்றி எல்லோருமே அறிய வாய்ப்பளிப்பதாக இருக்கிறது. ஆகவே, ஆண்டுக்கு ஒரு முறை என்றில்லாமல் இதை நிரந்தரக் கண்காட்சியாக்குவது பற்றி மருத்துவக் கல்லூரித் தலைவர் பரிசீலிக்க வேண்டும்; அரசும் அதற்கு உதவும். புதிதாகக் கட்டப்படும் கலையரங்கின் ஓர் அங்கமாகக் கூட இது அமைக்கப்படலாம். தீவுத்திடலில் உள்ள வர்த்தகப் பொருட்காட்சியை நிரந்தரமாக்கவிருக்கிறோம். அதிலே கூட இதற்கென ஓர் அரங்கை ஒதுக்கலாம்.

''தமிழகத்தில் தலைசிறந்த மருத்துவர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் கையாளச் சிறந்த கருவிகள்தான் இல்லை என்று ஒருமுறை அண்ணா அவர்கள் குறிப்பிட்டார். அதை உணர்ந்துதான் மாண்புமிகு

ஆதரித்து வளரச் செய்யவேண்டும்.

''தாய்மொழியிலேயே மருத்துவக் கல்வி அளிக்க உணர்வு பூர்வமான முயற்சியில் நீங்களெல்லாம் ஈடுபடவேண்டும். அந்நியமொழியான ஆங்கிலத்தை அகற்ற வேண்டுமென்பதில்லை; எல்லா வகையிலும் தமிழ் உயரவேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.''

—இவ்வாறு மாண்புமிகு செய்தி அற நிலையத்துறை அமைச்சர் உரையாற்றிய பின் விழாத் தொடக்க உரையாகக் கலையரங்கத்திற்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சொற்பெருக்காற்றுகையில் குறிப்பிட்டதாவது:



புரட்சித்தலைவர் அவர்கள் மருத்துவத் துறை வளர்ச்சிக்கென நிறைய நிதி வழங்கி வருகிறார்.

''நரம்புச் சிலந்தியை ஒழிப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் வெற்றி பெற்றிருக்கிறது என்று மத்திய அரசு நம்மைப் பாராட்டுகிறது; அதற்காக நன்றி செலுத்தும் நாம், அதே நேரத்தில் தமிழக மருத்துவத் துறை வளர்ச்சிக்கு மிகப்பெரிய அளவிலே உதவ முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறோம். இத்துறையை மத்திய அரசு பொதுப்பட்டியலில் வைத்துள்ளது. வெறும் அதிகாரத்திற்காக மட்டும்பொதுப் பட்டியல் என்ற நிலை இன்றி மத்தியஅரசினர் தாராளமாக நிதி தந்து இத்துறை வளர உதவிடவேண்டும்.

''தமிழ் மருத்துவங்களான சித்த வைத்தியத்தையும், ஆயுர்வேத வைத்தியத்தையும் ஒதுக்கி வைத்து விடாமல், நீங்கள் அவைகளையும் இணைத்து

''இந்தியாவிலே மட்டுமல்ல; ஆசியாவிலேயே சிறந்தவர்களாக மதிக்கப்படும் டாக்டர்கள் பலரை உருவாக்கிய பெருமை சென்னை மருத்துவக் கல்லூரிக்கு உண்டு.

''மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இப்போது சென்னையில் இருந்திருந்தால் இம் மருத்துவக் கல்லூரியின் இந்த 150-வது நூற்றாண்டுப் பொன்விழா இன்னும் பொலிவு பெற்றிருக்கும்.

''உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் சேராதியல்வது நாடு என்றார் திருவள்ளுவர். அந்த வகையில், பிணியகற்றும் பெருமையுடையதாகிறது இந்த மருத்துவ மனை. ஒரு மருத்துவ மனையோ மருத்துவக் கல்லூரியோ சிறப்படைவது அதன் அழகான கட்டடங்களைப் பொறுத்தது அல்ல. அங்கே பணிபுரியும் டாக்டர்களை - பேராசிரியர்களைப் பொறுத்தே அது அமையும். அப்படிப்பட்ட பெருமை இதற்குண்டு.



''தமிழகத்திலிருப்போர் மருத்துவம் பெற பம்பாய் போன்ற பிறமாநில மருத்துவமனைகளுக்குச் செல்லும் நிலை நீங்க, இங்குள்ள மருத்துவர்கள் முனைப்போடு பாடுபடவேண்டும்.

''இங்கே அமையவிருக்கும் கலையரங்கத்திற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை அளித்தார்கள். இந்தக் கலையரங்கம் வெறும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவதாக மட்டுமன்றி வேறுபல வகையிலும் பயன்படத்தக்கதாக உருவாக்கப்பட வேண்டும். ஒருபக்கம் கலையரங்கம், இன்னொரு பக்கம் திறந்தவெளி கலையரங்கம் என்ற வகையிலும் உருவாக்கலாம்.

''இந்த மருத்துவக் கல்லூரி 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்களை உருவாக்கியுள்ளது. இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களின் உடல்நிலை சிறந்த முறையிலே தேறியிருக்கிறது என்றால் அதற்குக் காரணம், ஆரம்பத்தில் நம்முடைய மருத்துவர்கள் மிகச் சிறந்தவகையிலே கவனித்துச் சிகிச்சை அளித்ததுதான். இதை அமெரிக்க டாக்டர்களே பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள்.

''மத்திய அரசு உதவியோடு 1985-86ஆம் ஆண்டில் இந்த மருத்துவ மனையை மேற்பட்டப்படிப்பு ஆய்வு மையமாக உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறோம். இதற்கு நீங்களும் முழு ஒத்துழைப்புத் தரவேண்டும்.

''சேலத்தில் இந்த ஆண்டில் புதிய மருத்துவக்கல்லூரியொன்று துவக்கப்படும்.

''மருத்துவப் பல்கலைக் கழகமொன்று துவக்கி, எல்லா மருத்துவக்கல்லூரிகளை



யும் அதன் நிர்வாகத்திற்கு உட்படுத்தும் திட்டமொன்று அரசுக்கு உள்ளது.

''மருத்துவம், விஞ்ஞானம், பொறியியல் போன்றவற்றைத் தமிழிலேயே கற்பிக்க நாம் முயலவேண்டும். இதற்காக அதிலுள்ள முக்கியச் சொற்களையெல்லாம் தமிழ்ப்படுத்த வேண்டும் என்பதில்லை; அந்தச் சொற்களை அப்படியே தமிழிலேயே எழுதுவோமானால் சிக்கல் இருக்காது. தமிழ் வளர வேண்டும் என்பதற்காக இதை நான் சொல்லவில்லை; தமிழ்மக்களின் அறிவு வளம்பெற வேண்டும், வளர வேண்டும் என்பதற்காகவே இதை நாம் செயல்படுத்தியாகவேண்டும்.''

—இவ்வாறு மாண்புமிகு நிதியமைச்சர் உரையாற்றினார்.

—விழா முடிவில் மருத்துவப் பேராசிரியர் டாக்டர் எஸ்.பாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.

—பி எல். ராஜேந்திரன்



தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன ஊழியர்களுக்கு, அந்நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் தீபாவளிக் [illegible] 20 சதவிகித போனஸ் வழங்கினார்; இதன் மதிப்பு ரூ. 2·75 இலட்சம் ஆகும்.

150th YEAR
MADRAS MEDICAL COLLEGE
1835 1985
LEARN TO HEAL

# சென்னை மருத்துவக் கல்லூரி

# நூற்றாண்டுப் பொன் விழா

சென்னை மருத்துவக்கல்லூரி துவங்கி 150 ஆண்டுகளானதையொட்டி, நூற்றாண்டுப் பொன் விழா சீரும் சிறப்புமாக (1.2.85 -7.2.85) நடை பெற்றது.

மருத்துவக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில், ஒரு வார காலம் இவ்விழா, கருத்த



ரங்கம்-கலா நிகழ்ச்சிகள் ஆகியவற்றோடு நிகழ்ந்தது.

முதல் நாள் விழாவிற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டே அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்களும், மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்களும் பங்கேற்ற இவ்விழாவில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் கலையரங்கத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலர் திரு ஆர்.சண்முகம் இ.ஆ.ப.; மருத்துவக் கல்வி இயக்குநர் திருமதி டாக்டர் லலிதா காமேஸ்வரன் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டார்கள்.

டாக்டர் சிவ.சிதம்பரம் தமிழ்த்தாய் வாழ்த்தோடு விழா தொடங்கியது.

மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் எஸ்.ஆறுமுகம் தனது வரவேற்புரையில் சென்னை மருத்துவக் கல்லூரி துவக்கம், வளர்ச்சி ஆகியவற்றை விளக்கிச் சொல்லி, விழாவுக்கு வருகை தந்தோரை வரவேற்று உரையாற்றினார்.

விழாத் தலைமை ஏற்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டே அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''மருத்துவத் துறை வளர்ச்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி. ஆர். அவர்கள் கொண்டுள்ள அக்கறை மகத்தானதாகும். அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் மருத்துவத் துறையில் ஏராளமான புதுமைகள் செய்யப்பட்டன. சென்னை மருத்துவக் கல்லூரியில் பல்வேறு புதிய பட்ட மேல் படிப்பு வசதிகள் செய்யப்பட்டன.

"மத்திய சிறைச்சாலைப்பகுதியில் உள்ள 5.3 ஏக்கர் நிலத்தில் புற நோயாளிகளுக்காக 24 மணி நேரமும் செயல்படும் சிறப்புச் சிகிச்சைப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படவிருக்கிறது. இந்த நூற்றாண்டுப் பொன் விழாவையொட்டி, கலையரங்கம் ஒன்று இங்கே அமைக்கப்படவிருக்கிறது. 88 இலட்சம் ரூபாய் செலவில் இருதய அழுத்த அளவைக் கணிக்கும் கருவி கொண்ட புதிய



பரிசோதனைக் கூடமொன்று உலகிலேயே வேறெங்கும் இல்லாதபடி இங்கு திறக்கப்பட்டுள்ளது. விரைவில் இங்கு கம்ப்யூட்டர் சாதனமொன்று நிறுவப்பட்டு இந்தியாவிலேயே வேறெந்த மருத்துவமனையும் பெறாத பெருமையை இம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பெறவிருக்கிறது.

"இருதய அறுவைச் சிகிச்சைக்காக ஏழு மாடிக் கட்டடம் ஒன்று இங்கு விரைவில் கட்டப்படும். சிறுநீரகச் சிகிச்சைப் பிரிவுக்காகவும், பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சைக்காகவும் தனிக் கட்டடங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களால் சில ஆண்டுகட்கு முன்பு இங்கே திறந்து வைக்கப்பட்டன.

''நீரிழிவு போன்ற மரபு வழி நோய்த் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள ஒரு தனித்துறை இங்கே துவக்கப்படவிருக்கிறது. முழு நேர கௌரவ இயக்குநர் ஒருவரும் முழுநேர மருத்துவப் பேராசிரியர் ஒருவரும் இரண்டு உதவியாளர்களும் நியமிக்கப்படுவர். பட்ட மேற்படிப்பு மாணவர்க்கான இடங்கள் அதிகரிக்கப்படும். இங்கு, அண்ணா பல்கலைக்கழக உதவியுடன் மருத்துவமனை நிர்வாகப் பட்டமேற் படிப்பு வகுப்பு விரைவில் துவக்கப்படவுள்ளது.''

—இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் உரையாற்றினார்.

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் விழா மலரை வெளியிட்டுப் பேசியதாவது:

''பெண்கள் மருத்துவப் படிப்பிற்கு அனுமதிக்கப்படாத நிலை இங்கிலாந்து நாட்டில் இருந்தபோது, அங்கிருந்து ஒரு பெண்மணி இங்கே இந்த மருத்துவக்கல்லூரிக்கு வந்து படித்து டாக்டரானார் என்பதை அறிந்து நாம் பெருமைப்படுகிறோம்.

"இன்றைக்கு இந்தக் கல்லூரி தமிழகத்தில் முழுமை பெற்றதாகத் திகழ்கிறது. இது வலிமை மிக்கதாகத் திகழ வகை செய்தோருக்கெல்லாம் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி செலுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

" நூற்றைம்பதாண்டுக் காலமாகச் சிறப்புற்றுவரும் இந்த சென்னை மருத்துவக் கல்லூரியின் காலக் கண்ணாடியாக-கருத்துக் கருவூலமாக இன்று வெளியிடப்படும் இந்த மலர் அமைந்திருக்கிறது."

—இவ்வாறு உரையாற்றி மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் மலர் வெளியிட, மாண்புமிகு நிதியமைச்சர் முதல் மலரைப் பெற்றுக்கொண்டார்.

மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய பேச்சு விவரம் வருமாறு:

''மருத்துவத்துறை வரலாற்றில் சென்னை மருத்துவக் கல்லூரி ஒரு மிகச் சிறந்த அத்தியாயமாகத் திகழ்கிறது. உலகத்தோடு போட்டிபோடும் அளவில் மருத்துவத்துறை வளர்ந்து வருகிறது என்றாலும் நாம் போக வேண்டிய தூரம் நிறைய இருக்கிறது.

''இங்கிலாந்திலிருந்து இங்கு வந்து படித்துப்பட்டம் பெற்றார் ஒரு பெண்மணி என்பது மட்டுமல்ல; முதன் முதல் தமிழ்ப் பெண்மணியொருவர் - புதுக்கோட்டையைச் சேர்ந்த முத்துலெட்சுமி ரெட்டி, படித்து டாக்டர் பட்டம் பெற்ற பெருமையும் இந்தக் கல்லூரிக்கு உண்டு.

"இங்கே இன்றைக்குத் திறந்து வைக்



# பார்த்தோம் படித்தோம்

பொதுத் தேர்தல் முடிவு சிறப்பிதழ்; ஒன்றுக்கு இரண்டாக வாங்கிப் பத்திரப்படுத்தப்பட வேண்டிய பெட்டகம். 'நூல்நயம்' பகுதி வெகு நன்மை.

-எம்.பி.இளங்கோ
பி.மேட்டுப்பாளையம்,

●

1.1.85 இதழ் தேர்தல் முடிவுகள் அடங்கிய முழுத் தொகுப்பாக, சிறப்பு வெளியீடாக வெளிவந்தது பாராட்டுக்குரியது.

-இரா.நல்லகண்ணு,
களக்காடு.

●

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் அனைத்தையும் ஒரு சேர வெளியிட்ட தமிழரசுக்கு நன்றி!

-ஹேமதாசன்,
உடையார்கோவில்

●

தமிழரசு இதழில் வந்த பொங்கல் படைப்புகள் அனைத்தும் சுவைத்து மகிழ்ந்தேன். சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி படங்களுடன் கூடிய கட்டுரை எங்களைப் போன்ற வெளியூர் வாசகர்களுக்கு நேரில் பார்த்த அனுபவமாய் இருந்தது.

-செந்தூர் மணியன்,
திருச்செந்தூர்.

●

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அன்புப் பார்வையுடன் கூடிய 1985 நாட்காட்டி வாசகர்களை மிகவும் கவரத்தக்கதாகும்.

-தா.ந. உமாபதி,
தருமபுரி.

அண்ணலே பாராட்டிய தேசாபிமானி திரு ஜி. சுப்பிரமணிய ஐயர் வாழ்க்கை வரலாறு கண்டேன். அவர்தம் வாழ்வில் தன் தங்கை 'சிவப்பிரியை'யை மறுமணம் செய்வித்தது மிகத் துணிச்சலான செயல் ஆகும்.

-எஸ்.பி.சந்தானராஜ
கோபால்,
நடுவகளப்பான்.

●

16.1.85ல் வெளிவந்த 'நோய் அகற்றும் கறிவேப்பிலை' கட்டுரை மிகவும் பயனுள்ள வகையில் அமைந்திருந்தது.

-டி.என்.அன்புத்துரை
சிவகங்கை.

●

உழவர் திருநாள் பற்றிப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 'பொங்கல் வாழ்த்து' வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்!

தே.ம.சேகர்.
தேசத்துறை கிராமம்.

●

வாசத்திற்காகச் சேர்த்துக் கொள்ளப்படும் கறிவேப்பிலையில் இவ்வளவு பயன்களா? உணர வைத்தமைக்கு நன்றி.

-சாதிக் நிஜார்,
திட்டச்சேரி.

●

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு ஏழைத் தாய்க்குக் கரும்பும் வாழைப்பழமும் கொடுக்கும் அட்டைப்படம் அருமை!

எம்.ஜி.ஆர்.அன்பழகன்,
கைத்தியர்காடு.

''அகழ்வில் கண்ட தமிழகம்'' கட்டுரை படித்தேன். அகழ் வாராய்ச்சியின் மூலம் கிடைத்த தகவல்கள் பயனுள்ளவைகளாய் இருந்தன.

-வீ.சீனிவாசன்,
முல்லைவாடி.

●

16.1.85 'தமிழரசு' இதழில் வெளியான முதல்வரின் அட்டைப்படம் அருமை. அவர் ஆற்றிய உரையை முதல் பக்கத்தில் வெளியிட்டு எங்களை மகிழ்வித்த தங்களுக்கு நன்றி.

கே.கே.சுப்பிரமணியன்
கைகாட்டிப்புதூர்.

●

16.1.85 இதழில் வெளிவந்த கவிதைகள் அத்தனையும் இனிமை!

என்.எம்.செல்வகுமார்,
நெடுவளை.

●

எங்கள் தமிழ்உழவர்
ஈரா யிரமாண்டு
பொங்கி விளையாடி
புகழ்மேட்டிற் குடியேறி
தங்கி நிலைத்துத்
தழைத்திருக்கும் காட்சிகளை
மங்காத 'தமிழரசில்'
வடிவமைத்தமைக்கு
வாழ்த்துகிறேன்

-பேராசிரியர் தமிழன்பன்,
விழுப்புரம்.

●

16.1.85 இதழில் தமிழ் ஆண்டு பற்றித் தெரிந்து கொண்டோம். தமிழர்களுக்கு மட்டும் தொடர் ஆண்டு இல்லையே என்ற ஏக்கத்தைப் போக்கி, பொங்கல் புத்தாண்டுதான் திருவள்ளுவர் பிறப்பாண்டு என்பதை இக்கட்டுரை மூலம் தெரிந்து கொண்டோம்.

-கொ.அ.செல்லமுத்து
நத்தம், கோவில்பட்டி.

●

16.1.85 இதழில் வெளியான 'மாணவர் பக்கம்' படித்துப் பெரிதும் மகிழ்ந்தேன்.

எம்.வில்வமணி,
கல்லப்பாடி.





# கரும்பு சாகுபடியில் உலகில் முதலிடம்

**மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்**

## டாக்டர் கா. காளிமுத்து

அரிசி உற்பத்தித் திறனில் இந்தியாவில் தமிழகம் 2-வது இடத்தைப் பெற்றுள்ளது. பஞ்சாப் மாநிலத்தில் 1 எக்டேருக்கு 2,700 கிலோ அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஒரு எக்டேருக்கு 2,400 கிலோ அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது.

குறிப்பாக சிறு-மற்றும் குறு விவசாயிகளின் நெல் உற்பத்தித் திறன் தமிழ்நாட்டில் கணிசமாகக் கூடியுள்ளது.

அதுபோல, கரும்பு உற்பத்தித் திறனில் சராசரி 100 மெட்ரிக் டன் கரும்பு உற்பத்தி செய்து உலகத்திலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது.

தேசிய பால் வழங்கு நிறுவனத்தின் நிதி உதவியுடன், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் தொடங்கப்பட்டது.

தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கல்பட்டு ஆகிய 3 மாவட்டங்களில் 3 லட்சத்து, 16 ஆயிரம் எக்டேரில் 3 லட்சத்து 32 ஆயிரம் மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்களைக் குறிப்பாக நிலக்கடலையை உற்பத்தி செய்ய தேசிய பால் வழங்கு நிறுவனம் ரூ. 13 கோடியே 45 லட்சம் நிதிஉதவி அளிக்க முன்வந்துள்ளது.

இதில் 46 சதவீதம் மானியமாகவும் 54 சதவீதம் கடனாகவும் வழங்கப்படும். இந்தத் திட்டம் 1981ல் தொடங்கியது. 7 ஆண்டுக் காலம் நடைபெறும்.

335 ஆரம்பக் கூட்டுறவு நிலையங்களை அமைத்து நிலக்கடலைக் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை, விருத்தாசலம் ஆகிய இடங்களில் எண்ணெய் பிழியும் ஆலைகளையும் இந்த இணையம் எடுத்துக் கொள்ள இருக்கிறது.

உலக வங்கியின் உதவியோடு செயல்படுத்தப்பட்டு வரும் பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் மற்ற மாநிலங்களை விடத் தமிழகத்தில்தான் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்று உலக வங்கி நிபுணர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

1984-85ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும், 'எக்டேருக்குக் குறைந்தது 5 டன் நெல் உற்பத்தி' என்ற திட்டத்தைக் கண்டு, பிற மாநிலத்தவர் பிரமிப்பு அடைகின்றனர்.

எப்படியும் நடப்பு ஆண்டில் திட்டமிட்டபடி 65 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்து விட வேண்டுமென்று தீவிரமாகப் பணியாற்றி வருகிறோம்.

அதுபோல, பயறு வகைகளில் 5 இலட்சம் மெட்ரிக் டன்னும் பருத்தியில் 6 லட்சம் பேல்களும், கரும்பில் 25 லட்சம் டன் வெல்லம் என்ற அளவிலும் உற்பத்தியாகும் என்ற நம்பிக்கை உள்ளது.

1984-85 ஆம் ஆண்டுக்கான கரும்பு விலை டன்னுக்கு ரூ. 140 என்று மத்திய அரசு நிர்ணயித்தது. கரும்புச் சாகுபடியாளர்களின் கஷ்டம், சர்க்கரை ஆலையினரின் கஷ்டம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மாநில அரசு டன் ஒன்றுக்கு ரூ. 185, அரசு மானியமாக டன் ஒன்றுக்கு ரூ. 10 சேர்த்து, டன் ஒன்றுக்கு மொத்தம் ரூ. 195 வீதம் கரும்புக்கு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டம் ''லத்துவாடி'' என்ற இடத்தில் 2-வது கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட இருக்கிறது. இந்தக் கல்லூரி வரும் கல்வி ஆண்டில் தொடங்கும்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் 1984-85ஆம் ஆண்டிற்கு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 2 கோடியே 40 லட்சமும், தர்மபுரி மாவட்டத்திற்கு ரூ. 1 கோடியே 46 லட்சத்து 21 ஆயிரமும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ரூ. 60 லட்சமும் செலவிடப்படும்.

**(11-1-85 அன்று செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல்களிலிருந்து...)**

# கலங்கரை விளக்கத்திலிருந்து அண்ணா சதுக்கம் வரை...

26-1-1985 அன்று சென்னை காமராசர் சாலையில் 36-வது குடியரசு தினவிழா கோலாகலமாக நடந்தது. மகாத்மா காந்தி சிலை அருகில் மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.



இதற்கு முன்னதாக யானை வடிவில் அலங்கரிக்கப்பட்ட ஹெலிகாப்டர் ஒன்று வானத்தில் நடனமாடிச் சென்றது. இதைப் பார்த்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அடுத்து வந்த ஹெலிகாப்டர் பூமாரி பொழிந்தது.



இந்திய வான் படையின் விமான அணிவகுப்பு நடைபெற்றது. பனியிலும், காட்டிலும் சமாளிக்கும் திறன் பற்றிய காட்சி பாராட்டத்தக்கது.





'வீரச்சக்கரம்' விருது பெற்ற முன்னாள் படைவீரர்கட்கு நினைவன்பளிப்பையும் தீரச்செயல் புரிந்தோருக்கு அண்ணா வீரப்பதக்கங்களையும் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வழங்கினார்.



மத்திய சேமக்காவல்படை, மத்திய தொழிலகப் பாதுகாப்புப்படை, முன்னாள் படைவீரர்கள், குதிரைப் படைக் காவலர், சென்னை மாநகரக் காவலர் பாண்டு, சென்னை மாநகரக் காவலர், தமிழ்நாடு சிறப்புக் காவலர் படை, இரயில்வே பாதுகாப்புப் படை, தேசிய



மாணவர் படையைச் சார்ந்த பல்வேறு பிரிவுகள், சாலைக் காப்பு சுற்றுக் காவலர் செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ், பிரிகேட், தமிழ்நாடு தியணைப்புப் படை பாண்டு, ஊர்க்காவலர் படை, பாரத சாரணர், முதுநிலை சீர்திருத்தப் பள்ளி பாண்டு, இளநிலை ரெட்கிராஸ், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், தரைப் படை, விரைவு சவாரி ஆகியோர் அணிவகுத்துச் சென்றது. பார்ப்பதற்குக் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.









பள்ளிச் சிறார்களின் ஆடல், பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தமிழ்நாட்டின் பொங்கல் நிகழ்ச்சி பற்றி ஆர். கே. எம். சாரதா வித்யாலா மகளிர் மேனிலைப் பள்ளி மாணவிகள் உடைகள் உடுத்தி நம்முடைய கலாச்சாரத்தைச் செய்து காண்பித்தனர். இவர்கள் முதல் பரிசு பெற்றனர்.

ராஜஸ்தானியப் பெண்கள் போன்று உடை உடுத்தி, குடங்களை இடுப்பில் வைத்து நடனமாடி சகுனிபாய் சனாதனா தர்மா பெண்கள் மேனிலைப் பள்ளி மாணவிகள் வந்தனர். இவர்கள் இரண்டாம் பரிசு பெற்றனர்.

கேரளாவிற்கு உரித்தான உடைகள் உடுத்தி, இளைஞர் ஆண்டை நினைவு படுத்தும் வகையில் கும்மி அடித்து ஆடி வந்தனர், கேரள வித்யாலயா மேனிலைப் பள்ளி மாணவியர்.

எந்த மதத்தினரும் ஒற்றுமையாக இருப்போம் என்று விளக்கும் வகையில் காஷ்மீரத்திற்குரிய உடைகளை அணிந்து பாடி வந்தனர், அசோக்நகர் அரசினர் பெண்கள் மேனிலைப் பள்ளி மாணவிகள்.



மயிலாப்பூர் கேசரி மேனிலைப்பள்ளி மாணவ்கள் ஆந்திர மாநிலக் கோலாட்ட நடனம் ஆடினர்.

பட்டுப் புடவைகள் உடுத்தி கர்நாடக சங்க மேனிலைப் பள்ளி மாணவிகள் ஆடிப்பாடி வந்தனர்.

பஞ்சாபிகள் போன்று உடை உடுத்தி ஆதர்ஷா வித்யாலயா மெட்ரிகுலேஷன் மேனிலைப் பள்ளி பெண்கள் பாங்கரா நடனம் ஆடினர்.

மத்தியப் பிரதேச ஆதிவாசிகளின் காட்சியைக் கண்முன்னே நிறுத்துவது போன்று வாநில மகளிர் மேனிலைப் பள்ளி மாணவ்கள் செய்து காண்பித்தனர்.



ஜவஹர் பாலபவன் மாணவ மாணவிகள் அந்தமான் பழங்குடியினர் போன்று உடைகள் அணிந்து ஆடி வந்தனர். இவர்கள் மூன்றாம் பரிசு பெற்றனர்.

தமிழகக் கிராமியக் கலை நடனங்களான கொக்கேளிக் கட்டை நடனம்



புலியாட்டம், ஒயிலாட்டம் முதலியவை நடைபெற்றன.

அடுத்து அலங்கார வண்டிகள் அணி வகுத்துச் சென்றன. முதலில் தமிழ்நாடு இசைக் கல்லூரி மாணவர்களின் நாதசுர இசையுடன் கூடிய அலங்கார வண்டி சென்றது. அடுத்து செய்தி-மக்கள் தொடர்புத்துறைவண்டி சென்றது. 1984 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த ஆடிசைக்கு இலவச மின்சாரம் உள்பட 18 திட்டங்களை விளக்கும் வகையில் அந்த அலங்கார வண்டி இருந்தது. (மூன்றாம் பரிசு).

வேளாண்மைத்துறை சார்பில் வரலாறு காணாத உற்பத்திப் பெருக்கத்தை






குட்டியானை போல் அலங்கரிக்கப்பட்ட தமிழக அரசின் ஹெலிகாப்டர் விமானம் வானில் தாழ்வாகப் பறந்தபடி நடனம் ஆடிக் கொண்டு வந்தது. இந்த நிகழ்ச்சி குழந்தைகளை மிகவும் கவர்ந்தது.

பெயின் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி. கோள் நடனம்.

பிஞ்சு உள்ளங்களில் தேசிய ஒருமைப் பாட்டை விளக்கும் வகையில் பள்ளிச் சிறுவர், சிறுமியர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் கலை நிகழ்ச்சிகள் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் அமைந்திருந்தன.





ஆறு அடி உயரமுள்ள கட்டையில் பாதங்களைப் பதித்து வைத்துக்கொண்டு ஆடும் நடனம் 'கொக்கேளிக் கட்டை' நடனமாகும். இது எல்லோராலும் ரசித்துப் பாராட்டப் பட்டது.

பல அடுக்குமாடிக் கட்டடத்தில் தீப்பிடித்துக் கொண்டால், உயிரைப் பணயமாக வைத்து எப்படிப் போராடித் தீயை அணைப்பது என்ற செயல்முறை நிகழ்ச்சி பார்ப்போரை மெய்சிலிர்க்க வைத்தது. குழுமியிருந்த பொதுமக்கள் பலமாகக் கைத்தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.






விளக்கும் வகையில் அலங்கார ஊர்தி சித்தரிக்கப்பட்டிருந்தது. (முதல் பரிசு பெற்றது).

தொழில்துறையைச் சார்ந்த ஊர்தியில் ''எலக்டிரானிக்'' தொழில் மூலம் தமிழ்நாட்டில் பல இலட்சம் பேருக்கு வேலை கிடைக்கிறது என்று சித்தரிக்கப்பட்டிருந்தது. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை விளக்கும் வகையில் இது அமைந்திருந்தது.

வனத்துறை சார்பில் வந்த ஊர்தியில் முதுமலைக் காட்டில் யானைச் சவாரி செய்வது போன்றும், ''முதலமைச்சர் பார்வை மாடம்'' காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது.



காவல்துறை, மீன்வளத்துறை, தொழில்நுட்பக் கல்வித்துறை, ஆதிதிரா

விடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் அந்தந்தத் துறைப் பணிகள் பற்றி விளக்கிக் காட்டும் ஊர்திகளும் சென்றன.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் சித்தரிக்கப்பட்ட சுற்றுலாத்துறை (இரண்டாம் பரிசு பெற்



றது) ஊர்தியும், முன்னாள் படை வீரரின் மறுவாழ்வு ஊர்தியும், நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் ஊர்தியும் சென்றன.




கடற்கரையிலிருந்து லஸ் வரை போடப்பட இருக்கும் மின்சார ரெயில் போக்குவரத்தை விளக்கிக் காட்டும் வகையில் சென்னை மாவட்ட ஆட்சித்தலைவரின் துரிதரயில் ஊர்தி இடம் பெற்றிருந்தது.

இறுதியில் தமிழ்நாடு தியணைப்புப் படையினரின் விளக்கக் காட்சியும் நடைபெற்றது.

ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் அலங்கார அணிவகுப்பு, வண்டிகள் ஊர்வலம், கலைநிகழ்ச்சிகள் ஆகியவை நடைபெற்றன.





குடியரசு தினவிழா அணிவகுப்பு நிகழ்ச்சியைக் காண அதிகாலையில் இருந்தே மக்கள் கூட்டம் திரண்டது. குழந்தை குட்டிகளுடன் கடற்கரையில் உள்ள கலங்கரை விளக்கத்திலிருந்து அண்ணா சதுக்கம் வரை சாலையின் இரு மருங்கிலும் கூடி இருந்து அணிவகுப்பு நிகழ்ச்சியைக் கண்டு களித்தனர். கடற்கரையில் உள்ள அலுவலகங்களின் மாடிகளிலும், வீடுகளிலும் ஏராளமான மக்கள் கண்டு களித்தது குறிப்பிடத்தக்கது.

அ. மருதவிநாயகம்

ஆண்டுதோறும் குடியரசுத் திருநாளில் தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் பல்வேறு கலைஞர்களுக்கு, அவர்கள் ஆற்றிய கலைப் பணியைப் போற்றிப் பாராட்டி, கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்து வருகின்றது. அவ்வகையில் இவ்வாண்டில் இயல், இசை, நாடகம், திரைப்படம், நாட்டுப்புறக் கலை ஆகிய கலைப் பிரிவுகளில் 31 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது (26.1.1985) குடியரசுத் திருநாளில் சென்னை கலைவாணர் அரங்கில் வழங்கப்பட்டது.



# கலைஞர்களுக்கு கலைமாமணி விருது வழங்கிய விழா





முன்னர் கலைமாமணி விருதுபெற்ற 14 கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கப் பட்டது.

மறைந்த 14 கலைமேதைகளின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டன.



இவ்வினிய விழாவிற்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு.எஸ்.எல்.குரானா அவர்கள் தலைமைதாங்கி-கலைஞர்களுக்குப் பொற் பதக்கங்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மறைந்த 14 கலைமேதைகளின் திருவுருவப்படங்களைத் திறந்து வைத்து-விருதுபெறும் கலைஞர்களுக்குப் பட்டமளித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.இராம. வீரப்பன் அவர்கள், முன்னர் கலைமாமணி விருதுபெற்ற 14 கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு.செ.அரங்கநாயகம் அவர்கள் சிறந்த கலை நிறுவனத்திற்குக் கேடயமும் சிறந்த நாடகக் குழுவிற்குச் சுழற் கேடயமும் அளித்தார்.



# அண்ணா வீரப்பதக்கம்



## தீரச் செயலுக்கான அண்ணா வீரப்பதக்கம்

தீரச் செயல் புரிந்த பொதுமக்களுக்கு ரூபாய் 1,000 மதிப்புள்ள 'அண்ணா வீரப் பதக்கமும்' ரூபாய் 1,000க்கான காசோலையும் தமிழ்நாடு அரசு வழங்குகிறது. 1984-85 ஆம் ஆண்டில் தீரச் செயல் புரிந்தமைக்கு மூன்று பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களின் விவரம் பின்வருமாறு:—

### இன்னுயிரைப் பொருட்படுத்தாத திரு ஆர். முத்து ரெங்கசாமி

7-3-1984 அன்று மதுரை மாநகரில் பெருமழை பெய்ததின் காரணமாக ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. வைகை காலனிக்கு அருகில் வேறு வேறு இடங்களில் 5 பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுகிறார்கள் என்று அவசரச் செய்தி அனுப்பப்படுகிறது. தல்லாகுளம் தீயணைப்பு நிலையத்திலிருந்து திரு ஆர். முத்துரெங்கசாமி தலைமையில் ஒரு குழுவினர் மீட்புப் பணிக்காகச் சென்று, உயிருக்குப் போராட்டிக்கொண்டிருந்தவர்களை ஒவ்வொருவராகத்தேடிக் கண்டுபிடித்து 4 நபர்களைக் காப்பாற்றுகின்றனர். பெருமாள் என்னும் ஐந்தாவது நபர் மரம் ஒன்றைப் பற்றியபடி திரு. முத்து ரெங்கசாமியுடன் ஆற்றின் நடுவில் பாய்ந்தோடும் வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றார். எதிர்பாராதவிதமாக இவர்கள் தொத்திக் கொண்டிருந்த மரம் வேரோடு ஆற்றில் அடித்துச் செல்லப்படுகிறது. திரு. ஆர். முத்துரெங்கசாமி தன் இன்னுயிரையும் பொருட்படுத்தாது பெருமாள் என்னும் நபரைத் தனது முழு பலத்தையும் உபயோகித்து ஆற்றுச் சுழலுக்கு அப்பால் தள்ளிவிட்டதன் விளைவாகப் பெருமாள் நீந்திக்கரையேறுகிறார். ஆனால் திரு. முத்துரெங்கசாமி வெள்ளத்தில் தவறி விழுந்ததன் காரணமாகவும் அவரிடமிருந்த உயிர் காக்கும் 'காற்றுப்பை' நழுவியதாலும் சிறிது நேரத்தில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழக்கிறார். இவரின் தீரச் செயல் பாராட்டுக்குரியது.

### தன் உயிர் ஈந்து பிற உயிர் காத்த சிறுமி செல்வி இராணி

9-1-1984 அன்று தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோயிலூரில் திரு எம். சுப்பிரமணியன் என்பவர் மகள் இராணி (4 வயது) தனது சிறிய தகப்பனார் மகன் செந்தில் என்பவனுடன் நர்சரிப் பள்ளிக்குச் சென்றுகொண்டு இருக்கையில், எதிரே வேகமாக மோதும் வண்ணம் ஒரு டிராக்டர் வருவதைப் பார்த்து, செந்திலை அருகிலிருந்த சாக்கடை வாய்க்காலில் சமயோசிதமாகத் தள்ளியதால் அப்பையன் விபத்தில் சிக்காமல் சிறு காயத்துடன் உயிர் தப்பிப் பிழைத்தான். ஆனால் சிறுவன் செந்திலைக் காப்பாற்றச் சென்ற இராணி டிராக்டரில் நசுங்கி அதே இடத்தில் தன் இன்னுயிரை ஈந்தாள். தன்னுயிர் ஈந்து பிற உயிர் காத்த சிறுமி இராணி போற்றுவதற்குரியவர்.

### தன்னுயிர் ஈந்த திரு முத்தன்

24-4-1984 அன்று பெரியார் மாவட்டம், காங்கேயம் வட்டம் நெவிலி ரொமம், கவுண்டச்சி பாளையம் என்ற இடத்தில் உள்ள குட்டையில் முத்தன், ஆறுமுகம் மற்றும் கருப்பன் குளித்துக் கொண்டு இருந்தார்கள். குட்டையில் 6 அடி தண்ணீர் இருந்திருக்கிறது. குளித்துக் கொண்டிருக்கும்போது கருப்பன் மற்றும் ஆறுமுகம் ஆழமாகச் சகதியில் சிக்கி மூழ்க ஆரம்பித்தனர். உடனே முத்தன் அவர்களைக் காப்பாற்றச் சென்றபோது மற்ற இருவரும் பயத்தினால் முத்தனைக்கட்டிப் பிடித்துக்காப்பாற்ற இயலாமல் செய்ததின் விளைவாக மூவரும் சேற்றில் மூழ்கி இறந்தனர். தன்னுயிர் ஈந்த முத்தனின் வீரச் செயல் போற்றுதற்குரியது.





# தமிழக கிராமியக்கலை நடனங்கள்



திரு சுப்பிரமணியம் மற்றும் குழுவினர், ரங்காபுரம், வேலூர் (வடார்க்காடு)
கொக்கேளிக்கட்டை நடனம்



திரு சுப்பிரமணியம் மற்றும் குழுவினர், ஈரோடு
புலியாட்டம்.



திரு டி.கே. சின்னக்கண்ணு மற்றும் குழுவினர், கலைமகள் கலைக்குழு. கோவை மாவட்டம்
ஒயிலாட்டம்.

## பண்டைத் தமிழிசை

...துறை சார்பில் ... அருங்காட்சி ... அன்று நடை ... இருந்தவர்களை ... திரு ஹரி ...

வாழ்க்கை பற்றித் தெரிக்கும் உரையாகவும், காட்சிப் பொருளாகவும் நம் நாட்டுப் பண்பாடு பற்றித் தெரிவிக்கப்படுகிறது என்றார்.

கலைமாமணி டாக்டர் எஸ். இராமநாதன் அவர்கள் "பண்டைத் தமிழிசை" என்ற தலைப்பில் ...







ஆளுநா மாளிகையில் முதல்வர் பதவி ஏற்கிறார் (10.2.198



தலைமைச் செயலகத்தில் முதல்வரை
வரவேற்கிறார் தலைமைச் செயலர்.

# போதைப் பொருட்களை ஒழிக்க....

இளைஞர் ஆண்டு

இளைஞர்கள் போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் கொடுமை உலகெங்கிலும் காணப்படுகிறது. கிடைத்தால் கஞ்சா; இல்லையேல் சாவு என்ற அளவுக்கு அவர்கள் போதை தரும் பொருட்களுக்கு அடிமையாகி விட்டார்கள். சிலருக்கு மூளை அறுவைச் சிகிச்சை செய்து இந்தப் பழக்கத்தை ஒழிக்க வேண்டி இருக்கிறது என்று மருத்துவர்கள் கருதுகிறார்கள்.

கொடுமையிலும் கொடுமை என்ன என்றால், இந்தப் போதைப் பொருட்களை விற்பவர்கள் நல்ல லாபம் சம்பாதிக்கிறார்கள் என்பதே. நாடு விட்டு நாடு போதைப் பொருட்களைக் கடத்தும் இந்தச் சமுதாயக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து இயங்க வேண்டும் என்று உலகப் பேரறிவாளர்கள் கூறுகின்றனர். குற்றவாளிகள் எங்கும் புகலிடம் பெற வாய்ப்பு இருக்கக் கூடாது. பாதிக்கப்பட்ட நாட்டினர் குற்றவாளிகளைத் தண்டிக்கச் சட்டம் இடம் கொடுக்கும்படி நாடுகளிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட வேண்டும் என்றும் அவர்கள் விரும்புகின்றனர்.

1975-லிருந்து இதுவரை ஒன்பது நாடுகளின் குற்றவாளிகள்மீது அமெரிக்கா சட்டப்படி நடவடிக்கை எடுத்துள்ளது. அது போலவே அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் எட்டு நாடுகள் வசம் ஒப்படைக்கப்பட்டனர். இந்த நடைமுறை போதைப் பொருட்கள் கடத்தப்படுவதை ஒடுக்கப் பெரிதும் உதவும் என்று அமெரிக்க அரசு கருதுகிறது.

இந்தப் போதைப் பொருட்களைப் பயிராக்கும், தயாரிக்கும் நாடுகளும் இவை மீது தடை விதிக்க வேண்டும்; மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். உலகில் வளரும் தலைமுறையைப் பாழ்படுத்தும் இந்த நச்சுப் பழக்கத்தை முளையிலேயே கிள்ளி எறிய இதுவே வழி.



## வீரசக்ரா விருது பெற்றோருக்குப் பாராட்டு

வீரச் செயல் புரிந்ததற்காகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த 29 இராணுவத்தினர் வீர சக்ரா விருதுகளைப் பெற்றுள்ளனர். இந்த ஆண்டு குடியரசு தின விழாவில் தமிழக அரசு சார்பில் திரு மேஜர் ரெங்கசாமி, வீர்-சக்ரா மற்றும் பார் டு வீர்-சக்ரா (ஓய்வு), திரு கேப்டன் ராஜா அமிர்தலிங்கம், வீர்-சக்ரா, (ஓய்வு) திரு சுபேதார் மேஜர் (ஹானரரி கேப்டன்) தங்கவேலு, வீர்-சக்ரா (ஓய்வு) திரு சுபேதார் மேஜர் (ஹானரரி கேப்டன்) பிள்ளை, வீர்-சக்ரா (ஓய்வு), திரு ஹவில்தார் வேல்முத்து, வீர்-சக்ரா (ஓய்வு), ஆறுபேர் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர். மாலையில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற விருந்தில் இவர்கள் கலந்து கொண்டனர்.

தமிழக அரசு சார்பில் மதியம் விருந்தும் கொடுக்கப்பட்டது.



# வழிகாட்டும் தமிழகம்



தமிழ்நாடு அரசு குடும்பநலத் துறையில் ஆற்றிவரும் அரும் பணியை, மாண்புமிகு மத்திய அரசு குடும்பநலத்துறை ராஜாங்க அமைச்சர் திரு யோகேந்த்ர மக் வானா அவர்கள் மனம் திறந்து பாராட்டியுள்ளார். "மத்திய அரசு கி.பி.2000ல் அடைய எண்ணுவதை, தமிழ்நாடு கி.பி.1990 லேயே அடைந்துவிட முடியும் என நம்புகிறது" என்று, மாநில நலத்துறை அலுவலர்களுடன் விவாதித்து உணர்ந்த பிறகு, 8.1.85 அன்று சென்னையில் நிருபர்களிடையே பேசும்போது அவர் தெரிவித்தார்.

"விவசாயத்தைக் குடும்பநலத் துடன் இணைத்து, தமிழ்நாடு ஒரு சோதனை செய்து பார்க் கிறது. இது ஒரு புது முயற்சி, மற்ற மாநிலங்களும் பின்பற்றக் கூடிய போற்றத்தக்க முயற்சி. வாரிசுதாரர்களின் (குழந்தைகள்) எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்வதன் மூலம் நிலம் துண்டு போடப்படுவதைத் தடுக்க முடியும் என்பதைத் தமிழ்நாடு அரசு விவசாயிகளுக்கு அறிவுறுத்த முயல்கிறது" என்றார் அமைச்சர்.

குடும்பநலத் திட்டத்தில் ஆழ்ந்த அக்கறை காட்டிவரும் தமிழக அரசின் இரண்டாவது செயலர் திரு டி.வி.அந்தோணி, இ.ஆ.ப. அவர்களை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு, குடும்ப நலத் திட்டத்தில் தமிழ்நாடு ஈட்டிவரும் முன்னேற்றத்திற்கு அவரும் அவரோடு பணியாற்றும் அலுவலர்களும் காரணம் என்றார்.



"பெரியார் மாவட்டம், கோபிச்செட்டிப்பாளையத்திற்கு அருகே அய்யம்புதூர் என்ற கிராமம் 'ஒரு குடும்பத்திற்கு ஒரு குழந்தை' என்ற கொள்கையைக் கடந்த பத்தாண்டுக் காலமாய் பின்பற்றி வருவதைத் தமிழ்நாடு அரசு கண்டுபிடித்துள்ளது. இதன் பயனாக அந்தக் கிராமத்தில் நிலம் துண்டாடப் படவில்லை. 'ஒரு குடும்பத்துக்கு ஒருகுழந்தை' என்ற கொள்கையைக் கடைப் பிடிக்கும் இத்தகைய கிராமங்கள் மேலும் பல ஏற்பட நாங்கள் விழைகிறோம்" என்றார் திரு அந்தோணி.

தமிழ்நாட்டில் ஏற்படுத்தப் பட்டுவரும் சிறு-கிராம நல்வாழ்வு நிலையங்கள் ஏற்பாட்டை மத்திய அமைச்சர் பாராட்டி, இதனையும் மற்ற மாநிலங்கள் பின்பற்றலாம் என்று கூறினார்.

குடும்பநலத் திட்டத்துடன், கிராமப்புற நல்வாழ்வு, இந்திய மருத்துவமுறை வளர்ச்சி ஆகியவை பற்றியும் அமைச்சர் அலுவலர்களுடன் விவாதித்தார். குடும்பநல அறுவைச் சிகிச்சைக்கு கூடுதல் படுக்கை வசதி செய்து தரவேண்டியதன் அவசியம், ஒவ்வொரு மாநிலத்திலும் நல்வாழ்வு விஞ்ஞானப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுதல், ஓரளவு மருத்துவப் பயிற்சி யளிக்கும் பாடத் திட்டத்தைத் தொடங்குவது, சித்த மருத்துவக் கவுன்சில் அமைத்தல், வாய் மூலம் போலியோ மருந்து கொடுக்க மேலும் ஆய்வுக் கூடங்களை நிறுவுதல் ஆகியவை பற்றியும் விவாதித்தார். தாம் புதுடில்லி திரும்பியதும் இந்த யோசனைகள் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்தார் அமைச்சர் திரு.மக்வானா.

—முத்துமுருகன்



...ர் மாளிகையில் ஆளுநர் தம்பதியருடன் முதல்வர் தம்பதியர்



கையெழுத்திடுகிறார்.



பொற்பதக்கம், விருது, பொற்கிழி, கேடயம் பெற்றோர் குறித்த விவரங்கள் பின்வருமாறு:

திரு. க. வெள்ளைவாரணனார்—இயற்றமிழ்க் கலைஞர்

மதுரை திரு. டி. என். சேஷகோபாலன்—இசைக் கலைஞர்

திரு. எம். எஸ். அனந்தராமன்—வயலின் கலைஞர்

குற்றாலம் திரு. ஆர். விசுவநாதய்யர்—மிருதங்கக் கலைஞர்

திரு. ந. ரவிகிரண்—கோட்டு வாத்தியக் கலைஞர்

திருக்கருகாவூர் திரு. டி. ஜி. சுப்பிரமணியம்—நாதசுரக் கலைஞர்

வேதாரண்யம் திரு. வி. ஜி. பாலசுப்பிரமணியன்—தவில் கலைஞர்

திருப்பனந்தாள்
திரு. சோ. முத்துக்கந்தசாமி தேசிகர்—இறையருட்பாடற் கலைஞர்

திரு. ஆ. க. முத்துக்குமாரசாமி—இசைப் பாடலாசிரியர்

திரு. ஆர். வி. கிருஷ்ணன்—இசை ஆராய்ச்சிக் கலைஞர்

திரு. கே. என். தட்சிணாமூர்த்தி—பரதநாட்டிய ஆசிரியர்

திருமதி கே. ஜெயலட்சுமி—பரதநாட்டியக் கலைஞர்

திரு. நடனமணி பானு—நாட்டிய நாடகக் கலைஞர்

திரு. மணவை முஸ்தபா—பண்பாட்டுக் கலை பரப்புநர்.

திரு. டி. எஸ். நாகப்பன்—பரதநாட்டிய மிருதங்கக் கலைஞர்

திரு. ஏ. கே. வீராச்சாமி—நாடக நடிகர்

திருமதி. எஸ். என். பார்வதி—நாடக நடிகை

திரு. எஸ். ராமராவ்— நாடக நகைச்சுவைக் கலைஞர்



கவிஞர் ஏ. எஸ். முத்துச்சாமி—நாடக ஆசிரியர்

கவிஞர் வானம்பாடி (சுந்தரேசதுரை)—நாடகப் பாடலாசிரியர்

திரு. பி. எஸ். சிவானந்தம்— நாடகத் தயாரிப்பாளர்.



டாக்டர் இரா. குமரவேலன் — நாடகத் திறனாய்வுக் கலைஞர்.

திரு. விஜயகாந்த்—திரைப்பட நடிகர்.



## அறிவியல் சாரம்:

# சூப்பர் கம்ப்யூட்டர்




இன்று புழக்கத்தில் உள்ள பலவிதக் கம்ப்யூட்டர்களைக் கண்டு மூக்கில் விரலை வைக்கிறோம். அடுத்த தலைமுறைக் கம்ப்யூட்டர்கள் இதோ வர இருக்கின்றன. அவற்றைக் கண்டால் எப்படித்தான் வியப்பைத் தெரிவிப்பதோ!

அரசியல் சமுதாய மாற்றங்கள் பற்றிய தகவல்களைத் துல்லியமாக அறியவும் அணுவினுள்ளே உள்ள துகள்கள் எப்படி இயங்குகின்றன என்று தெரிந்து கொள்ளவும், நம்பகமான முன்னெச்சரிக்கை வானிலை அறிக்கை தயாரிக்கவும், படு சிக்கலான தொழிலியல் இயந்திரக் கூறுகளின் வரைபடங்களை வடிக்கவும் இன்னும் எத்தனையோ விந்தைகளை நொடிப் பொழுதில் செய்ய வல்ல புதியதலைமுறை கம்ப்யூட்டர்கள் உருவாகி வருகின்றன!

இருப்பினும் எந்தக் கம்ப்யூட்டரும் மனித மூளையை வேகத்திலும் நுணுக்கத்திலும் வெல்ல முடியாது! அப்பப்பா! எப்படிப்பட்ட எண்ண அலைகள் அவ்வளவு வேகத்தில் வீசுகின்றன! எல்லாம் மனிதனின் மூளைக்குள். அதை எட்டுவது இப்போதைக்கு எந்தக் கம்ப்யூட்டராலும் முடியாது.

ஆனாலும் புதிய கம்ப்யூட்டர்களை உருவாக்குபவர்கள் அந்தப் பாதையை நோக்கி நடைபோடத் தொடங்கி விட்டார்கள். இந்தத் துறையில் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் மேற்கு ஐரோப்பியநாடுகளிடையே போட்டா போட்டி. போகிற போக்கைப் பார்த்தால் ஒரே நாடு இதை தனியாக நின்று சாதித்து விட முடியாது போலிருக்கிறது. எனவே, போட்டியைத் தவிர்த்து, இந்த நாடுகள்ஒன்றோடொன்று ஒத்துழைத்துப்புதிய தலைமுறை 'சூப்பர் கம்ப்யூட்டர்'களை உருவாக்க முன் வரலாம்.

### சூப்பர் கம்ப்யூட்டர்

புழக்கத்தில் உள்ளவற்றை விட பத்து அல்லது நூறு மடங்கு வேகமாகச் செயல்படத் தக்கவையே 'சூப்பர் கம்ப்யூட்டர்கள்'. இதனால் மிகக் குறுகிய காலத்தில் மிக அதிக மான தகவல் கூறுகளை நிரல்படுத்த முடியும். இன்றைய கம்ப்யூட்டர்களைப் பார்க்கும்பொழுது 1969ல் படைக்கப்பட்டவை வெகு சாதாரணமானவை என்று தோன்றும். அவ்வளவு ஆற்றல் கொண்டவை இன்றைய சூப்பர் கம்ப்யூட்டர்கள்.

சூப்பர் கம்ப்யூட்டர்களைப் படைப்பதில் அமெரிக்கா முன் நிற்கிறது. ஜப்பானும் அதிகத் திறன் கொண்ட கம்ப்யூட்டர்களை உருவாக்கி வருகிறது. எனினும் 1976லிருந்து இன்றுவரை அமெரிக்கா உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்த கம்ப்யூட்டர்களின் எண்ணிக்கை 90க்கும் குறைவே.

ஏன் இந்த நிலை? வேறென்ன, அதிக விலைதான் காரணம். திகைக்காதீர்கள். இவற்றின் விலை ஐந்து மில்லியன் டாலர் முதல் 15 மில்லியன் டாலர் வரை. அதாவது இன்றைய இந்திய மதிப்பில் ரூ. ஐந்து கோடி முதல் ரூ. 15 கோடிக்கும் மேல்! இவ்வளவு விலை கொண்ட இந்த கம்ப்யூட்டர்கள் மிக மிக நுணுக்கமானவை. எனவே, இயக்குவதற்கும் தெளிந்த பயிற்சி பெற்றவர்கள் தேவை.

அடுத்த தலைமுறைக் கம்ப்யூட்டர்கள் விலை குறைவாகவும் எளிதில் இயக்க வல்லன ஆகவும் படைக்கப்படும் என்கிறார் பால் மாலமுட் என்ற பத்திரிகையாளர். விமானங்களை ஒத்த கார்களை வடிவமைக்க வரைபடங்கள் வேண்டுமா? தட்டுங்கள் பொத்தானை. நொடியில் தந்து விடும் சூப்பர் கம்ப்யூட்டர். அவ்வளவு விரைவாக்கம்.

என்ன இருந்தாலும் விஞ்ஞானிகள் படைக்க நினைக்கும் புதிய தலைமுறைக் கம்ப்யூட்டர்களின் வேகத்திற்கு முன் இன்றைய கம்ப்யூட்டர்களின் வேகம் எந்த மூலைக்கு? புதிய கம்ப்யூட்டர்கள் அடுத்த ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கம்ப்யூட்டர்களின் 'சர்க்யூட்'களை இயக்கும் 'ஸிலிக்கான்' சில்லுகளை குறைவான பரப்பில் அடக்கினால் அவற்றின் வேகம் கூடும். அதுமட்டுமல்ல' சர்க்யூட்கள் வேலைப் பளுவினால் சூடாகும்பொழுது இவை குளிர்விக்கப்பட வேண்டும்.

மின் ஓட்டத்தினால் சூடு அடையாத புதிய நுண்ணுறுப்புகளைக் கண்டுபிடித்தால் கம்ப்யூட்டர்களைஇன்னும் வேகமாக இயக்கலாம். 'காலியம் ஆர்ஸனைடு' என்ற பொருள் இந்தத் தன்மை கொண்டது.

அமெரிக்க அரசின் ராணுவத்துறை, அமெரிக்காவின் கிரே ரிசர்ச், பெல்லாப்ஸ், இண்டர் நேஷனல் பிஸினஸ் மெஷின்ஸ் என்ற வணிக நிறுவனங்களும் காலியம் ஆர்ஸனைடு கொண்ட சர்க்யூட்களை உருவாக்க முனைகின்றன. ஜப்பானும் இந்த வகையில் பெரு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

### ஃபைபர் ஆப்டிக்ஸ்

லேஸர் கதிர்களைக் கண்ணாடி இழைகள் வழியாகப் பாய்ச்சும் ஃபைபர் ஆப்டிக்ஸ் என்ற முறையும் சூப்பர் கம்ப்யூட்டர்களை உருவாக்க உதவும். கம்ப்யூட்டர்களில் தற்பொழுதுள்ள மிக நுண்ணிய மின் கம்பிக் கற்றைகளுக்குப் பதிலாக ஒளிக் கூறுகள் பயன்படுத்தப்பட்டால் புதிய கம்ப்யூட்டர்கள் மிக நன்கு செயலாற்றும் என்று அறியப்பட்டிருக்கிறது.

தகவல்களை நிரல்படுத்துவதில் நினைவுக் கூறுகளோடு (மெமரி ஸர்க்யுட்ஸ்) அறிவுக் கூறுகளும் (லாஜிக் ஸர்க்யூட்ஸ்) புதிய கம்ப்யூட்டர்களில் செவ்வனே செயல்படுமாறு அமைக்கப்படும். இந்த வகையில் 'வெக்டர் பிராஸஸிங்' 'பேரலல் ப்ராஸஸிங்' என்ற இரு முறைகள் கம்ப்யூட்டர்களின் அறிவுக் கூறுகளின் ஆதார அமைப்பை மாற்றி விட்டன. எனவே ஒரே நேரத்தில் ஒரு கம்ப்யூட்டர் பலவிதத் தகவல் கூறுகளை எதிர்கொள்ளும். அதனால் அவற்றின் இயக்கமும் விரைவுபடுத்தப்படும்.

இந்த இருமுறைகளையும் இணைத்து புதிய முறையை உருவாக்கினால் சூப்பர் கம்ப்யூட்டர்களை இன்னமும் சிறப்பாகப் பயன்படுத்த முடியும். தகவல்களை நிரப்பிக் கொள்வதோடு நிரல்படுத்தித் தரும் பணியையும் இந்த வகைக் கம்ப்யூட்டர்கள் வேகமாகச் செய்து தர வல்லன.

கம்ப்யூட்டர்களின் நினைவுத் தட்டுகளில் காந்த சக்தி கொண்டு தகவல்கள் பொதியப்படுகின்றன. நாம் வேண்டும் பொழுது இவற்றைப் பெறுவதற்குச் சில சமயம் கால தாமதம் ஏற்படுகிறது. அது கம்ப்யூட்டர் காந்த நினைவுத் தட்டுகளில் தகவல்களைத் தேடுவதனால் தான். இதற்கு மாற்றாக ஒரு பிளாஸ்டிக் விரிப்பில் இரும்பு ஆக்ஸைடு துகள்களைநெருக்கமாகப் பரப்பி எளிதில் தேவையானவற்றை எட்டும்படிச் செய்யும் ஆராய்ச்சியும் தொடர்கிறது.

நமக்குக் கைகட்டி சேவகம் செய்யும் கம்ப்யூட்டர்களை வடிவமைக்கத் தேவைப்படும் நுண்ணுறுப்புகளை உருவாக்குவதில் உள்ள இடர்ப்பாடுகளை எப்படியோ எதிர்கொண்டாலும் கூட கம்ப்யூட்டரை இட்டு நிரப்புவதற்கும் இயக்கிப் பயன் பெறுவ

### பாம்புக் கடிக்குப் புதிய மருந்து

பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியில் பாம்பு விஷத்தை முறியடிக்கும் நான்கு சித்த மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கல்லூரியைச் சேர்ந்த மருத்துவர்கள் குழுவொன்று கடும் ஆராய்ச்சியின் மூலம் பாம்பு விஷத்தை முறியடிக்கக் கூடிய நான்கு சித்த மருந்துகளைக் கண்டுபிடித்துள்ளதாக இந்திய மருத்துவ முறை இயக்குநர் திருமதி குத்சியா காந்தி, இ.ஆ.ப. தெரிவித்தார்.

தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில் 'பாரம்பரிய மருத்துவ முறை' என்ற தலைப்பில் இரண்டு நாள் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

தைவானில் பாம்புக் கடிக்கு மாற்று மருந்தாக ஒரு சிறப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டு அது மிகச் சிறந்த மருந்தாகக் கருதப்பட்டது. இப்போது இந்திய சித்த மருத்துவர்கள் கண்டு பிடித்துள்ள நான்கு மருந்துகளும் பாம்பின் விஷத்தை முறியடிக்கும் வீரிய சக்தி கொண்ட மருந்துகளாகும். தைவான் பாம்புக்கடி மருந்தை விட பல மடங்கு சிறந்தவை அவை என்றும் அவர் கூறியுள்ளார்.

தற்கும் அதிகத் திறமை தேவைப்படும். அதற்கான பயிற்சி முறைகள் கற்பிக்கப்பட வேண்டும்.

**காடுகளிடையே போட்டி**

மனித மூளையுடன் போட்டி போடக் கூடிய ஐந்தாம் தலைமுறைக் கம்ப்யூட்டர்களைப் படைப்பதில் ஜப்பான் அரசாங்கம் மிகவும் தீவிரமாக இருக்கிறது. அதிவேகக் கம்ப்யூட்டர்களை வடிவமைக்கும் இரு திட்டங்களில் ஜப்பான் பெரிதும் கவனம் செலுத்தி வருகிறது. இவை தவிர ஜப்பானிய தனியார் நிறுவனங்களும் அடுத்த தலைமுறைக் கம்ப்யூட்டர்களைத் தோற்றுவிப்பதில் நாட்டம் கொண்டிருக்கிறார்கள்.

**மெகா:ப்ளாப்**

கம்ப்யூட்டர்களின் வேகத்தை 'மெகாஃப்ளாப்' என்ற அலகுகளால் கணக்கிடுகிறார்கள். தற்போதைய கம்ப்யூட்டர்களின் வேகம் 500 மெகாஃப்ளாப்ஸ். அதாவது ஒரு செகண்டில் 50 கோடிப் புள்ளிகளுடன் தொடர்பு கொள்ளும் ஆற்றல். இதை 10,000 மெகாஃப்ளாப்ஸ் ஆக உயர்த்த முடியும் என்று நம்புகிறார்கள். ஜப்பானியர். அமெரிக்கர்களும் இந்தவகையில் ஜப்பானியருடன் போட்டியிட முயல்கிறார்கள்.

**கூட்டமைப்புகள்**

மின் அணுவியல் மற்றும் கம்ப்யூட்டர் ஆய்வுத்துறையில் பெரும் பொருள் முதலீட்டுடன் விஞ்ஞானிகள் அனைவரின் ஆற்றலையும் ஒருங்கு இணைக்கும் திட்டத்துடன் 18 அமெரிக்க நிறுவனங்களின் கூட்டமைப்பு டெக்ஸாஸ் மாநிலத்தில் இயங்கி வருகிறது.

**இராணுவ மூளை**

அமெரிக்க அரசின் இராணுவ ஆய்வுத்துறை, விமானியின் மூளை போல் இயங்கும் கம்ப்யூட்டர்களை இயந்திர மனிதர்களுக்குப் (ரோபோ) பொருத்தி ஜெட் ரகப்போர் விமானங்களை இயக்க அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அது சரி, அன்றாட வாழ்வில் சூப்பர் கம்ப்யூட்டர்களால் என்ன பயன்?

வங்கிப் பணிகளை வெகு எளிதில் முடித்து விடலாம். பூமிக்குள்ளே எண்ணெய் வளம் பற்றிய தகவல்களை மிக எளிதாக, விரைவாகத் திரட்டலாம். நம்பகமான வானியல் நிலைகளை முன்கூட்டியே அறியலாம். மிகத் துல்லியமாக விரைவாக மொழிபெயர்ப்புகள் செய்யலாம்.

அதற்கும் மேலே சூப்பர் கம்ப்யூட்டர்கள் தாமாகவே அதிக ஆற்றல் கொண்ட இயந்திர மனிதர்களையும், ஏன் கம்ப்யூட்டர்களையுமே செய்துவிடும்.

— அமெரிக்கத் தகவல் நிலையம்



இலங்கை கப்பற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட திரு அல்போன்ஸ் என்ற மீனவரின் மனைவி திருமதி இருதய மேரியிடம் அ.இ.அ.தி.மு.க சார்பில் உதவி நிதியாக ரூ. 10,000 மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்கள் தங்கச்சிமடத்திலுள்ள இம் மீனவரது இல்லத்திற்கு நேரில் சென்று வழங்கினார்.





# வீடற்றவர்களுக்கு வீட்டு வசதி

1987ஆம் ஆண்டை, பன்னாட்டு வீடற்றவர்களுக்கு வீட்டுவசதி அளிக்கும் ஆண்டாகக் கொண்டாடவேண்டுமென்று ஐக்கிய நாட்டு அவை முடிவு செய்ததையடுத்து மைய அரசு இந்நாட்டில் உள்ள வீடற்றவர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்து இதனை வெற்றிகரமாகச் செயல்படுத்தவேண்டுமென்று முடிவு செய்தது. அதன்படி இத் திட்டத்தைச் செயல்படுத்துமாறு அனைத்து மாநில அரசுகளையும் கேட்டுக் கொண்டுள்ளது. இத் திட்டத்தின் நோக்கங்கள்:

1. வீட்டுவசதியை மேம்படுத்துவதற்கான கொள்கைகளை விளக்கிக் கூறுதல்.

2. கி.பி.2000ஆம் ஆண்டு வாக்கில் உலகம் அனைத்திலும் வீடற்றவர்களே இல்லாத அளவுக்கு இந்தக் கொள்கைகளைச் செயல்படுத்துதல்.

இந்த நோக்கங்களை எய்த செயல் அலுவலர்கள் 1984ஆம் ஆண்டில் ஓரளவிற்குச் சாதனை எய்தவும் கி.பி.2000ஆம் ஆண்டில் முழு சாதனை எய்தவும் தொடர்ந்து சிறப்பான முறையில் திட்டங்களை வகுத்து நடவடிக்கை எடுக்கவேண்டி உள்ளது.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் பொருளாதார நிலையில் நலிந்தவர்களுக்கும் கிராமப்புற வீடற்ற தொழிலாளர்களுக்கும் கிராமக் கைவினைஞர்களுக்கும் குடிசை வாசிகளுக்கும் வீட்டுவசதி செய்துகொடுக்க வேண்டுமென்று வேண்டியுள்ளது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மைய அரசு ஏற்கெனவே ஒரு தலைமைக் குழுவை அமைத்துள்ளது. அதற்கு மத்திய அரசில் வீட்டுவசதித்துறை செயலாளர் தலைவ்ராக இருப்பார். அவர் இத்திட்டத்தை வகுத்துச் செயல்படுத்தும் பணியைக் கவனிப்பார்.

இதேபோல் மாநில அளவில் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு குழுக்களை அமைக்கவேண்டுமென்று மாவட்ட அளவிலும் இதுபோன்ற குழுக்களை அமைக்கலாமென்றும் மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இத்திட்டத்தில் வீட்டுவசதி அளிப்பது மட்டுமின்றி அடிப்படை வசதிகள் அதாவது குடிநீர் வழங்கல், துப்புரவு, சுகாதாரக் கல்வி, மின் இணைப்பு போன்ற வசதிகளைச் செய்துகொடுப்பதும் அடங்கும். எனவே, மாநில அளவில் அமைக்கப்படும் குழுவில் அனைத்துத் துறையைச் சார்ந்த பிரதிநிதிகளும் இருப்பார்கள்.

தமிழ்நாடு அரசு மத்திய அரசின் இக் கருத்துக்களை ஆய்வு செய்துள்ளது. இத் திட்டத்தைச் செயல்படுத்த இவ்வரசு ஒப்புக்கொண்டு அதற்காக மாநில அளவில் ஒரு குழுவை அமைக்க முடிவு செய்துள்ளது. குழுவிற்குத் தலைமைச் செயலாளர், தலைவராகவும்; வீட்டுவசதித்துறைச் செயலாளர், உறுப்பினர்-செயலாளராகவும், மற்றும் 30க்கு மேற்பட்ட அரசுத் துறை செயலாளர்களும், வாரியத்தலைவர்களும், உறுப்பினர்களாகவும் இருப்பார்கள்.

துணைத் தலைவராகச் சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத் தலைவர் இருப்பார். திட்டத்தைச் செயல்படுத்துகையில் அவசியமாயின் அரசு அலுவலர்கள் ஏனையோரையும் இதில் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளலாம்.

மாநில அளவில் இத்திட்டத்தைச் செயல்படுத்த வீட்டுவசதித்துறை அரசு ஆணையாளர் செயலாளரை மைய இயக்க அதிகாரியாக அரசு நியமிக்கிறது.

மாவட்ட அளவில் இத்திட்டத்தைச் செயல்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவர்களைத் தலைவராகக் கொண்டு குழுக்களை அமைக்கலாம் என்று மத்திய அரசு ஆலோசனை கூறியுள்ளது.

மாநில அளவிலான குழு அதன் முதல் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களைத் தலைவராகக் கொண்ட மாவட்டக் குழுக்களை அமைத்து இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அவர்களுக்கு ஆலோசனை நல்கலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முதலில் திட்டவட்டமாக இலக்கை நிர்ணயிக்க வேண்டியுள்ளது. அதற்காக நாட்டில் வீடற்றவர்கள் குறித்து புள்ளி விவரங்களைக் கிராமப் பகுதிகளிலும் நகர்ப் பகுதிகளிலும் சேகரித்து அறிவியல் அடிப்படையில் தொகுக்க வேண்டியுள்ளது. இது குறித்து மாநில அளவிலான குழு விவரித்து இப்பணியை எந்த அமைப்பிடம் ஒப்படைக்கலாமென்று முடிவு செய்யும்.

இத்திட்டத்திற்கான நிதி வசதியைப் பொறுத்தமட்டில் இதற்கென்று தனியாக நிதி இல்லையென்றும், ஏற்கெனவே இருந்து வரும் நிதி வழங்கலை இதற்குப்பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கருத்து தெரிவித்துள்ளது.

ஏழாவது திட்டக் காலத்தில் இத்தலைப்புகளின் கீழ் ஒதுக்கப்படும் நிதிகளை இத்திட்டத்திற்கும் பயன்படுத்தலாம் என்று இவ்வரசு முடிவு செய்கிறது.

செங்கல்பட்டு, தென்னார்க்காடு, தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் தலா 500 ஆடு வளர்ப்பு அலகுகள் வீதம் மொத்தம் 2000 அலகுகள் ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ.99 இலட்சத்தில் ரூ. 54.44 இலட்சங்கள் மானியமாகச் சிறப்பு மத்திய நிதி உதவியில் இருந்து அரசு அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 2000 இந்து ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயனடைவர். இவர்களில் 1000 பேர் பெண்கள். இத் திட்டத்தின் மற்ற விவரங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| ஏற்படுத்தவிருக்கும் மொத்த அலகுகளின் (units) எண்ணிக்கை தட்டுகள், | 2000 |
| ஒரு அலகு விலை | ரூ.4500 |

| | ரூ. இலட்சங்களில், |
|---|---|
| மொத்தத் திட்டத்தொகை | 90.00 |
| சிறப்பு மத்திய நிதி உதவி மானியம்(50 விழுக்காடு) | 45.00 |
| 2800 பயனடைவோர்க்குப் பயிற்சி அளிக்க மானியம் | 4.10 |
| நோய்த்தடுப்பு மானியம் | 2.94 |
| (இன்சூரன்ஸ்) ஈட்டுறுதித் திட்ட மானியம் | 1.30 |
| அடையாள அட்டைகள் வழங்கு மானியம் | 0.10 |
| களப் பணியாளர் | 1.00 |
| இத்திட்டத்திற்கான மொத்த மானியம் | 54.44 |

இத்திட்டம் நடப்பு ஆண்டில் கால்நடை வளர்ப்பு இயக்குநரால் அமல்படுத்தப்படும்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப. அவர்கள் 1.2.1985 அன்று செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்த தகவல்களிலிருந்து....




தென்னகப் பகுதியின் இந்தியத் தொழில்துறைப் பொறியாளர்கள் சங்கத்தின் சார்பில் 25.1.1985 அன்று சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கில் மைய அரசின் கனரகத் தொழில் இணைச் செயலர் திரு ஜி. எஸ். கிரிவால் தலைமை தாங்கினார். தமிழக அரசின் தொழில் துறைச் செயலர் திரு வி. செல்வராஜ், இ.ஆ.ப. சிறப்புரையாற்றினார்.



# வளர்ந்து வரும் மருத்துவக் கல்வி

நலவிஞ்ஞான (மருத்துவ)ப்பல்கலைக் கழகம் ஒன்றை அமைப்பதற்கான திட்ட அறிக்கையினைத் தயாரித்து அளிக்கும்படி தமிழ்நாடு அரசு குழுவொன்றை நியமித்த தன் மூலம் துணிச்சலான நடவடிக்கை எடுத்துக் கொண்டது. அந்தக் குழுவும் தனது அறிக்கையை அரசுக்குக் கொடுத்து விட்டது. மருத்துவப் பல்கலைக் கழகம் நிறுவுவது இயலக்கூடியதே என்றும், அதைச் செயல்படுத்த வேண்டும் என்றும் குழு கூறியுள்ளது. மருத்துவப் பல்கலைக் கழகம் பற்றிப் புரிந்துகொள்வதற்கு முன்னால், நாட்டின் மருத்துவக் கல்வி வளர்ச்சி பற்றித் தெரிந்துகொள்வது அவசியம்.

இந்தியாவில் 19ஆம் நூற்றாண்டின் மத்திவாக்கில் நவீன மருத்துவம் பயிற்றுவிப்பது தொடங்கியது. மருத்துவக் கல்லூரிகள் கல்கத்தாவிலும் சென்னையிலும் 1835லும், பம்பாயில் 1845லும் ஆரம்பிக்கப்பட்டன. பல்கலைக் கழகக் கல்வி பரவியதைத் தொடர்ந்து பல்வேறு மாநிலங்களில் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப் பட்டன.

நாட்டின் சுதந்திரத்திற்கு முன், 1946ல் பிரிக்கப்படாத இந்தியாவில் மொத்தம் 19 மருத்துவக் கல்லூரிகள்தான் இருந்தன. நாட்டின் விடுதலைக்குப் பிறகு, மருத்துவக் கல்லூரிகளின் தேவை தொடர்ந்து உணரப்பட்டு, 1950ல் இந்தியாவில் 30 மருத்துவக்கல்லூரிகள் செயல்பட்டன.

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 12 மருத்துவக் கல்லூரிகள் புதிதாகத் தொடங்கப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் மேலும் வேகப்படுத்தப்பட்டதன் விளைவாக, திட்ட இறுதியில் 57 மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டன. மூன்றாவது



டாக்டர் லலிதா காமேஸ்வரன், மருத்துவக் கல்வி இயக்குநர்.

# நிலவில் குடியேறுவது நிச்சயம்!




விண்வெளி ஆய்வில் வெகு வேகமாக முன்னேறி வரும் அமெரிக்கர்கள் நிலவில் குடியேறும் நாள் தொலைவில் இல்லை என்று சொல்கிறார் அமெரிக்கவிண்ணாய்வு (நாஸா) அமைப்பின் நிர்வாகி ஜேம்ஸ் பெக்ஸ்.

நிலவில் அமெரிக்கர் கால்பதித்து 15 ஆண்டுகள் ஆகிவிட்டன. 12 அமெரிக்க விண்வெளி. வீரர்கள் நிலவின் மேற்பரப்பில் நடை பயின்றுள்ளனர். நிலவுக்கு அமெரிக்கா வந்தது 1972ல். அதன் பிறகு மனிதனின் காலடி நிலவில் படவில்லை.

நிலவின் மேற்பரப்பில் ஆறு இடங்களிலிருந்து அமெரிக்கர் ஆய்வுக்காகத்திரட்டிய கல், மண் முதலான பொருட்கள் 2000க்கும் மேல். பின்னர் மூன்று இடங்களிலிருந்து ரஷ்ய ஆளில்லா விண்கலம் இவ்வகைப் பொருட்களை எடுத்துவந்தது.

இதுவரை கண்டறியப்பட்டபடி நிலவில் நீர் இல்லை. உயிரினங்களும் இல்லை. ஆனால் நிலவுக்குன்றுகளில் எக்கச்சக்கமாக பிராண வாயு இருக்கிறது. சிலிக்கான் இரும்பு, டிட்டேனியம் ஆகிய உலோகங்களும் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

அடுத்த 25 ஆண்டுகளுக்குள் நிலவில் ஒரு ஆய்வு நிலையத்தை அமெரிக்கா நிறுவும். அங்கிருந்து சூரிய மண்டலம், செவ்வாய் மற்றும் பூமிக்கு அருகே உள்ள பிற. கோள்கள் பற்றிய ஆய்வை அமெரிக்க விஞ்ஞானிகள் தொடர்வர்.

இன்னும் 15 ஆண்டுகள்ல் நிலவுக்கும் பூமிக்கும் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பை அமெரிக்கா ஏற்படுத்தும். நிலவில் நிரந்தரமாக ஆய்வு நிலையம் அமைக்கப்பட இது ஒரு முன்னோடி.

## விளையும் பயிர்



கோயம்புத்தூர் பூ. சா. கோ. கலை அறிவியல் கல்லூரியில் பி.ஏ., முதலாம் ஆண்டு பொருளாதாரம் பயிலும் மாணவர் பி. சண்முகானந்தம், கதை, கட்டுரை, கவிதை எழுதுவதில் ஆர்வமுள்ள இவர் பல பரிசுகளையும் பெற்றுள்ளார்.

## காச நோயைக் கட்டுப்படுத்த முடியும்!

பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்த நாடுகளில் காசநோய் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. நல்ல உணவு, போதிய ஓய்வு, சுற்றுப்புறச் சூழ்நிலையைச் சுத்தமாக வைத்திருத்தல் ஆகியவையே இதற்குக் காரணம். பின் தங்கிய நாடுகளில்தான் காசநோய் அதிகமாகக் காணப்படுகிறது. இந்தியாவில் 80 இலட்சம் பேர் இந்த நோயால் தொல்லைபடுகிறார்கள். தமிழ்நாட்டில் 8 லட்சம்; அதிலும் சென்னை மாநகரில் மட்டும் 80 ஆயிரம் பேர் காசநோய்க்கு ஆளாகியுள்ளனர். ஆயினும், இந்த நோய் குணப்படுத்த முடியாத நோயா என்றால், இல்லை என்று உறுதியாகக் கூறலாம். மருந்துகள் மூலமும் அறுவை சிகிச்சை மூலமும் இதைக் குணப்படுத்திவிடலாம்.

காசநோய் தொற்று நோயே அன்றி, பரம்பரை நோயன்று. காச நோயாளி மருந்துகளை இடைவிடாது சில மாதங்கள் (அதாவது 12 முதல் 18 மாதங்கள்) உட்கொண்டால் நோய் குணமாகிவிடும். பி.ஸி.ஜி.ஊசி போட்டுக்கொள்ள வேண்டும். இதை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை போட்டுக்கொள்வது அவசியம். இந்தியாவில் 10 கோடிப் பேருக்கு மேல் பி.ஸி.ஜி. போடப்பட்டுள்ளது.

காசநோய் உடலில் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் வரலாம். ஆனால் நுரையீரலில் வரும் காசநோய்தான்பரவுகிறது. இது பரவாமல் தடுப்பது எப்படி?

நாம் இருமும்போது வாயைக் கையால் அல்லது கைக்குட்டையால் மறைத்துக் கொள்ளவேண்டும். கண்ட இடங்களில் எச்சில் துப்பக் கூடாது. இவற்றை நாம் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும். நோயைக் கட்டுப்படுத்த இந்தத் தடுப்பு முறை முக்கியமானதாகும்.

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை

## தெரிந்து கொள்வோம்!

* உணவுப் பொருட்களைப் பாதுகாப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் சோடியம் பென்சாயிடு என்ற சேர்மம் பயன்படுத்தப் படுகிறது.
* இரத்தம் உறைதலுக்கு மிக அவசியமான பொருள் வைட்டமின் 'கே' ஆகும்.
* இன்சுலின் என்ற மருந்து ஃபிரடெரிக் பேன்டிங் என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டது.
* எலக்ட்ரான்கள் தாம்ஸன் என்ற அறிஞரால் கண்டுபிடிக்கப்பட்டன.
* பாலின் அடர்த்தியை அளப்பதற்கு லேக்டோ மீட்டர் என்னும் கருவி பயன்படுத்தப்படுகிறது.
* நமது தேசிய தாவரவியல் தோட்டம் (National Botanical Gayden) லக்னோவில் அமைந்துள்ளது.
* மனித உடலில் உள்ள எலும்புகள் முக்கியமாக கால்சியம் கார்பனேட்டால் ஆனவை.
* குதிரைத்திறன் என்பது 746 வாட்டுகள் ஆகும்.
* அம்பர் என்பது சிறுநீரின் நிறமாகும்.

க. கிருஷ்ணசாமி பாரதி,
முதலாண்டு இள அறிவியல்
(இயற்பியல்)
தியாகராசர் கல்லூரி,
மதுரை-9.

# நூல் நயம்

## பாரதியின் சொல்லாட்சி

ஆசிரியர்: பாரதிப்பித்தன்.
கிடைக்குமிடம்: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600098.
பக்கம்: 93 விலைரூ.5-

பாரதியார், 'பாட்டுத்திறத்தால் இந்த வையத்தைப் பாலித்திடவேண்டும்' என்று விரும்பியவர். நல்ல தமிழ்ச்சொற்களை-புதுச் சொற்களை ஏற்ற இடத்தில் பொருத்தமுற அமைத்துத் தந்தவர். அவருடைய சொற்கள் மந்திரசக்தி உடையவை. 'யுகப்புரட்சி' 'பொதுவுடைமை' என்பன சக்திவாய்ந்த சொற்கள்.

பாரதியார் பாடல்களில் மொழிப்பற்று, தேசியப் பற்று, ஒருமைப்பாட்டுணர்வு உண்டு. அவருடைய காவியத்திறனை வெளிப்படுத்துவது 'பாஞ்சாலி சபதம்'

பாரதியார் சொல்லாட்சி, சுவை நிரம்பிய கருத்துக்கள், வளமிக்க காவியங்கள் அனைத்தும் பாரதிப்பித்தனால் அருமையான சான்றுகளோடு அழகாகச் சொல்லப்பட்டுள்ளன. கவியரசரின் அனைத்துத் திறனும் இந் நூலாசிரியரால் செம்மையாக உணர்ந்து விளக்கப்பட்டுள்ளன.

பெண்ணைத் தெய்வமாகப் போற்றிய பாரதி 'பெட்டைப் புலம்பல்' பற்றியும் குறிக்கின்றார். அச் சொல்லாட்சியும் ஆற்றல் சான்ற நூலாசிரியரால் அழகுற ஆராயப்பட்டுள்ளது.

பாரறிந்த பாரதியின் பெருமைக்கு மேலும் புகழ்சேர்க்கிறது 'பாரதியின் சொல்லாட்சி!' தமிழ் விரும்பிகளுக்கு நல் விருந்து.

—டாக்டர் சிவ அரசி முத்துக் காளத்தி.

## ஒத்திகை

ஆசிரியர்: த. திலிப்குமார்
விற்பனை உரிமை: பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை—108.
விலை: ரூ 6 பக்கம்: 68

புதுமை முகப்புடன் விளங்கும் 'ஒத்திகை'யில் புதுக்கவிதைகள் பூத்துக் குலுங்குகின்றன.

ஆழ்மனத்தின்
நினைவுகள் அல்ல
ஆத்மாவின் மொழி

என்று 'கவிதை'யையும்,

இது
தாம்பத்திய வாழ்வுக்குக்
கொடுக்கப்படும்
மொத்த ஊதியம்

என்று 'வரதட்சிணை'யையும் வர்ணிக்கும் கவிஞர், பாரதி, கண்ணதாசன் பற்றியும் கருத்து மணிகள் கோத்திருக்கிறார்.

கவிஞரின் காதல் ஏக்கம், பொதுநலம் எல்லாம் கவிதை வரிகளாக மிளிர்கின்றன. 'ஒத்திகை'யைப் பார்க்கலாம்.!

## பாரதி ஒரு யுகசந்தி

ஆசிரியர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்,
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட், 41.பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை—98.
விலை: ரூ 6 பக்கம்: 110.

''பாரதி முப்பத்தொன்பது ஆண்டுகளே வாழ்ந்தான். ஆனால் அவன் பல யுகங்களைக் கண்டிருக்கிறான். அவனுக்கு முன் நடந்துபோன யுகங்களிலும் அவன் ஊடுருவி அந்த யுகங்களுக்குப் புதுமைகளைச் சேர்த்திருக்கிறான். இதற்குப் 'பாஞ்சாலி சபதம்' சான்று; பாரதி, தான் வாழ்ந்த யுகத்தையும் நன்றாகக் கணித்திருக்கின்றான். இதற்கு 'நடிப்பு சுதேசிகள்' சான்று. அவனுடைய காவியக் கனவில் தோன்றி, அவனுக்குப் பின் தோன்றப் போகும் கிருத யுகத்தையும் வரவேற்றுப் பாடியிருக்கிறான். 'பாரத சமுதாயம்' இதற்குச் சான்று. ஆதலால், பாரதி யுகங்களைச் சந்தித்த கவிஞன்'' என்று அடிகளார் அவர்கள் அழகாகக் குறிப்பிடுகிறார் தம் முன்னுரையில், இந்நூலில் 21 கட்டுரைகள் உள்ளன. எல்லாம் பாட்டுக்கொரு புலவனின் அருமை பெருமைகளைப் பேசுகின்றன. படம் பிடித்துக் காட்டுகின்றன.

அடிகளாரின் அழகிய நடையும் சிந்திக்கத் தூண்டும் கருத்துக்களும் கட்டுரைகளில் பளிச்சிடுகின்றன. நாளைய தலைமுறையினரும், தமிழ் ஆர்வலரும் படித்துப் பயன்பெறத்தக்க அறிவுப் பெட்டகம் இது.

—பி. வி. கிரி

## ஞான மழை

எழுதியவர்: கவிஞர் வசந்த பாரதி
வெளியீடு: சாந்தி நிலையம், 7, தாயார் தெரு, மார்க்கெட் லேன், சென்னை.600 002.
விலை ரூ. 7 பக்கம் 132

வசந்த பாரதியின் 'ஞான மழை' என்ற தத்துவக் கருத்து மழை பெருமழையாக இருக்கிறது. 1,111 தத்துவங்களே (101, 501, 1001, என்பதுபோல் இதுவும் ஒரு கணக்கில் இருக்கும் போலிருக்கிறது) புரியும்படியாகவே சொல்லப்பட்டிருக்கிறது.

சில கருத்துக்கள் சிலரை நேரடியாகவே, தாக்குகின்றன. (இதைப்பற்றி விவாதிப்பது பயனற்றது என்று ஆசிரியர் முன்னுரையில் கூறிவிட்டார்.)

சில தத்துவங்கள் மிக உயர்ந்தவையாக இருக்கின்றன.

சில கருத்துக்கள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. அதனால் பாதிப்பில்லை. அவை படிப்பவர்களுக்காகச் சொல்லப்பட்டவை. முரண்படுதல் என்பது மனித இயல்புதானே?

இவற்றை ஒட்டுமொத்தமாகப் படிக்கக்கூடாது. ஒவ்வொன்றாகப்படித்து அவரவர் மனநிலைக்கேற்ப உள்ள கருத்துக்களைச் சிந்தித்து நினைவு கொள்ளுதல் பயன்தரும்.

ஒட்டுமொத்தமாக இருக்கும் இக்கருத்துக்களைப் பகுதி பகுதியாகப் பிரித்து, (உதாரணமாக இறைவன், இயற்கை, மனிதன் என்பது போல்) தொகுத்திருந்தால் தேவையுள்ளவர்கள் எடுத்துக் கையாள உதவியாய் இருந்திருக்கும்.

ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அரசு மற்றும் தனியார் துறையில் மேலும் 30 மருத்துவக் கல்லூரிகள் ஏற்பட்டன. மூன்றாவது திட்ட இறுதியில் 87ம், 1968ல் 93ம், நான்காவது திட்ட இறுதியில் 105ம் இருந்தன.

இந்தக் காலக்கட்டத்தில், மேலும் மருத்துவக் கல்லூரிகளைப் பெருக்குவதை விட ஏற்கெனவே உள்ளவற்றை ஒருமைப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டது.

மருத்துவக் கவுன்சில் 1933ல் தான் ஏற்படுத்தப்பட்டது. நாடு முழுவதிலும் மருத்துவக் கல்வியை ஒழுங்குபடுத்தி, சீரான தரத்தைப் பராமரிப்பது இதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். ஆங்காங்குள்ள பல்கலைக் கழகங்களே மருத்துவக் கல்லூரிகளை அங்கீகரித்தும், பட்டங்களை வழங்கியும் வந்தபோதிலும், **மருத்துவக் கல்வியின் தரத்தைப் பேணும்** பொறுப்பை மருத்துவக் கவுன்சிலே நிறைவேற்றி வந்தது.

கடந்த 20 ஆண்டுகளில் ஒவ்வொரு மாநிலத்திலும் பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வந்துள்ளது. நாடு சுதந்தரம் பெற்ற நாற்பது ஆண்டுகளில் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை நான்கு மடங்கு பெருகியுள்ளது. ஆனால் கலை, விஞ்ஞானக் கல்லூரிகளின் எண்ணிக்கை பத்து மடங்காகியுள்ளது. இதன் விளைவாக, பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கையும் ஐந்து மடங்காகியுள்ளது. இதன் காரணமாக, மருத்துவக் கல்லூரிகளைப் பக்கத்துப் பல்கலைக் கழகங்களுக்கு மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் விளைவு என்னவென்றால், ஒரே மாநிலத்திலேயே மருத்துவக் கல்வியில் பல்வேறு தரங்கள் ஏற்பட்டுவிட்டன. எனவே, நாடு முழுவதற்கும் மருத்துவக் கவுன்சில் மருத்துவக் கல்வியில் சீரான தரத்தைக் கடைப்பிடிப்பது இயலாததாகி விட்டது.

நாட்டில் இப்பொழுதுள்ள 115 மருத்துவக் கல்லூரிகளிடையே தரத்தைக் கடைப்பிடிக்க முயல்வதைவிட, ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மருத்துவக் கல்லூரி வீதம் அமைக்கப்பட்டால், மருத்துவக் கவுன்சில் 15 அல்லது 16 மருத்துவப் பல்கலைக் கழகங்களுக்கு இடையே தரத்தைப் பராமரிப்பது இயலக்கூடியதாக இருக்கும்.

தற்போது ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியும் நூற்றுக் கணக்கான கலை விஞ்ஞானக் கல்லூரிகளைக் கொண்டுள்ள பல கலை, பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்தப் பல்கலைக் கழகங்களுக்கு ஆண்டு முழுவதும் தேர்வுகள் நடத்தவும், ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளவுமே நேரம் சரியாக இருக்கிறது. இந்தப் பல்கலைக் கழகங்களில் உள்ள மருத்துவ ஆசிரியர் குழுவும், உள்ளூர் மருத்துவக் கல்லூரிகளிலிருந்து நியமிக்கப்படுவதால், தங்களது வேலைகளோடுகூட, பாடத்திட்டங்களை நிர்ணயிக்கவோ திட்டமிடவோ போதியநேரம் அவர்களுக்கு இருப்பதில்லை. எனவே, மருத்துவக் கல்விக்கென்றே தனியானதொரு பல்கலைக் கழகம் அமையுமானால், அது மருத்துவக் கல்வியில் முழு நேர கவனம் செலுத்தி, புதியன புகுத்தி, சமுதாயத்தின் தேவைக்கேற்ற பாடத்திட்டத்தை உருவாக்கி, அரசு அவாவும் அளவில் நலவாழ்வு மனித சக்தியை உருவாக்கிக் காட்ட இயலும் என்பதில் ஐயமில்லை.



## நெஞ்சு பொறுக்குதில்லையே!

ஆசிரியர் : கவிஞர் ப. கணேசன்
வெளியீடு : 33, தெற்குரதவீதி,
வடிவீஸ்வரம்,
நாகர்கோயில்,
குமரி மாவட்டம்-2

விலை : ரூ. 5.00

கவிஞர்கள் பலர் தொடத் தயங்கும் தலைப்புகள் பலவற்றைக் கவிஞர் ப.கணேசன் துணிச்சலாகத் தொட்டு, விளக்கி இருக்கிறார்.

மயிரே.. மயிரே.. என்ற தலைப்பு உள்ள கவிதையில்...

...ஆகையினால் மயிரினமே அவசரமாய் வெளுக்காது என்றும் கறுத்திருப்பாய், இன்பத்தைத் தந்திடுவாய்' என்று முடித்திருப்பது படிப்போர் இதழ்களில் புன்னகையை வரவழைக்கிறது.

'..விடுமுறைக் காலத்திலே
வீட்டில் பசித்திருக்கும்
வெம்மை மிகு குழந்தைகளின்
விழி நீரைத் துடைக்கின்றாய்.
சத்துணவுத் திட்டத்தால்
சார்ந்திருப்போர் பிணி நீங்கி
சாம்ராஜ்யக் குழந்தைகளைச்
சாவினின்று காக்கின்றாய்..''

என்று 'தரணி காக்கும் தமிழரசே' கவிதையில் அரசுக்குப் பாமாலை சூட்டி மகிழ்ந்திருக்கிறார்.

'புதுமைப் பெண் பாடல்' பல பெண்களை முகம் சிவக்கச் செய்யும். காரணம் உண்மை சுடும். மிக நாசூக்காக இடித்துக் கூறி புத்திமதியும்சொல்லியிருக்கிறார்.

கவிதைகளில் நீறுபூத்த நெருப்பாகச் சொற்கள் சுடுகின்றன.

**அ. மருதவிநாயகம்**

## சட்டமும் தொழிலாளர் நலமும்

ஆசிரியர்: சோ. சேசாசலம்,
வெளியீடு: நர்மதா பதிப்பகம்,
10, சோமசுந்தரம் தெரு,
தியாகராய நகர்,
சென்னை-600 017.
விலை. ரூ. 6.50 பக்கம். 100

ஒரு நாட்டில் தொழில் வளம் சிறப்படைவதற்கு உதவுபவர்கள் தொழிலாளர்கள் ஆவர். ஆகவே அவர்களது நலன்கள் காக்கப்பட வேண்டும் என்பதில் மைய அரசும், மாநில அரசுகளும், பெரும் அக்கறை கொண்டு பற்பல சட்டங்களை இயற்றியுள்ளன. அந்தச் சட்டங்கள் எவ்வகையில் உதவுகின்றன என்பது குறித்துச் சான்றுகளுடன் விளக்கியுள்ளார் நூலாசிரியர்.

தொழிலாளர் — முதலாளிகள் இருவருக்குமிடையே சுமுகமான உறவு இருக்க வேண்டும் என்பதை இந்நூல் வலியுறுத்திக் கூறுகிறது.

தொழிலாளர் என்பவர் யாவர் என்பதையும், தொழிலாளர் நலத்தைக் காக்கும் அதிகாரிகளின் பணிகுறித்தும் ஆசிரியர் விளக்கியிருப்பது பாராட்டுக்குரியது. தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளையும் நூலாசிரியர் தெரிவித்திருக்கிறார்.

ஒரு தொழில் நிறுவனத்தில்— தொழிலாளர்க்கு என்னென்ன வசதிகள் சட்டப்படி இருக்க வேண்டும் என்பது குறித்தும் விளக்கியுள்ளார்.

எளிய நடை இந்நூலுக்கு மேலும் சிறப்புச் சேர்க்கிறது.

**—தமிழ்ப்பித்தன்**

## அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்

ஆசிரியர்: மாத்தாளை சோமு.
வெளியீடு: நர்மதா பதிப்பகம்,
10, சோமசுந்தரம் தெரு,
தி. நகர், சென்னை-600 017.
விலை ரூ. 17.00 பக்கம் 240.

உலகில் பல்வேறு தொழில் துறைகள் உண்டு. ஆங்காங்கே பணிபுரியும் பல்வேறு மனிதர்களின் உலகமும் வெவ்வேறாகத்தான் அமையும்.

இந்நூலுள் இலங்கையிலுள்ள 'கலுகங்கை' எனும் இடத்தில் தங்கி, மாணிக்கக் கற்கள் தோண்டி வெளிப்படுத்தும் மனிதர்தம் வாழ்க்கை படம் பிடித்துக் காட்டப்படுகிறது. கதைத் தலைவன் மணியம். வளம் நிறைந்த வாழ்க்கையிலுள்ளவர்களைவிட மகிழ்ச்சியான முறையில் நாட்களைக் கடத்துபவன் அன்றன்று கிடைத்ததைக் கொண்டு மனநிறைவு கொள்பவனாகச் சித்திரிக்கப்படுகிறான்.

மரணமில்லாப் பெருவாழ்வு காண்பது பிரச்னைதான். பிரச்னைக்கு மற்றவர்களை அழிக்கத்தான் தெரியுமேதவிர, அது அழிவதேயில்லை. எனவே, துன்பங்களைக் கண்டு அஞ்சி மரணத்தை ஏற்பது மாபாவம் என்ற கருத்து இந்தப் புதுமையான நாவலில் வலியுறுத்தப்படுகின்றது.

தார் ரோட்டில், மணித்தியாலம், மரணித்து, 'டொபி' தட்டு, லந்தாரம், கெழமை, குசினி, அலவாங்கு, தேத்தண்ணி தாம்பரா என்பன போன்ற இலங்கைத் தமிழ்ச் சொற்கள் பரவலாகக் காணப்படுகின்றன. 'போதும் என்றாகி விட்டது' என்ற நம் வழக்கு 'வேண்டாம் என்றாகிவிட்டது' என்று சொல்லப்படுகிறது.

சிங்களமும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நடை அங்கு இருந்தமை சிரிசேன என்பான் மூலம் தெரிகிறது.

மணியன் குடும்பச்சூழல், நண்பர் குழாம், அவற்றுக்குள்ள உறவுமுறை காட்டப்படுகின்றது. பொதுவாக உறவினர்களிடம் பெறும் மகிழ்வைவிட, நண்பர்களிடையே அடையும் மகிழ்ச்சியும் அன்பும் பெரிது; நிறைவைத் தருவது என்ற உண்மைக் கருத்து இங்கே மணியத்தின் வாழ்க்கை வாயிலாக வெளியிடப்படுகின்றது.

'வயிறு கஞ்சிக்கு அழும்போது கொண்டை பூ கேட்டதாம்' இது போன்ற பழமொழிகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன.

மாணிக்கச் சுரங்கத்தில் பணியாற்றும் ஒரு இலங்கைத் தொழிலாளியின் வாழ்க்கை நிலை தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளது இந்நூலில். இது கற்போர்க்கு மகிழ்வும் பயனும் தரவல்லது.

**— மு. முத்துக்காளத்தி**






8-ஆம் பக்கத் தொடர்ச்சி

அப்படி, தகத்தகாயமாய் மேடையிலே வந்து நிற்கிறார் நாட்டு மக்களின் இன்னல் போக்க வந்த அந்த இனியவர்!

அவ்வளவு தான்...!

''புரட்சித் தலைவர்...வாழ்க!..''

சூழ்ந்திருந்த மக்கட் கடல், அலைக்கரம் தூக்கி எழுப்பிய மகிழ்ச்சி ஆர்ப்பாட்டம்...வாழ்த்து முழக்கங்கள் விண்ணை மட்டுமல்ல; நம் நெஞ்சில் நீக்கமற நிறைந்திருக்கும் அந்த ஏந்தலை நமக்கு மீட்டுத் தந்த அமெரிக்க மண்ணையே எட்டுமளவில் எழுந்தன. பல்லாயிரக்கணக்கான விழிகள் ஆனந்தக் கண்ணீரில் மிதந்தன.

மேடையில் தோன்றிய அந்த மெல்லிய பூங்காற்று நாலாபுறமும் சுற்றி வந்து அதே புன்முறுவலோடு...புது வேகத்தோடு வலது கரத்தைத் தலைக்கு மேலே உயர்த்தி அப்படியும் இப்படியும் அளவற்ற மகிழ்வினாலே வேகமாக அசைக்கிறது! கரையுடைக்கக் கிளம்பும் வெள்ளம்போல் எழுகிறார்கள்மக்கள்...தாய்க்குலத்தாரெல்லாம் கூடதம்மை மறந்து, தென்னகத்தின் பொன்னேட்டில் தீட்டி வைத்த அந்தப் புகழ்க் காவியத்தைப் போற்றிக் குரலெழுப்பிக் குதூகலிக்கிறார்கள்.

மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் அரசின் சார்பில்-அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்துகிறார். சரிகை மாலை அணிவிக்கிறார். அதைத் தொடர்ந்து அவரது வரவேற்புரை:

**நாவலர் உரை....**

''இன்றைய தமிழகத்தின் ஒப்புயர்வற்ற ஒரு பெரும் தலைவர் பொன்மனச் செம்மல் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களே!

புரட்சித்தலைவரைக் கண்ணெனக் காத்து வரும், எங்கள் அண்ணியார் திருமதி ஜானகி அம்மையார் அவர்களே!

வெள்ளம்போல் கூடியுள்ள தமிழ்ப் பெருமக்களே, வணக்கம்.

நாம் அனைவரும் உவகை கொள்ளும் வகையில் உடல் நலம் பெற்று,புரட்சித்தலைவர் நல்ல நிலையில் நலமுடன் வந்திருக்கிறார்

அவரது உடல் நலம் நன்கு தேறியிருக்கிற காட்சிகண்டு மகிழ்ச்சிப் பெருக்குடன் இங்கே நாமெல்லாம் கூடியுள்ளோம்.

புரட்சித் தலைவர் அமெரிக்காவிற்கு முதல்வராகச் சென்றார். சிகிச்சை பெறும் போதும் முதல்வராகச் சிகிச்சை பெற்றார். இப்போது இங்கே வரும் போதும் முதல்வராக வந்திருக்கிறார். மூன்றாவது முறையாக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் விரைவிலே பொறுப்பேற்கவிருக்கிறார். புரட்சித் தலைவர் விடுத்த வேண்டுகோளை ஏற்று அவர் மீது முழு நம்பிக்கை வைத்து-மதித்து மக்கள் வாக்களித்துள்ளனர்.

தமிழகச் சட்டமன்றத்தில் உள்ள 234 இடங்களில் 133 இடங்களைப் புரட்சித் தலைவரின் கரங்களில் சமர்ப்பிக்கிறேன். அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத்தின் ஒப்புயர்வற்ற தலைவர் புரட்சித் தலைவர் தாயகத்தில் இல்லாத நேரத்தில் -அவர் காட்டிய வழி



யில் செயல்பட்டோம். வென்றோம்.

பொன்மனச் செம்மலே புரட்சித் தலைவரே வருக! வருக!

புவியோர் போற்றும் புகழ் பெற்ற பேருருவே வருக! வருக!

'ஏழை எளியவரின் ஓண்டுக் குடிசைகளில் விளக்கேற்றிய உத்தமரே வருக! வருக!

கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரத்துக்குச் சொந்தக்காரரே வருக! வருக!



பதவி ஏற்றபின், தலைமைச் செயலகத்திற்குச் சென்று ராமாவர இல்லத்திற்குத் திரும்பிய மாண்புமிகு முதல்வர் அவர்களை மக்கள் கடல் ஆர்வமுடன் வரவேற்கும் காட்சி.



மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. [illegible] அவர்கள் வாழ்த்துத் தெரிவித்தார்



சென்னை மாநகர ஷெரீப் திரு முகமது அப்துல் அலி அவர்கள் வாழ்த்துத் தெரிவித்தார்.



செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து வாழ்த்துக் கூறினார்.

# முதல்வருக்குச் சிகிச்சையளித்த டாக்டர்களுக்குப் பாராட்டு



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குச் சிகிச்சையளித்த டாக்டர்களின் சேவையைப் பாராட்டும் வகையில் தமிழ்த் திரைப்படத் துறையினர் 5.2.1985 அன்று. சென்னையில் மாபெரும் விழாவை நடத்தினர்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச் வி. ஹண்டே அவர்கள், மற்றும் திரையுலகத் தொழில் நுணுக்கக் கலைஞர்கள்-நடிகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புரூக்ளின் மருத்துவமனை டாக்டர் ஸ்ரீபாதராவ், நியூயார்க் தமிழ் மையத்தின் தலைவர் டாக்டர் பெரியசாமி ஆகியோருக்குத் திரைப்படக் கலைஞர்களின் சார்பில் வெள்ளித் தட்டுகளை நினைவுப் பரிசுகளாக மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் வழங்கினார். மாண்புமிகு முதல்வரின் நினைவாக புரூக்ளின் மருத்துவமனையில் வைப்பதற்காக – கீதோபதேசக் காட்சி இடம் பெற்ற



நினைவுப் பரிசும் ஸ்ரீபாதராவ் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

தமிழகத்தைச் சேர்ந்த டாக்டர்கள் பிரதாப் சி. ரெட்டி, பி. ஆர். சுப்ரமணியம், கே.வி. திருவேங்கடம், ஜெகந்நாதன், நரேந்திரன் ஆகியோரும்-ஏர் இந்தியா நிறுவனத்தைச் சார்ந்த லிங்கம், ராஜகோபால், லாசரஸ், ஏர் கமோடர் சந்திரசேகர். குரூப் காப்டன் சுந்தரம் ஆகியோரும் பாராட்டப் பெற்றார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சிகிச்சையளித்த டாக்டர்களுக்குப் பத்திரிகையாளர் சார்பில் பாராட்டு வழங்கப்பட்டது.



# பெரம்பூர், எழும்பூர், வடசென்னை தேர்தல் முடிவுகள்

பெரம்பூர் (தனி), எழும்பூர் (தனி) சட்டமன்றத் தொகுதிகள், வடசென்னை நாடாளுமன்றத் தொகுதி ஆகியவற்றில் ஒத்திவைக்கப்பட்டிருந்த தேர்தல்கள் 28.1.1985ல் நடைபெற்றன. அவற்றின் முடிவுகள் வருமாறு:

## சட்டமன்றத் தொகுதி

### 5. பெரம்பூர் (தனி)

மொத்த வாக்காளர்: 1,65,370
பதிவான வாக்குகள்: 1,03,766
செல்லாதவை 3225

| வேட்பாளர் பெயர் | கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பரிதிஇளம்வழுதி | தி.மு.க. | 53325 |
| திருமதி சத்தியவாணிமுத்து | அஇஅதிமுக | 46121 |
| பி.சங்கரலிங்கம் | சுயே. | 521 |
| கே.ஆனந்தராஜ் | சுயே. | 199 |
| வி.மலைச்சாமி | சுயே. | 199 |
| எஸ்.முனுசாமி | சுயே. | 93 |
| ரங்கநாதன் | சுயே. | 83 |

### 7. எழும்பூர் (தனி)

மொத்த வாக்காளர்: 1,15,383
பதிவான வாக்குகள்: 57,878
செல்லாதவை 405

| | | |
|---|---|---|
| எஸ். பாலன் | தி.மு.க. | 29795 |
| கே.ஆர்.ஸ்ரீராமுலு | காங்(இ) | 27246 |
| என். ஆறுமுகம் | சுயே. | 262 |
| வி. பொன்னையா | சுயே. | 91 |
| எஸ்.வசந்தா | சுயே. | 79 |

## நாடாளுமன்றத் தொகுதி

### வடசென்னை

மொத்த வாக்காளர்: 9,91,099
பதிவான வாக்குகள்: 508744
செல்லாதவை 6917

| வேட்பாளர் பெயர் | கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| என்.வி.என். சோமு | தி.மு.க. | 261941 |
| ஜி.லட்சுமணன் | காங்(இ) | 225491 |
| ஆர்.எழிலரசு | சுயே. | 2125 |
| கிசன்லால்ஜெயின் | சுயே. | 1448 |
| பி.பாண்டியன் | சுயே. | 1263 |
| என்.எஸ்.என். மகமதுஇப்ராகிம் | சுயே. | 832 |
| சாம்பசிவம் | சுயே. | 757 |
| கே.அமர்சந்த் | சுயே. | 750 |
| வி.எஸ்.ஏ.பாபு | சுயே. | 731 |
| டி.ராஜன்மாத்யூஸ் | காங்(ஜெ) | 654 |
| அப்துல்அஜீஸ் | சுயே. | 653 |
| பி.கே.சதாசிவம் | சுயே. | 477 |
| டி.தேவானந்த் மைக்கேல் | சுயே. | |
| திருமதி. | | 459 |
| பி.சரோஜினி | சுயே. | 451 |
| இ.ஜகந்நாதன் | சுயே. | 426 |
| பாலசுப்பிரமணியம் என்ற ஆரம்குரு | சுயே. | 379 |
| கே.கிருஷ்ணன் | சுயே. | 366 |
| எஸ்.கிருஷ்ணன் | சுயே. | 356 |
| எம்.நித்யானந்தம் | சுயே. | 344 |
| கே.மாரியப்பன் | சுயே. | 318 |
| டி.பழனி | சுயே. | 305 |
| எஸ்.ஹரி | சுயே. | 305 |
| எம்.முத்துக்கருப்பன் | சுயே. | 297 |
| மாணக்சந்த் நகசா | சுயே. | 265 |
| பாலன் என்ற பாலசுந்தரம் | சுயே. | 259 |
| ஓ.ஏ.வரததேசிகன் | சுயே. | 185 |



# சென்னை மருத்துவக் கல்லூரி

டாக்டர் சரசா பாரதி ஆறுமுகம்

சென்னை மருத்துவக் கல்லூரி ஒன்றரை நூற்றாண்டுக் காலப் பழம்பெருமை உடையதாகும். இந்த மாபெரும் கல்லூரி இம் மாநிலத்தில் மட்டுமன்றித் தமிழகம், கேரளம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஒரிசாவின் பகுதிகள் அடங்கிய சென்னை ராஜதானியிலேயே அந்நாளில் முதல் கல்லூரியாக விளங்கியது.

இந்தியாவிலேயே இதுதான் முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரியாகும். உலகிலேயே மிகப் பெரும் பழமை வாய்ந்த கல்லூரிகளில் ஒன்றாகும்.

மேலும் இங்கிலாந்து நாட்டிலேயே பெண்கள் மருத்துவக் கல்வி பயில அனுமதிக்கப்படுவதற்கு முன்பே, நமது நாட்டில் இக்கல்லூரியில்தான் முதன் முதலாகப் பெண்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். முதலாக அப்படிச் சேர்ந்த பெருமை மேரி ஸ்கார்லீஃப் என்ற அம்மையார் அவர்களைச் சார்ந்தது. அவர் லண்டனில் இருந்து இங்கு வந்து இக்கல்லூரியில் பயின்று மீண்டும் லண்டனுக்கே சென்று மருத்துவராகித் தொழில் நடத்தினார்.

1835ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஏழாம் நாள் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் உத்தரவுப்படி பத்து இராணுவ மாணவர்களுடனும், இரண்டு பிற மாணவர்களுடனும் தொடங்கப்பட்டது இது. அன்றைய ஆளுநர் மாண்ட்கோமரி துரை அவர்கள் இக்கல்லூரியை அரசின் நிர்வாகத்தின் கீழ் வருமாறு 13ஆம் நாள் அன்று ஆணைபிறப்பித்தார். அன்றைய நிலவரப்படி இந்த மாணவர்களின் சான்றிதழ்களைக் கல்லூரி முதல்வர் மார்ட்டிமர் துரை அவர்களே வழங்கினார்.

இங்கிலாந்து நாட்டுப் பொது மருத்துவக் கழகம் இக்கல்லூரியின் கல்வித் தரத்தைக் கண்டு மருத்துவர்களைஅங்கீகரித்து அங்குள்ள கவுன்சிலில் பதிவு செய்ய அனுமதி தந்தது.

இவ்வாறாக ஒரு சிறிய கல்வி நிலையமாகத் தொடங்கப்பட்ட இக்கல்லூரி, சிப்பாய்க் கலகம் முடிந்த அடுத்த ஆண்டில், அதாவது 1858ஆம் ஆண்டு 150 மாணவர்கள் படிக்கும் கல்லூரியாக மாறியது. பின்பு முதலாம் உலகப் போர் தொடங்கிய காலத்தில், அதாவது 1916ஆம் ஆண்டு இந்திய மருத்துவக் கழகத்தின் சட்டப்படி இக்கல்லூரியில் பயின்ற மாணவர்களைச் சென்னையிலேயே பதிவுசெய்யத் தொடங்கியது.

இதற்கிடையே, நமது மாநிலத்தில் தோற்றுவிக்கப்பட்ட சென்னைப்பல்கலைக் கழகம், இக்கல்லூரியின் பட்டங்களை அங்



வறியவரின் வாட்டம் போக்கிட வரையின்றி வாரி வழங்கிய வள்ளலே வருக! வருக!

நல்ல முறையில் அரசோச்சி நாட்டு மக்கள் நெஞ்சில் நின்றாடும் நாயகரே வருக! வருக!

பல பிறப்பை இறப்பின்றியே பெற்ற பாரோர் போற்றும் பண்பாளரே வருக! வருக!

சிந்தனையால், சொல்லால், செயலால் திட்டமிட்டுச் செயலாற்றும் தீரரே வருக! வருக!

தமிழ் மக்கள் ஆணையேற்று, தரம் மிக்க அரசு கண்ட தமிழகத்தின் முதல்வரே வருக! வருக!

அறிஞர் அண்ணாவின் கொள்கைக்கு அரணாக நின்று எந்நாளும் உழைக்கும் அண்ணலே வருக! வருக!

தும்பைப்பூப் போல் வெள்ளை உள்ளம் கொண்டு துணிவோடு பணி செய்யும் தூயவரே வருக! வருக!



ஊன் கலந்து, உயிர் கலந்து, தேன் கலந்த தமிழ்போல் ஆட்சி தரும் மாட்சியரே வருக! வருக!

சத்தியா அனை ஈன்றெடுத்த சரித்திர நாயகரே வருக! வருக!

அறிஞர் அண்ணாவின் கடமை கண்ணியம் கட்டுப்பாடு காப்பவரே வருக! வருக!

தமிழகம் பூத்துக்குலுங்க புதுமை பலகண்ட புரட்சித்தலைவரே வருக! வருக!

மூன்றாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்க வந்துள்ள மாசுமருவில்லா மக்கள் தலைவரே வருக! வருக!"

— மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் இவ்வாறு உரைநிகழ்த்தினார்.

**ஆனந்தக் கண்ணீர்!**

சிறிது நேரம் நாற்காலியிலே அமர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், தன்னை வளர்த்து ஆளாக்கிய தமிழக மக்களின் மேலான அன்பு கண்டு-123 நாட்கள் பிரிந்திருக்க நேர்ந்தமை கருதியோ என்னவோ கண் கலங்குகிறார். கவின்மிகு கறுப்புக் கண்ணாடிக்குக் கீழே பெருக்கெடுத்த கண்ணீரைத் திருமதி ஜானகி அம்மையார் அவர்கள் கைக்குட்டையால் துடைத்துவிடுகிறார்.

அமெரிக்காவிலே சிகிச்சை பெற அனைத்து வகையிலும் ஒத்துழைத்த டாக்டர் பெரியசாமி அவர்களுக்கும், புரூக்ளின் டவுன்ஸ்டேட் மருத்துவமனையிலே சிறப்புறக் கவனித்துச் சிகிச்சையளித்த டாக்டர் ஸ்ரீபாதராவுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பிலே பரிசளிக்கப்படுகிறது. அந்தப் பரிசான தஞ்சாவூர்த் தட்டை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம் பொற்கரத்தாலேயே வாங்கி அவர்களிடம் வழங்குகிறார்.

மகிழ்வோடு பெற்றுக் கொண்டு வணக்கம் தெரிவிக்கிறார்கள் அவர்கள்!

அண்மைக் காலத்தில் சென்னை காணாத பெருங்கூட்டத்தோடு நடைபெற்ற வரவேற்பு விழா, இனிதே நிறைவுறுகிறது.

பின்னர், 7.10க்குத் தமது ராமாவரம் இல்லத்திற்குப் புறப்பட்டுச் செல்கிறார்.

முதல்வருக்கு அளிக்கப்பட்ட இந்த வரவேற்பு விழாவிற்காகத் தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஆயிரக் கணக்கானமக்கள் அணிதிரண்டு வந்திருந்த காட்சி, பொதுமக்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தவர் நமதுமுதல்வர் என்ற உண்மையை விளக்குவதாக அமைந்திருந்தது.

காலை 9.30 மணிக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் ராமாவரம் தோட்டத்திற்கு வந்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் நலம் விசாரித்தார். இருவரும் ஏறத்தாழ அரைமணி நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது திருமதி வி. என். ஜானகி அம்மையாரும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் உடனிருந்தனர்.

மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஜைல்சிங் அவர்கள் வாழ்த்துச் செய்தியொன்று அனுப்பியிருந்தார். (4.2.85) அதில் அவர் குறிப்பிட்டிருந்ததாவது:

"நீங்கள் தாயகம் திரும்பியது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தாங்கள் உடல்நலத்துடன் நீண்டகாலம் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். நாட்டுக்கும நாட்டு மக்களுக்கும் தொண்டு செய்ய தாங்கள் பல்லாண்டுக் காலம் வாழ வாழ்த்துகிறேன்."

—இவ்வாறு அந்தத் தந்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

—சோமராஜன்



மாண்புமிகு கர்நாடக மாநிலக் கல்வி அமைச்சர் திரு ரகுபதி அவர்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை ராமாவரத் தோட்ட இல்லத்தில் (5.2.85) சந்தித்து மலர்க் கொத்து வழங்கினார்.



மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு சந்துர்கர். மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மலர்க்கொத்து வழங்கினார்.

மாண்புமிகு கேரள மாநில மின்துறை அமைச்சர் திரு பாலகிருஷ்ண பிள்ளை மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்தார்.



நாடாளுமன்றத் துணைத் தலைவர் திரு மு. தம்பித்துரை அவர்கள் மாண்புமிகு முதல்வரைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.







மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சென்னை மருத்துவக் கல்லூரி கௌரவ 'ஃபெல்லோஷிப்' பட்டம் வழங்கியது. மருத்துவக் கல்லூரி முதல்வர் மற்றும் டாக்டர்கள், இப்பட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களின் இல்லத்திற்கே (8.2.85) சென்று வழங்கிச் சிறப்பித்தார்கள்.

கோரம் செய்தது. அப்போது MB & MC என்றும் LM & S என்றும் இரு வகையான பட்டங்களை அளித்து வந்தார்கள். இதே காலத்தில் மருத்துவப் பள்ளிகள் பல தோன்றின. அவை சென்னையில் ராயபுரம் விசாகப்பட்டினம், தஞ்சாவூர், கள்ளிக் கோட்டை ஆகிய இடங்களில் நடைபெற்று வந்தன. இவை LM & S என்ற பட்டத்தை வழங்கி வந்தன. இப் பட்டப் படிப்பு நாளடைவில் நிறுத்தப்பட்டு இம்மாதிரி கல்வி வழங்கும் மருத்துவப் பள்ளியையும் அரசு மூடியது. இதன் விளைவாக விசாகப்பட்டினத்தில் 1928ஆம் ஆண்டு ஆந்திர மருத்துவக் கல்லூரியும், 1936ஆம் ஆண்டு, சென்னை ராயபுரம் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியும் துவங்கப்பட்டன. அன்றைய மாணவர் அனுமதி எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் 242 ஆக இருந்தது. மருத்துவர்களின் தேவைஅதிகரித்து வந்ததால், அரசு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தும் பின்னர் கல்லூரிகளின் எண்ணிக்கையையும் கூட்டின.

நாடு சுதந்திரம் பெற்ற பின், சென்ற நாற்பதாண்டுக் காலத்திற்குள், தமிழ்நாட்டில் மட்டும் 8 மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட்டு, தற்போது அவை செம்மையாகச் செயல்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் 1072 மாணவர்கள் அனுமதிக்கப் படுகிறார்கள். பட்ட மேற்படிப்புக்கு, சென்னை மருத்துவக் கல்லூரியில், எல்லா விதமான பிரிவுகளுக்கும், மேல் மட்டப் படிப்பு (டிகிரி) மற்றும் உயர் மட்டம் ( Super Speciality ) இவை யாவற்றிலும் ஓராண்டுக்கு 420 மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். இதுவுமன்றி, ஆராய்ச்சிப் படிப்புக்கான, மாணவர்கள் அதாவது (பி.எச்டி) மருத்துவத்தில் எல்லாத் துறையிலும் பதிவு செய்யப்பட்டு சென்னைப் பல்கலைக் கழகத்தால் ஏற்கப்பட்டு ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

இன்று எங்கள் மருத்துவக் கல்லூரியிலும், அதனைச் சார்ந்த பல மருத்துவமனைகளிலும் 52 பேராசிரியப் பெருமக்கள் தங்கள் துறைகளில் மாணவர்களுக்குப் பயிற்சியும் செயல் முறைத் திறனும் உணர்த்தி, மிகச் சிக்கலான பிணிகொண்ட நோயாளிகளுக்கு வேண்டிய சிகிச்சைகளை அளித்துத் தொண்டாற்றி வருகிறார்கள்.

இக்கல்லூரியில் இப்பொழுது பணி புரியும் பெரிய மருத்துவர்கள் - அதாவது சிவில் சர்ஜன்கள் 170பேர் இருக்கிறார்கள். ஏறத்தாழ 600 உதவி மருத்துவர்கள் மற்றும் 200க்கும் மேற்பட்ட பயிற்சி மருத்துவர்கள் பணி புரிகின்றார்கள். இம்மருத்துவமனையில் மொத்தப் படுக்கை எண்ணிக்கை 6000 ஆகும். ஆண்டொன்றுக்குச் சென்னைப் பொது மருத்துவமனையில் மட்டும் ஏறத்தாழ 25 லட்சம் புற நோயாளிகள் சிகிச்சைக்கு வருகிறார்கள். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட நோயாளிகள் உள் நோயாளிகளாகத் தங்கி வைத்தியம் பெறுகிறார்கள். எத்தகைய நோயானாலும் சரி, இறப்பு எண்ணிக்கையைக் குறைப்பது எங்கள் குறிக்கோளாகும்.

இக்கல்லூரி ஒரு பெரிய பல்கலைக் கழக அளவில் வளர்ந்து மேற் படிப்பு ஆராய்ச்சி நிலையமாக விளங்குகிறது என்று எளிதில் கூறிவிடலாம். இக்கல்லூரி வரலாற்றில் - மார்ட்டிமர், ஷிப்பர் ஃபீல்டு, நிப்லாக், பிரட் ஃபீல்டு, பிரின்ஸ், நியூ கோம்ப், ஜார்ஜ் ஸ்மித், ஷா, இலக்குமணசாமி முதலியார், குருசாமி முதலியார், ரங்காச்சாரி, சதாசிவம் போன்ற மிகப் பெரிய மருத்துவர்கள் பலரும் இங்கே பயின்றும் சேவை செய்தும் புகழ் தேடித் தந்திருக்கின்றார்கள். இவர்களின் பட்டியல் மிக நீளமானது.

85352

தொகுத்தும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

